©
GOVERNMENT OF TAMIL NADU
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 60.00 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 242A] சென்னை, வியாழக்கிழமை, ஜூலை 5, 2018
ஆனி 21, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2049

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம் *பக்கங்கள்.*

சட்ட முன்வடிவுகள் :

எண். 32 / 2018	தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்த) சட்டம்	2-14
எண். 33 / 2018	தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டம் ..	15-36
எண். 34 / 2018	தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டம்	37-42
எண். 35 / 2018	சிவ் நாடார் பல்கலைக்கழகச் சட்டம்	43-62
எண். 36 / 2018	சாய் பல்கலைக்கழகச் சட்டம்	63-80
எண். 37 / 2018	தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டம்	81-92
எண். 38 / 2018	தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்ச வரம்பு நிர்ணயம்) திருத்த சட்டம் ..	93-96
எண். 39 / 2018	தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப்பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் ..	97-150

Verified RealEstate™

2018—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2018

2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டத்தின் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக

குறுந்தலைப்பு, அளவுகை மற்றும் தொடக்கம்

1 (1) இந்தச்சட்டம் 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல், (திருத்த) சட்டம் என்று வழங்கப்பெறும்

(2) இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 2017 ஆம் ஆண்டு தமிழ் நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகளை மற்றும் பொறுப்புகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவில். (தமிழ் நாடு சட்டம் 42/2017)

(1) (அ) கூறுக்குப் பதிலாக வரும்கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) ‘‘உடன்பாடு’’ அல்லது ‘‘குத்தகை உடன்பாடு’’ என்பது, இந்தச் சட்டத்தின்படி, வேண்டுறுத்தப்பட்டவாறு நில உரிமையாளருக்கு வாடகைதாரரால் எழுதிக்கொடுக்கப்படும்

(2) (இ) கூறுக்குப்பதிலாக பின் வரும் கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(இ) ‘‘நில உரிமையாளர்’’ என்பது, அவருக்காக அப்போதைக்கு வளாகங்கள் எதனின் வாடகையை பெற்றுவருகிற அல்லது பெறுவதற்கு உரிமையுடையவராய் இருக்கிற நபர் ஒருவர் என்று பொருள்படும் வாடகைதாரர் ஒருவருக்கு வளாகங்கள் வாடகைக்கு விடப்பட்டிருந்திருக்கிற தென்றால் மற்றும் அவருடைய வாரிசு உரிமையாளரையும் உள்ளடக்கும்.

வரம்புரை:

ஆனால் பிறநபர் எவருக்காகவோ அல்லது அவர் சார்பாகவோ அல்லது அவருடைய நலனுக்காகவோ வளாகங்கள் எதற்காகவும் வாடகையை பெறும் நபர் ஒருவாராக இருப்பிரிவுகளின் ஒப்பந்தம் எதிலும் ஈடுபடமுடியாமல் இருக்கும் நபர் எவரும் (உரியவயதையடையாதவர், மனநிலை பாதிக்கப்பட்ட நபர் ஆகியோர்).

(3) (f) கூறில் ‘‘தொழிலுக்கு பயன்படுத்துவதற்காக தவிர’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பதிவு செய்யப்பட்ட வளாகங்கள் தவிர மையச் சட்டம் LXIII/1948 என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(4) (i) மற்றும் (j) கூறுகளுக்கு பதிலாக பின்வரும் கூறுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது

(i) ‘‘வாடகை அதிகார அமைப்பு’’ என்பது 30 ஆம் பிரிவின்படி பணியமர்த்தம் செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் என்று பொருள்படும்.

(i)‘‘வாடகைநீதிமன்றம்’’என்பது32ஆம்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட வாடகை நீதிமன்றம் ஒன்று என்று பொருள்படும்.

(5) (L) கூறுக்குப்பதிலாக பின்வரும் கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது: 4 ஆம் பிரிவிற்கான மாற்றாக

(i) வாடகை தீர்ப்பாயம் என்பது 35 ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட வாடகை தீர்ப்பாயம் என்று பொருள்படும்.

3. முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கு பதிலாக பின்வரும் பிரிவுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது.

4. இந்தச்சட்டத்தில் அல்லது தற்போதைக்கு செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் அங்கிருப்பது எது எவ்வாறு இருப்பினும் நபர் எவரும் இந்த சட்டம் தொடங்கியதிற்குப் பின்பு எழுத்துபூர்வமான உடன்பாடு ஒன்றினால் தவிர வளாகங்கள் எதனையும் வாடகையின் பேரில் விடக்கூடாது அல்லது வாடகையை எடுத்துக்கொள்ளக்கூடாது.

(2) இந்தச் சட்டம் தொடங்கிய தேதிக்கு முன்பு குத்தகை ஒன்று ஏற்படுத்துகின்றவடத்து எழுத்துப்பூர்வமாக உடன்பாடு எதுவும் ஏற்படாமலிருந்து இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து தென்னுறுநாட்கள் காலமொன்றுக்குள் குத்தை தொடர்பாகவற்றுடன் நில உரிமையாளர் அல்லது வாடகைதாரர் எழுத்துப்பூர்வமான உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.

வரம்புரை:

ஆனால் இந்த உட்பிரிவின்படி உடன்பாடுகளின்படி உரிமையாளர் அல்லது வாடகைதாரார் ஈடுபடாமல் இருக்கின்றவிடத்து நில உரிமையாளர் அல்லது வாடகைதாரர் 21 (2) ஆம் பிரிவின் (ய) கூறின்படி குத்தகையை இரத்து செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கு உரிமையுடையவராக இருப்பார்.

(3) (1) மற்றும் (2)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட உடன்பாடு ஒவ்வொன்றும் மற்றும் இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு குத்தகை உடன்பாடு எதுவும் ஏற்கனவே எழுத்துபூர்வமாக ஏற்படுத்தப்பட்டிருப்பின் வகுத்துரைக்கப்படலாகிறவாறான குத்தகை காலத்திற்குள் முதலாம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பமொன்றினை செய்வதன் மூலம் உரிமையாளர் அல்லது வாடகைதாரர் வாடகை அதிகார அமைப்பிடம் பதிவு செய்யதுக்கொள்ளுதல் வேண்டும்.

(4) (3) உட்பிரிவின்படி விண்ணப்ப பெறப்பட்டதின்பேரில் வாடகை அதிகார அமைப்பு 30 நாட்களுக்குள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு உடன்பாட்டை பதிவுசெய்ய வேண்டும்.

(5) வாடகை அதிகார அமைப்பு இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்க அத்தகைய விண்ணப்பம் இல்லாமல் இருக்கின்றது என்றால் எழுத்துப்பூர்வமாக பதிவுசெய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக (3) ஆம் உட்பிரிவுன்படி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பித்தினை தள்ளுபடி செய்ய வேண்டும்.

வரம்புரை:

ஆனால், விண்ணப்பம் எதுவும் தரப்பினர்கள் தரப்பு வாதத்தினை கேட்பதற்கு வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலின்றி தள்ளுபடி செய்யபடுதலாகாது.

6. வாடகை அதிகார அமைப்பு பதிவு செய்யப்பட்ட தேதியில் இருந்து பதினைந்து நாட்களுக்குள் அதனுடைய இணையதளத்தில் வகுத்துரைக்கப்படவாறான படிவத்தில் மற்றும் முறையில் (4) ஆம் உட்பிரிவின் படி வகை செய்யப்படக்கூடிய பதிவு எண்ணுடன் சேர்த்து தரப்பினர்களின் பெயர்கள் வளாகங்களின் விவரங்கள் மற்றும் அனைத்து குத்தகைகளின் குத்தகை காலம் ஆகியற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(4). (a). பதிவு செய்யப்படாமல் இருப்பதின் செயல்திறம்

4 ஆம் பிரிவு (3)ஆம் உட்பிரிவின் படி பதிவுசெய்யப்பட்ட வேண்டியதாக இருக்கும் ஆவணம் எதுவும் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி

(a) அதில் அடங்கியுள்ள அசையாச் சொத்து எதுவும் பாதிக்கப்படும்.

(b) அதிகாரம் எதனையும் வழங்குவதற்கு

Verified by RealEstate™

(c) அத்தகைய சொத்தினை அல்லது வழங்கப்படும், உரிமை எதுவும் பாதிக்கப்படும் பரிமாற்றம் எதனின் சான்றிலும் பெறப்படுதலாகாது.

4. முதன்மைச்சட்டத்தின் (5) ஆம் பிரிவில் (3) ஆம் பிரிவுக்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்பட வேண்டும்.

5ஆம் பிரிவிற்கான திருத்தம்

"(3) குத்தகைதாரரால் நிர்ணயம் செய்யப்பட்ட காலம் முடிவடைகிறதென்றால் மற்றும் புதுப்பிக்கப்படாமலிருக்கிற எதனினால் மற்றும் வளாகம் வாடகை காலி செய்யப்படாமல் இருக்கிறதென்றால் மற்றும் புதிதாக குத்தகை முடிவுறும் நிலையில் நில உரிமையாளர் உடைமையை கேட்காமல் இருக்கின்றவிடத்து குத்தகை பெருமளவு ஆறு மாத காலம் ஒன்றிற்காக குத்தகை உடன்பாடு முடிவடைந்திருந்ததாற்போன்று அதே வரைவுரைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாதம் என்கின்ற அடிப்படையில் புதுப்பிக்கப்பட வேண்டும் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

5. முதன்மைச்சட்டதின் 6 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது

(2) வாடகைதாரர் ஒருவர் இறந்துவிடுகின்ற நிலையில் குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாதவற்றின் குத்தகை உரிமை குத்தகையின் மீதமுள்ள காலத்திற்கு பின்வரும் முறையில் அங்குடைய வாரிசு உரிமையாளருக்கு உரிமை மாற்றம் செய்யப்படும்.

(a) மனைவி

(b) மகன்கள், மகள்கள் , மருமகள், முன்பே இறந்துபோன மகன் ஒருவரின் விதவை மனைவி

6 ஆம் பிரிவிற்கான மாற்றக்கம்

(c) தாயோ அல்லத தந்தையோ உயிருடன் இருக்கும் பெற்றோர்கள்,

வரம்புரை: ஆனால் "வாரிசுதாரர் அவர் இறக்கும்வரை இறந்துபோன வாடகைதாரருடன் வளாகங்களில் சாதாரணமாக வாழ்ந்திருக்கிறார் அல்லது வேலை செய்து கொண்டு இருந்திருக்கிறார்கள் என்றால்".

6. முதன்மைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவிற்குப்பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது:

8. செலுத்ததக்க வாடகை : வளாகங்கள் தொடர்பாக செலுதத்தக்க வாடகை என்பது

(a) இந்தச்சட்டம் தொடங்கியதற்கு பின்பு புதிய குத்தகைகள் ஏற்படுகின்ற நேர்வில் குத்தகையின் தொடக்கத்தில் நில உரிமையாளர் மற்றும் வாடகைதாரருக்கிடையே ஒத்துக்கொள்ளப்பட்ட வாடகை

8 ஆம் பிரிவிற்கு பதிலாக

(b) 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் படி அவர்களுக்கு இடையே நிறைவேற்றப்பட்ட உடன்பாட்டின் நில உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களுக்கு இடையே ஒத்துக்கொள்ளப்பட்ட வாடகை நிறைவேற்றப்பட்டிருந்த உடன்பாடு எதுவும் ஏற்படாமல் இருக்கின்றவிடத்து வழி இந்தச்சட்டம் தொடங்குவதற்கு முன்பு ஏற்பட்டுள்ள குத்தகைகள் என்கின்ற நேர்வில்

(c) அத்தகைய உடன்பாட்டில் நில உரிமையாளர் மற்றும் வாடகைதாரருக்கு இடையே ஒத்துக்கொள்ளப்பட்ட வாடகை, ஏற்கனவே எழுத்துப்பூர்வமான உடன்பாடு ஒன்று ஏற்பட்டிருந்தவிடத்து வழி இந்தச்சட்டம் தொடங்குவதற்கு முன்பு ஏற்பட்டுள்ள குத்தகைகள் என்கின்ற நேர்வில்

9 ஆம் பிரிவுக்காக திருத்தம்

7. முதன்மைச்சட்டத்தின் 9ஆம் பிரிவில் உட்பிரிவுகள் (5) (7) மற்றும் (8) விட்டுவிடப்பட்டது,

10 ஆம் பிரிவுக்காக மாற்றாக்கம்

8. முதன்மைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கு பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது

அதிகார அமைப்பு வாடகையை நிர்ணயிக்கவும் அல்லது மாற்றியமைக்கவும் வேண்டும்:—

Verified RealEstate™

அதிகார அமைப்பு நில உரிமையாளர் அல்லது வாடகைதாரரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் பேரில் தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள குத்தகை உடன்பாட்டிற்கிணங்க நேர்விற்கேற்ப வாடகையை மற்றும் வாடகைதாரரால் செலுத்துவதற்கான பிற கட்டணங்களை மற்றும் செலுத்து மாற்றியமைக்கப்பட்ட வாடகை தேதியிலிருந்து மேலும் நிர்ணயம் செய்ய, வேண்டும் அதாவது மாற்றியமைக்க வேண்டும்.

9. முதன்மைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் வளாகங்களை காலி செய்த பின்பு ஒரு மாதத்திற்குள் என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘நில உரிமையாளரால் காலி செய்யப்பட்ட வளாகங்களின் உடைமை எடுத்துக் கொள்ளப்படும் நேரத்தில்’’ என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 11 ஆம் பிரிவிற்கான மாற்றாக்கம்

10. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது :– 12 ஆம் பிரிவிற்கான மாற்றாக்கம்

வாடகைதாரருக்கு உடன்பாடு கொடுக்கப்பட வேண்டும் நில உரிமையாளர் வாடகை அதிகார அமைப்பிடம் உடன்பாட்டினை செய்து கொண்டுள்ள பதினைந்து நாட்களுக்குள் வாடகைதாரருக்கு உண்மையாகக் கையொப்பமிடப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட உடன்பாடு ஒன்றினை அளிக்க வேண்டும்.

11. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் (2) ஆம் சட்டப் பிரிவிற்கு பின்பு பின்வரும் வரம்புரை சேர்க்கப்படுதல் வேண்டும். 13 ஆம் பிரிவிற்கான திருத்தம்

வரம்புரை : ஆனால் மின்னனு முறை மூலமாக நில உரிமையாளருக்கு வாடகைதரரால் வாடகை அல்லது பிற கட்டணங்கள் செலுத்தப்பட்டிருக்கின்றவிடத்து வங்கி ஒப்புகை செலுத்தத்திற்கான ஒப்புகை சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

12. முதன்மைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவில் (5) ஆம் பிரிவு விட்டு விடப்பட்டது. 14 ஆம் பிரிவிற்கான திருத்தம்

13. முதன்மைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (1) (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளுக்கு பதிலாக பின்வரும் உட்பிரிவுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) அட்டவணையிடப்பட்ட அல்லது ஒத்துக்கொள்ளப்பட்ட சரிசெய்து கொடுக்க வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு வாடகைதாரர்கள் மறுக்கின்ற நிலையில் நில உரிமையாளர் அந்த பழுதுகளை சரிசெய்து கொள்ள வேண்டும் மற்றும் வாடகைதாரர் நில உரிமைதாரரால் அறிவிப்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நில உரிமையாளருக்கு அவர் செய்துள்ள செலவினை செலுத்த வேண்டும்.

(4) அட்டவணையிடப்பட்ட அல்லது ஒத்துக்கொள்ளப்பட்ட பழுதுகளை சரிசெய்து கொடுப்பதற்கு நிலஉரிமையாளர் மறுக்க நேர்ந்தால் வாடகைதாரர் சரிசெய்து கொண்டு வாடகையில் பிடித்தம் செய்துகொள்ள வேண்டும்.

வரம்புரை :– ஆனால் எந்த நேர்விலும் வாடகையில் குறைத்துக் கொள்ளப்பட்டு பிடித்தம் செய்யப்பட்டது ஒரு மாதத்திற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட வாடகை ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் இருக்கலாகாது.

14. முதன்மைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் (4) ஆம் உட்பிரிவில் வரையறுக்கப்பட்ட என்ற சொற்றொடருக்கு பதிலாக ‘‘ஏற்பட்ட ஆனால் ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேல் இருத்தல் கூடாது. என மாற்றியமைக்கப்படவேண்டும். 20 ஆம் பிரிவிற்கான திருத்தம்

15. முதன்மைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் ,– 21 ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1) (a) கூறுக்கு பதிலாக பின்வரும் கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்:–

(a) 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுகளின் படி உடன்பாடு ஒன்றினை ஏற்படுத்தவாறுயிருக்கின்ற நில உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்.

(2) (g) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

VerifiedRealEstate

(g) நில உரிமையாளருக்கு தேவைப்படுகின்ற படி குடியிருப்பு அல்லது குடியிருப்பு அல்லாத நோக்கத்திற்காக வாடகைக்கு விடப்படும் வளாகங்கள் அவருக்காக குடியிருப்பு அல்லது குடியிருப்பு அல்லாதவற்றிற்காக கையுடைமையில் வைத்திருப்பதற்காக அல்லது அவருடை குடும்பம் மற்றும் எவருக்காகவும் அல்லது நபர் எவருக்காக அவருடைய வளாகங்கள் நலப்பயன் பயன் படுத்தப்பட்டிருக்கிறதென்றால்

22ஆம் பிரிவிற்கான திருத்தம்

16. முதன்மைச் சட்டத்தின் 22ஆம் பிரிவில் (1) (1)ஆம் பிரிவில் இரண்டு மாதங்கள் என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக மூன்று மாதங்கள் என்ற சொற்றொடராக மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (2) ஆம் உட்பிரிவில் வாடகை நீதிமன்றம் பத்தாயிரம் ரூபாய் வரை தண்டம் ஒன்றினை நில உரிமையாளர் மீது விதிகளையும் அவர் வாடகை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டத்திற்கு கட்டுப்பாடுடையதாக இருத்த வேண்டும். அது இருபத்து ஐயாயிரம் ரூபாய்க்கு மிகாது இருத்தல் வேண்டும்.

24 ஆம் பிரிவிற்கான திருத்தம்

17. முதன்மைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் ‘தனி வட்டி’ என்கின்ற சொற்களுக்குப் பதிலாக ‘வட்டி’ என்ற சொல் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

VI மற்றும் VII மாற்றாக அமைக்கப்படுதல்

18. VI மற்றும் VII—ஆம் அத்தியாங்களுக்கப் பதிலாக பின்வரும் அத்தியாயங்கள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

அத்தியாயம் VI

வாடகை அதிகார அமைப்புகளை அமர்த்துதல் அவைகளுடைய அதிகாரங்கள் செயற்பணிகள்

வாடகை அதிகார அமைப்பை அமர்த்துதல்

30. ஆட்சியர் மைய/ மாநில/ ஒன்றியத்து ஆட்சி நிலவரை அரசின் முன் ஒப்பளிப்புடன் இந்த சட்டமானது பொருந்தக் கூடிய அவருடைய அதிகார எல்லைக்குள் உள்ள பரப்பிடத்திற்காக துணை ஆட்சியர் படி நிலைக்கு குறையாத அலுவலரை வாடகை அதிகர அமைப்பாக அமர்த்துகை செய்தல் வேண்டும்.

வாடகை அதிகார அமைப்பின் அதிகாரம் மற்றும் நெறிமுறை

31. வாடகை அதிகார அமைப்பானது சட்டத்தின் 4, 9, 10, 14 மற்றும் 20 ஆம் பிரிவின்படி சட்டத்திப்டி வாடகை நீதிமன்றத்தின் உற்றமைந்துள்ள அதே அதிகாரங்களைக் கொண்டிருக்கும் அத்தகைய விண்ணப்பங்களை முடிவு செய்கையில் சட்டத்தின் 34 மற்றும் 37 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்

அத்தியாயம்—VII

வாடகை நீதிமன்றங்களும் மற்றும் வாடகை தீர்ப்பாயங்களும்

32. வாடகை நீதிமன்றத்தின் அமைப்பு:—

அரசு, அறிக்கையினால் அதற்கத் தேவையெனத் தோன்றலாகிறவாறான பல நகரப் பகுதிகளில் வாடகை அத்தகைய எண்ணிக்கையிலான நீதிமன்றங்களை அமைத்து உருவாக்கலாம்.

வரம்புரை:— ஆனால் அங்கே ஏற்கனவே வாடகை நீதிமன்றம் ஒன்று இருக்கின்ற விடத்து அரசு, அதனை இந்தச் சட்டத்தின்படி வாடகை நீதிமன்றமாக பதவிப் பெயரிடலாம்.

மேலும் வரம்புரை:— ஆனால்வாடகைநீதிமன்றம் அங்கேஇல்லாமல்இருக்கின்றவிடத்து அரசு இந்தச் சட்டத்தின்படி வாடகை நீதிமன்றமாக புற எந்தச் சட்டத்தின்படியும் நிறுவப்பட்ட பிற நீதிமன்றம் எதனையும் பதவிப் பெயரிடலாம்.

(2) நகர பரப்பிடம் எதற்காகவும் அமைத்துருவாக்கப் பட்டிருக்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாடகை நீதிமன்றங்களாக இருக்கின்றவிடத்து அரசு, பொதுவாக அல்லது சிறப்பு ஆணை வாயிலாக பதிவுகளை ஒழுங்குமுறைப்படுத்தலாம்.

(3) வாடகை நீதிமன்றம் ஒன்று உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்துஅரசால் பணியமர்த்தம் செய்யப்படக்கூடிய தலைமை அலுவலர் ஒருவரால் தலைமை தாங்கப்படுதல் வேண்டும்.

Verified RealEstate ™

(4) நபர் ஒருவர் அவர் மாநில நீதிப்பணியின் உறுப்பினர் ஒருவராக இருந்திருந்தாலன்றி வாடகை நீதிமன்றத்தின் தலைமை அலுவலராக பணியமர்த்தம் செய்யப்படுவதற்கு தகுதியுடையராக இருத்தலாகாது.

(5) அரசு, உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து ஒரு வாடகை நீதிமன்றத்தின் தலைமை அலுவலரை வேறு வாடகை நீதிமன்றத்தின் தலைமை அலுவலரின் செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கும் அதிகாரமளிக்கலாம்.

மேல்முறையீடுகள்

33. (1) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட வாடகை அதிகாரியின் ஆணைக்கு எதிராக நிலவர அதிகார வரம்பில் கொண்டிருக்கும் வாடகை நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு சென்று செய்து கொள்ளுவதற்கு உற்றது ஆகும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின் படியான மேல்முறையீடு ஒன்று வாடகை அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் தொடரப்படுதல் வேண்டும்.

வாடகை நீதிமன்றத்தின் அதிகார வரம்பு

34. அப்பிரிவுகளுக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், இந்தச் சட்டம் அளவில் நிற்கும் பகுதிகளில் நில உரிமையாளருக்கும் வாடகைதாரருக்கும் இடையிலான பூசல்கள் தொடர்பான விண்ணப்பங்களை விசாரணை செய்து முடிவு செய்வதற்கும் மற்றும் இந்தச்சட்டத்தின்படி அடங்கியுள்ள தொடர்புடைய மற்றும் சார்வுருவான பொருள் பாடுகளுக்கும் 39–ஆம் பிரிவின்படியான வாடகை அதிகாரியுடன் அதிகாரம் வரம்பு தவிர வாடகை நீதிமன்றம் மட்டும் ஆனால் உரிமையியல் நீதிமன்றம் அல்லாமல் அதிகார வரம்பு கொண்டிருத்தல் வேண்டும்.

மேலும் வாடகை நீதிமன்றமானது வாடகை மற்றும் இடங்கள் சம்பந்தமான மனுக்களை பரிசீலனை செய்யும்பொழுது சொத்து மாற்றுச் சட்டம் 1882 மற்றும் இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 அல்லது இப்பொருள் குறித்து இணையான சட்டம் வழியாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு மூலம் கொண்டுவர வேண்டும்.

வாடகை தீர்பாயங்களை அமைத்தல்

35. (1) அரசு, அறிவிக்கை வாயிலாக, தாம் தேவையென கருதலாகும் அத்தகைய இடங்களில் அத்தகைய எண்ணிக்கையிலான வாடகை தீர்ப்பாயங்களை அமைக்கலாம் மற்றும் ஒன்றுக்கு முற்பட்ட தீர்ப்பாயம் அமைக்கப்படுகிறவிடத்து.

(2) வாடகை தீர்ப்பாயம் முதன்மை மேல்முறையீட்டு உறுப்பினர் ஒருவரை தலைமையாக கொண்டு, பல உறுப்பினர்களை கொண்ட தீர்ப்பாயம் ஆகும். மூத்த நீதிபதி முதன்மை மேல்முறையீட்டு உறுப்பினராக செயல்படுவார். அவர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒரு உறுப்பினர் முன் உள்ள வாக்குகளை தேவையென கருதும் பட்சத்தில் மற்றொரு உறுப்பினருக்கு மாற்றும் அதிகாரம் பெற்றவராக திகழ்வார். அதேபோன்று, முதன்மை மேல்முறையீட்டு தீர்ப்பாயம், கோரிக்கையின் பேரிலோ அல்லது தன்னிச்சையாகவோ ஒரு வாடகை நீதிமன்றத்திலிருந்து மற்றொரு வாடகை நீதிமன்றத்திற்கு மாற்றலாம். உயர் நீதிமன்றத்தினை ஆலோசித்து அரசு வாடகை தீர்ப்பாணையை அனைத்து உறுப்பினர்களை நியமிக்கலாம்.

(3) எந்த ஒரு நபரும் அவர் உயர்நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியாக இருந்து இருந்தால் அன்றி வாடகை தீர்பாயத்தின் முதன்மை உறுப்பினராக அமர்த்தப்படுவதற்கு தகுதியுடையவர் ஆவார்.

வாடகை நீதிமன்றம் மற்றும் வாடகை தீர்ப்பாயத்தின் நடைமுறை

36. (1) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படலாகும் விதிகள் அவற்றிற்கும் உட்பட்டு, வாடகை நீதிமன்றம் மற்றும் வாடகை தீர்ப்பாயம் 1908–ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டத்தினால் வகுத்துறைக்கப்பட்ட நடைமுறைக்கு கட்டுப்படுதல் ஆகாது ஆனால் இயற்கை நீதி நெறிமுறைகளினால் வழி நடத்தப்படுதல் வேண்டும் மற்றும் தன்னுடைய சொந்த நடைமுறையை முறைப்படுத்துவதற்கு அதிகாரயுடையதாகும் மற்றும் வாடகை நீதிமன்றம் பின்வரும் நடைமுறையை பின்பற்றுதல் வேண்டும் அதாவது:–

(அ) நில உரிமையாளர் அல்லது வாடகைதாரர் வாடகை நீதிமன்றத்தின் முன்பு பிரமாணபத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் எவையேனுயிருப்பின் அவற்றுடன் சேர்த்து விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்யலாம்.

(ஆ) வாடகை நீதிமன்றம், விண்ணப்பம், பிரமாணபத்திரங்கள் ஆவணங்கள் ஆகியவற்றின் நகல்களுடன் சேர்த்து எதிர்தரப்பினருக்கும் அறிவிப்பு வழங்குதல் வேண்டும்.

(இ) எதிர்தரப்பினர் விண்ணப்பதாரருக்கு அதன் நகலை சார்வு செய்த பின்பு, பிரமாணப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் எவையேனுயிருப்பின் அவற்றுடன் சேர்த்து பதிலுரையை தாக்கல் செய்தல் வேண்டும்.

(ஈ) எதிர்த்தரப்பினருக்கு நகல் சார்புசெய்தபிறகு விண்ணப்பதாரர் எதிர்விடை ஏதேனுமிருப்பின் அதனை தாக்கல் செய்யலாம்.

(உ) வாடகை நீதிமன்றம், விசாரணை தேதியை நிர்ணயம் செய்தல் வேண்டும் மற்றும் அது அவசியமென கருதும் சுருக்குமுறை விசாரணையை நடத்தலாம்.

(2) வாடகை நீதிமன்றம் மற்றும் வாடகை தீர்ப்பாயத்தின் முன்புள்ள வழக்கு ஒவ்வொன்றிலும், சாட்சிகளின் சான்று பிரமாணபத்திரம் மூலமாக வழங்கப்படுதல் வேண்டும்.

எனினும், வாடகை நீதிமன்றம் மற்றும் வாடகை தீர்ப்பாயம் முன்னிடப்படக் கூடிய அத்தகைய சாட்களை விசாரணை அல்லது குறுக்கு விசாரணை செய்வதற்காக சாட்சிகளை அழைப்பது நீதியின் நலனுக்கு தேவையானது என்று தோன்றுகின்றவிடத்து, அத்தகைய சாட்சிகளை விசாரணைக்காக அல்லது குறுக்கு விசாரணைக்காக ஆஜர் ஆகுமாறு ஆணையிடலாம்.

(3) அழைப்பாணைகளை சார்வு செய்வது பொறுத்த 1908 ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணை முறை தொகுப்புச்சட்டத்தின் வகைமுறைகள் வாடகை நீதிமன்றம் மற்றும் வாடகை தீர்ப்பாயத்தால் அறிவிப்பு சார்பு செய்வதற்காக அவசியமான மாறுதல்களுடன் பொருந்தத்தக்கதாகும்.

(4) விண்ணப்பம் மற்றும் மேல்முறையீடு ஒவ்வொன்றும், இயன்றயளவு, வகுத்துறைக்கப்படலாகும் படிவங்களில் இருந்தல் வேண்டும்.

(5) வாடகை நீதிமன்றம், நடவடிக்கைகள் முழுவதிலும் தரப்பினரின் வேண்டுதலின்பேரில், மூன்று ஒத்திவைத்தலுக்குமேல் வழக்கமாக அனுமதித்தலாகாது மற்றும் அது அவ்வாறு செய்ய முடிவு செய்யும்நேர்வில், எழுத்துவடிவில் அதற்கான காரணங்களை பதிவு செய்தல் வேண்டும் மற்றும் ஒத்திவைக்கைகோரும் தரப்பினர், நியமான செலவுத் தொகையை செலுத்துமாறு ஆணையிடுதல் வேண்டும்.

(6) (அ) 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஏ) ஆகிய கூறுகளின் படியான விண்ணப்பம் அனைத்தும் வாடகை நீதிமன்றத்தில் விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குள் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) 21 ஆம் பிரிவின் (2) ஆ உட்பிரிவின் (ஈ), (ஏ) கூறுகளின்படியான விண்ணப்பங்கள் வாடகை நீதி மன்றத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

வாடகை நீதிமன்றம் மற்றும் வாடகை தீபபாயத்தின் அதிகாரங்கள்

37. (1) வாடகை நீதிமன்றம் மற்றும் வாடகை தீர்ப்பாயம் இந்தச் சட்டத்தின்படி, தன்னுடைய செயற்பணிகளை ஆற்றும் நோக்கத்திற்காக 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டத்தின்படி, உரிமையியல் நிதிமன்றத்திடம் உற்றமைந்திருக்கும் அதே அதிகாரங்களை உடையதாகும்;

Verified RealEstate ™

(அ) நபர் எவரையும்அழைப்பாணை விடுத்து முன்னிலை ஆகுமாறு கட்டாயப்படுத்துதல் மற்றும் ஆணைமொழியின்பேரில் அவரை விசாரணைச்செய்தல்;

(ஆ) ஆவணங்கள் எவற்றையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைபடுத்துமாறு கோருதல்,

(இ) சாட்சிகளை அல்லது ஆவணங்களை ஆய்வு செய்வதற்காக ஆணைகளைப்பிறப்பித்தல்,

(ஈ) வட்டார ஆயவிற்காக ஆணைகளைப் பிறப்பித்தல்;

(உ) பிரமாணபத்திரங்களின் பேரில் சான்றுகளைப் பெறுதல்;

(ஊ) தவறுகைக்காக விண்ணப்பம் அல்லது மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்தல், அதனை எதிர்தரப்பினர் இல்லாமல் முடிவு செய்தல்;

(எ) தவறுகைக்காக விண்ணப்பம் அல்லது மேல்முறையீடு எதனையும் தள்ளுபடி செய்த ஆணை எதனையும் அல்லது எதிர்தரப்பினர் இல்லாமல் அதனால் பிறப்பிக்கப்பட்ட ஆணை நீக்கம் செய்தல்;

(ஏ) உரிமையியல் நீதிமன்றம் எதற்கும் சுட்டுகை செய்யாமல் இந்தச் சட்டத்தின்படியான, தன்னுடைய ஆணை, மற்றும் முடிவுகளை நிறைவேற்றுதல்;

(ஐ) தன்னுடைய ஆணைகள் மற்றும் முடிவுகளை மறுஆய்வு செய்தல்;

(ஒ) வகுத்துரைக்கப்படலாகும் பிறபொருட்பாடு எதுவும்

(2) வாடகை நீதிமன்றம், அல்லது வாடகை தீர்ப்பாயத்தின் முன்புள்ள நடவடிக்கைகள் எவையும் 1860 ஆம் ஆண்டு இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 193 மற்றும் 228 ஆம் பிரிவின் பொருள்படி மற்றும் 196 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக நீதிமன்ற நடவடிக்கைகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் வாடகை நீதிமன்றம் அல்லது வாடகை தீர்பாயம், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறை தொகுப்புச்சட்டத்தின் 195 ஆம் பிரிவின் மற்றும் ஒஒஏஐ ஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக உரிமையியல் நீதிமன்றமாககொள்ளப்படுதல் வேண்டும். ஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக உரிமையியல் நீதிமன்றமாககொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி விசாரணை எதனையும் நடத்தும் அல்லது கடமை எதனையும் ஆற்றும் நோக்கத்திற்காக வாடகை நீதிமன்றம்

(அ) எழுத்துவடிவிலான இருபத்திநான்கு மணி நோரத்திற்கு குறையாக அறிவிப்பைக் கொடுத்த பின்பு, நுழைவதற்கு மற்றும் ஆய்வு செய்வதற்கு அல்லது தனக்கு கீழ்நிலையில் உள்ள அலுவலருக்கும் அதிகாரம் அளித்த பின்பு, சூரிய உதயத்திற்கும் சூரியமறைவதற்கும் இடையே வளாகம் எதிலும் நுழையலாம் மற்றும் ஆய்வு செய்யலாம்.

38. வாடகை நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு.—

(1) வாடகை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இறுதியான ஒவ்வொன்றிலும் இருந்து, வளாகம் அமைத்துள்ள இடத்தின் அதிகார வரம்பு கொண்டுள்ள வட்டார எல்லைகளுக்குள்ள வாடகை நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு ஒன்று செய்வதற்கு உரிமை உண்டு மற்றும் அத்தகைய மேல் முறையீடு, அத்தகைய இறுதியாணையின் நகலும் சேர்த்து இறுதியாணைத்தேதியிலிருந்து முப்பது நாட்கள் கால அளவிற்குள் தாக்கல் செய்யப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் படி மேல் முறையீடு ஒன்று, தாக்கல் செய்யப்படுவதன் பேரில், வாடகை நீதிமன்றம், எதிர் மனுதாரருக்கு மேல் முறையீட்டின் நகலுடன் சேர்த்து அறிவிப்பு சார்பு செய்து எதிர்மனுதாரருக்கு மேல்முறையீட்டு அறிவிப்பு சார்பு செய்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு குறையாமல் விசாரணையை நிர்ணயித்தல் வேண்டும் மற்றும் மேல் முறையீடு எதிர்மனுதாரருக்கு மேல்முறையீட்டு அறிவிப்பு சார்பு செய்த தேதியிலிருந்து நூற்று இருபது நாள் கால அளவிற்குள் முடிவு செய்தல் வேண்டும்.

Verified by RealEstate™

(3) வாடகை தீர்ப்பாயம் நியாயமான மற்றும் உரிய முடிவிற்கு வருவதன் பேரில் அது தேவையென கருதுகிறவிடத்து, மேல்முறையீட்டு நடவடிக்கைகளின் எந்த கட்டத்திலும் ஆவணங்களை அனுமதிக்கலாம் எனினும் இந்த வசதியானது விசாரணையின் போது ஒரே ஒரு முறை மட்டும் விண்ணப்பதாரர்களுக்கு கிடைக்கக் கூடியதாகும்.

(4) வாடகை தீர்ப்பாயம், தன்னுடைய உளத் தேர்வின்படி மேல்முறையீடு முடிவு செய்யப்படாமல் இருக்கும் போது அது தக்கதெனக் கருதும் இடைநிலை ஆணையை பிறப்பிக்கலாம்.

(5) (அ) மேல் முறையீட்டை முடிவு செய்கையில் வாடகை தீர்ப்பாயம் அதற்கான காரணங்களை பதிவு செய்தபின்பு வாடகை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை உறுதி செய்யலாம், நீக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம்,

(ஆ) வாடகை தீர்ப்பாயத்தின் முடிவு இறுதியானதாகும் மற்றும் அந்த ஆணைக்கு எதிராக மேலுமான மேல்முறையீடு அல்லது சீராய்வு எதுவும், செய்வதற்கான உரிமை இல்லை,

(6) தரப்பினர்களில் எவரின் விண்ணபத்தின் பேரில் மற்றும் விசாரிக்கப்படுவதற்கு அவர்கள் விரும்பியவாறு அவர்களை விசாரித்த பின்பு அல்லது அத்தகைய அறிவிப்பில்லாமல் தானே முற்பட்டு, முதன்மை வாடகை தீர்ப்பாயம் அந்த கட்டத்திலும் முடிவு செய்வதற்காக ஒரு வாடகை நீதிமன்றத்திலிருந்து மற்றொரு வாடகை நீதிமன்றம் எதற்கும் வழக்கு எதனையும் மாற்றலாம்.

(7) (6) ஆம் உட்பிரிவின் படி வழக்கு எதுவும் மாற்றப்பட்டுள்ளவிடத்து, மாற்றல் ஆணையிலுள்ள சிறப்பு பணிப்புரை எதற்கும் உட்பட்டு எந்த வாடகை நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்டதோ அந்த வாடகை நீதிமன்றம் அது மாற்றப்பட்ட நிலையிலிருந்து விசாரணையை தொடங்கலாம்.

ஆணையை நிறைவேற்றுதல்

39. (1) வாடகை நீதிமன்றமானது, தரப்பின் எவரின் விண்ணபத்தின் பேரில் பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறைகளை பின்பற்றுவதன் மூலமாக வகுத்துரைக்கப்பட்ட முறையில் இந்த சட்டத்தின்படி பிறப்பாக்கப்பட்ட பிற ஆணையின் தெனின் இறுதி ஆணையை நிறைவேற்றுதல் வேண்டும் அதாவது:—

(a) எவருடைய சார்பாக முடிவு செய்யப்பட்டதோ அந்த நபருக்கு கட்டிட வளாகங்களின் உடைமையை ஒப்படைக்கலாம்,

(b) எதிர்தரப்பினரின் அசையும் அல்லது அசையாச் சொத்தினை பற்றுகை செய்யலாம் மற்றும் விற்பனை செய்யலாம்,

(c) எதிர் தரப்பினரின் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட வங்கிக் கணக்குகளை பற்றுகை செய்யலாம் மற்றும் அத்தகைய கணக்குகளிலிருந்து மனநிறைவளிக்கும் ஆணையின் தொகையை செலுத்தப்படுதல் வேண்டும்.

(d) ஆணையை நிறைவேற்றுவதற்காக வாடகை நீதிமன்றத்தின் அல்லது வட்டார நிருவாகத்தின் அல்லது வட்டா குழுவின் அலுவலர்கள் உள்ளடங்கலாக வழக்கறிஞர் அல்லது பிற தகுதி திறம் வாய்ந்த நபர் எவரையும் அமர்த்தலாம்.

(2) வாடகை நீதிமன்றமானது, இறுதி ஆணையை நிறைவேற்றுவதற்காக வட்டார அரசிடமிருந்து அல்லது வட்டார குழுமத்திடமிருந்து அல்லது வட்டார காவலரிடமிருந்து உதவியைப் பெறலாம்.

வரம்புரை ஆனால் காவலரின் உதவியை வாடகை நீதிமன்றத்தால் தீர்மானிக்கலாகிறவாறான அத்தகைய செலவுத் தொகையை வழக்கு தரப்பினர்களால் செலுத்துவதற்கு உட்பட்டு பெறுதல் வேண்டும்.

(3) வாடகை நீதிமன்றமானது, இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணை அல்லது பிற ஆணை எதுவும் தொடர்பாக சுருக்க முறையில் நிறைவேறுத நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் மற்றும் இந்தப்பிரிவின்படி நிறைவேறுதலுக்காக விண்ணபிக்கப்பட்ட விண்ணபத்தை எதிர்தரப்பினருக்கு அறிவிப்பை சார்பு செய்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் முடிவு செய்தல் வேண்டும்.

43 ஆம் பிரிவிற்கு மாற்றாக அமைக்கப்படுதல்

19. முதன்மைச் சட்டத்தின் 43ஆம் பிரிவிற்குப் பதிலாக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

43. வாடகை நீதிமன்றத்தின் வாடகை தீர்ப்பாயத்தின் வாடகை அதிகார அமைப்பின் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள்,– **(1)** அரசு, வாடகை நீதிமன்றம் அல்லது வாடகை தீர்ப்பாயம் அல்லது வாடகை அதிகார அமைப்புடன் கலந்தாலோசித்து இந்தச் சட்டத்தின்படி அவர்களுடைய செயற்பணிகளை திறம்பட செய்து முடிப்பதற்காக அதற்குத் தேவையெனத் தோன்றலாகியவாறான அத்தகைய அலுவலர்களை மற்றும் பணியாளர்களை பணியமர்த்தம் செய்யலாம்.

(2) **(1)**ஆம் உட்பிரிவின்படி பணியமர்த்தம் செய்யப்பட்ட நேர்வுற்கேற்ப வாடகை நீதிமன்றம் அல்லது வாடகை தீர்ப்பாயம் அல்லது வாடகை அதிகார அமைப்பின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் சம்பளம் மற்றும் செலுத்தக்கூடிய படிகள் மற்றும் பணியின் வரையுரைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

Verified RealEstate ™

முதலாம் இணைப்புப் பட்டியல்

(4 (3)ஆம் பிரிவைப் பார்க்க)

பதிவுக்கான விண்ணப்பம்

பெறுநர்

வாடகை அதிகார அமைப்பு

————————————————

————————————————

————————————————

1. மின்னஞ்சல் அடையாளம் மற்றும் தொடர்புக்கொள்ளும் விபரங்கள் உள்ளடங்களாக நிலஉரிமையாளர்களின் பெயர் மற்றும் முகவரி (விருப்பப்படி)
2. மின்னஞ்சல் அடையாளம் மற்றும் தொடர்புக்கொள்ளும் விபரங்கள் உள்ளடங்களாக பெயர் மற்றும் சொத்து மேலாண்மையரின் பெயர் மற்றும் முகவரி எதுவுமிருக்கின் தெளிவாக (விருப்பப்படி)
3. மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கொள்ளும் விபரங்கள் (விருப்பப்படி) உள்ளடங்களாக வாடகைதாரரின் பெயர் மற்றும் முகவரி (விருப்பப்படி)
4. உடைமை தொடர்பான நிலம் (ஏதுமிருக்கின்றது என்றால்) உள்ளடங்கலாக வாடகைதாரருக்க விடப்படும் வாடகைதாரரின் விருப்பம்
5. வாடகைதாரருக்கு எந்த தேதியில் இருந்து வாடகை அளிக்கப்பட்டு இருக்கின்றது.
6. 8 ஆம் பிரிவுலுள்ளவாறு செலுத்தத் தக்க வாடகை
7. வாடகைதாரருக்கு ஏற்படுத்தி தரப்பட்டுள்ள
8. செலுத்தத்தக்கவுள்ள பிற கட்டணங்கள்
   (a) மின்சாரம்
   (b) தண்ணீர்
   (c) பிற மரச்சாமான்கள் பொருத்தப்பட்டவைகள் மற்றும் பொருத்திகள்,
   (d) பிற சேவைகள்
9. குத்தகையின் காலம் (வாடகையின் காலம்)
10. உண்மையான நிறைவேற்றப்பட்ட குத்தகை உடன்பாட்டினை சேர்த்தல்
11. சமர்ப்பிக்கப்பட்ட நில உரிமையாளரின் அடையாள சான்றிதழ் (PAN / ஆதார் / வாக்காளர் அடையாள அட்டை / கடவுச் சீட்டு / ஓட்டுநர் உரிமம்)
12. சமர்ப்பிக்கப்பட்ட வாடகைதாரரின் அடையாள சான்றிதழ் (PAN / ஆதார் / வாக்காளர் அடையாள அட்டை / கடவுச் சீட்டு / ஓட்டுநர் உரிமம்)

பெயர் மற்றும் நில உரிமையாளரின் கையெழுத்து

நில உரிமையாளர் நிழற்படம்

வாடகைதாரரின் பெயர் மற்றும் கையெழுத்து

வாடகைதாரரின் நிழற்படம்

இணைக்கப்பட்டுள்ளவை :-

1. குத்தகை உடன்பாடு
2. நில உரிமையாளரின் அடையாள சான்றிதழ் நகல் (அவரால் சான்றொப்பம் பெற்ற நகல்)

இணைக்கப்பட்டுள்ளவை :-

1. குத்தகை உடன்பாடு
2. நில உரிமையாளரின் அடையாள சான்றிதழ் நகல் அவரால் சான்றொப்பம் பெற்ற நகல்)
3. வாடகைதாரரின் அவரால் கையொப்பம் இடப்பட்ட சான்றிதழின் நகல்

Verified RealEstate™

நோக்கக் காரண விளக்கவுரை

இந்திய அரசின் பரிந்துரைகளின் அடிப்படையில், இந்திய அரசால் அனுப்பப்பட்ட மாதிரி குடிவாரச் சட்டம் 2015–ஐ கணக்கில் கொண்டு, தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை) கட்டுப்பாடு சட்டம் 1960 (தமிழ்நாடு சட்டம் 18, 1960) என்ற சட்டத்தை நீக்கறவு செய்வதன் மூலம் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம் 2017 என்ற சட்டத்தை இயற்றியது. ஆனால் இச்சட்டத்தை அமலுக்கு கொண்டுவரவில்லை. இதற்கடுத்து, இந்திய அரசு, முதலில் அனுப்பிய மாதிரி குடிவாரச் சட்டம் 2015–லிருந்து வேறுபட்ட மாதிரி குடிவாரச் சட்டம் 2017–ஐ அனுப்பி வைத்துள்ளது. எனவே, இந்திய அரசால் அனுப்பப்பட்ட, மாதிரி குடிவாரச் சட்டம் 2017–க்கு தக்கவாறு விதிகளை ஏற்படுத்துவதற்கென, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 42–ஐ திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

ஓ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர்.

Verified RealEstate

சட்டம் இயற்றும் அதிகார ஒப்படைப்பு பற்றிய குறிப்பு

இச்சட்ட முன்வடிவின் **3, 18** மற்றும் **19–**ஆம் கூறுகள் மூலம் **4, 32, 36, 37** மற்றும் **43–**ஆம் பிரிவு அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நேர்விற்கேற்ப விதிகளைச் செய்வதற்கு மற்றும் / அல்லது அறிவிக்கையை அல்லது ஆணையை பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

ஓ. பன்னீர்செல்வம்,
துணை முதலமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

Verified RealEstate ™

2018–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2018

தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக வகை செய்வதற்கானதொரு சட்டமுன் வரைவு

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்ட மன்றப் பேரவையினால் சட்டமியற்றப்படுவதாகுக.

அத்தியாயம் – I

முன்னுரை

1. (1) இந்தச் சட்டம் 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு, அளாவுவகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் அளாவி நிற்கும்.

(3) இது தமிழ்நாடு மாநிலத்தில் அரசு நிதி உதவி பெறும் அல்லது அரசு நிதி உதவி பெறாத அனைத்துத் தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

2. இந்த சட்டத்தில் பொருள் வரையறைகள்

(a) ''கல்வி ஆண்டு'' என்பது ஜூன் திங்கள் முதல் நாள்தொடங்கிஅடுத்த ஆண்டின் மே திங்கள் 31 ஆம் நாள் வரையிலான கால அளவு

அல்லது

அந்தந்த கல்வி வாரியங்களால் குறித்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய பிற கால அளவு என்று பொருள்படும்.

(b) ''இணைக்கப்பட்டது'' என்பது ஒப்புதலளிக்கப்பட்ட படிப்புப் பிரிவுகளைப் பின்பற்றும் நோக்கத்திற்காக முறையேயான தேர்வுக் குழுமத்துடன் பள்ளியொன்றின் முறைப்படியான பதிவு என்றும் மற்றும் தேர்வுகளுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட படிப்புப் பிரிவுகள் பொருட்டு மாணவர்களைத் தயார் செய்தல் என்றும் பொருள்படும்.

(c) ''நிதி உதவி பெறும் பள்ளி'' என்பது பள்ளி ஒன்று அதனுடைய செலவுகளுக்காக மாநில நிதியங் களிலிருந்து மானியமாக பெறக்கூடிய நிதி உதவி எதுவும் என்று பொருள்படும்.

(d) ''மேல்முறையீடு அதிகார அமைப்பு'' என்பது இந்தச் சட்டத்தின்படி மேல்முறையீடு அதிகார அமைப்பின் செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கு அரசால் அதிகாரமளிக்கப்பெற்ற அதிகார அமைப்பு அல்லது அலுவலர் அல்லது அதிகராமளிக்கப் பெற்ற எவரும் என்று பொருள்படும்.

(e) ''நன்னடத்தை விதி'' என்பது அரசால் வகுத்தமைக்கப்பட்ட நன்னடத்தை விதி என்று பொருள்படும்.

(f) ''தகுதிறமுடைய அதிகார அமைப்பு'' என்பது வகுத்துரைக்கப்படலாகிறவாறான தனியார் பள்ளிகளின் அத்தகைய பிரிவுகள் தொடர்பாக அல்லது அத்தகைய நோக்கத்திற்காக அத்தகைய பரப்பிடத்திற்காக இந்தச் சட்டத்தின்படி தகுதிறமுடைய அதிகார அமைப்பின் செயற்பணிகளை மற்றும் கடமைகளைச் செய்து முடிப்பதற்கு அரசால் அதிகாரமளிக்கப்பெற்ற அதிகார அமைப்பு, அலுவலர் அல்லது நபர் எவரும் என்று பொருள்படும்.

Verified @ RealEstate ™

(g) ''இயக்குநர்'' என்பது

(i) ஆங்கிலோ—இந்தியன் பள்ளிகள் உள்ளடங்கலாக நிதி உதவி பெறும் மற்றும் பகுதி நிதி உதவி பெறும் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தொடர்பான பள்ளிக் கல்வி இயக்குநர் என்று பொருள்படும்.

(ii) ''தொடக்கக்கல்வி இயக்குநர்'' என்பது நிதி உதவி பெறும் மற்றும் பகுதி நிதி உதவி பெறும் அனைத்து ஆரம்பப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தொடர்பான தொடக்கக் கல்வி இயக்குநர் என்று பொருள்படும்.

(iii) ''தனியார் பள்ளிகளின் இயக்குநர்'' என்பது அனைத்து சுய நிதி தனியார் பள்ளிகள், மாநிலக் கல்வி வாரியம், மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், இந்திய இடைநிலைக் கல்வி சான்றிதழ், பன்னாட்டு இளங்கலைஞர் எனும் பட்டம் பெறும் பல்கலைக் கழகம் மற்றும் அத்தகைய பிற வாரியங்கள் இணைக்கப்பட்ட தனியார் பள்ளிகளின் இயக்குநர் என்று பொருள்படும்.

(iv) ''கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநிலக் குழுவின் இயக்குநர்'' என்பது அரசிடமிருந்து மானியம் பெறும் அல்லது பெறாத அனைத்து கல்வி பங்களிக்கும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் அல்லது பயிற்சி தொடர்பான கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநிலக் குழுவின் இயக்குநர் என்று பொருள்படும்.

(h) ''கல்வி முகவாண்மை'' என்பது தனியார் பள்ளியொன்றினை நிறுவும் நோக்கங்களுக்காக 2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் படி பதிவு செய்யப்பட்ட நிறுமம் ஒன்று அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட சங்கமாகிறது. அல்லது 1882 ஆம் ஆண்டு இந்திய பொறுப்புக் கட்டாயச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக் கட்டளை ஒன்று என்று பொருள்படும்.

(i) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்.

(j) ''மானியம்'' தனியார் பள்ளி எதற்கும் மாநில நிதியங்களிலிருந்து உதவியாக செலுத்தப்படும் பணத் தொகை எதுவும் என்று பொருள்படும்.

(k) ''சிறுபான்மையினர் பள்ளி'' என்பது அரசமைப்புச் சட்டத்தின் 30 ஆம் உறுப்பு (1) ஆம் கூறின்படி அவ்வாறு செய்வதற்கு உரிமை பெற்றிருக்கிறவாறாக மதம் அல்லது மொழி அடிப்படையின் பேரில் அத்தகைய சிறுபான்மையினர் எவராலும் அதனுடைய விருப்பத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட மற்றும் நிர்வகிக்கப்படும் தனியார் பள்ளி ஒன்று என்றும் மற்றும் மாநில அரசால் மற்றும் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான தேசிய ஆணையத்தால் அவ்வாறு விளம்புகை செய்யப்பட்டது என்று பொருள்படும்.

(l) ''அறிவிக்கை'' என்பது இந்தச் சட்டத்தின்படி மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை எதுவும் என்றும் மற்றும் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்டது என்றும் பொருள்படும்.

(m) ''தனியார் பள்ளி'' என்பது இந்தச் சட்டத்தின்படி தகுதிறமுடைய அதிகார அமைப்பால் ஏற்பளிக்கப்பட்ட மற்றும் கல்வி முகவாண்மை ஒன்றினால் அரசிடமிருந்து மானியம் பெற்றோ அல்லது பெறாமலோ நிறுவப்பட்ட மற்றும் நிர்வகிக்கப்படும் அல்லது பராமரிக்கப்படும் விளையாட்டுப் பள்ளி, மழலையர் பள்ளி மற்றும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை அல்லது ஆசிரியர் பயிற்சி நிறுவனம் கல்விக்கு பங்களிப்புகள் செய்பவை என்று பொருள்படும். ஆனால் பள்ளிக்கூடம் ஒன்றையோ அல்லது நிறுவனம் ஒன்றையோ உள்ளடக்காது.

(a) மைய அரசால் அல்லது மாநில அரசால் அல்லது வட்டார அதிகார அமைப்பு எதனாலும் நிறுவப்பட்டது மற்றும் நிர்வகிக்கப்பட்டது அல்லது பராமரிக்கப்பட்டது; அல்லது

(b) மத அறிவுறுத்தலை மட்டும் தெரிவிப்பது ஆனால் பிற அறிவுறுத்தல் எதனையும் செய்யாதது.

(n) ''வகுத்துரைக்கப்பட்டது'' என்பது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்.

Verified RealEstate™

(o) ‘‘ஏற்பளிக்கப்பட்டது’’ என்பது இந்தச் சட்டத்தின்படி தகுதிறமுடைய அதிகார அமைப்புகளால் ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளியொன்று என்று பொருள்படும்.

(p) ‘‘ஏற்பளிப்பு’’ என்பது இந்தச் சட்டத்தின்படி தொகுக்கப்பட்டுள்ள தரங்கள் மற்றும் வரையறைகளுக்கு இணங்க பள்ளி ஒன்றினை நடத்துவதற்கு தகுதிறமுடைய அதிகார அமைப்பால் வழங்கப்பட்டுள்ள முறையான சான்றிதழ் ஒன்று என்று பொருள்படும்.

(q) ‘‘பள்ளிக்குழு’’ என்பது 14 ஆம் பிரிவின்படி அமைந்துருவாக்கப்பட்ட பள்ளிக்குழு என்று பொருள்படும்.

(r) ‘‘செயலாளர்’’ என்பது 14 ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள செயலாளர் என்று பொருள்படும்.

(s) ‘‘பணியாளர்’’ என்பது தனியார் பள்ளியொன்றின் கற்பிக்கும் மற்றும் கற்பிக்காத பணியாளர் ஆகிய இருவரும் என்று பொருள்படும்.

அத்தியாயம் – II

முன்னுரை

தனியார் பள்ளிகளை நிறுவுவதற்கான அனுமதி மற்றும் பதிவு மற்றும் நிர்வகிப்பதற்கான ஏற்பளிப்பு

பள்ளிக்கல்வியை ஒழுங்குமுறைப் படுத்துவதற் கான அதிகாரம்

3. (1) இந்தச் சட்டத்தின் வறைமுறைகள் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கிணங்க தவிர பிறவாறு தனியார் பள்ளி நிறுவப்படுத்துதலோ மற்றும் நிர்வகிக்கப்படுதலோ கூடாது.

(2) இது சம்பந்தமான வகுத்துரைக்கப்படலாகிறவாறான அரசு அல்லது தகுதிறமுடைய அதிகார அமைப்பு பின்வருவனவற்றை செய்வதற்கு அதிகாரமுடையவர்களாக இருப்பர்.

(a) தனியார் பள்ளிகளில் மற்றவகை தனித்திறன் செயல்பாடுகள், பாடத்திட்டம் உள்ளடங்கலாக;

(b) வகுத்துரைக்கப்படலாகிறவாறான வரைக்கட்டுகளுக்கிணங்க கல்வி முகவாண்மை ஒன்று பள்ளி ஒன்றை நிறுவுவதற்கு மற்றும் நிர்வகிப்பதற்கு அனுமதிப்பதற்கு;

(c) தனியார் பள்ளி எதற்கும் ஏற்பளிப்புகளை வழங்குவதற்கு;

(d) தனியார் பள்ளி எதனின் ஏற்பளிப்பினையும் திரும்பப் பெறுவதற்கு அல்லது பணத்தண்டம் விதிப்பதற்கு அல்லது இந்தச் சட்டத்தின் வகை முறைகள் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதற்கும் முரண்பட்டு விடுகிறதென்றால் அத்தகைய தனியார் பள்ளிக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுப்பதற்கும்;

(e) மாணவர்களின் உயிர் பாதுகாப்பு மற்றும் பொருள் பாதுகாப்புக்கான அளவீடுகள் அல்லது வழிகாட்டு நெறிமுறைகளை நேரத்திற்கேற்ப குறிப்பிடுவதற்கு;

(f) பள்ளி சேர்க்கைகளை, கட்டணம் வசூலித்தலை மற்றும் தேர்வுகளை நடத்துவதை ஒழுங்குபடுத்துவதற்கு

(g) பணியாளர்களின் குறைந்தபட்ச தகுதியை வகுத்துரைப்பதற்கு;

(h) இறையாண்மையை, சமூக நல்லிணக்கத்தை மற்றும் தேசத்தின் சமயச் சார்பற்ற தன்மையை அச்சுறுத்துதல் குறித்த சில புத்தகங்களை அல்லது வெளியிடப்படும் பொருட்களை அல்லது மின்னணு சாதனங்களை வகுத்துரைப்பது ஒழுக்க நெறிமுறைகளுக்கு மற்றும் தேசத்தின் பண்பாட்டு தர நிலைகளுக்கு மற்றும் தனியார் பள்ளியினால் மாணவர்களின் மனநிலையில் விரும்பத்தகாத வலியை ஏற்படுத்துகின்றது என்பதன் அடிப்படையில் அதனை தடை செய்வதற்கு;

(i) மாணவர்கள் மற்றும் பள்ளியின் நலன் கருதி தேவையான மற்றும் உகந்ததெனக் கொள்ளப்படலாகிறவாறான அத்தகைய பிற நடவடிக்கையை எடுப்பதற்கு.

Verified RealEstate™

அனுமதியைப் பெறும் தனியார் பள்ளி.

4. கல்வி முகவாண்மை எதுவும் தகுதிறமுடைய அதிகார அமைப்பின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதியின்றி மற்றும் அத்தகைய அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வரையறைகள் தவிர தனியார் பள்ளி எதனையும் நிறுவுதல் கூடாது.

அனுமதிக்கான விண்ணப்பம்.

5. தனியார் பள்ளி ஒன்றினை நிறுவுவதற்கு அனுமதியைப் பெறுவதற்கு தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு ஒவ்வொரு விண்ணப்பமும் வகுத்துரைக்கிறப்படலாகிறவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய கட்டணங்களுடன் சேர்த்து மற்றும் அத்தகைய ஆவணங்களுடன் இருத்தல் வேண்டும்.

மானியம் பெறுவதற்கான அனுமதி

6. 5 ஆம் பிரிவின் படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில் தகுதிறமுடைய அதிகார அமைப்பு :–

(a) விண்ணப்பத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்த பின்பு மானியம் பெறுவதற்கான அனுமதியை வழங்குவதற்கு அல்லது மறுப்பதற்கான முடிவை எடுக்கும். விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலங்களுக்குள் மற்றும் விண்ணப்பதாரருக்கு அதற்கான காரணங்களை தெரிவிக்கும் வகையில் அதனுடைய முடிவைத் தெரிவிக்கும்.

வரம்புரை: தனியார் பள்ளியை நிறுவுவதற்கான அனுமதி விண்ணப்பதாரருக்கு அவருடைய உரையீட்டினை செய்வதற்கான வாய்ப்பொன்று அளிக்கப்பட்டிருந்தாலன்று மறுக்கப்படுதலாகாது.

(b) தனியார் பள்ளி ஒன்றினை நிறுவுவதற்கான அனுமதி மறுக்கப்படுகின்றவிடத்து, விண்ணப்பத்தாரர் அத்தகைய தகவல் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் முடிவே இறுதியானதாகும்.

ஏற்பளிப்பு சான்றித ழுக்கான விண்ணப்பம்.

7. (1) கல்வி முகவாண்மை ஒவ்வொன்றும் 6 ஆம் பிரிவின் படி அனுமதிக்கான ஆணை பெற்றப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலமொன்றிற்குள் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய படிவத்தில், அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து மற்றும் அத்தகைய ஆவணங்களுடன் ஏற்பளிப்பிற்கான சான்றிதழ் பெறுவதற்காக தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் ஏற்பளிப்பு சான்றிதழுக்கான விண்ணப்பம் எதுவும் பெறப்படாமலிருக்கின்ற விடத்து 6 ஆம் பிரிவின் படி வழங்கப்பட்ட அனுமதி (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் முடிவடையும் தேதியன்று மற்றும் தேதியிலிருந்து காலாவதியாகிவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஏற்பளிப்பிற்கான சான்றிதழ் வழங்குதல்.

8. ஏற்பளிப்பின் சான்றிதழினை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டதன் அடிப்படையில் தகுதிறமுடைய அதிகார அமைப்பு

(a) பள்ளியில் கல்வித் தரநிலைகள் பராமரிப்பதற்கான உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை

(b) வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய காலத்திற்காக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தனியார் பள்ளிக்கு அளிக்கப்படும் ஏற்பளிப்பிற்கான சான்றிதழ் இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்க வழங்கப்படுதல் வேண்டும்.

(2) தகுதிறமுடைய அதிகார அமைப்பு (1) (a) ஆம் உட்பிரிவின்படி ஏற்பளிப்பிற்கான விண்ணப்பம் ஒன்றின் பேரில் ஆணைகள் வழங்குவதற்கு முன்பு மேலும் பின்வரும் பொருண்மைகளை கருத்தில் எடுத்துக் கொள்ளும்;

(b) வட்டாரத்தில் தனியார் பள்ளிக்கான தேவை;

(c) கருதப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை;

(d) பள்ளியில் மாணவர்களுக்கு இருக்கத்தக்கதாகவுள்ள விளையாட்டு மைதானத்தின் அளவு மற்றும் பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப விளையாட்டு மைதானம் போதுமானதாக இருக்க வேண்டும்;

Verified @ RealEstate™

(e) மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய வசதிகள்;

(f) கற்பித்தலுக்கான கருவி, ஆய்வுக்கூடம், நூலகம் மற்றும் பிற வசதிகள் மற்றும்;

(g) வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய பிற பொருண்மைகள்.

(3). (1)ஆம் உட்பிரிவின்படியான ஏற்பளிப்பிற்கான சான்றிதழ் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய படிவத்தில் மற்றும் அத்தகைய காலத்திற்குள் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) தகுதிறமுடைய அதிகார அமைப்பு ஏற்பளிப்பின் சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பம் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவின் வகைமுறைகள் எதனையும் நிறைவு செய்யவில்லை என்று அவர் திருப்தியடையாமல் இருக்கிறா ரென்றால் தகுதிறமுடைய அதிகார அமைப்பு ஏற்பளிப்பினை வழங்க மறுக்க வேண்டும். மற்றும் விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலமொன்றிற்குள் விண்ணப்பதாரருக்கு அதனுடைய அத்தகைய முடிவினை எடுத்தற்காக காரணங்களைத் தெரிவிக்க வேண்டும்.

வரம்புரை:

ஆனால் விண்ணப்பதாரருக்கு அவர் அவருடைய உரையீட்டினை தொகுத்திருந்தாலன்றி ஏற்பளிப்பினை வழங்குவதென்பது மறுக்கப்படுதலாகாது.

(5) தகுதிறமுடைய அதிகார அமைப்பால் ஏற்பளிப்பானது வழங்க மறுக்கப்படுகின்றவிடத்து விண்ணப்பதாரர் ஏற்பளிப்பினை வழங்குதலை மறுக்கும் ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்ய வேண்டும்.

(6). (3)ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட ஏற்பளிப்பு சான்றிதழை புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய கட்டணங்கள் ஆவணங்களுடன் சேர்த்து ஏற்பளிப்பின் காலம் முடிவடைந்துள்ள தேதிக்கு முன்பு மூன்று மாத காலமொன்றிற்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஏற்பளிப்பு வழங்குவதற்கான இந்தப் பிரிவின் வகைமுறைகள் தேவையான மாற்றங்களுடன் ஏற்பளிப்பின் சான்றிதழின் அத்தகைய புதுப்பித்தலுக்குப் பொருந்த வேண்டும்.

(7) குழந்தை எதுவும் நேர்வுக்கேற்ப ஏற்பளிப்பிற்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருக்காத போது அல்லது ஏற்பளிப்பின் புதுப்பித்தலுக்கான சான்றிதழ் வழங்கப்படாமல் இருக்கின்றபோது பள்ளி எதிலும் சேர்க்கப்படுதலாகாது.

(9) கல்வி முகவாண்மை எதுவும் 8 ஆம் பிரிவின்படி தகுதிறமுடைய அதிகார அமைப்பிடமிருந்து ஏற்பளிப்பிற்கான சான்றிதழைப் பெறாமல் மாநில பள்ளிக்கல்வி மாநில வாரியத்திற்கு அல்லது பிற எந்த வாரியத்திற்கும் இணைப்பிற்காக விண்ணப்பித்தலாகாது.

தகுதிறமுடைய அதிகார அமைப்பால் ஏற்பளிப்பு திரும்பப் பெறப்படுத லாகாது.

(10) தகுதிறமுடைய அதிகார அமைப்பு எந்த நேரத்திலும் எழுத்துப்பூர்வமான காரணங்களுக்காக ஆணை மூலமாக தனியார் பள்ளி எதனின் ஏற்பளிப்பினை நிரந்தரமாக திரும்பப் பெறலாம். அத்தகைய பள்ளிக்கு பொருந்தத்தக்கதாக இருக்கின்ற விதிகள் அல்லது அறிவுறுத்துதல்கள் முடிந்தவரை இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் அதன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது விதிகள் எதற்கும் இணங்கி செயல்படாத போது ஏற்பளிப்பினை நிரந்தரமாகத் திரும்பப் பெறலாம். வரம்புரை: ஆனால் இந்தப் பிரிவின்படி ஏற்பளிப்பினை திரும்பப் பெறுதல் ஆணை எதுவும் கல்வி முகவாண்மைக்கு அதனுடைய உரையீட்டினை முறையிடுவதற்கான வாய்ப்பொன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி தகுதிறமுடைய அதிகார அமைப்பால் பிறப்பிக்கப்படுதலாகாது.

- மேலும் வரம்புரை:

ஆனால் இந்தப் பிரிவின்படி ஏற்பளிப்பினை திரும்பப் பெறுதல் ஆணை கல்வி ஆண்டு ஒன்றின்போது செய்யப்பட்டிருக்கிறதென்றால் அத்தகைய ஆணை கல்வி ஆண்டின் இறுதியில் மட்டுமே செல்திறம் பெற்றிருப்பதாக இருக்கும்.

மேலும் வரம்புரை:

ஆனால் இந்தப் பிரிவின்படி ஏற்பளிப்பினை திரும்பப் பெறும் ஆணை எதுவும் தனியார் பள்ளி பிற எந்த ஏற்பளிக்கப்பட்ட பிற பள்ளி எதிலும் மாணவர்களுடைய கற்பித்தலின் தொடர்ச்சிக்கான தேவையான ஏற்பாடுகளைச் செய்யாமல் பிறப்பிக்கப்படுதலாகாது.

ஏற்பளிப்பினை திரும்பப் பெறுதலின் செல்திறம்.

11. அத்தகைய பள்ளியின் கல்வி முகவாண்மை ஏற்பளிப்பினை திரும்ப பெறுதலின் பேரில் இறுதியில்

(a) பள்ளி செயல்படுதானது அற்றுப்போகும்

(b) முடிந்தவரை அரசு நிதி உதவி பெறும் பள்ளி, அரசால் நிதியுதவியளிக்கப்பட்ட அல்லது அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களுடைய நிலம் கட்டிடங்கள் மற்றும் பிற எந்தப் பொருளாக இருந்தாலும் அரசிடம் ஒப்படைக்க வேண்டும்.

(c) இது சம்பந்தமாக தகுதிறமுடைய அதிகார அமைப்பினால் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலரிடம் ஏற்பளிப்பு திரும்பப் பெறப்படும் தேதியிலிருந்து ஒரு மாத ‘காலமொன்றிற்குள் அந்தப் பள்ளியின் அனைத்து கோப்புகளையும் மற்றும் ஆவணங்களையும் ஒப்படைக்க வேண்டும்.

அத்தியாயம்—III

கல்வி முகவாண்மை மற்றும் பள்ளிக்குழு

கல்வி முகவாண்மை

12. தனியார் பள்ளி ஒன்றின் முகவாண்மை ஒன்று, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பு அல்லது அன்று நிறுவப்பட்டது ஒரு தனி நபராக அல்லது நபர்களின் குழுவாக அல்லது பிற உரிமையுடைய எதுவுமாக இருக்கின்றவிடத்து இந்தச் சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து ஆறு மாத காலங்கள் ஒன்றிற்குள் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினை அமைக்க வேண்டும். அல்லது 2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் 8 ஆம் பதிவின்படி பதிவு செய்யப்பட்ட நிறுமம் ஒன்றாக அல்லது 1882 ஆம் ஆண்டு இந்திய பொறுப்புக் கட்டணச் சட்டத்தின்படி பொறுப்புக் கட்டளை ஒன்றாக கல்வி முகவாண்மையின் அலுவற்செயற்பணிகளை பணித்துக் கொள்வதற்கு மற்றும் அதன் பின்பு அத்தகைய சங்கம் அல்லது நிறுமம் அல்லது பொறுப்புக் கட்டளை ஆகிய அவைகள் மட்டுமே இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக கல்வி முகவாண்மையாகக் கருதப்படுதல் வேண்டும்.

கல்வி முகவாண்மை அமைப்பி லுள்ள மாற்றம் அல்லது கல்வி முகவாண்மை யினை மாற்றுதல்.

13. (1) (a) கல்வி முகவாண்மை ஒன்றின் அமைப்பில் அல்லது துணை விதிகளுக்கான திருத்தம் அல்லது கல்வி முகவாண்மையின் சங்கத்தின் குறிப்பாணையில் மாற்றம் எதுவும் இருக்கின்றவிடத்து அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு அத்தகைய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்;

(b) எப்பொழுதெல்லாம் ஒரே மாதிரியான நோக்கங்களைக் கொண்டிருக்கும் தனியார் பள்ளியின் கல்வி முகவாண்மையை பிற பள்ளியின் மேலாண்மையை பிற கல்வி முகவாண்மைக்கு மாற்றுவதற்குள் கருதுகிறபோது அத்தகைய கல்வி முகவாண்மை தேவையான ஒப்புதலுக்காக தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு கட்டாயமாக விண்ணப்பிக்க வேண்டும்;

(c). (b) கூறினபடியாக விண்ணப்பம் ஒன்று வகுத்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய ஆவணங்களோடு சேர்த்து அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின் (b) கூறின்படி விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில் தகுதிறமுடைய அதிகார அமைப்பு அதற்குப் பொருத்தமெனத் தோன்றுகிறவாறான அத்தகைய விசாரணையை செய்த பின்பு மற்றும் இந்தச் சட்டத்தின் வகை முறைகள் அல்லது விதிகள் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவுறுத்துதல்களுக்கிணங்க அவ்வாறு மாற்றப்பட்ட தனியார் பள்ளியை பெறும் கல்வி முகவாண்மை நன்றாக பராமரிக்கும் மற்றும் மேலாண்மை செய்யும் என்று அது திருப்தியடைந் திருக்கிறதென்றால் அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலமொன்றிற்குள் விண்ணப்பதாரருக்கு அதனுடைய முடிவினை தெரிவிக்கலாம் மற்றும் தெரிவிக்கலாகிறவாறான அத்தகைய வரைக்கட்டுகளுக்குட்பட்டு அத்தகைய மாற்றுதலுக்கு ஒப்புதலளிக்கலாம்.

பள்ளிக்குழுவின் அமைப்பு

14. (1) தனியார் பள்ளி ஒன்றின் கல்வி முகவாண்மை ஒவ்வொன்றிலும் வகுத்துரைக்கப் படலாகிறவாறு பள்ளிக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும்.

Verified RealEstate ™

வரம்புரை:

ஆனால் கல்வி முகவாண்மை ஒன்று தனியார் பள்ளியை ஒன்றுக்கு மேல் நிறுவியிருக்கிறது மற்றும் நிர்வகித்துக் கொண்டிருக்கிறது அல்லது பராமரித்துக் கொண்டிருக்கிறவிடத்து அத்தகைய கல்வி முகவாண்மை தகுதிறமுடைய அதிகார அமைப்புக்கு முன் அனுமதியும் ஒரு பொது பள்ளிக் குழுவைக் கொண்டிருக்கலாம்.

(2) பள்ளிக்குழு அதனுடைய கூட்டங்களில் அலுவல் நடவடிக்கை தொடர்பாக வகுத்துரைக்கப்படலாகிறவாறு அத்தகைய நேரங்களில் மற்றும் இடங்களில் கூடுதல் வேண்டும் மற்றும் நடைமுறையின் அத்தகைய விதிகளை பின்பற்றுதல்வேண்டும்.

வரம்புரை:

ஆனால் பள்ளிக்குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது கூடுதல் வேண்டும்.

(3) பள்ளிக்குழு, இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டு பின்வரும் செயற்பணிகளை ஆற்றலாம். அதாவது

(a) தனியார் பள்ளியின் பொது நிர்வாகத்தை செய்து கொண்டிருத்தல்;

(b) தனியார் பள்ளியின் பணியாளரை பணியமர்த்தம் செய்தல், அவர்களுடைய சம்பளம் மற்றும் சம்பளப் படிகளை நிர்ணயம் செய்தல் மற்றும் அவர்களுடைய கடமைகளை மற்றும் அவர்களுடைய சேவையின்வரைக்கட்டுகளை வரையறை செய்தல்;

(c) தனியார் பள்ளியின் பணியாளருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்.

(4) பள்ளிக்குழு ஒவ்வொன்றும் செயலாளர் ஒருவரை பெற்றிருக்க வேண்டும். அவர் கல்வி முகவாண்மையால் பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும். மற்றும் வகுத்துரைக்கப்படுகிறவாறான அத்தகைய அதிகாரங்களைச் செயலுறுத்த வேண்டும். மற்றும் அத்தகைய செயற்பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

15. (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அதிகார வரம்பைக் கொண்டிருக்கிற பள்ளிக்குழு எதன் மீதும் பொருட்பாடு எதனின் தொடர்பாகவும் அந்தப் பள்ளிக் குழுவால் எடுக்கப்பட்ட முடிவு அல்லது செயல் எதுவும் கல்வி முகவாண்மையால் எடுக்கப்பட்ட முடிவாக அல்லது செயலாகக் கொள்ளப்படுதல் வேண்டும். கல்வி முகவாண் மையின் பொறுப்பு.

(2) தகுதிறமுடைய அதிகார அமைப்பு, பள்ளியின் அலுவற்பணிகளை மேலாண்மை செய்வதில் விட்டு விட்டது அல்லது முறைகேடுகள் நடந்துள்ளதற்காகவும் தனியார் பள்ளி ஒன்றின் செயலாளர் அல்லது பள்ளிக் குழுவின் உறுப்பினர் எவரும் பொறுப்படையவராக இருக்கின்றார் என்று திருப்தியடைகின்றவிடத்து, கல்வி முகவாண்மை அதற்கு பொருத்தமெனத் தோன்றலாகிறவாறான அதற்குத் தொடர்புடைய நபருக்கு எதிராக அத்தகைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) தகுதிறமுடைய அதிகார அமைப்பு எழுத்துப் பூர்வமான காரணங்களை பதிவு செய்யப்பட வேண்டியதற்காக ஆணை ஒன்றின் மூலம் பள்ளிக்குழுவின் செயலாளர் அல்லது உறுப்பினர் எவரும் அலுவலகத்தில் பணி‘ செய்து கொண்டிருப்பதற்கு பொருத்தமுடையவரல்லர் என்று விளம்பு செய்யலாம். மற்றும் நேர்வுக்கேற்ப கல்வி முகவாண்மை அந்தப் பள்ளியின் செயலாளரை அல்லது அத்தகைய உறுப்பினரை நீக்குவதற்கு கல்வி முகவாண்மைக்கு அறிவுறுத்தலாம்.

வரம்புரை:

ஆனால் இந்த சட்டப்பிரிவின் படியான ஆணை எதுவும் நேர்வுக்கேற்ப பள்ளிக்குழுவின் செயலாளர் அல்லது உறுப்பினரின் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் நபர், அவர்களுக்கு உரையீட்டினை செய்வதற்கான வாய்ப்பொன்று கொடுக்கப் பட்டிருந்தாலன்றி பிறப்பிக்கப் படுதலாகாது.

(4). (3) ஆம் உட்பிரிவின்படி தகுதிறமுடைய அதிகார அமைப்பிடமிருந்து அறிவுறுத்தலொன்று பெறப்பட்டதன் பேரில் அந்தக் கல்வி முகவாண்மை விதிகளுக்கு அல்லது நன்னடத்தை விதிகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் பள்ளிக்குழுவின் செயலாளர் அல்லது உறுப்பினரின் அலுவலகத்திலிருந்து தொடர்புடைய நபரை உடனடியாக நீக்க வேண்டும். மற்றும் அவருடைய இடத்தில் தகுதியுடைய பிற நபரை மணியமர்த்தம் செய்ய வேண்டும்.

(5). (4)ஆம் உட்பிரிவில் மற்றும் 31 வது பிரிவில் அடங்கியிருக்கும் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் இருப்பதில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் கல்வி முகவாண்மை (3) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட எதனையும் வேண்டுமென்றே செய்யாமல் இருக்கின்றார் அல்லது வேண்டுமென்றே இணங்க மறுக்கிறாரென்றால் தகுதிறமுடைய அதிகார அமைப்பு எழுத்துப் பூர்வமான ஆணை வாயிலாக அந்தத் தனியார் பள்ளியின் பள்ளிக் குழுவின் செயலாளர் அல்லது உறுப்பினர் அலுவலகத்திலிருந்து அத்தகைய நபரை உடனடியாக நீக்க வேண்டும்.

அத்தியாயம்–III

சிறுபான்மை தனியார் பள்ளிகளுக்கான சிறப்பு வகைமுறைகள்

சிறுபான்மை தனியார் பள்ளி ஒன்றினை நிறுவுவ தற்கான உரிமை

16. (1) சமயம் அல்லது மொழி அடிப்படையில் இருக்கும் சிறுபான்மை கல்வி முகவாண்மை எதுவும் அத்தகைய சிறுபான்மையினர்களின் நன்மைக்காக தொடக்கத்தில் அதனுடைய விருப்புரிமையின்படி தனியார் பள்ளி ஒன்றினை நிறுவுவதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் உரிமையுடையதாய் இருக்கும்.

(2) தனியார் பள்ளி ஒன்றிற்காக சிறுபான்மை தகுதியை கோரும் அத்தகைய கல்வி முகவாண்மை ஒவ்வொன்றிலும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய ஆவணங்களுடன் சேர்ந்து அத்தகைய படிவத்தில் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(3). (2) ஆம் உட்பிரிவின் படியான விண்ணப்பத்தினைப் பெறப்பட்டதன் பேரில் அரசு, விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்த பின்பு மற்றும் விண்ணப்பதாரரின் கூற்றினை கேட்பதற்கான வாய்ப்பொன்றினை அளித்த பின்பு தேவைப் படுகிறதென்றால் வகுத்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய காலத்திற்குள் தனியார் பள்ளிக்கு சிறுபான்மை தகுதியை வழங்குவதற்கோ அல்லது பெறுவதற்கோ முடிவு செய்ய வேண்டும்.

சிறுபான்மை பள்ளி ஒன்றின் தகுதியை பிற கல்வி முகவாண்மைக்கு மாற்றுதல்

17. தனியார் பள்ளி ஒன்றின் சிறுபான்மை தகுதியை அரசின் முன் ஒப்புதலுடன் அதே சிறுபான்மை தகுதியுடன் இருக்கும் பிற கல்வி முகவாண்மைக்கு அத்தகைய பள்ளியின் மேலாண்மை மாற்றப்பட்டிருக்கின்றவிடத்து மட்டுமே தக்க வைத்துக் கொள்ள முடியும்.

சிறுபான்மை பள்ளி ஒன்றிற்கான சிறப்பு அலுவலரின் பணியமர்த்தம்

18. 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி சிறுபான்மை பள்ளி ஒன்றின் மேலாண்மையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றவிடத்து தகுதிறமுடைய அதிகார அமைப்பு அத்தகைய தற்காலிக நிறுத்தத்திற்குப் பின் மேற்சொன்ன சிறுபான்மை பள்ளியை நிர்வகித்துக் கொண்டிருப்பதற்கு சிறப்பு சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த நபர் ஒருவரை பணியமர்த்தம் வேண்டும்.

சிறுபான்மை பள்ளி களுக்கான விலக்கு

19. அத்தகைய சிறுபான்மை பள்ளிகளின் சிறுபான்மை தன்மையை பாதிப்பிற்குள்ளாக்கும் இந்தச் சட்டத்தின் அத்தகைய வகை முறைகள் அல்லது விதிகள் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளிலிருந்து விலக்களிப்பதற்கு அரசு அதிகாரமுடையதாக இருக்கும்.

அத்தியாயம்–V

தனியார் பள்ளிகளுக்கான கட்டுப்பாடு

மாணவர்களின் உயிர்பாதுகாப்பு மற்றும் உடைமை பாதுகாப்பு.

20. (1) கல்வி முகவாண்மை ஒவ்வொன்றும் மனரீதியிலான தொல்லை அல்லது உடல் ரீதியான தொல்லை அல்லது பாலியல்தொல்லையிலிருந்து மாணவர்களை பாதுகாத்தல் உள்ளடங்கலாக மாணவர்களின் உயிர் பாதுகாப்பை மற்றும் உடைமை பாதுகாப்பை உறுதி செய்யும். முடிந்தவரையிலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

(2) கல்வி முகவாண்மை ஒவ்வொன்றிலும் வகுத்துரைக்கப் படுகின்ற வரைக்கட்டுகள் அல்லது அரசால் பிறப்பிக்கப் படலாகிறவாறான குறித்த வகை அறிவுறுத்தல் எதுவும் அல்லது அரசால் அதிகாரம் அளிக்கப் பெற்றவாறான தகுதிறமுடைய அதிகார அமைப்பு எதுவும் மாணவர்களின் உயிர் பாதுகாப்பை மற்றும் உடைமை பாதுகாப்பை கண்டிப்பாக அதற்கிணங்க உறுதி செய்ய வேண்டும்.

தரமான கல்வியை உறுதி செய்தல்

21. (1) தனியார் பள்ளி ஒவ்வொன்றிற்கும் பாடத் தொகுதியை, பாடத்திட்டத்தை கற்பிப்பதில் பெறக்கூடியவற்றை மற்றும் முறையே போதிய இணைப்புடன் இணங்க இருத்தலில் கல்வியின் பல்வேறுபட்ட நிலைகளுக்காக வகுத்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறி முறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

(2) தனியார் பள்ளி ஒவ்வொன்றிலும் நல்ல அறிவுடைய பாடத்திட்டம் சார்ந்தவை, இணையான பாடத்திட்டம் சார்ந்தவை மற்றும் பிற பாடத்திட்டம் சார்ந்த நடவடிக்கைகள் இருக்கின்றவாறு உறுதி செய்ய வேண்டும்.

(3) தனியார் பள்ளி ஒவ்வொன்றிலும் கல்வியில் பல்வேறுபட்ட நிலைகளுக்காக உரிய வாரியத்தினால் வகுத்துரைக்கப் பட்டவாறான மதிப்பீட்டு வகையைப் பின்பற்ற வேண்டும்.

தேர்வுகளை நடத்துதல் மற்றும் விடைத் தாள்களை மதிப்பீடு செய்தல்

22. (1) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் உரிய அதிகார அமைப்புகளால் குறித்த வகையில் கேட்டுக் கொண்டதன் பேரில் கட்டணமில்லாமல் வாரியம் எதனின் தேர்வுகள் எதனையும் நடத்துவதற்காக மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக வாரிய அதிகார அமைப்புகளிடம் ஒப்படைக்கப் படுவதில் அதனுடைய கட்டிடத்தை, மரச்சாமான்களை மற்றும் பிற உள்கட்டமைப்புகள் ஆகியவைகளை செய்து தர வேண்டும்.

(2) தனியார் பள்ளி ஒவ்வொன்றிலும் உரிய அதிகார அமைப்புகளால் குறித்த வகையில் கேட்டுக் கொண்டதின் பேரில் வாரியம் எதனின் தேர்வுகளை நடத்துவதற்காக மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக பணி அடிப்படையில் அதனுடைய ஆசிரியருக்கான மாற்றுப்பணிக்கு அனுப்ப வேண்டும்.

(3) தனியார் பள்ளி எதுவும் மாணவர் எவரையும் சரியாகப் கற்கவில்லை என்பதன் அடிப்படையில் வாரியத் தேர்வு எழுதுவதிலிருந்து தடுத்தல் ஆகாது.

(4) தனியார் பள்ளி ஒவ்வொன்றிலும் தனியார் பள்ளிகளுக்குள்ளே நடைபெறும் நலக்கேடான போட்டியை தடுக்கும் வகுத்துரைக்கப் படலாகிறவாறான வரைகட்டுகளுக்குட்பட்டு நடத்துதல் வேண்டும்.

சேர்க்கைக் காலத்தில் தனியார் பள்ளிகளால் சேர்க்கைப் பற்றிய விவரம் வெளிப்படுத்த வேண்டும்.

23. தனியார் பள்ளி ஒவ்வொன்றின் ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் சேர்க்கையை தொடங்குவதற்கு முன்பு குறைந்தபட்சம் முப்பது நாட்கள் இருக்குமாறு செய்ய வேண்டும். அதனுடைய அறிவிப்புப் பலகையில், இணையதளத்தில் வெளியிட வேண்டும் அல்லது வகுத்துரைக்கப்படலாகிறவாறு பள்ளி தொடர்பான பொதுத் தகவலை பிற எந்த வடிவத்திலும் வெளியிடலாம்.

பெற்றோர் – ஆசிரியர் சங்கம்

24. தனியார் பள்ளி ஒவ்வொன்றும் கல்வி மற்றும் கற்பித்தல் சூழலின் தரத்தை மேம்படுத்துவதில் பெற்றோர்கள் பங்கெடுத்துக் கொள்வது ஊக்கப்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகிறவாறு அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய செயற்பணிகளைச் செய்வதற்கு பெற்றோர் – ஆசிரியர் சங்கமொன்றை அமைக்க வேண்டும்.

அதிகார மளிக்கப் பெற்ற நபருக்கு அல்லது அதிகார அளிப்பிற்கு மற்றும் அளிக்கப் பட்டுள்ள பணி யாளருக்கு அனுப்ப வேண்டிய தகவல்

25. (1) தனியார் பள்ளி ஒவ்வொன்றிலும் நபர் எவராலும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்றவாறாக அதிகார அமைப்பு, குறிப்பாக கணக்கெடுப்பினை நடத்தும் போது அல்லது தேர்தலின்போது, தேசிய சாதனை அளவீடு அல்லது மாநில அளவிலான கற்கும் அளவீடு உள்ளடங்கலாக அளவீடு பற்றிக் கேட்கப்படும் தகவல் எதனையும் அனுப்ப வேண்டும்.

(2) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் அதனுடைய பணியாளர்கள் தேவைப்படுகிறார்களென்றால் மக்கள் கணக்கெடுப்பு அல்லது தேர்தல் பணியைச் செய்வதற்காக அனுப்ப வேண்டும்.

கட்டணங்கள்

26. தனியார் பள்ளி எதுவும் 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலித்ததை ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டத்தின்படி அமைக்கப்பட்ட கட்டணத்தை நிச்சயிக்கும் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் தவிர எந்தப் பெயரிலும் அனுமதிக்கப்படும் பிற எந்தக் கட்டணத்தையும் அல்லது பிற எந்த செலுத்தத்தையும் பெறக்கூடாது.

நிதியங்களைப் பயன்படுத்துதல் மற்றும் தனியார் பள்ளியின் சொத்து

27. தனியார் பள்ளி ஒன்றின் பேரில் அல்லது அதனால் வசூலிக்கப்பட்ட பணம் அனைத்தும் பெறப்பட்ட மானியங்கள் மற்றும் பெறப்பட்ட சொத்தும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் எதற்காக எந்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப் படுதல் வேண்டும் என்று அவை கருதப்பட்டது மற்றும் கல்வி முகவாண்மை அதற்காக கணக்கில் வைக்கப்படுதல் வேண்டும் என்று கருதப்பட்டதோ அதன்படி பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

Verified RealEstate™

ஆய்வு மற்றும் விசாரணை

28. (1) தகுதிறமுடைய அதிகார அமைப்பு இது சம்பந்தமாக அதிகாரமளிக்கப் பெற்ற அத்தகைய நபரால் தனியார் பள்ளி எதனையும் ஆய்வு செய்விப்பதற்கு உரிமை உடையவராக இருப்பார்.

(2) தகுதிறமுடைய அதிகார அமைப்பு தனியார் பள்ளியின் அலுவற் பணிகள் தொடர்பாக அத்தகைய விசாரணை எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ பொருட்பாடு எதனின் தொடர்பாக விசாரணை ஒன்று நடத்தப்படுவதற்கு மேலும் விழைதல் வேண்டும்.

(3) தகுதிறமுடைய அதிகார அமைப்பு அத்தகைய ஆய்வின் முடிவுகள் அல்லது விசாரணை மற்றும் அதன்பின்பு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கை பற்றிய சுட்டுகையுடனான அதிகார அமைப்பின் நோக்கங்களை பள்ளிக்கல்விக்கு தெரிவிக்க வேண்டும்.

(4) பள்ளிக்குழு, இரண்டு மாத காலங்களுக்குள் எடுக்கப்படுவதாக உள்ள நடவடிக்கை எதுவுமிருக்கிறதென்றால் அல்லது அத்தகைய ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டவைகளின் பேரில் எடுக்கக் கருதப்பட்டுள்ளவற்றை தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு அறிக்கை செய்ய வேண்டும்.

(5) தகுதிறமுடைய அதிகார அமைப்பு திருப்தியடைகின்ற வகையில் (4) ஆம் உட்பிரிவின்படி குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நடவடிக்கையை எடுப்பதற்கு பள்ளிக்குழு தவறுகிறவிடத்து தகுதிறமுடைய அதிகார அமைப்பு அனுப்பப்பட்ட விளக்கத்தை அல்லது செய்யப்பட்ட உரையீட்டைக் கருத்தில் கொண்டதற்குப் பின்பு அதிகார அமைப்பு பொருத்தமுடையவராக தோன்றுகிற மாதிரி இருக்கிறவாறு அத்தகைய அறிவுறுத்தல்களையுப் பிறப்பிக்கலாம் மற்றும் அந்தப் பள்ளி அத்தகைய அறிவுறுத்தல்களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும்.

தனியார் பள்ளி அல்லது பிரிவு அல்லது படிப்பு முடிவுக்கு வருதல்

29. (1) தனியார் பள்ளி எதுவும் அல்லது தனியார் பள்ளியில் தொடங்கப்பட்ட பிரிவு அல்லது படிப்பு அல்லது மொழிவழிக் கற்பித்தல் நேர்வுக்கேற்ப தனியார்பள்ளி அல்லது பிரிவு அல்லது படிப்பு அல்லது மொழிவழிக் கற்பித்தல் ஆகியவை மாணவர்களின் கற்பித்தலின் தொடர்ச்சிக்காக வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யாமல் மற்றும் தகுதிறமுடைய அதிகார அமைப்பின் முன் ஒப்புதலைப் பெறாமல் மூடப்படுதல் கூடாது.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி முன் ஒப்புதல் எதுவும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய காலத்திற்குள், அத்தகைய படிவத்தில் மற்றும் அத்தகைய முறையில் கல்வி ஆண்டு ஒன்றில் தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு கல்வி முகவாண்மை எழுத்து வடிவில் முன் அறிவிப்பொன்றினை வழங்கியிருந்தாலன்றி தகுதிறமுடைய அதிகார அமைப்பால் வழங்கப்படுதலாகாது.

(3). (2) ஆம் உட்பிரிவின் படி அறிவிப்பு பெறப்பட்டதன் பேரில் மற்றும் அதே மாதிரியானவற்றைக் கருத்தில் கொண்ட பிறகு

(a) தகுதிறமுடைய அதிகார அமைப்பு அதாவது

(i) 2 ஆம் உட்பிரிவின்படி அளிக்கப்பட்ட அறிவிப்பு தவறாக இருப்பின் அல்லது

(ii) மாணவர்கள் படிப்புக்காக எந்தக் காலம்வரை சேர்க்கைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களோ நேர்வுக்கேற்ப தனியார் பள்ளியின் மாணவர்களின் கற்பித்தலின் தொடர்ச்சிக்காக அல்லது வகுப்பு அல்லது படிப்ப அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவின் தொடர்ச்சிக்காக (1) ஆம் உட்பிரிவின்படி தேவைப் படுகிறவாறான ஏற்பாட்டினை செய்யாமலிருக்கின்ற தென்றால் அல்லது

(iii) தனியார் பள்ளிகள் அல்லது நேர்வுக்கேற்ப வகுப்பு அல்லது படிப்பு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவு ஆகியவை நேரடியாக தவறான மேலாண்மைக்கு அல்லது கல்வி முகவாண்மையின் பங்களிப்பின் பேரில் நிர்வாகச் சீர்கேடுடையதாய் இருக்கின்றன என்று அறிகிற தென்றால்

Verified RealEstate ™

(iv) பள்ளி நிர்வாகத்தின் நிதி நிலைமை நன்கு இருந்தும் நேர்வுக்கேற்ப தனியார் பள்ளியை மூடுதல் அல்லது வகுப்பு அல்லது படிப்புப் பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவு மூடப்படுவதற்கு நிதி நிலைமையைக் காரணமாய் காட்டுதல்

(v) நேர்வுக்கேற்ப தனியார் பள்ளியை மூடுதல் அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவை மூடுவதற்காக அளிக்கப்பட்ட காரணங்கள் நம்பத்தகுந்ததாக இல்லை என்று அறிகிறாரென்றால்

(vi) நேர்வுக்கேற்ப தனியார் பள்ளி அல்லது பாடப்பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவுகள் மூடுதல் தனியார் பள்ளி அமைந்துள்ள வட்டாரப் பரப்பிடத்தின் மாணவர்களுக்கு கிடைக்கத்தக்கதாக அன்றி கல்வி வாய்ப்பு எதிர் விளைவை ஏற்படுத்தி பாதிப்பிற்குள்ளாக்கும் என்று நினைக்கிறாரென்றால்

வரம்புரை:

ஆனால் தகுதிறமுடைய அதிகார அமைப்பு தனியார் பள்ளியின் அல்லது பிரிவு அல்லது படிப்புப் பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப் பிரிவினை மூடுவதற்காக முன் அனுமதியை தர மறுத்து அதற்கான காரணங்ககளை எழுத்து மூலமாக ஆணையின் மூலம் அனுமதியை வழங்க மறுக்கலாம்.

வரம்புரை:

ஆனால் தகுதிறமுடைய அதிகார அமைப்பு இது சம்பந்தமாக கல்வி முகவாண்மைக்கு அதனுடைய தரப்பு முறையீடுசெய்வதற்காக வாய்ப்பொன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி முன் அனுமதியை வழங்க மறுக்கலாகாது.

(4) (a) தகுதிறமுடைய அதிகார அமைப்பு எந்த நேர்விலும் அறிவிப்புப் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குக் குறையாமல் மற்றும் முடிந்தவரை விரைவாக (2) ஆம் உட்பிரிவின்படியான அறிவிப்பின் பேரில் அதனுடைய முடிவினை தெரிவிக்க வேண்டும்.

(b) நேர்வுக்கேற்ப தகுதிறமுடைய அதிகார அமைப்பு தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவை மூடுவதற்கான முன் அனுமதியை வழங்க மறுக்கின்றவிடத்து கல்வி முகவாண்மை நேர்வுக்கேற்ப தனியார் பள்ளியை அல்லது வகுப்பை அளித்து அல்லது படிப்புப் பிரிவை அல்லது கற்பித்தலின் மொழிப் பிரிவை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கும்.

(c) கல்வி ஆண்டொன்று நடந்துக் கொண்டிருக்கும் தகுதிறமுடைய அதிகார அமைப்பு நேர்வுக்கேற்ப தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது படிப்புப் பிரிவு கற்பித்தலின் மொழிப் பிரிவிற்காக மூடுவதற்கான முன் அனுமதியை வழங்குகின்றவிடத்து அத்தகைய மூடுதலானது மேற்சொன்ன கல்வி ஆண்டு முடிவடைந்த பின்பு மட்டுமே செல்திறத்திறத்திற்கு வரும் தனியார் பள்ளியின் மூடுதலுக்கான ஒப்புதலளிக்கப்பட்ட தேதியிலிருந்து செய்திறத்துடன் மூடப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தனியார் பள்ளியின் சொத்தை மாற்று– தலுக்குத் தடை.

30. (1) கல்வி முகவாண்மை எதுவும் தகுதிறமுடைய அதிகார அமைப்பின் எழுத்து பூர்வமான முன் அனுமதியுடன் தவிர விற்பனை, ஒன்றுக்கொன்று எதிராக மாற்றீடு செய்தலோ, அடமானம், பொறுப்பு அடகு வைத்தலோ, ஒத்திக்கோ, கொடையாக அல்லது எவ்வாறிருப்பினும் பிற எந்த முறையின் வாயிலாகவும் தனியார் பள்ளி ஒன்றின் சொத்தினை மாற்றுதலாகாது.

(2) தகுதிறமுடைய அதிகார அமைப்பு அத்தகைய மாற்றுதலுக்கான விண்ணப்பமொன்று பெறப்பட்டதன் பேரில் தனியார் பள்ளியின் நோக்கத்தினை அடைவதற்காக அதனை முன்னேற்றமடையச் செய்வதற்காக அத்தகைய மாற்றுதல் செய்யப்பட இருக்கிறது. மற்றும் மேற்சொன்ன நோக்கத்தினை அடைவதற்காக அத்தகைய மாற்றுதலானது பயன்படுத்தவுள்ளது எனும்போது முன் அனுமதியை வழங்கலாம்.

வரம்புரை:

ஆனால் (1) ஆம் உட்பிரிவின்படி பயன்படுத்துவதற்கான அனுமதி விண்ணப்பதாரருக்கு அவர் தரப்பு உரையீட்டினை கூறுவதற்கான வாய்ப்பொன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி தகுதிறமுடைய அதிகார அமைப்பில் மறுத்தளிக்கப்படுதலாகாது.

(3). (a) தகுதிறமுடைய அதிகார அமைப்பு அந்த விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்கள் கொண்ட காலமொன்றிற்குள் அனுமதி வழங்குவதற்கான அல்லது அனுமதியை வழங்குவதற்கு மறுக்கும் ஆணையொன்றினை பிறப்பிக்கக்கூடாது.

(b) தகுதிறமுடைய அதிகார அமைப்பு அத்தகைய அனுமதியை வழங்கும்பொழுது அதற்கு தோன்றலாகிறவாறான அத்தகைய வரைக்கட்டுகளை விதிக்கலாம்.

(4) (1)ஆம் உட்பிரிவிற்கு முரணாக செய்யப்பட்ட பரிமாற்றம் எதுவும் இல்லா நிலையதாகவும் மற்றும் செல்லா நிலையதாகவும் இருத்தல் வேண்டும்.

அத்தியாயம்–VI

குறித்த சில சூழ்நிலைகளில் தனி அலுவலர்களின் பணியமர்த்தம்

குறித்த சில சூழ்நிலைகளில் தனி அலுவலரின் பணியமர்த்தம்

31. (1) தகுதிறமுடைய அதிகார அமைப்பு தனியார்ப்பள்ளி எதனின் பள்ளிக்குழு

(a) அத்தகைய தனியர் பள்ளியில் சீர்கேடான நிர்வாகத்திற்கு, நிதியங்களை கையாடல் செய்ததற்காக அல்லது காலந்தாழ்ந்து செய்யப்பட்டவைகளாக அல்லது முறையற்று செய்த செயல்களுக்காக பொறுப்புடையதாக இருக்கின்றவிடத்து அல்லது

(b) அத்தகைய தனியார் பள்ளியில் நடந்துள்ள சட்ட விரோதமான நடவடிக்கைகளை வேண்டுமென்றே தடுத்து நிறுத்த தவறியிருக்கிறது அல்லது மாநிலத்தின் பாதுகாப்பை, இறையாண்மையை அல்லது ஒற்றுமையை பாதிக்கும் வண்ணமாக இருக்கும். அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது அல்லது அரசால் தடை செய்யப்பட்டுள்ள கூட்டமாக செயல்படுகிறது அல்லது அமைப்பு எதற்கும் பாதுகாப்பு அளித்திருக்கிறது அல்லது உதவி செய்திருக்கிறவிடத்து

(c) இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி விதி அல்லது அதன்படி செய்யப்பட்ட ஆணை எதனாலும் அத்தகைய பள்ளிக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகளை அல்லது விதிக்கப்பட்ட கடமைகள் எதனையும் வேண்டுமென்றே செய்யாமல் விடப்பட்டிருக்கின்றவிடத்து, தகுதிறமுடைய அதிகார அமைப்பு எழுத்து பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக ஆணை ஒன்றின் மூலம் பள்ளிக் குழுவை தற்காலிகமாக நீக்கம் செய்யலாம். மற்றும் பள்ளிக்குழு மீண்டும் அமைக்கப்படும் வரை நபர் ஒருவரை தனி அலுவலராக பணியமர்த்தம் செய்யலாம். பள்ளி மாணவர்களின் நலனுக்காக தகுதிறமுடைய அதிகார அமைப்பு மற்றும் அலுவலகப் பணியாளர்களின் நிதி அதிகாரங்களை அதற்குத் தேவையெனத் தோன்றுகின்றதென்றால் உடனடி நடவடிக்கையாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

(2) தனி அலுவலர் ஒருவரின் பணியமர்த்தம் செய்தல் என்பது அரசின் பரிந்துரையின் நிலுவையிலிருக்கின்றவிடத்து தகுதிறமுடைய அதிகார அமைப்பு நேரடியாக செலுத்தும் முறையைப் பயன்படத்தலாம்.

Verified by RealEstate™

(3). (1) ஆம் உட்பிரிவின்படி தனி அலுவலர் பணியமர்த்தும் செய்யப்பட்டிருக்கிறவிடத்து

(a) பள்ளிக்குழு அதன் மீது விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்து முடிப்பதற்காக இருப்பதற்கான மற்றும் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகளைச் செய்து முடிப்பற்காக இருப்பவற்றை அற்றுப் போகும்படி செய்ய வேண்டும்.

(b) தனி அலுவலர், இந்தச் சட்டத்திற்கு முரணாக இல்லாத வகையில் அத்தகைய சட்டத்தை முடிந்தவரை தனியார் பள்ளிக்கு பொருந்த தக்கதாகவுள்ள சட்டம் எதற்கும் இணங்க பள்ளியை திறம்பட மேலாண்மை மற்றும் நடத்துவதற்கு தேவைப் படலாகிறவாறான அத்தகைய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

விளக்கம்:

இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக “சட்டம்” துணை விதி, விதிகள், ஒழுங்குமுறை விதிகள் அல்லது சட்டத்தின் செல்லாற்றலைக் கொண்டிருக்கும் முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்.

அத்தியாயம்–VII

பணியாளரின் பணியமர்த்தும் மற்றும் அவர்களுடைய பணி வரைக்கட்டுகள்

பள்ளிகளுடைய பணியாளரின் மணியமர்த்தம் மற்றும் அவர்களுடைய பணி வரைக்கட்டுகள்

32. (1) இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்குட்பட்டு தனியார் பள்ளி ஒன்றின் பள்ளிக்குழு அந்தப் பள்ளி திறம்பட செயலாற்றுவதற்காகத் தேவைப்படும் எனக் கருதப்படலாகிறவாறான அத்தகைய பணியாளரை பணியமர்த்தம் செய்யலாம்.

(2) தனியார் பள்ளியின் பணியாளரின் தகுதிகள் மற்றும் எண்ணிக்கை வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் இருத்தல் வேண்டும்,

வரம்புரை:

ஆனால் இந்த உட்பிரிவின் படி வகுத்துரைக்கப்பட்ட தகுதிகள் நபர் எவரும் தனியார் பள்ளி எதிலும் இந்தச் சட்டம் தொடங்கும் அன்று அல்லது தேதிக்கு முன்பு பணியமர்த்தம் செய்யப்பட்டிருக்கிறார். அவ்வாறான அவருடைய பணியமர்த்தம், அத்தகைய பணியமர்த்தம் செய்யப்பட்ட நேரத்தில் நடப்பிலுள்ள தகுதிகளுக்கிணங்க செய்யப்பட்டிருக்கிறதென்றால் பொருந்தாது.

(3) 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலித்தலை ஒழுங்குமுறைப் படுத்துதல் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட கட்டணத்தை நிர்ணயம் செய்யும் குழுவிற்கு அத்தகைய பள்ளியால் சமர்ப்பிக்கப்பட்ட பணியாளரின் சம்பளம் மற்றும் பிற படிகள் அளிக்கின்ற நோக்கில் செலவின விவரவுரையில் உண்மையாகக் காட்டப்படுதல் வேண்டும்.

(4) தனியார் பள்ளி ஒவ்வொன்றின் பணியாளரின் சம்பளம் மற்றும் படிகள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு மற்றும் ஒவ்வொரு மாதத்தின் அத்தகைய தேதியன்று அல்லது தேதிக்கு முன்பு செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகள் தொடர்பாக அதனுடைய பணியாளருடன் ஒப்பந்தமொன்றும் செய்து கொள்ள வேண்டும்.

வரம்புரை:

ஆனால் இந்தச் சட்டம் தொடங்கும் தேதியன்று ஏற்கனவே பணியிலுள்ள பணியாளருடன் பணி ஒப்பந்தம் எதனையும் செய்து கொள்ளாமல் இருக்கின்றவிடத்து அத்தகைய பணி ஒப்பந்தம் இந்தச் சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறு மாத காலமொன்றின் முன் செயல்படுத்தப்படுதல்

தனியார் பள்ளிகளில் பணியாளரின் பணியமர்த்–தத்திற்கான குறைந்தபட்ச தகுதிகள்

33. நபர் எவரும் 32 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவின் படி வகுத்துரைக்கப்பட்டவாறான குறைந்தபட்ச தகுதிகளை கொண்டிருக்காதவர் தனியார் பள்ளி எதிலும் பணியமர்த்தம் செய்யப்படுதலாகாது.

Verified @ RealEstate™

தனியார் பள்ளியின் பணியாளர் நடத்தை விதித்– தொகுப்பினால் நிர்வகிக்கப் படுவர்

34. தனியார் பள்ளி ஒன்றின் பணியாளர் ஒவ்வொருவரும் அரசால் வகுக்கப்படலாகிறவாறு அத்தகைய நடத்தை விதித் தொகுப்பினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

அரசு உதவி பெறும் தனியார் பள்ளியின் பணியாளரின் வரையுரைகள் மற்றும் பணிவரைக் கட்டுகள்

35. (1) அரசு, அரசின் உதவி பெறும் பள்ளி எதனின் பணியாளரின் பதவி உயர்வு, சம்பளம், படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, காப்பீடு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை பொருட்பாடுகள் உள்ளடங்கலாக பணியமர்த்தம் செய்யும் முறை, நிலை, எண்ணிக்கை மற்றும் பணிவரைக்கட்டுகளை வகுத்துரைக்கலாம்.

(2) தகுதிறமுடைய அதிகார அமைப்பின் முன் அனுமதியின்றி கற்பிக்கும் மற்றும் கற்பிக்காத பணியாளரின் நியமனம் எதுவும் செயல்முறைப்படுத்தலாகாது.

அத்தியாயம் VIII

அரசு உதவி பெறும் பள்ளிகளுக்காக செலுத்தப்படும் மானியம்

36. (1) அரசு, வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய வரைக்கட்டுகளுக்குட்பட்டு வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய நோக்கங்களுக்கிணங்க மற்றும் அத்தகைய விகிதத்தில் **1991 – 1992** கல்வி ஆண்டின் தொடக்கத் தேதிக்கு முன்பு அரசிடமிருந்து மானியத்தை ஏற்கனவே பெற்றுக் கொண்டிருக்கிற தனியார் பள்ளிக்கு மானியம் வழங்குவதை தொடர்ந்து வழங்கலாம்.

விளக்கம்:

இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக தனியார் பள்ளி எது அரசிடமிருந்து மானியம் பெற்றிருக்கிறதோ நேர்வுக்கேற்ப வகுப்பு அல்லது பாதுகாப்பு படிப்புப் பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப் பிரிவு எதனின் தொடர்பாகவும் மட்டும் அரசிடமிருந்து மானியம் பெறும் தனியார் பள்ளி ஒன்று மேலும் உள்ளடங்கும்.

(2) அரசு, தனியார் பள்ளி எதனின் தொடர்பாகவும் (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள மானியம் எதனையும் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ நிரந்தரமாகவோ குறித்துரைக்கப்பட்டுள்ள காலம் எதற்காகவும் நிறுத்தி வைக்கலாம்.

(a) முடிந்தவரை அத்தகைய தனியார் பள்ளிக்குப் பொருந்தத்தக்கதாக இருக்கின்ற அத்தகைய வகைமுறைகள், விதிகள் அல்லது அறுவுறுத்தல்கள், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது செய்யப்பட்ட விதிகள் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் எதற்கும் இணங்க இல்லாமல் இருக்கிறதென்றால் அல்லது

(b) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கிணங்க அத்தகைய தனியார் பள்ளியில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர் அல்லாத பிற நபர் எவருக்கும் செலுத்தத்தக்கதாக உள்ள சம்பளம் மற்றும் படிகள் தொடர்பாக அத்தகைய ஆசிரியருக்கு அல்லது பிற நபருக்கு அவை செலுத்தப்படாமலிக்கிறதென்றால், அல்லது

(c) வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய வரைக்கட்டுகள் எதற்கும் இணங்குவதில் முரண்பட்டிருக்கிறது அல்லது தவறியிருக்கிறதென்றால்

வரம்புரை:

ஆனால் இந்த உட்பிரிவின்படி மானியம் வழங்குவதை நிறுத்தி வைப்பதற்கான ஆணை ஒன்றினை பிறப்பிப்பதற்கு முன்பு தகுதிறமுடைய அதிகார அமைப்பு கல்வி முகவாண்மைக்கு அதனுடைய உரையீட்டினைச் செய்வதற்கான வாய்ப்பொன்றினை வழங்க வேண்டும்.

Verified RealEstate™

37. இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது தீர்ப்பு அல்லது தீர்ப்பாணை அல்லது நீதிமன்றம் எதனின் ஆணையிடம் அல்லது பிற அதிகார அமைப்பு எதிலும் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் பின்வருவனவற்றிற்கு

புதிய தனியார் பள்ளிகள் வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவு.

(a) தனியார் பள்ளி எதுவும் நிறுவப்பட்டது மற்றும் அத்தகைய தனியார் பள்ளியில் திறக்கப்பட்ட வகுப்பு, பாடப்பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவு

(b) **1991** முதல் **1992** வரை கல்வி ஆண்டு தொடங்கும் தேதியன்று அல்லது தேதிக்குப் பிறகு திறக்கப்பட்டுள்ளது எனில், அத்தகைய தொடக்கத் தேதிக்கு முன்பு அரசால் அந்தப் பள்ளிக்கு மானிம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றால்,

(c) **1991** முதல் **1992** வரையிலான கல்வி ஆண்டின் தொடக்கத் தேதியன்று இருக்கும் தனியார் பள்ளி ஒன்றில் வகுப்பு அல்லது படிப்புப் பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவு எதற்கும் அத்தகைய தொடக்கத்தின் தேதிக்கு முன்பு ஒட்டி அரசால் மானியம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றால் மற்றும்,

(d) அத்தகைய தொடக்கத்தேதியன்று இருக்கும் தனியார் பள்ளி ஒன்றில் **1991** முதல் **1992** வரையிலான கல்வி ஆண்டின் தொடக்கத் தேதி அல்லது பின்பு வகுப்பு அல்லது படிப்புப் பிரிவு அல்லது கற்பித்தலின் மொழிப்பிரிவு துவங்கப்பட்டுள்ளது என்றால்

விளக்கம்:

இந்தப் பிரிவினை நோக்குங்கால் தனியார் பள்ளி என்பதில் சிறுபான்மை பள்ளி ஒன்றும் அடங்கும்.

38. இறுதியாக அத்தகைய தனியார் பள்ளி எதிலும் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களை குறைப்பதன் பேரில் அல்லது பிற பொருட்பாடு எதற்கும் அல்லது கற்பித்தலின் படிப்புப் பிரிவு அல்லது கல்வித் தொடர்பாக இறுதியாக அரசின் ஆணைகள் எதன் பேரிலும் தனியர் பள்ளி எதிலும் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர் அல்லது பிற நபர் எவரையும் குறைப்பது தேவையானதாக இருக்கின்றவிடத்து அது நேர்வுக்கேற்ப அத்தகைய தனியார் பள்ளியில் அல்லது அரசால் பராமரிக்கப்படும் பள்ளி அல்லது நிறுவனம் எதிலும் அத்தகைய ஆசிரியரை அல்லது பிற நபரை பணியமர்த்தம் செய்வதற்கு தனியார் பள்ளி எதனின் பள்ளிக்குழு அல்லது அரசு தகுதிறமுடையதாய் இருக்கும்.

அரசுநிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஆட்குறைப்பின் பேரில் பணியாளரை சேர்த்துக் கொள்ளுதல்

விளக்கம்:

இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக அரசு உதவி பெறும் பணியாளரின் எண்ணிக்கையிலான நிர்ணயம் செய்வது காலத்திற்கேற்ப அரசால் குறிப்பிடப்படலாகிறவாறான கட்டளை நியதிகளைப் பின்பற்ற செய்யப்படுதல் வேண்டும்.

39. இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுள் எதனின் படியும் அதிகார அமைப்பு எதனாலும் கோரப்படும் நபர் எவரும் அனுப்பும் தகவல் எதுவும் வேண்டுமென்றே அத்தகைய தகவலை அனுப்பத் தவறுகிறார் என்றால் அல்லது தெரிந்திருந்தும் தவறான தகவலை அனுப்புகிறாறென்றால் அவர் பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

தகவல் அளிக்கப்படாமல் இருப்பதற்காக அல்லது தவறான தகவலை அளித்ததற்கான தண்டனை.

Verified eCopy RealEstate™

40. (1) பிரிவுகள் 8(7), 20(2), 22 (3) மற்றும் 22 (4) அல்லது பிற இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளில் எதனையும் வேண்டுமென்றே மீறும்படித் தூண்டுகிற நபர் எவரும் ஒரு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டத்துடன் மற்றும் மீறுகையானது தொடர்ந்து கொண்டிருக்கும் நேர்வில் அத்தகைய மீறுகை தொடர்ந்து கொண்டிருக்கும் போதுமான காலத்தில் ஒவ்வொரு நாளுக்கும் பத்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கப்படலாகும் தண்டம் மேலும் விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரிவுகள் 8(7), 20(2), 22 (3) மற்றும் 22 (4) இன் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கிணங்க வேண்டுமென்றே தவறுகிற நபர் எவரும் ஓர் ஆண்டுக் காலம் வரை நீட்டிக்கப்படலாகும் சிறை தண்டனை அல்லது ஐந்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டத்துடன் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படுபவராக இருத்தல் வேண்டும்.

(3) அதிகார அமைப்பு, அலுவலர் அல்லது நபர் இந்தச் சட்டத்தின் படி இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளால் அல்லது தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அதற்கு அல்லது அவரிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் எதனையும் செயலுறுத்துகையில் தனியார் பள்ளி எதற்குள்ளும் நுழைவதிலிருந்து வேண்டுமென்றே தடுக்கிறநபர் எவரும் மூன்று மாதங்கள் நீட்டிக்கப்படலாகும் காலமொன்றிற்கான சிறை தண்டனையுடன் அல்லது ஒரு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டத்துடன் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் IX

மேல்முறையீடு மற்றும் சீராய்வு

தகுதிறமுடைய அதிகார அமைப்பின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு

41. இந்தச் சட்டத்தின் வகை முறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதனின் படியும் செய்யப்பட்ட தகுதிறமுடைய அதிகார அமைப்பின் ஆணை, முடிவு அல்லது அறிவுறுத்தல் எதனாலும் பாதிக்கப்பட்ட நபர் எவரும் அத்தகைய ஆணை, முடிவு, அறுவுறுத்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலமொன்றிற்குள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு மேல்முறையீட்டு அதிகார அமைப்பிற்கு மேல் முறையிடொன்றினை செய்யலாம்.

மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் மேல் முறையீட்டினை முடிவு வைத்தல்

42. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதனின்படியும் செய்யப்பட்ட தகுதிறமுடைய அதிகார அமைப்பின் ஆணை, முடிவு அல்லது அறிவுறுத்தல் எதற்கும் எதிரான மேல் முறையீடு எதுவும் **41** ஆம் பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவடைந்த பிறகு ஏற்கப்படுதலாகாது.

(2) மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அதனுடைய விருப்புரிமையில் அது மேல்முறையீட்டாளர் குறித்த காலத்திற்குள் மேல்முறையீட்டினை செய்யாமல் இருந்திருப்பதற்கான காரணம் போதுமானதாக இருக்கின்றது என்று மன நிறைவு கொண்டிருக்கிறாரென்றால் **41** ஆம் பிரிவின்படி மேல்முறையீட்டினை செய்வதற்காக ஒரு மாத காலம் மிகாத மேலுமான காலத்தை அனுமதிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அதனுடைய அதிகாரங்களை செயலுறுத்தும் வரையில் அது அதற்குப் பொருத்தமென தோன்றுகிறவாறான அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(4) அத்தகைய மேல்முறையீடு பெறபட்டதன் பேரில் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு

(i) தரப்பினர்களுக்கு அவர்களது தரப்பு உரையீட்டினைச் செய்வதற்கு வாய்ப்பினை அளித்த பின்பு

(ii) அத்தகைய விசாரணை செய்வது தேவையானதாக இருக்கிறது என்பது பொருத்தமுடையதானதாக இருக்கும் என்று அதற்குத் தோன்றுகின்றதென்றால்

(iii) நேர்வின்அனைத்து சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ளும் போது மேல்முறையீடு பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலமொன்றிற்குள் நேர்மையானதாகவும் மற்றும் நியாயமானதாகவும் அதற்குத் தோன்றுகிறவாறான அத்தகைய ஆணையைச் செய்ய வேண்டும்.

43. (1) அரசு, தன்னிச்சையாகவோ அல்லது பாதிக்கப்பட்ட நபர் எவரிடமிருந்தும் பெறப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரில் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி பிறப்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் எதனின் தொடர்பாகவும் அதிகார அமைப்பு அல்லது அலுவலர் எவரின் பதிவுருக்களையும் கேட்டுப் பெற்று மற்றும் ஆய்வு செய்யலாம். சரியாக இருப்பவை, சட்டப்படியாக இருக்கின்றனவா அல்லது உரிமை பற்றியான செய்யப்பட்ட ஆணை எதனையும் அல்லது அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அது மனநிறைவுகொள்ளுகின்றவிடத்து மற்றும் வழக்கு எதிலும் அத்தகைய ஆணை அல்லது முடிவு கட்டாயமாக மாற்றமைவு, அழித்தறவு மறுபரிசீலனைக்காக திருப்பி அனுப்புவதற்காக, அரசு அதன்படி ஆணைகளை பிறப்பிக்கலாம்.

(2) அத்தகைய நபருக்கு அவரது தரப்பு உரையீட்டினை கூறவதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி ஆணை எதுவும் நபருக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் (1) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படுதலாகாது.

(3) அரசு, (1) ஆம் உட்பிரிவின்படி முடிவு நிலுவையிலிருக்கும் போது அவற்றால் பொருத்தமெனத் தோன்றலாகிறவாறான அத்தகைய பிற ஆணையை பிறப்பிக்கலாம். சீராய்வு.

அத்தியாயம் X

கணக்குகள் மற்றும் தணிக்கை

44. (1) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய கணக்குகளை மற்றும் பதிவுருக்களை பராமரிக்க வேண்டும். கணக்குகளின் வருடாந்திர தணிக்கை

(2) (a) மானியமாக அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஒவ்வொன்றின் கணக்குகளும் வகுத்துறைக்கப் படலாகிறவாறான அத்தகைய அதிகார அமைப்பு அலுவலர் அல்லது நபரால் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(b). (a) கூறின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு அலுவலர் அல்லது நபர் தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு கணக்குகளின் தணிக்கையின் பேரில் அறிக்கையின் நகலொன்றினை அனுப்ப வேண்டும். அது அதனை தனியார் பள்ளியின் பள்ளிக்குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(c) பள்ளிக்குழு குறைகளை நீக்கும் வகையில் தகுதிறமுடைய அதிகார அமைப்பால் குறித்துரைக்கப் படலாகிறவாறான அத்தகை நடவடிக்கையை எடுக்க வேண்டும். தணிக்கை ஆய்வின் பேரில் இறுதியாக கூறுவதற்கு எதுவும் இருக்கிறதென்றால் கூற வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய காலத்திற்குள் தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு அதன் பின்பு அதனுடைய கருத்துரைகளை சேர்த்து அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

(3) அரசு உதவி பெறாத தனியார் பள்ளி என்கின்ற நேர்வில் தகுதியுடைய தணிக்கையர்களால் ஒவ்வொரு ஆண்டிலும் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது தணிக்கை செய்யப்படுதல் வேண்டும். தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு ஏற்பளிப்பினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தினை செய்யும் காலத்தில் தணிக்கை அறிக்கையினை பள்ளியின் மேலாண்மைக்குழு அனுப்ப வேண்டியதாயிருக்கும்.

45. தனியார் பள்ளி ஒவ்வொன்றின் பள்ளிக்குழு இது தொடர்பாக தகுதிறமுடைய அதிகார அமைப்பினைக் குறித்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய காலத்திற்குள் தகுதிறமுடைய அதிகாரியால் காலத்திற்கேற்ப கோரப்படலாகும் அத்தகைய விவர அறிக்கையை பள்ளி விவரங்களை மற்றும் பிற தகவல்களை தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு அனுப்ப வேண்டும். விவர அறிக்கைகள் முதலியவற்றை அனுப்புதல்.

அத்தியாயம் XI

பல்வகைப்பட்டவை

46. செயல்முறைத் திட்டம் எதனையும் அல்லது மானியங்களைத் தவறாக பயன்படுத்தியதற்காக அல்லது பயன்படுத்தாமல் இருந்ததற்காக அதனை **1864** ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலித்தல் சட்டத்தின் வகைமுறைகளின்படி நில வருவாய் பாக்கியை வசூலிப்பது போன்று தொடர்புடைய நபரிடமிருந்து வசூலிக்கப்படலாம். அரசுக்குச் சேர வேண்டிய நில வருவாயின் பாக்கியை வசூலிப்பது போன்று வசூலித்தல்.

Verified RealEstate™

அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கு அதற்குள்ள அதிகாரங்கள்

47. அரசு, இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகளுக்குட்பட்டு அவற்றுக்குப் பொருத்தமெனத் தோன்றலாகிறவாறான அத்தகைய விசாரணையை செய்வதற்கு தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு அறிவுறுத்தலாம். தகுதிறமுடைய அதிகார அமைப்பு வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய காலத்திற்குள் விசாரணையை நடத்த வேண்டும் மற்றும் அரசுக்கு விசாரணையின் முடிவினை அறிக்கை செய்ய வேண்டும்.

அதிகாரங்களின் ஒப்படைவு

48. அரசு அறிவிக்கையினால் அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய அதிகார அமைப்பால் அல்லது அரசால் அத்தகைய கட்டாயங்களுக்கு மற்றும் சீராய்வுக்கு மற்றும் அத்தகைய வரைக்கட்டுக்களுக்குட்பட்டு அலுவலர் அல்லது அதிகார அமைப்பு எவருக்கும் 16, 17, 19, 34 35, 43, 47, 49, 57, 58 மற்றும் 60 ஆம் பிரிவுகளால் அந்த அதிகாரங்கள் அவர்களிடம் வழங்கப்பட்டது தவிர இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி அவர்களிடம் உள்ளமைந்துள்ள அதிகாரங்கள் அனைத்தும் அல்லது எதனையும் ஒப்படைவு செய்யலாம் மற்றும் அவ்வாறு ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் எதனையும் அந்த முறையில் திரும்பப் பெறலாம்.

தகுதிறமுடைய அதிகார அமைப்பிற்கு செயற்பணிகளை செய்து முடிப்பதற்கு அலுவலகம் அல்லது அதிகார அமைப்பு ஆகியவை கீழமைந்திருப் பவையாக இருக்கும்.

49. அரசு அறிவிக்கையினால் இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளினின்படி தகுதிறமுடைய அதிகார அமைப்பின் செயற்பணிகள் எதனையும் செய்து முடிப்பதற்கு அறிவுறுத்தலாம். அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப் படலாகிறவாறு அரசுக்கு கீழ் அமைந்துள்ள அமைப்பாக செயல்படும். மேலும் அத்தகைய அலுவலர் அல்லது அதிகார அமைப்பால் அத்தகைய பொருட்பாடுகள் தொடர்பாக மற்றும் அத்தகைய வரைக்கட்டுகளுக்குட்பட்டு செய்து முடிக்கப்படும்.

தகுதிறமுடைய அதிகார அமைப்பு முதலியவை அரசுப் பணியாளர்களாக இருப்பர்.

50. அரசால் அதிகாரமளிக்கப்பெற்ற தகுதிறமுடைய அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் மற்றும் அலுவலர் ஒவ்வொருவரும் அல்லது நேர்வுக்கேற்ப தகுதிறமுடைய அதிகார அமைப்பு இந்தச் சட்டத்தின்படி அதனிடம் அல்லது அவரிடம் விதிக்கப்பட்ட கடமை எதனையும் செய்து முடிப்பதற்காக அதனை அதற்காகச் செய்யும் பொழுது இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளின்படி அரசுப் பணியாளராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

குற்றங்களைப் புலன் கொள்ளுதல்

51. (1) இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்கதாக இருக்கும் குற்றம் எதனையும் மாநகர நீதி மன்றமொன்றின் நடுவர் பதவிக்கு குறையாத அல்லது நீதிமன்ற நடுவர் பதவிக்கு குறையாத நீதிமன்றம் எதுவும் புலன் கொள்ளுதலாகாது.

(2) இது சம்பந்தமாக அரசால் அதிகாரமளிக்கப் பெற்ற அதிகார அமைப்பு அல்லது அலுவலர் ஒருவரால் செய்யப்பட்ட அத்தகைய குற்றத்தை செய்துள்ளதாக கூறும் பொருண்மையினை எழுத்துப் பூர்வமான அறிக்கையொன்றின் பேரில் தவிர இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்கதாக இருக்கும் குற்றம் எதனையும் நீதிமன்றம் எதுவும் புலன் கொள்ளுதலாகாது.

உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பின்மை

52. உரிமையியல் நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார அமைப்பு அல்லது அலுவலர் எவராலும் முடிவு செய்யப்பட வேண்டும் அல்லது கொடுக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்ட இந்தச் சட்டத்தின்படி அல்லது இந்தச் சட்டத்தினால் முடிவு செய்யப்படும் அல்லது அளாவுகை செய்யப்படும் கேள்வி எதற்கும் முடிவு செய்வதற்கு அதிகார வரம்பைக் கொண்டிருக்காது.

பிற சட்டங்களின் செயல்பாடு.

53. இந்தச் சட்டத்தில் பிறவாறு காப்புரையின் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் தற்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதனினையும் மேலும் திறக்குறைவு செய்யாமல் இருத்தல் வேண்டும்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட செயல்களுக்கு பாதுகாப்பு.

54. உரிமை வழக்கு, குற்றவழக்கு தொடர்தல் அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட ஆணைகளின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்டதற்காக இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி செயற்பணிகளை செய்து முடிக்கும் அல்லது அதிகாரமளிக்கப்பட்டு அவ்வதிகார செயலுறுத்தும் அரசு, அல்லது அலுவலர் அதிகார அமைப்பு அல்லது நபர் எவருக்கும் எதிராக தொடரப்படுதல் கூடாது.

Verified RealEstate™

55. இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நிச்சயிக்கப்படக் கூடிய பொருட்பாடு எதனின் தொடர்பாகவும் அதிகார அமைப்பு அல்லது அலுவலர் எவராலும் செய்யப்பட்ட ஆணை, எடுக்கப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவுறுத்தல் எதுவும் மேல்முறையீடு அல்லது சீராய்வுக்கு மட்டுமே உள்ள விசயமாக இந்தச் சட்டத்தின்படி வகை செய்யப்பட்டது இறுதியானதாக இருக்கும். இந்தச் சட்டத்தின்படி வழங்கப்படும் ஆணைகள் முதலியவற்றின் இறுதி நிலை.

56. (1) 52 ஆம் பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் கல்வி முகவாண்மை அமைப்பது குறித்து அல்லது தனியார் பள்ளி எதற்கும் தொடர்பானதாகவுள்ள நபரோ அல்லது நபர்களின் குழுமம் எதுவுமோ கல்வி முகவாண்மையாக இருக்கின்றது குறித்து அல்லது பள்ளிக்குழுவின் செயலாளரை பணியமர்த்தம் செய்வது குறித்து எப்பொழுதெல்லாம் பூசல் எதுவும் எழுகிற போது அதனுடைய முடிவிற்காக அதிகார வரம்பைக் கொண்டிருக்கும் உரிமையியல் நீதிமன்றத்திற்கு தகுதிறமுடைய அதிகார அமைப்பில் அல்லது உரித்தமுடைய நபர்களால் அத்தகைய பூசல் சுட்டப்படலாம். கல்வி முகவாண்மை முதலியவை குறித்த பூசல்களுக்கான தீர்வு.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி அதற்கு சுட்டப்பட்ட பூசல் ஒன்றின் பேரில் உரிமையியல் நிதிமன்றத்தின் முடிவு நிலுவையிலிருக்கும் போது அல்லது தனியார் பள்ளியை நடத்துவதற்காக உரிமையியல் நீதிமன்றத்தினால் இடைக்கால ஏற்பாடு ஒன்றினைச் செய்யும்போது அரசு தனியார் பள்ளி பொறுத்து அதன் தொடர்பாக நேர்வுக்கேற்ப கல்வி முகவாண்மையின் பள்ளிக்குழுவின் அல்லது செயலாளரின் செயற்பணிகளைச் செய்து முடிக்கும் அலுவலர் ஒருவரை நியமனம் செய்யலாம்.

57. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) குறிப்பாக மற்றும் முந்தைய அதிகாரங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமன்று பின்வரும் பொருட்பாடுகளின் அனைத்திற்காகவும் அல்லது எதற்காகவும் வகைசெய்யலாம். அதாவது,

(a) வெளிப்படையாகத் தேவைப்படும் அல்லது விதிகளால் வகுத்துரைக்கப்படக் கூடிய அல்லது குறித்துரைக்கப் படக்கூடிய இந்தச் சட்டத்தினால் அனுமதிக்கப்படும் பொருட்பாடுகள் அனைத்தும்;

(b) இந்தச் சட்டத்தின்படியான விண்ணப்பங்களின் படிவம் சில விபரங்களைக் கொண்டிருக்க வேண்டும்;

(c) தனியார் பள்ளியை நிறுவுதல் மற்றும் பராமரிப்பு ;

(d) தனியார் பள்ளிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள்;

(e) 6 ஆம் பிரிவின்படி மானியத்திற்கான அனுமதி;

(f) சமுதாயத்தில் வாழ்க்கைத் தரத்தில் நன்றாக வாழ முடியாமல் இருக்கக் கூடிய பிரிவினரின் மற்றும் நன்மையைப் பெறாத தொகுதியினர் சமூக அடிப்படையில் மற்றும் கல்வி அடிப்படையில் பின்தங்கிய வகுப்பினர்களாக இருக்கக் கூடிய குடிமக்கள் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் மேம்பாட்டிற்கான சிறப்பு வகைமுறை உள்ளடங்கலாக தனியார் பள்ளிகளில் நடைபெறும் மாணவர்களின் சேர்க்கை .

விளக்கம்: இந்தக் கூறின் நோக்கங்களுக்காக ''பட்டியலில் கண்ட சாதியினர்'' மற்றும் ''பட்டியலில் கண்ட பழங்குடியினர்'' என்பது அரசமைப்புச் சட்டத்தில் ஒரே மாதிரியான பொருளினைக் கொண்டிருக்க வேண்டும்.

(g) தனியார் பள்ளிகளில் கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் பதிவுருக்கல் எந்த முறையில் பராமரிக்கப்ப படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய பராமரிப்பிற்காக அதிகார அமைப்பு பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும் .

(h) தனியார் பள்ளிகளின் கல்வி முகவாண்மைகளால் விவர அறிவிக்கைகள், விவரவுரைகள் அறிவிக்கைகள் மற்றும் கணக்குகளின் சமர்ப்பிப்பு.

(i) தனியார் பள்ளிகளில் கற்பித்தலின் கல்வியின் தரங்கள் மற்றும் கற்பித்தல் மற்றும் படிப்புப் பிரிவுகள்

(j) பயன்படுத்தப்படலாகும் பள்ளிகளின் வளாகங்கள் எதற்காகவுமான நோக்கங்கள் மற்றும் நோக்கம் எதற்காகவும் பயன்படுத்தப்படலாகும் அத்தகைய வளாகங்களுக்கு உட்பட்டு இருக்கும் வரைக்கட்டுகள்

(k) பாடப்புத்தகங்கள், வரைபடங்கள், திட்டங்கள், கருவிகள் மற்றும் பிற சோதனைக் கூடம் மற்றும் விளையாட்டுக் கருவியை பயன்படுத்துவதற்கான ஒழுங்குமுறை விதி.

(l) தனியார் பள்ளிகளுக்காக பொது மக்களிடமிருந்து வரைக்கட்டுகளுக்குட்பட்டு ஏற்கப்படலாகும் கொடைகள் அல்லது பங்களிப்புகள்;

(m) தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் சிறுபான்மை தகுதிநிலை;

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் மற்றும் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும். அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று செயலாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு வெளியிடப்பட்ட அவை அந்த நாளன்று நடைமுறைக்கு வரும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரையில் சட்டமன்றப் பேரவைகளின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்டக் கூட்டத் தொடர் அல்லது அந்தக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை செய்யப்படுதல் ஆகாது அல்லது பிறப்பிக்கப்படுதல் ஆகாது என சட்ட மன்றப் பேரவை முடிவு செய்யுமாயின் அந்தவிதி அல்லது அறிவிக்கை அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும். அல்லது நேர்வுக்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

விலக்கு.

58. அரசு, அறிவிக்கையினால் மற்றும் அதில் குறித்துரைக்கப்படக்கூடிய காரணங்களுகக்காக அவற்றிற்கு பொருத்தமெனத் தோன்றுகிறவாறான அத்தகைய வரைக்கட்டுகளுக்குட்பட்டு இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகள் அனைத்தின் அல்லது எதனின் செயல்முறையிலிருந்து தனியார் பள்ளி எதற்கும் விலக்களிக்கலாம் மற்றும் அந்த முறையில் மாறுபடலாம் அல்லது அத்தகைய விலக்கு நீக்கப்படலாம்.

நீக்கறவு மற்றும் காப்புரை.

59. தமிழ்நாடு சட்டம் 29/1974

(1) (மேற்சொன்ன சட்டமாக இந்தப் பிரிவின் இதன் பின்பு சுட்டப்பட்ட) 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்டது.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருந்த போதிலும் மேற்சொன்ன சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் அல்லது செயல்முறை இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் தொடரலாம் மற்றும் இந்தச் சட்டத்தின் நேரிணையான வகை முறைகளின் படி முடிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பிற ஆணைகள் எதுவும் அல்லது அலுவலக குறிப்பாணை சுற்றறிக்கையின் ஒழுங்குமுறை விதிகள், துணை விதிகள் செயல்முறை விதிகள், துணை விதிகள் செயல்முறைத் திட்டங்கள் பணியமர்த்தங்கள் மானிய உதவி விதிகள் அறிவிக்கைகள், ஆணைகள், விதிகள் அனைத்தும் அந்த பொருட்பாடுகள் எதற்கும் தொடர்பாக அதனை நிறைவேற்றுவதற்காக இந்தச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் ரத்து செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றும் ரத்து செய்யப்படும் வரை இந்தச் சட்டத்தின் நேரிணையான வகைமுறைகளின்படி அவை செய்யப்பட்டிருந்தாற்போன்று செல்லாற்றலுடையதாக மற்றும் செய்திறமுடையதாக தொடர்ந்து இருக்கும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

60. இந்தச் சட்டத்தின் வகை முறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் இந்த இடர்பாட்டை நீக்குவதற்கு தேவையானவையென்றோ உகந்தவையென்றோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகை முறைகளைச் செய்யலாம்.

வரம்புரை:

ஆனால் அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதலாகாது.

நோக்கக் காரண விளக்கவுரை

1. தமிழ்நாடு மாநிலத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகளை நிர்வகிப்பதற்கு மற்றும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்கும் அரசால் 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப் படுத்தும்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1974) இயற்றப்பட்டது. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒரே மாதிரியான பள்ளிக் கல்விச் சட்டம் மற்றும் 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்வியைப் பெறுவது குழந்தைகளின் உரிமைச் சட்டத்தின் விளைவாக தனியார் பள்ளிகள் அனைத்தையும் நிர்வகிப்பதற்கு ஒரு புதிய விரிவான சட்டத்தினை இயற்றுவது பற்றி ஆலோசிப்பதற்கு ஒரு நிபுணர்குழு அமைப்பதற்கு 18.04.2012 அன்று சட்டமன்ற பேரவையின் அவை நடைபெற்ற போது அறிவிக்கப்பட்டிருந்தது.

2. அதன்படி ஒரு புதிய விரிவான சட்டத்தினை இயற்றுவது பற்றி ஆலோசிப்பதற்கு நிபுணர்குழு ஒன்று அமைக்கப்பட்டது. குழு, செயலாற்றலிலுள்ள அனைத்துச் சட்டங்களை, விதிகளை, தொகுப்புச் சட்டங்களை, அரசு ஆணைகளை மற்றும் வழி நடத்தும் முறைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு அரசின் ஆலோசனைக்காக சட்டத்தின் வரைவை சமர்ப்பித்திருக்கிறது.

3. குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட வரைவின் அடிப்படையில் அரசு, அதன்படி ஒரு விரிவான சட்டம் ஒன்றினை இயற்றப்படுவதென முடிவு செய்திருக்கிறது. இந்தச் சட்ட முன் வடிவு தனியார் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் உயிர் பாதுகாப்பு மற்றும் உடைமை பாதுகாப்பினை அளிப்பதற்கு அப்பள்ளியை வற்புறுத்துகிறது. அது மேலும் தனியார் பள்ளிகளில் அடிப்படையாக குறைந்தபட்ச தரங்களை மற்றும் அளவுகளை மற்றும் சேர்க்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு நிச்சயிப்பதன் மூலம் தனியார் பள்ளிகளில் தரமான கல்வியை உறுதிப் படுத்துதலை முன் மொழிகிறது. அது மேலும் வருங்காலத்தில் கல்வியை வியாபாரமாக்குதலை தடுப்பதற்கும் மற்றும் பலமான சமுதாயத்தை அமைப்பதற்காக பலமான மதிப்பீடு முறைக்காக அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்கும். ஏற்பளிப்பிற்கான சான்றிதழ் வழங்கப்படாத பள்ளி எதிலும் குழந்தை சேர்க்கப்படுவதைத் தடுக்கிறது. ஏற்பளிப்பினை திரும்பப் பெறுவதின் அடிப்படையில் அதன் விளைவாக கல்வி முகவாண்மை பள்ளியை நடத்துவதை தடை செய்வதற்கான கட்டளையிடும் வகை முறையைச் செய்கிறது. மாணவர்களின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு இந்தச் சட்ட முன் வடிவு கல்வியில் குறைவான மதிப்பெண் பெற்றிருக்கிறார் என்பதன் அடிப்படையில் வாரியத் தேர்வினை எழுதுவதற்கு அல்லது பிற நியாயமற்ற காரணங்களுக்காக இல்லாதவற்றிற்காக மாணவர்களை தடுக்கும் எவரையும் தண்டனை விதிப்பதற்கு இந்தச் சட்ட முன் வடிவு அரசுக்கு அதிகாரமளிக்கிறது. இந்தச் சட்ட முன் வடிவு மேலும் அத்தகைய சிறுபான்மை பள்ளிக்கு சிறுபான்மை தகுதியின் பேரில் பாதுகாப்பினை உறுதி செய்தும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் விதிகளிலிருந்து விலக்களித்தல் உள்ளடங்கலாக சிறுபான்மை தனியார் பள்ளிகளுக்காக சிறப்பு வகைமுறைகளைச் செய்வதற்கு விழைகிறது.

4. இந்தச்சட்ட முன் வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

கே.ஏ. செங்கோட்டையன்,
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்.

Verified by Pedestal

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இந்தச் சட்ட முன் வடிவின் 1(4), 2, 3, 5, 6, 7, 8, 13, 14, 16, 19, 20, 22, 23, 24, 27, 29, 32, 34, 35, 36, 41, 43, 44, 47, 48, 49, 56, 57, 58 மற்றும் 60 ஆகிய கூறுகள் அறிவிக்கைகளை பிறப்பிப்பதற்கு அல்லது ஆணைகளை அல்லது விதிகளைச் செய்வதற்கு நேர்வுக்கேற்ப அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

ஒப்படைப்பு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

கே.ஏ. செங்கோட்டையன்,
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

Verified RealEstate ™

2018–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 34/2018

தமிழ்நாடு மாநிலத்தில் தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுவதை ஒழுங்குமுறைப்படுத்திட ஒரு சட்டமுன்வடிவு.

இந்திய அரசமைப்பின் 41–ஆம் உறுப்பின் மெய்க்கருத்திற்கு இணங்கியவாறு, குறைந்த செலவில் சட்டக்கல்வியை வழங்குவதற்கு ஏதுவாக, அரசானது மாநிலத்தில் படிப்படியாக போதிய எண்ணிக்கையிலான அரசு சட்டக் கல்லூரிகளை நிறுவுவதற்கு கொள்கை முடிவினை எடுத்திருப்பதாலும்;

மற்றும் தனியார் நபர்கள், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் பின்தங்கிய பிரிவினர்களுக்கு குறைந்த செலவில் சட்டக்கல்வியை அளிக்கமுடியவில்லை என்பதையும் மற்றும் அவர்களால் சட்டக்கல்லூரிகளை தொடர்ந்து நடத்த முடியவில்லை என்பதையும் கடந்தகால அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன என்பதாலும்;

மற்றும் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக்கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 13/2014) தனியார் நபர்கள் எவரும் சட்டக் கல்லூரிகள் நிறுவுவதையோ அல்லது சட்டப் பட்டங்களுக்கான, பட்டயங்களுக்கான அல்லது பல்கலைக்கழகத்தின் பிற கல்வி சிறப்பு சீர்மைகளுக்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்காக சட்டத்தில் பாடப்பிரிவு அல்லது பயிற்சி எதையும் அளிக்கின்ற ஒரு நிறுவனத்தை நிறுவுவதிலிருந்து தடைசெய்வதற்கு இயற்றப்பட்டதென்பதாலும்;

மற்றும் சென்னை உயர்நீதிமன்றமானது, தனியார் நபர்களால் சட்டக்கல்லூரிகளை நிறுவுவதை அறவே தடை செய்ய முடியாது என உத்தரவிட்டுள்ளதாலும்;

மற்றும் இந்திய வழக்குரைஞர் மன்றமானது, தனியார் சட்டக்கல்லூரிகள் தொடங்குவதற்கு வழங்கப்படும் தடையின்மைச் சான்றிதழின் எண்ணிக்கையை மூன்று ஆண்டுகளுக்கு தடைசெய்திடுமாறு அனைத்து மாநில அரசுகளையும் வேண்டி தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாலும்;

Verified RealEstate™

ஆகையால் தற்போது, அரசானது, தமிழ்நாட்டில் தனியார் நபர்களால் சட்டக்கல்லூரிகளை தொடங்குவதற்கு அனுமதி வழங்குவதற்கென சில நெறிமுறைகளை விதிப்பதன் வாயிலாக, தமிழ்நாட்டில் தனியார் நபர்கள் சட்டக்கல்லூரிகள் நிறுவுவதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு முடிவு செய்துள்ளது.

இந்தியக் குடியரசின் அறுபத்தொன்பதாவது ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டமானது, 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக்கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இந்தச் சட்டமானது, மாநில அரசின் அறிவிக்கையின் வாயிலாக குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(a) ''தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு'' என்பது சட்டக்கல்வி இயக்குநர் என்று பொருள்படும்;

(b) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(c) ''சட்டக் கல்லூரி'' என்பது சட்டப் பட்டங்களுக்காக, பட்டயங்களுக்காக அல்லது பல்கலைக்கழகத்தின் பிற கல்வி சிறப்பு சீர்மைகளுக்காக, தேர்வில் அனுமதிப்பதற்காக சட்டத்தில் பாடப்பிரிவு அல்லது பயிற்சி எதையும் அளிக்கின்ற ஒரு கல்லூரி அல்லது நிறுவனம் என்று பொருள்படும்;

(d) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது இந்தச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(e) ''தனியார் நபர்'' என்பது,–

(i) ஒரு நிறுமம் கூட்டிணைவாக இருப்பினும் அல்லது இல்லாதிருப்பினும்;

(ii) பதிவு செய்யப்பட்ட சங்கம்;

(iii) பதிவு செய்யப்பட்ட பொறுப்புக் கட்டளை என்று பொருள்படும்;

(f) ''பல்கலைக்கழகம்'' என்பது, 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகச்சட்டத்தின், 3–ஆம் பிரிவின்படி நிறுவப்பட்டுள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என்று பொருள்படும். தமிழ்நாடு சட்டம் 43/1997.

சட்டக்கல்லூரி நிறுவுதல்.

3. தனியார் நபர் எவரும், இந்தச் சட்டத்தின் தொடக்கம் அல்லது அதற்குப்பிந்தைய தேதியன்று அரசின் அனுமதியின்றி மற்றும் அத்தகைய அனுமதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் வரையறைகளின் படி இல்லாதிருப்பின் சட்டக்கல்லூரி நிறுவுதல் கூடாது.

4 (1) சட்டக்கல்லூரியை நிறுவிடக் கருதும் தனியார் நபர் ஒவ்வொருவரும் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பிப்பதற்கு முன்பு, தனியார் நபர் சட்டக்கல்லூரி நிறுவுவதற்கென ரூபாய் முப்பது இலட்சத்துக்கு அறக்கட்டளை நிதியை உருவாக்குதல் வேண்டும். அத்தொகையினை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் அல்லது இந்திய அரசின் அல்லது தமிழ்நாடு அரசின் நிறுவனத்தில் முதலீடு செய்தல் வேண்டும்.

(3) தனியார் நபர், தகுதிவாய்ந்த வருவாய் அதிகார அமைப்பிடமிருந்து, ஐந்து ஆண்டு காலத்திற்கு ரூபாய் இருபது இலட்சத்துக்கு வங்கி காப்புறுதியோ அல்லது மேற்சொன்ன தொகைக்கு கடன் தீர்வு திறச் சான்றிதழோ பெற்று முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

(4) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும்,–

(a) வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்;

(b) அதனுடன், அரசு கருவூலத்தில் ரூபாய் இருபத்தைந்தாயிரம் கட்டணம் செலுத்தியதற்கான செலுத்து சீட்டினை (திரும்பப்பெற முடியாத) இணைத்திருத்தல் வேண்டும்;

(c) பின்வரும் விவரங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும், அதாவது:–

(i) சட்டக்கல்லூரியின் பெயர்;

(ii) சட்டக்கல்லூரியால் வழங்கப்படவுள்ள பட்டங்கள் மற்றும் பாடப்பிரிவுகள் அத்தகைய பட்டத்தை வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு ஆயத்தப்படுத்துதல், கற்பித்தல் அல்லது வழிகாட்டுதல்;

(iii) மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அல்லது ஏற்படுத்த திட்டமிட்டுள்ள வசதிகள்;

(iv) கற்பித்தலுக்கான நூலகம், மாதிரி நீதிமன்றம் மற்றும் பிற வசதிகள்;

(v) ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் அனுமதிக்கப்படவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை;

(vi) நிறுவிடக் கருதப்படும் சட்டக்கல்லூரி அமையவுள்ள கட்டடங்களின் நிலை மற்றும் விவரங்கள்;

(d) வரையறுக்கப்படலாகும், அத்தகைய பிற விவரங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

5 (1) 4–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படியிலான விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதன் பேரில், தகுதிவாய்ந்த அதிகார அமைப்பானது, விவரங்களை சரிபார்த்தல் வேண்டும் மற்றும் அவசியமெனக் கருதும் அத்தகைய விசாரணையை மேற்கொண்ட பின்பு, அனுமதி வழங்குவதற்கான அவரது பரிந்துரைகளுடன் அவ்விண்ணப்பத்தை அரசுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அரசானது, விண்ணப்பத்தில் காணப்படுகின்ற விவரங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு, இந்திய வழக்குரைஞர் மன்றம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள விதிகள், வழிகாட்டு முறைகள், அறிவுறுத்தல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்து, சட்டக்கல்லூரி நிறுவுவதற்கான அனுமதியினை வழங்கிடலாம் அல்லது வழங்கிட மறுக்கலாம்;

வரம்புரையாக, விண்ணப்பதாரருக்கு அவருடைய வாதங்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பினை அளிக்காமல் இப்பிரிவின் கீழ் அனுமதி மறுத்தல் ஆகாது.

Verified RealEstate ™

(2) ஏற்கனவே அரசால் சட்டக்கல்லூரி நிறுவப்பட்டுள்ள மாவட்டங்களில் (1)–ஆம் உட்பிரிவின்படி சட்டக்கல்லூரி நிறுவுவதற்கு நபர் எவருக்கும் அனுமதி வழங்குதல் ஆகாது.

(3) சட்டக்கல்லூரி நிறுவுவதற்கென (1)–ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட அனுமதியை பெற்றுக் கொண்டதன் பேரில், தனியார் நபர், தொடர்புடைய சட்டங்களின்படி தேவையான அனுமதி அல்லது இணைப்பிற்காக, பல்கலைக்கழகம் மற்றும் பிற உரிய அதிகார அமைப்புகளுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(4) அப்போதைக்கு செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதிலுமோ அல்லது தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது நீதிமன்ற ஆணை எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், அரசிடம் தடையின்மைச் சான்று கோரியோ அல்லது பல்கலைக்கழத்திடம் இணைவு கோரி விண்ணப்பித்துள்ள ஒவ்வொரு தனியார் நபரின் விண்ணப்பம், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நாளன்று அரசு அல்லது பல்கலைக்கழத்திடம் நிலுவையிலிருப்பினும், இச்சட்டத்தின் வகையங்களின்படி அனுமதி வேண்டி விண்ணப்பிக்க வேண்டும்.

6. இந்தச் சட்டங்களின் வகையங்களானது, கூடுதலாக இருக்குமேயன்றி, அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டத்தின் வகையங்களை மதிப்புக்குறைவு செய்தலாகாது.

விதிகளை இயற்றுவதற்கான அதிகாரம்.

7 (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதையும் நிறைவேற்றுவதற்கு அறிவிக்கையின் வாயிலாக விதிகளை இயற்றலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகள் அனைத்தும் *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்ட தேதியில் நடைமுறைக்கு வர வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாலன்றி, எந்த தேதியில் அவை வெளியிடப்பட்டதோ அந்த தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகள் ஒவ்வொன்றையும், கூடிய விரைவில் அது இயற்றப்பட்ட பின்பு சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடர் முடிவதற்கு முன்பு அல்லது அடுத்தக் கூட்டத் தொடரில், சட்ட மன்றமானது அத்தகைய விதி எதிலும் மாற்றமைவு எதையும் செய்யுமானால் அல்லது சட்ட மன்றமானது விதியை செய்யக் கூடாது என முடிவு செய்யுமானால், அதன் பின்பு அவ்விதியானது அத்தகைய மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது நேர்விற்கேற்ப செல்திறம் இல்லாது போகும். எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது கழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/2014

நீக்கறவு.

8. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக்கல்லூரிகள் நிறுவுதல் (தடைசெய்தல்) சட்டமானது ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

நோக்கக் காரண விளக்கவுரை

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக்கல்லூரிகள் நிறுவுதல் (தடைசெய்தல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 13/2014) பல்கலைக்கழகத்தின் சட்டப் பட்டங்களுக்கான அல்லது பட்டயங்களுக்கான அல்லது பிற கல்வி சிறப்பு சீர்மைகளுக்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்காக சட்டத்தில் பாடத்தை பயில அல்லது பயிற்சி அளிக்கும் சட்டக்கல்லூரியை அல்லது நிறுவனம் எதையும் தனியார் நபர்கள் நிறுவுவதிலிருந்து தடை செய்யும் பொருட்டு இயற்றப்பட்டது.

2. நீதிப்பேராணை மனு எண். 29536/2014–இல் சென்னை உயர்நீதிமன்றத்தின் 26–10–2016 நாளிட்ட ஆணையின்படி, தனியார் நபர்களால் சட்டக்கல்லூரிகளை தொடங்குவதற்கு முழுமையாக தடை செய்ய முடியாது என உத்தரவிட்டுள்ளதால், அரசானது, தனியார் சட்டக்கல்லூரிகளை தொடங்குவதற்கு முழுமையாக தடை செய்வதற்கு பதிலாக, மாநிலத்தில் தனியார் சட்டக்கல்லூரிகள் நிறுவுவதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு புதிய சட்டமொன்றை இயற்றுவதற்கு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

சி.வி. சண்முகம்,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

Verified RealEstate™

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இச்சட்டமுன்வடிவின் 1(2), 4(4)(a), 4(4)(d) மற்றும் 7(1) ஆகிய கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நேர்விற்கேற்ப அறிவிக்கைகளை அல்லது விதிகளை இயற்றுவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

சி.வி. சண்முகம்,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

Verified RealEstate TM

2018—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2018

கல்வி மற்றும் தொடர்புடையவற்றின் வளர்ச்சித் துறைகளுக்காக முனைப்பான தலைமை, ஆராய்ச்சி, அனுபவ அறிவு மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றின் வளர்ச்சியின் மூலமாக விதிமுறை மாற்றம் ஒன்றை வளர்த்து, பொதுவியல் கோட்பாட்டை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டுவரும் பொருட்டு, தனியார் துறையில் எஸ்.எஸ்.என் பொறுப்புக் கட்டளையின் மூலமாக ஒரு சீர் தன்மையிலான பல்கலைக்கழகமொன்றை தமிழ்நாடு மாநிலத்தில் உருவாக்கி, நிறுவி அமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக்குடியரசின் அறுபத்தொன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச்சட்டத்தில், தருவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,—

(a) ''கல்வி மன்றம்'' என்பது, 22 ஆம் பிரிவின் படி அமைத்துருவாக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்வி மன்றம் என்று பொருள்படும்;

(b) ''வேந்தர்'', ''துணை வேந்தர்'' மற்றும் ''இணை—துணை வேந்தர்' என்பது, முறையே பல்கலைக்கழகத்தின் வேந்தர், துணை வேந்தர் மற்றும் இணை— துணை வேந்தர் என்று பொருள்படும்;

(c) ''முதன்மையர்கள் மற்றும் இயக்குநர்கள்'' என்பது, துறையின் அல்லது ஒரு நிறுவனத்தின், ஒரு மையத்தின் அல்லது ஒரு பள்ளியின் தலைமை அல்லது அவர் வராமையால் அத்தகைய செயலுக்கான நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட அந்த நபர் என்று பொருள்படும்;

Verified RealEstate ™

(d) ‘‘துறை’’ என்பது, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்தின், கல்வி பயிலும் துறைகள் என்று பொருள்படும்;

(e) ‘‘பணியாளர்’’ என்பது, பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் அல்லது பல்கலைக்கழகத்தின் பணியாளரின் பிற உறுப்பினர் எவரும் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்தினால் அமர்த்தப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(f) ‘‘செயலாட்சி மன்றம்’’ என்பது, 21 ஆம் பிரிவின் படி அமைத்துருவாக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் செயலாட்சி மன்றம் என்று பொருள்படும்;

(g) ‘‘புலம்’’ என்பது, பல்கலைக்கழகத்தின் புலம் என்று பொருள்படும்;

(h) ‘‘நிர்வாக ஆட்சி மன்றம்’’ என்பது, 20 ஆம் பிரிவின் படி அமைத்துருவாக்கப்பட்ட நிர்வாக ஆட்சி மன்றம் என்று பொருள்படும்;

(i) ‘‘அரசு’’ என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(j) ‘‘மாணவர் விடுதி’’ என்பது, இப்பல்கலைக்கழகத்தால் பேணிவரப்பட்டு அல்லது ஏற்பிசைவு அளிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் தங்கியிருப்பதற்கான ஓர் இடம் என்பது பொருள்படும்;

(k) ‘‘கல்வி நிலையம்’’ என்பது, இந்தச் சட்டத்திற்கிணங்க மற்றும் நிலையமை விதிகள் மூலம் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்ட அல்லது பணிவரப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது மூலப் பகுதியாயுள்ள ஒரு கல்லூரி அல்லது ஒரு கல்வி நிலையம் என்பது பொருள்படும்;

(l) ‘‘மேலாண்மைக்குழு’’ என்பது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக பொறுப்புக்கட்டளையால் அமைத்துருவாக்கப்பட்ட குழு என்று பொருள்படும்;

(m) ‘‘வகுத்துரைக்கப்பட்ட’’ என்பது, நிலையமை விதிகளால் மற்றும் அவசர விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(n) ‘‘பதிவுருக்கள் மற்றும் வெளியீடு’’ என்பது, பல்கலைக்கழகத்தினுடைய பதிவுருக்கள் மற்றும் வெளியீடு என்று பொருள்படும்;

(o) ‘‘பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர்’’ என்பது, முறையே பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர் என்று பொருள்படும்;

(p) ‘‘நிலையமை விதிகள் மற்றும் அவசர விதிகள்’’ என்பது, முறையே பல்கலைக்கழகத்தினுடைய நிலையமை விதிகள் மற்றும் அவசர விதிகள் என்று பொருள்படும்;

(q) ‘‘மாணவர்’’ என்பது, பல்கலைக்கழகத்தினுடைய பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்ட ஒரு மாணவர் என்று பொருள்படும்;

(r) ‘‘பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள்’’ என்பது, இதன் பொருட்டு வழங்கப்பட்ட அறிவுரையின் பேரில் பல்கலைக்கழகத்தால் அமர்த்தப்பட்ட நபர்கள் என்று பொருள்படும்;

(s) ‘‘பொறுப்புக்கட்டளை’’ என்பது, 1882 ஆம் ஆண்டு இந்திய பொறுப்புக்கட்டளைகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட எஸ்.எஸ்.என். பொறுப்புக்கட்டளை என்று பொருள்படும்; மையச் சட்டம் 2/1882.

(t) ‘‘பல்கலைக்கழகம்’’ என்பது, 3 ஆம் பிரிவின் படி நிறுவப்பட்ட சிவ் நாடார் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்;

பல்கலைக்– கழகத்தை நிறுவுதல்.

3. (1) காலவாக்கத்தில் அதன் முதன்மை இடத்தில் சிவ் நாடார் பல்கலைக்கழகம் என்ற பெயரிலான பொறுப்புக்கட்டளையின் மூலமாக பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

VerifiedRealEstate™

(2) இந்தப் பல்கலைக்கழகம், ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும், தொடர்ந்த நிலைப்பாடும் தனித்த ஓர் இலச்சினையும் கொண்டு இருத்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன பெயரில் தான் வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்த வகையாக இருத்தல் வேண்டும்.

(4) பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் மற்றும் பிற தேசிய ஏற்பளிக்கப்பட்ட அமைப்புகளின் கொள்கை நெறிகளுக்கு உட்பட்டு தான் பொருத்தமெனக் கருதலாகிறவாறு மாநிலத்தில் அத்தகைய இடங்களில் உறுப்பமை கல்லூரிகள், மண்டல மையங்கள், கூடுதல் கல்வி வளாகப் பணிகள் மற்றும் கல்வி மையங்கள் ஆகியவற்றை நிறுவலாம்.

பல்கலைக்–கழகத்தினை நிறுவுவதற்கான நிபந்தனைகள்.

4. இந்தச் சட்டத்தின்படி, பல்கலைக்கழகத்தினை நிறுவப்படுவதன் நோக்கமானது, பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற பொறுப்புக்கட்டளையாக இருத்தல் வேண்டும் அவையாவன:—

(a) பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட ஒரு நூறு ஏக்கருக்கு குறையாத நிலத்தை ஒட்டி உள்ளதை உரிமையைக் கொள்ளுவது;

(b) கூற்று (a)–வில் குறிப்பிடப்பட்ட நிலத்தின் மீதான கட்டமைப்பு, கட்டிடங்கள் மற்றும் உள்கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் அலுவலகங்களின் மற்றும் ஆய்வுக்கூடங்களின் தேவையான சாதனங்கள் நிறுவுவது ஆகியவை பல்கலைக்கழக மானிய குழு மற்றும் பிற சட்டமுறை அதிகார அமைப்பினால் விதிக்கப்பட்டுள்ள தரங்களின்படி இருத்தல்;

(c) பல்கலைக்கழக மானிய குழுவினால் விதிக்கப்பட்ட தரங்களின்படி கற்பிக்கும் நோக்கத்திற்காக ஆசிரியர்களை அமர்த்துவது;

(d) அந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு முன்னர், அரசால் வேண்டுறுத்தப்படலாகும் அத்தகைய பிற நிபந்தனைகளை நிறைவேற்றப்படுவது;

பல்கலைக்–கழகத்தின் தொடக்கம்.

5. (1) பல்கலைக்கழகம், இதன் பொருட்டு அரசு, அறிவிக்கையின்வாயிலாக குறித்துரைக்கலாகும் அத்தகைய தேதியில் அதன் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு தொடங்குதல் வேண்டும்.

(2) அரசானது 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன என்றபடிக்கு பொறுப்புக்கட்டளையிடமிருந்து பெறப்படும் ஆவணங்களுடன் சேர்த்து ஆணை மொழி ஆவணம் ஒன்று பெறப்பட்ட பின்பும் மற்றும் இதன் பொருட்டு அரசு மனநிறைவு அடைந்த பின்னர் மட்டும் (1) ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கை ஒன்று வழங்குதல் வேண்டும்.

மானியங்கள் மற்றும் நிதி உதவி.

6. பல்கலைக்கழகம் சுயநிதி பல்கலைக்கழகமாக இருத்தல் வேண்டும் மற்றும் அரசிடமிருந்து, கோரிக்கை ஒன்று எதுவும் செய்வதற்கோ பேணுதல், பணித்துறை உதவித்தொகை அல்லது பிற நிதி உதவி எதற்குமோ உரிமைக் கொண்டது ஆகாது :

வரம்புரை ஆனால், பல்கலைக்கழகத்தை, ஆராய்ச்சி திட்டங்களுக்காக அல்லது பிறவற்றின் மூலம் எதிலிருந்தும் நிதிமானியங்கள் அல்லது நிதி ஆதரவை சட்டப்படி வழங்கலாகும் அல்லது, சட்டப்படி வழங்கலாகாத கல்விசார் திட்டங்கள் பிற எதற்காகவும் விண்ணப்பிப்பதிலிருந்து தடைசெய்தல் ஆகாது.

பல்கலைக்–கழகத்தின் நோக்கங்கள்.

7. பல்கலைக்கழகத்தின் நோக்கமானது பல்கலைக்கழகம் தான் பொருத்தமென கருதலாகும் அத்தகைய கற்பிக்கும் பிரிவுகளில் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் வசதிகளை நீட்டிப்பதற்கு வகை செய்வதற்கு முன் அறிவு மற்றும் திறமை ஆகியவற்றுடனும் இருத்தல் வேண்டும் மற்றும் கீழ்கண்டவைகளின் வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலை மற்றும் வசதிகளை மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு பெருமுயற்சி எடுத்தல் வேண்டும் :–

Verified @ RealEstate™

(a) பாடத்திட்டத்தை மீண்டும் அமைப்பதற்காக வழிகாட்டுகின்ற கல்வியில் கல்வி கற்பிப்பதற்கான புதிய முறைகளில் பயிற்சி மற்றும் இணையவழியில் கற்றுணர்தல், கலந்து கற்றுணர்தல் தொடர்கல்வி மற்றும் அத்தகைய பிற முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த மற்றும் ஆளுமை நலம் தருகின்ற வளர்ச்சி உள்ளடங்கலான கல்வி;

(b) பல்வகையான பாடப்பிரிவுகளில் படிப்புகள்,

(c) பல துறைகளில் படிப்புகள்;

(d) தேசிய ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை, சமூக நேர்மை நெறி மற்றும் பொறியியலில் பன்னாட்டு உடன்பாடு மற்றும் ஒழுக்கவியல்;

பல்கலைக் கழகத்தின் அதிகாரங்கள்.

8. பல்கலைக்கழகம், பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்:—

(a) பல்கலைக்கழகம், அப்போதைக்கப்போது தீர்மானிக்கலாகும், அத்தகைய கல்வி பிரிவுகளில் பயிற்சியளிப்பதற்கான வகைசெய்வதற்கு மற்றும் ஆராய்ச்சிக்காக மற்றும் மேம்பாட்டிற்காக மற்றும் எங்கும் பரப்புவதற்கும் வகைசெய்வதற்கு மற்றும் அறிவையும் திறனையும் பயன்படுத்தவும் செய்வதற்கு;

(b) கலைகள் மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மேலாண்மை, சட்டம், மருத்துவம் மற்றும் தொடர்பான அறிவியல் பாடப்பிரிவுகளும் மற்றும் கல்விவளாகப்பணி, மறைவளாகப் பணியின் மூலமாக பிற தொழில் முறையான படிப்புகள் ஆகியவற்றை கற்பதற்கு, பங்களிப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு;

(c) கல்வி வல்லுநர்கள் மற்றும் பேராசிய மாண்பமையை அணி செய்வதனுடனான கல்விசார் மேம்பாட்டிற்கான நபர்கள் ஆகியோரின் நன்மதிப்பிற்கு;

(d) பல்கலைக்கழகம் தீர்மானிக்கலாகும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு தேர்வுகளின் அடிப்படையில் பட்டயங்கள் அல்லது சான்றிதழ்களுக்கு மற்றும் பட்டங்கள் அளிப்பதற்கு அல்லது பொருத்தமான மற்றும் போதிய காரணத்திற்காக இதர கல்வி சிறப்புப்பட்டங்கள், சான்றிதழ்கள், பட்டயங்கள், வழங்குவதற்கு மற்றும் அத்தகைய பட்டங்கள், சான்றிதழ்கள், பட்டயங்கள் அல்லது பிறகல்விச் சிறப்புகள் ஆகியவற்றை திரும்ப பெறுவதற்கு;

(e) வகுத்துரைக்கப்பட்ட முறையில் கௌரவ பட்டங்களையோ அல்லது பிற சிறப்புகளையோ வழங்குவதற்கு;

(f) தான், பொருத்தமென தீர்மானிக்கலாகும் பல்கலைக்கழகத்தின் உறுப்பினராகயில்லாத அத்தகைய நபர்களுக்கு கல்வி மற்றும் அஞ்சல் வழி உள்ளடங்கலான பயிற்சி வழங்குவதற்கு;

(g) இயக்குநர் பதவிகள், பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிறப்புப் பேராசிரியர் பதவிகள், உதவிப் பேராசிரியர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் பல்கலைக்கழகத்தால் வேண்டுறுத்தப்பட்ட பிற ஆசிரியர்கள் அல்லது கல்விசார் பதவிகள் மற்றும் அது போன்ற அமர்த்தங்களைச் செய்வதற்கு;

(h) நிருவாகம், அமைச்சகம் மற்றும் பிற பதவிகளை உருவாக்குவதற்கு மற்றும் அதற்கான அமர்த்தங்களைச் செய்வதற்கு;

(i) நிரந்தரமாகவோ அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு கால அளவிற்காகவோ பிற பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் எதிலும் சிறப்பாக பணிபுரிகின்ற நபர்களை அமர்த்துவதற்கு அல்லது ஈடுபடுத்துவதற்கு;

(j) பல்கலைக்கழகம் தீர்மானிக்கலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய நோக்கத்திற்காக இந்தியாவில் மற்றும் வெளிநாட்டில் பல்கலைக்கழகம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் எதனையும் பிற எதனுடனும் ஒத்துச் செயலாற்ற, உடனுழைக்க அல்லது பங்குகொள்வதற்கு;

Verified RealEstate ™

(k) அதன் மேலுமான நோக்கத்திற்கு தேவையானதை பல்கலைக்கழகத்தின் கருத்துரையில் பள்ளிகள், மையங்கள், தனி சிறப்பு பெற்ற ஆய்வுக் கூடங்கள் அல்லது ஆராய்ச்சிக்கான பிற அலகுகள் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றை நிறுவுவதற்கு மற்றும் மேலாண்மை செய்வதற்கு;

(l) பட்டதாரி உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவர் உதவித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்தி வழங்குவதற்கு;

(m) பல்கலைக்கழகத்திற்குள் உள்ள குடியிருப்புகள், மாணவர் விடுதிகள் ஆகியவற்றை நிறுவி மற்றும் பேணி மற்றும் மேற்பார்வையிடுவதற்கும் மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் உடல் நலன் மற்றும் பொது நலன், நடவடிக்கை ஆகியவற்றை வளர்ப்பதற்கு;

(n) ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வு செய்வதற்காக மற்றும் அந்த நோக்கத்திற்காக பல்கலைக்கழகம் தேவையெனக் கருதலாகும் பிற நிறுவனங்கள் அல்லது குழுமங்களுடன் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்வதற்கான வகை முறைகளைச் செய்வதற்கு;

(o) நிலை விதிகளுக்கு இணங்க, ஒரு மையம், ஒரு நிறுவனம், ஒரு துறை அல்லது, நேர்விற்கேற்ப, பள்ளி ஆகியவற்றை விளம்புகை செய்வதற்கு;

(p) தேர்வு, மதிப்பாய்வு அல்லது சோதனை முறை பிற எதுவும் உள்ளடங்கலான பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கைக்கான தரங்களைத் தீர்மானிப்பதற்கு;

(q) கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளின் செலுத்தத்தை கோரிப் பெறுதலை வகுத்துரைப்பதற்கு;

(r) குடியிருப்பு, ஒழுங்குமுறை மற்றும் பெண்களுக்கான கற்பித்தல் மற்றும் பல்கலைக்கழகம் தான் பொருத்தமெனக் கருதலாகும் பிற குறைபாடுடைய மாணவர்கள் பொறுத்து, அத்தகைய ஏற்பாடுகளை செய்வதற்கு;

(s) பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே ஒழுங்குமுறையை நெறிப்படுத்துவதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு மற்றும் பல்கலைக்கழகத்தால் இதன் பொருட்டு தேவையெனக் கருதலாகும், அத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு;

(t) பல்கலைக்கழகத்தின் பணியாளர்களின் உடல் நலம் மற்றும் பொது நலத்தின் வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்வதற்கு;

(u) பல்கலைக்கழகத்தின் நலத்திற்காக நன்கொடைகளைப் பெறுவதற்கு மற்றும் விற்பனை அல்லது குத்தகை அல்லது அசையும் அல்லது அசையா சொத்து எதனின் வாடகை ஆகியவற்றின் மூலம் பெறுவதற்கு, வைத்து வருவதற்கு, மேலாண்மை செய்வதற்கு மற்றும் தீர்வு செய்வதற்கு;

(v) பொறுப்புக் கட்டளையின் ஒப்புதலுடன் பல்கலைக்கழகத்தின் சொத்திற்கு எதிரான ஒற்றி அல்லது அடமானம் ஆகியவற்றின் மூலமாக கடன் வாங்குவதற்கு;

(w) ஒப்பந்தத்தின் பேரிலோ அல்லது பிறவாறான பார்வையிடும் பேராசிரியர்கள், தகைசால் பேராசிரியர்கள், கலந்துரையாளர்கள், புத்தாய்வு மாணவர்கள், வல்லுநர்கள், ஓவியர்கள், பாடத்திட்டத்தை எழுதுபவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை உயர்த்துவதற்கு பங்கு கொள்ளும் அத்தகைய பிற நபர்களை அமர்த்துவற்கு;

(x) மிகைப்படியான சுவரோவிய கல்விகள் மற்றும் களப்பணி ஆகியவற்றை ஏற்பாடு செய்வதற்கு மற்றும் ஏற்றுக்கொள்வதற்கு;

Verified @ RealEstate ™

(y) பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் அடைவதற்கு இடைவிளைவாக, எழுதுகின்ற அல்லது இணக்கமானதற்கு உகந்ததாய் இருக்கலாகும், அத்தகைய பிற செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்தையும் செய்வதற்கு.

சேர்க்கை மற்றும் படிநிலைகள்.

9. (1) பல்கலைக்கழகமானது, இந்தச்சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, பல்கலைக்கழக மானியக்குழுவின் மற்றும் தேர்வுக்கேற்ப பிறசட்டப்படி அமைந்த அதிகார அமைப்பு எதனின் தொடர்புடைய நிலையமை மற்றும் ஒழுங்குமுறை விதிகள், அனைத்து நபர்களுக்கும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு **(1)**–இல் அடங்கியுள்ள எதுவும் பல்கலைக்கழகத்தைக் கோருதல் கூடாது,—

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியை அல்லது தரத்தைப் பெற்றிருக்காத நபர் எவரையும் படிப்பு பிரிவு எதிலும் சேர்க்குமாறு;

(b) பட்டம் அல்லது பிற கல்விசார் சிறப்புகள் வழங்குவதற்கு தேவையான குறைந்த அளவு தரத்திற்கும் கீழே இருக்கின்ற கல்விசார் பதிவேட்டில் மாணவர் எவரையும் பல்கலைக்கழக பட்டியலில் வைத்திருக்குமாறு; அல்லது

(c) பல்கலைக்கழகத்தின் உரித்தத்திற்கு அல்லது பிற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் மாணவர் எவரையும் சேர்க்குமாறு அல்லது வைத்திருக்குமாறு;

(3) உட்பிரிவு **(1)** மற்றும் **(2)** ஆம் வகைமுறைகளுக்கு உட்பட்டு, வகுத்துரைக்கும் பல்கலைக்கழகத்தின் நிலையான சேர்க்கை முறைப்படி பல்கலைக்கழகம், தமிழ்நாடு மாணவர்கள் தங்குமிடத்திற்காக பாடத்திட்டக் கல்வி ஒவ்வொன்றிலும், முப்பத்தைந்து விழுக்காடு இடங்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

(4) மாணவர்களின் சேர்க்கைக்கு **(3)** ஆம் உட்பிரிவின்படி தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் முப்பத்தைந்து விழுக்காட்டை நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் படி இடஒதுக்கீட்டினை செய்தல் வேண்டும்.

விளக்கம் : இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக "தமிழ்நாடு மாணவர் தங்குமிடம்'' என்பது,—

(i) முந்தைய தகுதிபெறு தேர்வில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு கால அளவிற்கு தமிழ்நாடு மாநிலத்தில் தங்கியிருந்த மாணவர் ஒருவரோ அல்லது அவருடைய பெற்றோர்களோ

(ii) தகுதி பொதுத் தேர்வுக்கு முன் செல்கிற ஐந்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு கால அளவிற்கு தமிழ்நாடு மாநிலத்தில் கல்வி நிறுவனங்கள் ஏதொன்றிலும் படித்த ஒரு மாணவர் என்று பொருள்படும்.

பல்கலைக் கழகத்தின் அலுவலர்கள்.

10. இப்பல்கலைக்கழகம் பின்வரும் அலுவலர்களை கொண்டிருக்கும், அதாவது :—

(a) வேந்தர்;

(b) துணை வேந்தர்;

(c) இணை – துணை வேந்தர்;

(d) பதிவாளர்;

(e) முதன்மையர்கள் மற்றும் இயக்குநர்கள்;

(f) நிதி அலுவலர்;

(g) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்; மற்றும்

Verified by RealEstate

(h) இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்களுக்கென நிலையமை விதிகளால் விளம்பப்படக்கூடிய பிற அலுவலர்.

11. (1) வேந்தர், வகுத்துரைக்கும் மூன்றாண்டுகால அளவு ஒன்றிற்கு பொறுப்புக் கட்டளையின் மேலாண்மைக் குழுவால் அமர்த்தப்படுதல் வேண்டும். வேந்தர்.

(2) வேந்தர், அவர் தமது பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழகத்தின் தலைவராக இருப்பார் மற்றும் ஒரு இடைக்கால செயலாட்சி மன்றம் ஒன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும். அவ்வாறு அமைத்துருவாக்கப்பட்ட இடைக்கால செயலாட்சி மன்றமானது, 21ஆம் பிரிவின்படி செயலாட்சி மன்றம் அமைக்கப் பெறும்போது இல்லாது போகும்.

(3) வேந்தர், தம் பதவி விலகலை முகவரியிட்டு தாம் கையொப்பமிட்டு எழுத்துவாயிலாக பொறுப்புக் கட்டளை அல்லது மேலாண்மைக் குழுவிற்கு அனுப்பலாம்.

12. (1) துணை வேந்தர், மூன்றாண்டுகால அளவு ஒன்றிற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வேந்தரால் அமர்த்தப்படுதல் வேண்டும். துணை வேந்தர்.

(2) துணை வேந்தர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் மற்றும் அத்தகைய பிற செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

13. (1) இணை – துணை வேந்தர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் செயலாட்சி மன்றத்தால் அமர்த்தப்படுதல் வேண்டும். இணை –துணை வேந்தர்.

(2) இணை – துணைவேந்தர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் மற்றும் அத்தகைய பிற செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

14. (1) பதிவாளர், பல்கலைக்கழகத்தின் சம்பளம் பெறும் முழு நேர அலுவலராக இருத்தல் வேண்டும். பணிவரையறைகள் மற்றும் பணிவரைக்கட்டுகள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும். பதிவாளர்.

(2) பதிவாளராக பதவி வகிப்பவர் பல்கலைக்கழகத்தின் மானியக்குழுவினால் வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பதிவாளர், பல்கலைக்கழகத்தின் சார்பாக உடன்படிக்கைகளும் கையெழுத்திட்ட ஆவணங்கள், உறுதியொப்பம் இடப்பட்ட பதிவுருக்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கு அதிகாரம் கொண்டிருப்பார் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பிற செயற்பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) பதிவாளர், செயலாட்சி மன்றம் மற்றும் கல்வி அலுவல் குழு ஆகியவற்றின் பதவி வழிச் செயலாளராக இருந்து வருவார்.

15. முதன்மையர் மற்றும் இயக்குநர் ஒவ்வொருவரும், அத்தகைய முறையில் அமர்த்தப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய கடமைகளை ஆற்றுதலும் வேண்டும். முதன்மையர்கள் மற்றும் இயக்குநர்கள்.

16. (1) நிதி அலுவலர், அத்தகைய முறையில் அமர்த்தப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும். நிதி அலுவலர்.

(2) நிதி அலுவலர், நிதிக்குழுவின் பதவி வழிச் செயலராக இருத்தல் வேண்டும்.

Verified RealEstate ™

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

17. (1) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவுக்கும் அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும், அமர்த்தப்படும் இப்பல்கலைக்கழகத்தின் ஒரு முழு நேர அலுவலராக இருப்பார்.

(2) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

பிற அலுவலர்கள்

18. பல்கலைக்கழகத்தின் பிற அலுவலர்களைப் பணியமர்த்தும் முறையும் அவர்களுக்குள்ள அதிகாரங்களும் கடமைகளும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புகள்.

19. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் பின்வருவனவாகும் ––

(a) நிர்வாக ஆட்சி மன்றம்;

(b) செயலாட்சி மன்றம்;

(c) கல்வி மன்றம்;

(d) நிதிக்குழு;

(e) திட்டவாரியம்;

(f) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகளென நிலையமை விதிகளினால் விளம்புகை செய்யப்படலாகும் அத்தகைய பிற அதிகார அமைப்புகள்.

நிர்வாக ஆட்சி மன்றம்

20. (1) நிர்வாக ஆட்சி மன்றத்தின் அமைப்பும் அதன் உறுப்பினர்களின் பதவிக்காலமும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, நிர்வாக ஆட்சி மன்றம், பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் உடையது ஆகும், அவையாவன:—

(a) அவ்வப்போது, பல்கலைக்கழகத்தின் விரிவான கொள்கைகளையும் செயல்முறை திட்டங்களையும் ஆய்வு செய்து பல்கலைக்கழகத்தின் செயற்பணி, மேம்பாடு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்கான நடவடிக்கைகளை அறிவுறுத்துதல்;

(b) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் மற்றும் அத்தகைய கணக்குகள் பற்றிய ஆண்டறிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றின் மீது தீர்மானங்கள் நிறைவேற்றுதல்;

(c) ஆலோசனைக்காக அதற்கு குறித்தனுப்பப்படும் பொருட்பாடு எதனையும் பொறுத்து வேந்தருக்கு ஆலோசனை வழங்குதல்;

(d) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளைப்புரிதல்.

செயலாட்சி மன்றம்.

21. (1) செயலாட்சி மன்றமானது, பல்கலைக்கழகத்தின் முதன்மை செயலாட்சி அமைப்பாகும்.

(2) செயலாட்சி மன்றம், பத்துக்கு மேற்படாத உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும், அவர்களில் இரண்டு உறுப்பினர்கள், --

(a) உயர்கல்வித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்– பதவி வழி உறுப்பினர்;

(b) கல்லூரிக்கல்வி இயக்குநர்– பதவி வழி உறுப்பினர் ஆவார்.

Verified @ RealEstate™

(3) செயலாட்சிமன்றத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும், வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

22. (1) கல்விமன்றமானது, பல்கலைக்கழகத்தின் முதன்மைக் கல்வி அமைப்பாகும் மற்றும் நிலையமை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, அவசர விதிகளும் பொருந்தத்தக்க ஒழுங்குமுறை விதிகளும், பல்கலைக்கழகத்தின் கல்விக் கொள்கைகள் மீது பொதுவான கண்காணிப்பைச் செலுத்துதல் வேண்டும். கல்வி மன்றம்.

(2) கல்வி மன்றத்தின் அமைப்பும் அதன் உறுப்பினர்களின் பதவிக் காலமும் அதன் அதிகாரங்களும் செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

23. (1) நிதிக்குழுவானது, பல்கலைக்கழகத்தின் நிதியியல் பொருட்பாடுகளைக் கவனித்துக் கொள்வதற்கான அதன் முதன்மை நிதியியல் அமைப்பாகும். நிதிக்குழு.

(2) நிதிக்குழுவின் அமைப்பு அதன் உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும், வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

24. (1) திட்ட வாரியமானது, பல்கலைக்கழகத்தின் முதன்மை திட்ட அமைப்பாகும். திட்ட வாரியம், உள்கட்டமைப்பும் கல்வி ஆதார செயல்திட்டமும் பொருந்தத்தக்க சட்டமுறை அதிகார அமைப்புகளின் நியதிகளை நிறைவு செய்கிறது என்பதை உறுதி செய்தல் வேண்டும். திட்ட வாரியம்.

(2) திட்ட வாரியத்தின் அமைப்பும், அதன் உறுப்பினர்களின் பதவிக்காலமும் அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

25. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளென நிலையமை விதிகளினால் விளம்புகை செய்யப்படலாகும், பல்கலைக்கழகத்தின் புலங்கள், மாணவர் சேர்ப்புக்குழு, தேர்வுக் குழு மற்றும் அத்தகைய பிற அதிகார அமைப்புகளின் அமைப்பும் அவற்றின் அதிகாரங்களை மற்றும் செயற்பணிகளை, வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும். பல்கலைக் கழகத்தின் புலங்கள், மாணவர் சேர்ப்புக்குழு, தேர்வுக் குழு மற்றும் பிற அதிகார அமைப்புகள்.

26. (1) மேலாண்மைக்குழுவின் ஒப்பேற்பளிப்புக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிருவாகக்குழு நிலையமை விதிகளை வகுத்தல் வேண்டும். நிலையமை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, நிலையமை விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன :—

(a) அவ்வப்போது அமைக்கப்படும், பல்கலைக்கழக அதிகார அமைப்புகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்;

(b) மேற்சொன்ன அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களின் நியமனம் மற்றும் பதவியில் தொடர்ந்து இருந்துவருதல், காலியிடங்களை நிரப்புதல் மற்றும் வகை செய்வதற்குத் தேவைப்படலாகும் அந்த அதிகார அமைப்புகள் தொடர்பான பிற பொருட்பாடுகள் அனைத்தும்;

(c) பல்கலைக்கழகத்தின் அலுவலர்களின் பணியமர்த்தம், அதிகாரங்கள் மற்றும் கடமைகள் மற்றும் அவர்களுக்குள்ள பணியூதியங்கள்;

(d) பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பிற கல்விசார் மற்றும் நிருவாகப் பணியாளர் தொகுதியினர் ஆகியோரைப் பணியமர்த்துதல் மற்றும் அவர்களுக்குள்ள பணியூதியங்கள்;

(e) கூட்டுசெயல்திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக குறிப்பிட்டக் கால அளவுக்கு, பல்கலைக்கழகத்திலோ அல்லது நிறுவனத்திலோ பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வி மற்றும் நிருவாகப் பணியாளர் தொகுதியினரைப் பணியமர்த்துதல்;

(f) ஓய்வு கால நலப்பயன்கள் காப்பீடு மற்றும் வருங்கால வைப்பு நிதியம், பணி நீக்கம் செய்யும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றிய முறை உள்ளடங்கலான, பணியாளர்களின் பணி நிபந்தனைகள்;

(g) பணியாளர்களின் பணி மூப்பினை நெறிப்படுத்தும் நெறிகள்;

(h) பணியாளர்களுக்கும் அல்லது மாணவர்களுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடையேயான பூசல்களைத் தீர்த்து வைப்பதற்கான நடைமுறை;

(i) பல்கலைக்கழகத்தின் அலுவலர் எவரின் அல்லது பிற அதிகார அமைப்பின் நடவடிக்கைக்கு எதிராக பணியாளர் எவராலும் அல்லது மாணவர்களால் செயலாட்சி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்வதற்கான நடைமுறை;

(j) மதிப்புறு பட்டங்கள் அளித்தல்;

(k) பட்டம், பட்டயம், உறுதிச் சான்று மற்றும் பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றை திரும்பப் பெறுதல்;

(l) பட்டதாரி உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவர் உதவித்தொகைகள் பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை நிறுவுதல்;

(m) மாணவர்களிடையே ஒழுங்குக் கட்டுப்பாட்டைப் பேணுதல்;

(n) துறை, மையங்கள் மற்றும் பிற நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் நீக்குதல்;

(o) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகள் அல்லது அலுவலர்கள் ஆகியோரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரங்களை ஒப்படைவு செய்தல் ; மற்றும்

(p) இந்தச் சட்டத்தால் வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும், பிறபொருட்பாடுகள் அனைத்தும்.

(3) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு எதனின் அதிகாரங்களை அல்லது அமைப்பை பாதிக்கும் வகையில் நிலையமை விதி எதனையும் திருத்தமோ நீக்கறவோ செய்வதற்கு, உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் மீது எழுத்து வடிவில் கருத்து ஒன்றைத் தெரிவிக்கும் வாய்ப்பு ஒன்று அத்தகைய அதிகார அமைப்பிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வரையில், செயலாட்சி மன்றம் அத்திருத்தமோ நீக்கறவோ செய்தல் ஆகாது, மற்றும் அவ்வாறு தெரிவிக்கப்படும் கருத்து எதுவும் செயலாட்சி மன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

நிலையமை விதிகள், எவ்வாறு செய்யப்படுகிறது.

27. (1) செயலாட்சி மன்றம், அவ்வப்போது, இந்தப் பிரிவில் இதன் பின்பு வகை செய்யப்பட்டுள்ள முறையில், நிலையமை விதிகளைச் செய்யலாம் அல்லது நிலையமை விதிகளைத் திருத்தம் செய்யலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்.

(2) செயலாட்சி மன்றத்தினால் பிறப்பிக்கப்படும் ஒரு நிலையமை விதியோ அல்லது ஒரு நிலையமை விதிக்கான ஒரு திருத்தமோ, அல்லது நீக்கறவோ மேலாண்மைக்குழு முன் வைக்கப்படுதல் வேண்டும். அக்குழு அதற்கு ஏற்பிசைவளிக்கலாம் அல்லது அதனை ஏற்பிசைவளிக்க மறுக்கலாம். செயலாட்சிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் நிலையமை விதி ஒன்று அல்லது ஒரு நிலையமை விதிக்கான திருத்தம் ஒன்று, அல்லது அதன் நீக்கறவு ஒன்று, அது மேலாண்மைக்குழுவினால் ஏற்பிசைவளிக்கப்படும் வரையில் செல்லுந்தன்மையுடையதாகாது.

அவசர விதிகள் செய்வதற்கான அதிகாரம்

28. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் நிலையமை விதிகளுக்கும் உட்பட்டு, அவசர விதிகள் மேலாண்மைக்குழுவின் ஒப்பேற்பளிப்பிற்கு உட்பட்டு, செயலாட்சிமன்றத்தினால் செய்யப்படுதல் வேண்டும், அது, பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவை யாவன:—

(a) பல்கலைக்கழகத்தில் மாணவர்களைச் சேர்த்தல் மற்றும் அவர்களை அவ்வாறாகப் பதிவு செய்தல்;

(b) பல்கலைக்கழகத்தின் அனைத்து பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் உறுதிச்சான்றுகள் ஆகியவற்றிற்காக விதிக்கப்பட வேண்டிய கல்விப்பாடத்திட்டங்கள்;

(c) பயிற்றுவிக்கும் மொழி மற்றும் தேர்வுக்கான மொழி;

(d) பட்டம், பட்டயம், உறுதிச் சான்று மற்றும் பிற கல்வி சிறப்புப்பட்டங்கள் வழங்குதல், அதற்கான தகுதிப்பாடு மற்றும் அதனை வழங்குதல் மற்றும் பெறுதல் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்பாடுகள்;

(e) பல்கலைக்கழகத்தின் கல்வி பாடத்திட்டங்களுக்காகவும் பல்கலைக்கழகத் தேர்வுகள், பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் உறுதிச் சான்றுகள் ஆகியவற்றிற்கு அனுமதித்தலுக்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்;

(f) பட்டதாரி உதவித்தொகைகள், படிப்பு உதவித்தொகைகள், மாணவர் உதவித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் வழங்குவதற்கான நிபந்தனைகள்;

(g) தேர்வு செய்யும் அமைப்புகள், தேர்வாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் ஆகியோரின் பதவிக்காலம் மற்றும் பதவியமர்த்தும் முறை மற்றும் அவர்களின் கடமைகள் உள்ளடங்கலாக, தேர்வுகள் நடத்துதல்;

(h) பல்கலைக்கழக மாணவர்களின் உறைவிடத்தின் நிபந்தனைகள்;

(i) மாணவிகளுக்கான உறைவிடம், ஒழுங்குக்கட்டுப்பாடு மற்றும் போதனைக்காக செய்யப்படும் சிறப்பு ஏற்பாடுகள், எவையேனுமிருப்பின், அவை மற்றும் அவர்களுக்காக பல்கலைக்கழகத்திற்குள் சிறப்பு பாடப்பிரிவுகளுக்கான படிப்புகளை வகுத்துரைத்தல்;

(j) நிலையமை விதிகளில் வகைமுறை செய்யப்பட்டிராதவர்கள் அல்லாத பிற பணியாளர்களைப் பணியமர்த்தம் செய்தல் மற்றும் அவர்களுக்குள்ள பணியூதியங்கள்;

(k) கல்வி மையங்கள், கல்வி வாரியங்கள் பல்வகைப் பயிற்சிக் கல்விகள், சிறப்பு மையங்கள், தனித்துறை ஆய்வுக்கூடங்கள் மற்றும் பிற குழு ஆகியவற்றை நிறுவுதல்;

(l) கற்றறிந்த அமைப்புகள் அல்லது சங்கம் உள்ளடங்கலான பிற பல்கலைக்கழகங்களுடனும் அதிகார அமைப்புகளுடனும் ஒத்துழைப்பின் மற்றும் உடனுறைப்பின் முறை;

(m) பல்கலைக்கழகத்தின் கல்வி மேம்படுத்துவதற்காகத் தேவையெனக் கருதப்படும் பிற அமைப்பு எதனையும் உருவாக்குதல், இணைப்பாக்கம் மற்றும் செயல்பாடுகள்;

(n) தேர்வாளர்கள், மதிப்பீட்டாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பட்டியல்படுத்துபவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டிய பணியூதியம்;

(o) நிலையமை விதிகளினால் வகுத்துரைக்கப்படாதவையான ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வி பணியாளர் தொகுதியினருக்கான அத்தகைய பிற பணி நிபந்தனைகள்.

அவசர விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன.

29. (1) அவசர விதிகளைச் செய்கையில் செயலாட்சி மன்றம், மேலாண்மைக்குழுவை கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

Verified by RealEstate™

(2) செயலாட்சிமன்றத்தினால் செய்யப்படும் அவசரவிதிகள் அனைத்தும் அது பணிக்கிறவாறு அத்தகைய தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

30. (1) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையானது, செயலாட்சி மன்றத்தின் பணிப்புரையின்படி தயாரிக்கப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய தேதி அன்றோ அதற்குப் பின்போ நிர்வாக ஆட்சி மன்றம் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் நிர்வாக ஆட்சி மன்றம், அந்த அறிக்கையினை அதன் ஆண்டுக் கூட்டத்தில் ஆழ்ந்து ஆராய்தல் வேண்டும்.

(2) நிர்வாக ஆட்சி மன்றம், அந்த ஆண்டறிக்கையினை, அதன் கருத்துரை, ஏதேனுமிருப்பின், அதனுடன் சேர்த்து, வேந்தருக்கு பணிந்தனுப்புதல் வேண்டும்.

ஆண்டுக் கணக்குகள்.

31. (1) பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகளும், இருப்புநிலையும் செயலாட்சி மன்றத்தின் பணிப்புரைகளின்படி தயாரிக்கப்படுதல் வேண்டும் மற்றும், ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது ஒரு முறையேனும் மற்றும் பதினைந்து மாதங்களுக்கு மேற்படாத இடைவெளிகளில், பெயர்பெற்ற பட்டயக் கணக்கர் பட்டறிவுள்ள மற்றும் தகுதிப்பாடுடைய நிறுவனத்தால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆண்டுக் கணக்குகளின்படியொன்று, அதன் மீதான தணிக்கை அறிக்கையுடன் செயலாட்சி மன்றத்தின் குறிப்புரைகளுடன் சேர்த்து, நிர்வாக ஆட்சி மன்றத்திற்கும் வேந்தருக்கும் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

பணியாளர்களின் பணி நிபந்தனைகள்.

32. (1) பல்கலைக்கழகத்தின் பணியாளர் ஒவ்வொருவரும், நிலையமை விதிகளின் வகைமுறைகளின்படி பணியமர்த்தம் செய்யப்படுதலோ அல்லது ஈடுபடுத்திக் கொள்ளப்படுதலோ வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்துக்கும் நிலைபேறுடன் பணியமர்த்தம் செய்யப்பெற்றுள்ள பணியாளர்களில் எவருக்கும் இடையே எழும் பூசல் எதுவும், துணைவேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். அவர், அந்தப் பூசலை, அது குறித்தனுப்பப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், பணியாளருக்கு வாய்ப்பு ஒன்று வழங்கிய பின்பு, முடிவு செய்தல் வேண்டும்.

(3) குறையுற்றப் பணியாளர், துணை வேந்தரின் முடிவுக்கு எதிராக வேந்தரிடம் மேல்முறையீடு ஒன்றை முன்னிடலாம். அத்தகைய மேல்முறையீட்டில் வேந்தரின் முடிவே இறுதியானதாகும்.

(4) தற்காலிகமாகவோ அல்லது தனிநோக்கத்திற்காகவோ அல்லது பகுதி நேரத்திற்காகவோ அல்லது இடைவரவாகவோ ஈடுபடுத்தப்படும் பணியாளர் எவரையும் பொருத்த பூசல் எதுவும் தொடர்புடைய துறைத் தலைவரால் கேட்கப்பட்டு இறுதியாக முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

பல்கலைக்கழக படிப்புப் பிரிவுகளுக்கும் தேர்வுகளுக்கும் அனுமதித்தல்.

33. (1) (a) பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், விருதுகள் அல்லது பட்டயங்கள் ஆகியவற்றிற்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்கான பல்கலைக்கழகத்தின் படிப்புகளுக்கு எவரும்,—

(i) அவர், அதற்காக வகுத்துரைக்கப்படும் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலன்றியும், மற்றும்

(ii) அவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற கல்விசார் நிபந்தனைகளை நிறைவு செய்தாலன்றியும், அப்படிப்புகளுக்கு அவர் அனுமதிக்கப்படுதல் ஆகாது.

Verified by eGazette™

(b) பல்கலைக்கழகத் தேர்வு ஒன்றுக்கான தேர்வு நாடுபவர் ஒவ்வொருவரும், கல்வி மன்றத்தின் பரிந்துரையின் பேரில் பிறப்பிக்கப்படும் செயலாட்சி மன்றத்தின் சிறப்பு ஆணை ஒன்றின் வழி இந்த உட்பிரிவின் வகைமுறைகளிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டாலன்றி, பல்கலைக்கழகம் ஒன்றின் ஓர் உறுப்பினராக பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விதிவிலக்கு எதுவும் செயலாட்சி மன்றம் பொருத்தமானதாகக் கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு கொடுக்கப்படலாம்.

(2) தேர்வு நாடுபவர் எவரும், அவர் பல்கலைக்கழகத்தின் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்யப்பெற்றிருந்தாலன்றியும், மற்றும் அதற்காகத் தேவைப்படும் வருகை பற்றிய வேண்டுதல்களை நிறைவு செய்திருந்தாலன்றியும் மற்றும் கல்விக்குழுவின் பரிந்துரையின் பேரில் பிறப்பிக்கப்பட்ட செயலாட்சி மன்றத்தின் ஆணை ஒன்றினால் பதிவு செய்வதற்கான அல்லது வருகைக்கான அல்லது அவை இரண்டுக்குமான அத்தகைய வேண்டுறுத்தங்களிலிருந்து அவர் விதிவிலக்களிக்கப்பட்டாலன்றியும் அவர், பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் அனுமதிக்கப்படுதல் ஆகாது. இந்தப் பிரிவின்படி வழங்கப்படும் விதிவிலக்குகள் செயலாட்சி மன்றம் பொருத்தமெனக் கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

(3) கல்விக்குழுவின் அல்லது நேர்வுக்கேற்ப , தேர்வுகள் கட்டுப்பாட்டாளரின் ஆணைகளினால் அல்லது பரிந்துரையினால் பல்கலைக்கழகத்தின் பெயர்ப்பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்டிருப்பவரும், ஓர் ஆண்டுக்கு மேல் தேர்வுகள் எழுதுவதிலிருந்து தடுக்கப்பட்டிருப்பவருமான ஓர் தேர்வுக்கான மாணவர் அல்லது தேர்வு நாடுபவர் எவரும், அத்தகைய ஆணையைப் பெற்ற தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள், மேற்சொன்ன அதிகார அமைப்புகளின் முடிவை செல்லாநிலையதாக்குமாறு துணை–வேந்தருக்கு மேல்முறையீடு செய்யலாம்.

(4) இது குறித்து துணை–வேந்தரால் எடுக்கப்படும் முடிவு எதுவும் இறுதியானதாகும்.

தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதியம் மற்றும் ஓய்வூதியங்கள்.

34. பல்கலைக்கழகம் அதன் பணியாளர்களின் நலப்பயனுக்காக செயலாட்சி மன்றத்தினால் முடிவு செய்யப்படலாகும், அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு தாம் பொருத்தமெனக் கொள்ளும் அத்தகைய ஓய்வூதிய அல்லது நலத்திட்டங்களை அல்லது வருங்கால வைப்பு நிதியத்தை அமைக்கலாம் அல்லது அத்தகைய காப்பீட்டுத் திட்டங்களுக்கு வகை செய்யலாம்.

அதிகார அமைப்புகள் மற்றும் அமைப்புகளின் அமைப்பு பற்றிய பூசல்கள்.

35. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பின் ஓர் உறுப்பினராக உரியவாறு நபர் எவரும் நியமனம் செய்யப்பெற்றிருக்கிறாரா அல்லது அமர்த்தப்பெற்றிருக்கிறாரா அல்லது உறுப்பினராக இருப்பதற்கு உரிமை கொண்டிருக்கிறாரா என்பதைக் குறித்து பிரச்சினை எதுவும் எழுமாயின், அந்தப் பொருட்பாடு வேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். அதன் மீது அவருடைய முடிவே இறுதியானதாகும்.

குழுக்களை அமைத்தல்.

36. இந்தச் சட்டத்தின்படியோ அல்லது நிலையமை விதிகளின்படியோ குழுக்களை அமைப்பதற்கு பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதுவும் அதிகாரம் கொடுக்கப்படுகிறவிடத்து, அத்தகைய குழுக்கள், பிறவாறாக வகைசெய்யப்பட்டவாறு, தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களையும் மற்றும் ஒவ்வொரு நேர்விலும் அதிகார அமைப்பு பொருத்தமெனக் கருதுகிறவாறு அத்தகைய பிற நபர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

காலியிடங்களை நிரப்புதல்.

37. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினர்களிடையேயுள்ள காலியிடங்கள் அனைத்தும் இயலக் கூடிய விரைவில், அவர் எவருடைய இடம் காலியானதோ அவர் அமர்த்தப் பெற்றிருக்கும் அல்லது நியமனம் செய்யப்பெற்றிருக்கும் எஞ்சிய காலத்திற்கு உறுப்பினர்களை அமர்த்திய அல்லது நியமனம் செய்த நபராலோ அல்லது அமைப்பாலோ நிரப்பப்படுதல் வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புகள் மற்றும் பிற அமைப்புகளின் நடவடிக்கைகள் அவற்றின் காலியிடங்கள் இருப்பதன் காரணமாக செல்லாதவையாக ஆக்கப்படுதல் ஆகாது.

38. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதிலும் உள்ள ஒரு காலியிடம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்ததில் உள்ள குறைபாடு அல்லது முறைகேடு எதனின் அல்லது நேர்வின் தகுதிகளைப் பாதிக்காத அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையிலுள்ள குறைபாடு அல்லது முறைகேடு எதனின் காரணமாகவோ அல்லது பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு, இந்தச் சட்டத்தின்படி வேண்டுறுத்தப்பட்டுள்ள அத்தகைய இடைவெளிகளில் கூடவில்லை என்ற காரணமாகவோ மட்டுமே செல்லாநிலையதாக்கப்படுதல் ஆகாது.

பல்கலைக்கழக உறுப்பினர் நிலையிலிருந்து நீக்குதல்.

39. (1) செயலாட்சி மன்றமானது இதன் பொருட்டு எழுத்து வடிவில் செய்யப்பட்ட ஓர் ஆணையினால் எந்த ஒரு நபரையும், அத்தகைய நபர் ஒழுக்க நெறி தீயொழுக்கம் உள்ளாகிறது என செயலாட்சி மன்றம் கருதும் குற்றச்செயல் ஒன்றுக்காக நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாராயின், செயலாட்சி மன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் ஒரு பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்றினாலும், செயலாட்சி மன்றத்தின் கூட்டத்தில் வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் குறையாத ஒரு பெரும்பான்மையினராலும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கலாம்.

(2) செயலாட்சி மன்றம், இதன்பொருட்டு எழுத்துவடிவில் பிறப்பிக்கப்படும் ஓர் ஆணையினால் கூட நபர் எவரையும், அவர் பித்துபிடித்தவராக ஆகியிருப்பாராயின் அல்லது ஒரு நொடித்துப் போனவரென நீதிமுறையில் தீர்மானிக்கப் பட்டிருப்பாராயின் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கப்படலாம்.

(3) இந்தப் பிரிவின்படி நபர் எவருக்கும் எதிரான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு அவருக்குத் தகுவான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி அவருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

(4) உட்பிரிவு (1)–ன் படியோ அல்லது (2)–ஆம் உட்பிரிவின்படியோ நேர்வுக்கேற்ப, பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையின்படி ஒன்று, அது, அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், வகுத்துரைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய நபருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் பதிவணங்களை மெய்ப்பிக்கும் முறை.

40. பல்கலைக்கழகத்தின் வசம் இருக்கும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது குழு எதனின் பற்றுச்சீட்டு, விண்ணப்பம், அறிவிப்பு, நடவடிக்கை, தீர்மானம் எதனின் படி ஒன்று, பதிவாளரால் உறுதிச் சான்றளிக்கப்படுமானால், அத்தகைய பற்றுச்சீட்டு, விண்ணப்பங்கள், அறிவிப்பு, ஆணை, நடவடிக்கை அல்லது தீர்மானம் ஆவணங்களுக்கான அல்லது பதிவேட்டிலுள்ள பதிவு இருப்பதற்கான முதல் நோக்கிலான சான்றாகப் பெறப்படுதல் வேண்டும் மற்றும் மூல ஆவணங்கள் முன்னிடப்படுமானால் சான்றில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவிடத்து, அதிலுள்ள பொருட்பாடுகளுக்கும் நடவடிக்கைக்குச் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நிலையான அறக்கட்டளை நிதியம்.

41. (1) பொறுப்புக் கட்டளையானது குறைந்தது ஐம்பது கோடி ரூபாய்க்கு நிலையான அறக்கட்டளை ஒன்றை நிறுவுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் நிலையான அறக்கட்டளை நிதியத்தை முதலீடு செய்வதற்கு அதிகாரமுடையதாகும்.

(3) பல்கலைக்கழகம் பணத்தொகை எதனையும், பொது நிதியத்திலிருந்தோ அல்லது வளர்ச்சி நிதியத்திலிருந்தோ நிலையான அறக்கட்டளை நிதியத்திற்கு மாற்றலாம்.

(4) உட்பிரிவு (1)–இல் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தொகைக்கு மேற்படும் தொகை எதுவும் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி நோக்கங்களுக்காக பல்கலைக்கழகத்தால் நிலையான அறக்கட்டளை நிதியத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படலாம்.

42. (1) பல்கலைக்கழகம், பொது நிதியம் ஒன்றை நிறுவுதல் வேண்டும். அதில் பின்வரும் தொகை வரவு வைக்கப்படுதல் வேண்டும். அவையாவன:— பொது நிதியம்.

(a) பல்கலைக்கழகத்தால் விதிக்கப்படலாகும் கட்டணங்கள் அனைத்தும் ;

(b) பிற ஆதாரம் எதிலிருந்தும் பெறப்படும் பணத்தொகைகள் அனைத்தும்;

(c) பொறுப்புக் கட்டளையால் செய்யப்படும் பங்களிப்புகள் அனைத்தும் ; மற்றும்

(d) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலும் தடைசெய்யப்படாத பிற நபர் எவராலும் அல்லது அமைப்பு எதனாலும் இதன் பொருட்டு செய்யப்படும் பங்களிப்புகள் அனைத்தும்

(2) பொது நிதியத்தில் வரவு வைக்கப்படும் பணங்கள், பல்கலைக்கழகத்தின் தொடர் செலவினங்கள் அனைத்தையும் செய்வதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

43. (1) பல்கலைக்கழகம், வளர்ச்சி நிதியம் ஒன்றையும் நிறுவுதல் வேண்டும். அதில் பின்வரும் பணங்கள் வரவு வைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:— வளர்ச்சி நிதியம்.

(a) மாணவர்களிடமிருந்து விதிக்கப்படலாகும் வளர்ச்சிக் கட்டணங்கள்;

(b) பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி நோக்கத்திற்காக பிற ஆதாரங்களிலிருந்து பெறப்படும் பணத் தொகைகள் அனைத்தும்;

(c) பொறுப்புக் கட்டளையால் செய்யப்படும் பங்களிப்புத் தொகைள் அனைத்தும்;

(d) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலும் தடை செய்யப்படாத பிற நபர் எவராலும் அல்லது அமைப்பு எதனாலும் இதன் பொருட்டு செய்யப்படும் பங்களிப்புத் தொகைகள் அனைத்தும்; மற்றும்

(e) நிலையான அறக்கொடை நிதியத்திலிருந்து பெறப்படும் வருமானங்கள் அனைத்தும்.

(2) அவ்வப்போது, வளர்ச்சி நிதியத்தில் வரவு வைக்கப்படும் பணங்கள் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

44. பிரிவு **41**, **42** மற்றும் **43** ஆகியவற்றின் படி நிறுவப்பட்ட நிதியங்கள் நிர்வாக ஆட்சி மன்றத்தின் பொதுவான கண்காணிப்பு மற்றும் கட்டளைக்கு உட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் முறைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் வேண்டும். நிதியத்தைப் பேணுதல்.

45. (1) அரசு கோரலாகிறவாறு, பல்கலைக்கழகத்தின் நிருவாகம் அல்லது நிதி மற்றும் பிற அலுவற்பாடுகள் தொடர்பான அத்தகைய தகவலை அல்லது பதிவணங்களை அளிப்பது, பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது அலுவலர் எவரின் கடமையாகும். தகவலையும் பதிவணங்களையும் கோரிப்பெறுவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.

(2) அரசு, இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட நிலையமை விதிகளின் அல்லது அவசர விதிகளின் மீறுகையொன்று இருக்கிறது என்று கருதுமாயின், **49**–ஆம் பிரிவின்படி பல்கலைக்கழகத்திற்குத் தாம் தேவையென கொள்கிறவாறு அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்.

Verified @ RealEstate™

பல்கலைக்–கழகத்தைக் கலைத்தல்.

46. (1) பல்கலைக்கழகம், எந்தக் காரணமாகவும் அதனைக் கலைப்பதற்கு கருதுமாயின், அது அரசுக்குக் குறைந்தது ஆறு மாதங்களேனும் எழுத்து வடிவில் அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)–இல் குறிப்பிடப்பட்ட அறிவிப்பைப் பெற்றுக் கொள்வதன் பேரில், அரசு, பல்கலைக்கழகத்தைக் கலைக்கும் தேதியிலிருந்து பல்கலைக்கழகத்தின் வழக்கமான கல்விப் பயிற்சியில் கடைசி மாணவர்களின் தொகுதி வரையில் அவர்களின் பயிற்சியை அல்லது கல்விகளை முடிக்கும் வரையில் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில் பல்கலைக்கழகத்தை நிருவகிப்பதற்கான அத்தகைய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

கலைப்பின் போது பல்கலைக்–கழகத்தின் செலவினம்.

47. (1) பிரிவு 46–ன் படி பல்கலைக்கழகத்தைக் கலைக்கும் நடவடிக்கையின்போது பல்கலைக்கழகத்தின் நிருவாகச் செலவினமானது நிலையான அறக்கொடை நிதியம், பொது நிதியம் மற்றும் வளர்ச்சி நிதியம் ஆகியவற்றிலிருந்து ஏற்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)–இல் சுட்டிக்காட்டப்பட்ட நிதியங்கள், பல்கலைக்கழகத்தின் செலவினத்தை எதிர்கொள்வதற்குப் போதுமானவையாக இல்லாதிருக்குமானால், அத்தகைய செலவினம், அரசால், பல்கலைக்கழகத்தின் சொத்துக்களை அல்லது சொத்திருப்புகளை அயலடைவு செய்து எதிர்கொள்ளப்படலாம்.

பல்கலைக் கழகத்தின் ஏற்பளிப்பு அரசால் நீக்கப்படுதல்.

48. (1) பல்கலைக்கழகம், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி செயல்படவில்லை என அரசு முக்கியமான மற்றும் போதிய அளவிலான சாட்டுரைகளுடனான முறையீடு ஒன்றைப் பெறுகிறவிடத்து, அது, அந்தக் முறையீட்டின்படி ஒன்றைச் சுட்டிக்காட்டி பல்கலைக்கழகத்தின் ஏற்பளிப்பு ஏன் நீக்கப்படுதல் ஆகாது என்பதற்கு இரண்டு மாதங்களுக்குக் குறைவாக இருக்கலாகாத, அத்தகைய காலத்திற்குள் காரணம் காட்டுமாறு பல்கலைக்கழகத்தை வேண்டுறுத்துதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)–ன் படி கொடுக்கப்பட்ட அறிவிப்புக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் பெறப்படுவதன் பேரில், பல்கலைக்கழகம் செயல்படுவதில் பல்கலைக்கழகம் தவறாக நடத்தப்படுகிற அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறை மீறுகிற முதல் நோக்கிலான நிகழ்வு ஒன்று கண்டறியப்பட்டிருக்கிறது என்று அரசு தெளிவுறக் காணுமாயின், அது, தாம் தேவையெனக் கொள்ளலாகும் அத்தகைய விசாரணைக்கு ஆணையிடுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)–ன் படியான விசாரணை ஒன்றின் நோக்கங்களுக்காக, அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மீறியது பற்றிய சாட்டுரைகளை விசாரணை செய்வதற்கு விசாரணை அதிகார அமைப்பாக ஓர் அலுவலர் அல்லது அதிகார அமைப்பை அமர்த்துதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3)–ன் படி அமர்த்தப் பெற்ற விசாரணை அதிகார அமைப்பு ஒவ்வொன்றும், இந்தச் சட்டத்தின்படி தம் செயற்பணிகளைப் புரிகையில், உரிமை வழக்கு ஒன்றை மற்றும் குறிப்பாக பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்து விசாரணை செய்கையில், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தும் உடையது ஆகும், அவையாவன:—

மையச்சட்டம் V / 1908.

(a) சான்றளிப்பவர் எவருக்கும் அழைப்பாணை விடுத்து அவர் முன்னிலையாவதைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் அவரை ஆணைமொழியின் பேரில் விசாரணை செய்தல்;

(b) ஆவணம் எதனையும் வெளிக் கொணர்தல் மற்றும் முன்னிடுதல்;

(c) அலுவலகம் எதிலிருந்தும் பொது ஆவணம் எதனையும் அல்லது அதன்படி எதனையும் வேண்டிப் பெறுதல்;

(d) ஆணைமொழி ஆவணங்களின் மீது சான்றினைப் பெறுதல்;

(e) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

VerifiedRealEstate™

(5) விசாரணை அறிக்கையினைப் பெறுவதன் பேரில், பல்கலைக்கழகம், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எவற்றையும் மீறியிருக்கிறது என்று அரசு தெளிவுறக் காணுமானால், அது, தேவையான செம்மையினைச் செய்யுமாறு பல்கலைக்கழகத்திற்குப் பணிப்புரை கொடுத்து இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை முறையாகச் செயல்படுத்துவதற்காக அறிவுறுத்துதல் வேண்டும்.

(6) பல்கலைக்கழகம், தொடர்ச்சியாக மூன்று தடவை இந்தச் சட்டத்தை மீறி வருகிறது என்று காணப்படுமானால், அரசு, அறிவிக்கை வாயிலாக, பல்கலைக்கழக மானியக் குழுவின் மற்றும் பிற சட்ட முறை அதிகார அமைப்புகளின் முன் ஒப்பேற்புடன் பல்கலைக்கழகத்தின் ஏற்பளிப்பினை நீக்கிக் கொள்ளலாம்.

(7) உட்பிரிவு **(6)**–ன் படி ஏற்பளிப்பை நீக்கும் நடைமுறையின்போது, அரசு நிலையான அறக்கொடை நிதியம், பொது நிதியம் அல்லது வளர்ச்சி நிதியம் ஆகியவற்றை பல்கலைக்கழகத்தின் அலுவற்பாடுகளை மேலாண்மை செய்யும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தலாம். பல்கலைக்கழகத்தின் நிதியங்கள் பல்கலைக்கழகத்தின் அவசியமான செலவினத்தை எதிர்கொள்வதற்குப் போதுமானவையாக இல்லையாயின், அரசு, மேற்சொன்ன செலவினங்களை எதிர் கொள்வதற்கு பல்கலைக்கழகத்தின் சொத்திருப்புகளை அல்லது சொத்துக்களை அயலடைவு செய்யலாம்.

கொள்கை பொருட்பாடுகள் மீது பணிப்புரைகள் வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.

49. அரசு, தாம் தேவையென கருதுகிறவாறு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இராத கொள்கை பொருட்பாடுகள் மீது பல்கலைக்கழகத்திற்கு, அவ்வப்போது, அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம். அத்தகைய பணிப்புரைகள், பல்கலைக்கழகத்தால் இணங்கி நடக்கப்படுதல் வேண்டும்.

கலைத்தல் அல்லது ஏற்பளிப்பை நீக்குவதன் பேரில் உடைமைகள், கடப்பாடுகளின் தகுநிலைகள்.

50. பல்கலைக்கழகத்தை கலைக்கும் அல்லது ஏற்பளிப்பை நீக்கும் நேர்வில், பல்கலைக்கழகத்தின் நிலையான அறக்கட்டளை நிதியம், பொதுநிதியம், வளர்ச்சி நிதியம் அல்லது பிற நிதியம் எதுவும் உள்ளடங்கலான உடைமைகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் மற்றும் கடப்பாடுகளும் கூட, பொறுப்புக் கட்டளைக்குச் சொந்தமானதாக இருக்கும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

51. (1) பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதையேனும் முதல் முதலில் அமைத்து உருவாக்குதல் குறித்தோ அல்லது மீண்டும் அமைத்துருவாக்குதல் குறித்தோ அல்லது பிறவாறு இந்தச் சட்டத்தின் வகைமுறை செயல்படுத்துதல் குறித்தும் இடர்ப்பாடு எதுவும் எழுமானால் அரசு, அறிவிக்கையின் மூலமாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக தேவையானது என்று அல்லது உகந்தது என்று தனக்கு தோன்றக் கூடிய இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாயிராத அத்தகைய வகைமுறையைச் செய்யலாம்:

வரம்புரை: ஆனால் அத்தகைய அறிவிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதியில் இருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்த பின்பு பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) உட்பிரிவு **(1)**–ன் படியோ அல்லது இந்தச் சட்டத்தின்படி பிறவகைமுறைகள் எவற்றின்படியோ பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் சட்ட மன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடர் அல்லது அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு அத்தகைய அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையேனும் சட்ட மன்றப் பேரவையானது செய்யுமானால், அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படலாகாது என்று சட்ட மன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த அறிவிக்கையானது அதன்பின்பு அத்தகைய மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்லாற்றல் பெறுதல் வேண்டும், அல்லது நேர்விற்கேற்ப, செல்லாற்றல் பெறாதுபோதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும் அந்த அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

நோக்க – காரண விளக்கவுரை

2015, செப்டம்பர் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்ற அனைத்துலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, தமிழ்நாடு மின்னணுக் கழகம் லிமிடெட், தமிழ்நாடு மாநிலத்தில், தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்காக, தமிழ்நாடு அரசு சார்பாக, எச்.சி.எல் கார்பரேசன் லிமிடெட், புதுதில்லி என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை நிறைவேற்றியது. அதன்படியே, எஸ்.எஸ்.என் பொறுப்புக் கட்டளை, சிவ் நாடார் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்காக கருத்துருவினைப் பணிந்தனுப்பியிருக்கிறது. 2003–ஆம் ஆண்டு, பல்கலைக்கழக மானியக்குழுவின் ஒழுங்குமுறை விதிகளின்படி, ஒவ்வொரு தனியார் பல்கலைக்கழகமும் ஒரு தனிப்பட்ட மாநிலச் சட்டத்தால் நிறுவப்படுதல் வேண்டும். எனவே, மேற்குறிப்பிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு, செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, சட்டமியற்றுவதன் மூலமாக சிவ் நாடார் பல்கலைக்கழகம் என்ற பெயரில் புதிய பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்குறிப்பிட்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

கே. பி. அன்பழகன்,
உயர் கல்வித் துறை அமைச்சர் .

Verified RealEstate™

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இந்தச் சட்டமுன் வடிவின் 5, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 20, 21, 22, 23, 24, 25, 26, 28, 30, 33, 39, 41, 44, 46, 48, 49 மற்றும் 51 ஆகிய கூறுகள், இயற்றப்படவுள்ள சட்டத்தின் சில பிரிவுகள் வகுத்துரைக்கப்பட்ட முறையிலும் மற்றும் வழியிலும் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கும் மற்றும் செயல்படுத்துவதற்கும், நேர்வுக்கேற்ப தகுந்த அறிவிக்கைகள், நிலையமை விதிகள் அல்லது அவசர விதிகள் வெளியிடுவதற்கு அரசுக்கும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளுக்கும், அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

கே. பி. அன்பழகன்,
உயர் கல்வித் துறை அமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

Verified RealEstate

Verified RealEstate™

2018–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2018

கல்வி மற்றும் தொடர்புடையவற்றின் வளர்ச்சித் துறைகளுக்காக முனைப்பான தலைமை, ஆராய்ச்சி, அனுபவ அறிவு மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றின் வளர்ச்சியின் மூலமாக விதிமுறை மாற்றம் ஒன்றை வளர்த்து, பொதுவியல் கோட்பாட்டை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டுவரும் பொருட்டு, தனியார் துறையில் சாய் கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி மற்றும் பொறுப்புக் கட்டளையின் மூலமாக ஒரு சீர் தன்மையிலான பல்கலைக்கழகமொன்றை தமிழ்நாடு மாநிலத்தில் உருவாக்கி, நிறுவி அமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக்குடியரசின் அறுபத்தொன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்தச்சட்டத்தில், தருவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,— பொருள் வரையறைகள்.

(a) ‘‘கல்வி மன்றம்’’ என்பது, 22 ஆம் பிரிவின் படி அமைத்துருவாக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்வி மன்றம் என்று பொருள்படும்;

(b) ‘‘வேந்தர்’’, ‘‘துணை வேந்தர்’’ மற்றும் ‘‘இணை– துணை வேந்தர்’ என்பது, முறையே பல்கலைக்கழகத்தின் வேந்தர், துணை வேந்தர் மற்றும் இணை– துணை வேந்தர் என்று பொருள்படும்;

Verified RealEstate™

(c) “முதன்மையர்கள் மற்றும் இயக்குநர்கள்'' என்பது, துறையின் அல்லது ஒரு நிறுவனத்தின், ஒரு மையத்தின் அல்லது ஒரு பள்ளியின் தலைமை அல்லது அவர் வராமையால் அத்தகைய செயலுக்கான நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட அந்த நபர் என்று பொருள்படும்;

(d) ''துறை'' என்பது, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்தின், கல்வி பயிலும் துறைகள் என்று பொருள்படும்;

(e) “பணியாளர்'' என்பது, பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் அல்லது பல்கலைக்கழகத்தின் பணியாளரின் பிற உறுப்பினர் எவரும் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்தினால் அமர்த்தப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்;

(f) ''செயலாட்சிமன்றம்''என்பது,21ஆம்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் செயலாட்சி மன்றம் என்று பொருள்படும்;

(g) ''புலம்'' என்பது, பல்கலைக்கழகத்தின் புலம் என்று பொருள்படும்;

(h) “நிர்வாக ஆட்சி மன்றம்'' என்பது, **20** ஆம் பிரிவின் படி அமைத்துருவாக்கப்பட்ட நிர்வாக ஆட்சி மன்றம் என்று பொருள்படும்;

(i) ''அரசு'' என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(j) “மாணவர் விடுதி'' என்பது, இப்பல்கலைக்கழகத்தால் பேணிவரப்பட்டு அல்லது ஏற்பிசைவு அளிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் தங்கியிருப்பதற்கான ஓர் இடம் என்பது பொருள்படும்;

(k) “கல்வி நிலையம்'' என்பது, இந்தச் சட்டத்திற்கிணங்க மற்றும் நிலையமை விதிகள் மூலம் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்ட அல்லது பணிவரப்பட்ட அல்லது அதனுடன் தொடர்புடைய அல்லது மூலப் பகுதியாயுள்ள ஒரு கல்லூரி அல்லது ஒரு கல்வி நிலையம் என்பது பொருள்படும்;

(l) ''மேலாண்மைக்குழு'' என்பது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக பொறுப்புக்கட்டளையால் அமைத்துருவாக்கப்பட்ட குழு என்று பொருள்படும்;

(m) “வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, நிலையமை விதிகளால் மற்றும் அவசர விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(n) “பதிவுருக்கள் மற்றும் வெளியீடு'' என்பது, பல்கலைக்கழகத்தினுடைய பதிவுருக்கள் மற்றும் வெளியீடு என்று பொருள்படும்;

(o) “பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர்'' என்பது, முறையே பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர் என்று பொருள்படும்;

(p) “நிலையமை விதிகள் மற்றும் அவசர விதிகள்'' என்பது, முறையே பல்கலைக்கழகத்தினுடைய நிலையமை விதிகள் மற்றும் அவசர விதிகள் என்று பொருள்படும்;

(q) ''மாணவர்'' என்பது, பல்கலைக்கழகத்தினுடைய பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்ட ஒரு மாணவர் என்று பொருள்படும்;

(r) “பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள்'' என்பது, இதன் பொருட்டு வழங்கப்பட்ட அறிவுரையின் பேரில் பல்கலைக்கழகத்தால் அமர்த்தப்பட்ட நபர்கள் என்று பொருள்படும்;

(s) “பொறுப்புக்கட்டளை'' என்பது, **1882** ஆம் ஆண்டு இந்திய பொறுப்புக்கட்டளைகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட சாய் கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி மற்றும் பொறுப்புக்கட்டளை என்று பொருள்படும்; மையச் சட்டம் 2/1882.

(t) “பல்கலைக்கழகம்'' என்பது, **3** ஆம் பிரிவின் படி நிறுவப்பட்ட சாய் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்;

பல்கலைக்கழகத்தை நிறுவுதல்.

3. (1) சாய் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பொறுப்புக்கட்டளையின் மூலமாக பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

(2) இந்தப் பல்கலைக்கழகம், ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும், தொடர்ந்த நிலைப்பாடும் தனித்த ஓர் இலச்சினையும் கொண்டு இருத்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன பெயரில் தான் வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்த வகையாக இருத்தல் வேண்டும்.

(4) பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானிய குழுவின் மற்றும் பிற தேசிய ஏற்பளிக்கப்பட்ட அமைப்புகளின் கொள்கை நெறிகளுக்கு உட்பட்டு தான் பொருத்தமெனக் கருதலாகிறவாறு மாநிலத்தில் அத்தகைய இடங்களில் உறுப்பமை கல்லூரிகள், மண்டல மையங்கள், கூடுதல் கல்வி வளாகப் பணிகள் மற்றும் கல்வி மையங்கள் ஆகியவற்றை நிறுவலாம்.

பல்கலைக்கழகத்தினை நிறுவுவதற்கான நிபந்தனைகள்.

4. இந்தச் சட்டத்தின்படி, பல்கலைக்கழகத்தினை நிறுவப்படுவதன் நோக்கமானது, பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற பொறுப்புக் கட்டளையாக இருத்தல் வேண்டும் அவையாவன:—

(a) பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட ஒரு நூறு ஏக்கருக்கு குறையாத நிலத்தை ஒட்டி உள்ளதை உரிமையைக் கொள்ளுவது;

(b) கூற்று (a)–வில் குறிப்பிடப்பட்ட நிலத்தின் மீதான கட்டமைப்பு, கட்டிடங்கள் மற்றும் உள்கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் அலுவலகங்களின் மற்றும் ஆய்வுக்கூடங்களின் தேவையான சாதனங்கள் நிறுவுவது ஆகியவை பல்கலைக்கழக மானிய குழு மற்றும் பிற சட்டமுறை அதிகார அமைப்பினால் விதிக்கப்பட்டுள்ள தரங்களின்படி இருத்தல்;

(c) பல்கலைக்கழக மானிய குழுவினால் விதிக்கப்பட்ட தரங்களின்படி கற்பிக்கும் நோக்கத்திற்காக ஆசிரியர்களை அமர்த்துவது;

(d) அந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு முன்னர், அரசால் வேண்டுறுத்தப்படலாகும் அத்தகைய பிற நிபந்தனைகளை நிறைவேற்றப்படுவது;

பல்கலைக்கழகத்தின் தொடக்கம்.

5 (1) பல்கலைக்கழகம், இதன் பொருட்டு அரசு, அறிவிக்கையின்வாயிலாக குறித்துரைக்கலாகும் அத்தகைய தேதியில் அதன் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு தொடங்குதல் வேண்டும்.

(2) அரசானது 4–ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன என்றபடிக்கு பொறுப்புக்கட்டளையிடமிருந்து பெறப்படும் ஆவணங்களுடன் சேர்த்து ஆணை மொழி ஆவணம் ஒன்று பெறப்பட்ட பின்பும் மற்றும் இதன் பொருட்டு அரசு மனநிறைவு அடைந்த பின்னர் மட்டும் (1) ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கை ஒன்று வழங்குதல் வேண்டும்.

மானியங்கள் மற்றும் நிதி உதவி.

6. பல்கலைக்கழகம் சுயநிதி பல்கலைக்கழகமாக இருத்தல் வேண்டும் மற்றும் அரசிடமிருந்து, கோரிக்கை ஒன்று எதுவும் செய்வதற்கோ பேணுதல், பணித்துறை உதவித்தொகை அல்லது பிற நிதி உதவி எதற்குமோ உரிமைக் கொண்டது ஆகாது :

வரம்புரை: ஆனால், பல்கலைக்கழகத்தை, ஆராய்ச்சி திட்டங்களுக்காக அல்லது பிறவற்றின் மூலம் எதிலிருந்தும் நிதிமானியங்கள் அல்லது நிதி ஆதரவை சட்டப்படி வழங்கலாகும் அல்லது, சட்டப்படி வழங்கலாகாத கல்விசார் திட்டங்கள் பிற எதற்காகவும் விண்ணப்பிப்பதிலிருந்து தடைசெய்தல் ஆகாது.

பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள்.

7. பல்கலைக்கழகத்தின் நோக்கமானது, பல்கலைக்கழகம் தான் பொருத்தமென கருதலாகும் அத்தகைய கற்பிக்கும் பிரிவுகளில் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் வசதிகளை நீட்டிப்பதற்கு வகை செய்வதற்கு முன், கல்வி, அறிவு மற்றும் திறமை ஆகியவற்றுடனும் இருத்தல் வேண்டும் மற்றும் கீழ்கண்டவைகளின் வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலை மற்றும் வசதிகளை மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு பெருமுயற்சி எடுத்தல் வேண்டும் :–

(a) பாடத்திட்டத்தை மீண்டும் அமைப்பதற்காக வழிகாட்டுகின்ற கல்வியில் கல்வி கற்பிப்பதற்கான புதிய முறைகளில் பயிற்சி மற்றும் இணையவழியில் கற்றுணர்தல், கலந்து கற்றுணர்தல், தொடர்கல்வி மற்றும் அத்தகைய பிற முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த மற்றும் ஆளுமை நலம் தருகின்ற வளர்ச்சி உள்ளடங்கலான கல்வி;

(b) பல்வகையான பாடப்பிரிவுகளில் படிப்புகள்,

(c) பல துறைகளில் படிப்புகள்;

(d) தேசிய ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை, சமூக நேர்மை நெறி மற்றும் பொறியியலில் பன்னாட்டு உடன்பாடு மற்றும் ஒழுக்கவியல்;

பல்கலைக்கழகத்தின் அதிகாரங்கள்.

8. பல்கலைக்கழகம், பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்:—

(a) பல்கலைக்கழகம், அப்போதைக்கப்போது தீர்மானிக்கலாகும், அத்தகைய கல்வி பிரிவுகளில் பயிற்சியளிப்பதற்கான வகைசெய்வதற்கு மற்றும் ஆராய்ச்சிக்காக மற்றும் மேம்பாட்டிற்காக மற்றும் எங்கும் பரப்புவதற்கும் வகைசெய்வதற்கு மற்றும் அறிவையும் திறனையும் பயன்படுத்தவும் செய்வதற்கு;

(b) கலைகள் மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மேலாண்மை, சட்டம், மருத்துவம் மற்றும் தொடர்பான அறிவியல் பாடப்பிரிவுகளும் மற்றும் கல்விவளாகப்பணி, மறைவளாகப் பணியின் மூலமாக பிற தொழில் முறையான படிப்புகள் ஆகியவற்றை கற்பதற்கு, பங்களிப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு;

(c) கல்வி வல்லுநர்கள் மற்றும் பேராசிய மாண்பமையை அணி செய்வதனுடனான கல்விசார் மேம்பாட்டிற்கான நபர்கள் ஆகியோரின் நன்மதிப்பிற்கு;

(d) பல்கலைக்கழகம் தீர்மானிக்கலாகும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு தேர்வுகளின் அடிப்படையில் பட்டயங்கள் அல்லது சான்றிதழ்களுக்கு மற்றும் பட்டங்கள் அளிப்பதற்கு அல்லது பொருத்தமான மற்றும் போதிய காரணத்திற்காக இதர கல்வி சிறப்புப்பட்டங்கள், சான்றிதழ்கள், பட்டயங்கள் வழங்குவதற்கு மற்றும் அத்தகைய பட்டங்கள், சான்றிதழ்கள், பட்டயங்கள் அல்லது பிறகல்விச் சிறப்புகள் ஆகியவற்றை திரும்ப பெறுவதற்கு;

(e) வகுத்துரைக்கப்பட்ட முறையில் கௌரவ பட்டங்களையோ அல்லது பிற சிறப்புகளையோ வழங்குவதற்கு;

(f) தான், பொருத்தமென தீர்மானிக்கலாகும் பல்கலைக்கழகத்தின் உறுப்பினராகயில்லாத அத்தகைய நபர்களுக்கு கல்வி மற்றும் அஞ்சல் வழி உள்ளடங்கலான பயிற்சி வழங்குவதற்கு;

(g) இயக்குநர் பதவிகள், பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிறப்புப் பேராசிரியர் பதவிகள், உதவிப் பேராசிரியர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் பல்கலைக்கழகத்தால் வேண்டுறுத்தப்பட்ட பிற ஆசிரியர்கள் அல்லது கல்விசார் பதவிகள் மற்றும் அது போன்ற அமர்த்தங்களைச் செய்வதற்கு;

(h) நிருவாகம், அமைச்சகம் மற்றும் பிற பதவிகளை உருவாக்குவதற்கு மற்றும் அதற்கான அமர்த்தங்களைச் செய்வதற்கு;

(i) நிரந்தரமாகவோ அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு கால அளவிற்காகவோ பிற பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் எதிலும் சிறப்பாக பணிபுரிகின்ற நபர்களை அமர்த்துவதற்கு அல்லது ஈடுபடுத்துவதற்கு;

(j) பல்கலைக்கழகம் தீர்மானிக்கலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய நோக்கத்திற்காக இந்தியாவில் மற்றும் வெளிநாட்டில் பல்கலைக்கழகம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் எதனையும் பிற எதனுடனும் ஒத்துச் செயலாற்ற, உடனுழைக்க அல்லது பங்குகொள்வதற்கு;

(k) அதன் மேலுமான நோக்கத்திற்கு தேவையானதை பல்கலைக்கழகத்தின் கருத்துரையில் பள்ளிகள், மையங்கள், தனி சிறப்பு பெற்ற ஆய்வுக் கூடங்கள் அல்லது ஆராய்ச்சிக்கான பிற அலகுகள் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றை நிறுவுவதற்கு மற்றும் மேலாண்மை செய்வதற்கு;

(l) பட்டதாரி உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவர் உதவித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்தி வழங்குவதற்கு;

(m) பல்கலைக்கழகத்திற்குள் உள்ள குடியிருப்புகள், மாணவர் விடுதிகள் ஆகியவற்றை நிறுவி மற்றும் பேணி மற்றும் மேற்பார்வையிடுவதற்கும் மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் உடல் நலன் மற்றும் பொது நலன், நடவடிக்கை ஆகியவற்றை வளர்ப்பதற்கு;

(n) ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வு செய்வதற்காக மற்றும் அந்த நோக்கத்திற்காக பல்கலைக்கழகம் தேவையெனக் கருதலாகும் பிற நிறுவனங்கள் அல்லது குழுமங்களுடன் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்வதற்கான வகை முறைகளைச் செய்வதற்கு;

(o) நிலை விதிகளுக்கு இணங்க, ஒரு மையம், ஒரு நிறுவனம், ஒரு துறை அல்லது நேர்விற்கேற்ப, பள்ளி ஆகியவற்றை விளம்புகை செய்வதற்கு;

(p) தேர்வு, மதிப்பாய்வு அல்லது சோதனை முறை பிற எதுவும் உள்ளடங்கலான பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கைக்கான தரங்களைத் தீர்மானிப்பதற்கு

(q) கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளின் செலுத்தத்தை கோரிப் பெறுதலை வகுத்துரைப்பதற்கு;

(r) குடியிருப்பு, ஒழுங்குமுறை மற்றும் பெண்களுக்கான கற்பித்தல் மற்றும் பல்கலைக்கழகம் தான் பொருத்தமெனக் கருதலாகும் பிற குறைபாடுடைய மாணவர்கள் பொறுத்து, அத்தகைய ஏற்பாடுகளை செய்வதற்கு;

(s) பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே ஒழுங்குமுறையை நெறிப்படுத்துவதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு மற்றும் பல்கலைக்கழகத்தால் இதன் பொருட்டு தேவையெனக் கருதலாகும், அத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு;

(t) பல்கலைக்கழகத்தின் பணியாளர்களின் உடல் நலம் மற்றும் பொது நலத்தின் வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்வதற்கு;

(u) பல்கலைக்கழகத்தின் நலத்திற்காக நன்கொடைகளைப் பெறுவதற்கு மற்றும் விற்பனை அல்லது குத்தகை அல்லது அசையும் அல்லது அசையா சொத்து எதனின் வாடகை ஆகியவற்றின் மூலம் பெறுவதற்கு, வைத்து வருவதற்கு, மேலாண்மை செய்வதற்கு மற்றும் தீர்வு செய்வதற்கு;

(v) பொறுப்புக் கட்டளையின் ஒப்புதலுடன் பல்கலைக்கழகத்தின் சொத்திற்கு எதிரான ஒற்றி அல்லது அடமானம் ஆகியவற்றின் மூலமாக பிணையம் அன்றி கடன் வாங்குவதற்கு;

(w) ஒப்பந்தத்தின் பேரிலோ அல்லது பிறவாறான பார்வையிடும் பேராசிரியர்கள், தகைசால் பேராசிரியர்கள், கலந்துரையாளர்கள், புத்தாய்வு மாணவர்கள், வல்லுநர்கள், ஓவியர்கள், பாடத்திட்டத்தை எழுதுபவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை உயர்த்துவதற்கு பங்கு கொள்ளும் அத்தகைய பிற நபர்களை அமர்த்துவற்கு;

(x) மிகைப்படியான சுவரோவிய கல்விகள் மற்றும் களப்பணி ஆகியவற்றை ஏற்பாடு செய்வதற்கு மற்றும் ஏற்றுக்கொள்வதற்கு;

(y) பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் அடைவதற்கு இடைவிளைவாக, எழுதுகின்ற அல்லது இணக்கமானதற்கு உகந்ததாய் இருக்கலாகும், அத்தகைய பிற செயல்கள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்தையும் செய்வதற்கு.

Verified by RealEstate™

சேர்க்கை மற்றும் படிநிலைகள்.

9. (1) பல்கலைக்கழகமானது, இந்தச்சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, பல்கலைக்கழக மானியக்குழுவின் மற்றும் தேர்வுக்கேற்ப பிறசட்டப்படி அமைந்த அதிகார அமைப்பு எதனின் தொடர்புடைய நிலையமை மற்றும் ஒழுங்குமுறை விதிகள், அனைத்து நபர்களுக்கும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு **(1)**–இல் அடங்கியுள்ள எதுவும் பல்கலைக்கழகத்தைக் கோருதல் கூடாது,—

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியை அல்லது தரத்தைப் பெற்றிருக்காத நபர் எவரையும் படிப்பு பிரிவு எதிலும் சேர்க்குமாறு;

(b) பட்டம் அல்லது பிற கல்விசார் சிறப்புகள் வழங்குவதற்கு தேவையான குறைந்த அளவு தரத்திற்கும் கீழே இருக்கின்ற கல்விசார் பதிவேட்டில் மாணவர் எவரையும் பல்கலைக்கழக பட்டியலில் வைத்திருக்குமாறு;

(c) பல்கலைக்கழகத்தின் உரித்தத்திற்கு அல்லது பிற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் மாணவர் எவரையும் சேர்க்குமாறு அல்லது வைத்திருக்குமாறு; அல்லது

(d) பாடப்பிரிவுக்காக வகுத்துரைக்கப்படலான தேவையான கட்டணங்களைச் செலுத்த தவறுகின்ற மாணவர் எவரையும் பல்கலைக்கழகத்தின் பதிவு பட்டியலில் வைத்திருப்பதற்கு;

(3) உட்பிரிவு **(1)** மற்றும் **(2)** ஆம் வகைமுறைகளுக்கு உட்பட்டு, வகுத்துரைக்கும் பல்கலைக்கழகத்தின் நிலையான சேர்க்கை முறைப்படி பல்கலைக்கழகம், தமிழ்நாடு மாணவர்கள் தங்குமிடத்திற்காக பாடத்திட்டக் கல்வி ஒவ்வொன்றிலும், முப்பத்தைந்து விழுக்காடு இடங்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

(4) மாணவர்களின் சேர்க்கைக்கு **(3)** ஆம் உட்பிரிவின்படி தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் முப்பத்தைந்து விழுக்காட்டை நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் படி இடஒதுக்கீட்டினை செய்தல் வேண்டும்.

விளக்கம் : இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக “தமிழ்நாடு மாணவர் தங்குமிடம்” என்பது,—

(i) முந்தைய தகுதிபெறு தேர்வில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு கால அளவிற்கு தமிழ்நாடு மாநிலத்தில் தங்கியிருந்த மாணவர் ஒருவரோ அல்லது அவருடைய பெற்றோர்களோ

(ii) தகுதி பொதுத் தேர்வுக்கு முன் செல்கிற ஐந்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு கால அளவிற்கு தமிழ்நாடு மாநிலத்தில் கல்வி நிறுவனங்கள் ஏதொன்றிலும் படித்த ஒரு மாணவர் என்று பொருள்படும்.

பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்.

10. இப்பல்கலைக்கழகம் பின்வரும் அலுவலர்களை கொண்டிருக்கும், அதாவது :—

(a) வேந்தர்;

(b) துணை வேந்தர்;

(c) இணை – துணை வேந்தர்;

(d) பதிவாளர்;

(e) முதன்மையர்கள் மற்றும் இயக்குநர்கள்;

(f) நிதி அலுவலர்;

(g) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்; மற்றும்

(h) இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்களுக்கென நிலையமை விதிகளால் விளம்பப்படக்கூடிய பிற அலுவலர்.

வேந்தர்.

11. (1) வேந்தர், வகுத்துரைக்கும் மூன்றாண்டுகால அளவு ஒன்றிற்கு பொறுப்புக் கட்டளையின் மேலாண்மைக் குழுவால் அமர்த்தப்படுதல் வேண்டும்.

(2) வேந்தர், அவர் தமது பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழகத்தின் தலைவராக இருப்பார் மற்றும் ஒரு இடைக்கால செயலாட்சி மன்றம் ஒன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும். அவ்வாறு அமைத்துருவாக்கப்பட்ட இடைக்கால செயலாட்சி மன்றம், 21ஆம் பிரிவின்படியான செயலாட்சி மன்றத்தின் அமைப்பானது நிலைத்து இல்லாது போகும்.

(3) வேந்தர், தம் பதவி விலகலை முகவரியிட்டு தாம் கையொப்பமிட்டு எழுத்துவாயிலாக பொறுப்புக் கட்டளை அல்லது மேலாண்மைக் குழுவிற்கு அனுப்பலாம்.

12. (1) துணை வேந்தர், மூன்றாண்டுகால அளவு ஒன்றிற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வேந்தரால் அமர்த்தப்படுதல் வேண்டும். துணை வேந்தர்.

(2) துணை வேந்தர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் மற்றும் அத்தகைய பிற செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

13. (1) இணை – துணை வேந்தர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் செயலாட்சி மன்றத்தால் அமர்த்தப்படுதல் வேண்டும். இணை –துணை வேந்தர்.

(2) இணை – துணைவேந்தர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் மற்றும் அத்தகைய பிற செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும்.

14. (1) பதிவாளர், பல்கலைக்கழகத்தின் சம்பளம் பெறும் முழு நேர அலுவலராக இருத்தல் வேண்டும். பணிவரையறைகள் மற்றும் பணிவரைக்கட்டுகள் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும். பதிவாளர்.

(2) பதிவாளராக பதவி வகிப்பவர் பல்கலைக்கழகத்தின் மானியக்குழுவினால் வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பதிவாளர், பல்கலைக்கழகத்தின் சார்பாக உடன்படிக்கைகளும் கையெழுத்திட்ட ஆவணங்கள், உறுதியொப்பம் இடப்பட்ட பதிவுருக்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கு அதிகாரம் கொண்டிருப்பார் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பிற செயற்பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) பதிவாளர், செயலாட்சி மன்றம் மற்றும் கல்வி அலுவல் குழு ஆகியவற்றின் பதவி வழிச் செயலாளராக இருந்து வருவார்.

15. முதன்மையர் மற்றும் இயக்குநர் ஒவ்வொருவரும், அத்தகைய முறையில் அமர்த்தப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய கடமைகளை ஆற்றுதலும் வேண்டும். முதன்மையர்கள் மற்றும் இயக்குநர்கள்.

16. (1) நிதி அலுவலர், அத்தகைய முறையில் அமர்த்தப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய செயற்பணிகளை ஆற்றுதலும் வேண்டும். நிதி அலுவலர்.

(2) நிதி அலுவலர், நிதிக்குழுவின் பதவி வழிச் செயலராக இருத்தல் வேண்டும்.

17. (1) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கால அளவுக்கும் அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும், அமர்த்தப்படும் இப்பல்கலைக்கழகத்தின் ஒரு முழு நேர அலுவலராக இருப்பார். தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

(2) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

18. பல்கலைக்கழகத்தின் பிற அலுவலர்களைப் பணியமர்த்தும் முறையும் அவர்களுக்குள்ள அதிகாரங்களும் கடமைகளும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும். பிற அலுவலர்கள்.

19. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் பின்வருவனவாகும் –– பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்.

Verified by LawEstate ™

(a) நிர்வாக ஆட்சி மன்றம்;

(b) செயலாட்சி மன்றம்;

(c) கல்வி மன்றம்;

(d) நிதிக்குழு;

(e) திட்டவாரியம்;

(f) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகளென நிலையமை விதிகளினால் விளம்புகை செய்யப்படலாகும் அத்தகைய பிற அதிகார அமைப்புகள்.

நிர்வாக ஆட்சி மன்றம்.

20. (1) நிர்வாக ஆட்சி மன்றத்தின் அமைப்பும் அதன் உறுப்பினர்களின் பதவிக்காலமும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, நிர்வாக ஆட்சி மன்றம், பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் உடையது ஆகும், அவையாவன:—

(a) அவ்வப்போது, பல்கலைக்கழகத்தின் விரிவான கொள்கைகளையும் செயல்முறை திட்டங்களையும் ஆய்வு செய்து பல்கலைக்கழகத்தின் செயற்பணி, மேம்பாடு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்கான நடவடிக்கைகளை அறிவுறுத்துதல்;

(b) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் மற்றும் அத்தகைய கணக்குகள் பற்றிய ஆண்டறிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றின் மீது தீர்மானங்கள் நிறைவேற்றுதல்;

(c) ஆலோசனைக்காக அதற்கு குறித்தனுப்பப்படும் பொருட்பாடு எதனையும் பொறுத்து வேந்தருக்கு ஆலோசனை வழங்குதல்;

(d) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளைப்புரிதல்.

செயலாட்சி மன்றம்.

21. (1) செயலாட்சி மன்றமானது, பல்கலைக்கழகத்தின் முதன்மை செயலாட்சி அமைப்பாகும்.

(2) செயலாட்சி மன்றம், பன்னிரெண்டிற்கு மேற்படாத உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும், அவர்களில் இரண்டு உறுப்பினர்கள், --

(a) உயர்கல்வித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்– பதவி வழி உறுப்பினர்;

(b) கல்லூரிக்கல்வி இயக்குநர்– பதவி வழி உறுப்பினர் ஆவார்.

மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அமர்த்தப்படும் எஞ்சிய உறுப்பினர்கள்.

(3) செயலாட்சிமன்றத்தின் அதிகாரங்களும் செயற்பணிகளும், வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

கல்வி மன்றம்.

22. (1) கல்விமன்றமானது, பல்கலைக்கழகத்தின் முதன்மைக் கல்வி அமைப்பாகும் மற்றும் நிலையமை விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, அவசர விதிகளும் பொருந்தத்தக்க ஒழுங்குமுறை விதிகளும், பல்கலைக்கழகத்தின் கல்விக் கொள்கைகள் மீது பொதுவான கண்காணிப்பைச் செலுத்துதல் வேண்டும்.

(2) கல்வி மன்றத்தின் அமைப்பும் அதன் உறுப்பினர்களின் பதவிக் காலமும் அதன் அதிகாரங்களும் செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

நிதிக்குழு.

23. (1) நிதிக்குழுவானது, பல்கலைக்கழகத்தின் நிதியியல் பொருட்பாடுகளைக் கவனித்துக் கொள்வதற்கான அதன் முதன்மை நிதியியல் அமைப்பாகும்.

(2) நிதிக்குழுவின் அமைப்பு அதன் உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் அதன் அதிகாரங்களும் செயற்பணிகளும், வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

Verified RealEstate ™

திட்ட வாரியம்.

24. (1) திட்ட வாரியமானது, பல்கலைக்கழகத்தின் முதன்மை திட்ட அமைப்பாகும். திட்ட வாரியம், உள்கட்டமைப்பும் கல்வி ஆதார செயல்திட்டமும் பொருந்தத்தக்க சட்டமுறை அதிகார அமைப்புகளின் நியதிகளை நிறைவு செய்கிறது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

(2) திட்ட வாரியத்தின் அமைப்பும், அதன் உறுப்பினர்களின் பதவிக்காலமும், அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் புலங்கள், மாணவர் சேர்ப்புக்குழு, தேர்வுக் குழு மற்றும் பிற அதிகார அமைப்புகள்.

25. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளென நிலையமை விதிகளினால் விளம்புகை செய்யப்படலாகும், பல்கலைக்கழகத்தின் புலங்கள், மாணவர் சேர்ப்புக்குழு, தேர்வுக் குழு மற்றும் அத்தகைய பிற அதிகாரஅமைப்புகளின் அமைப்பும் அவற்றின் அதிகாரங்களை மற்றும் செயற்பணிகளை, வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

நிலையமை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

26. (1) மேலாண்மைக்குழுவின் ஒப்பேற்பளிப்புக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிருவாகக்குழு நிலையமை விதிகளை வகுத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, நிலையமை விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன :—

(a) அவ்வப்போது அமைக்கப்படும், பல்கலைக்கழக அதிகாரஅமைப்புகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்;

(b) மேற்சொன்ன அதிகாரஅமைப்புகளின் உறுப்பினர்களின் நியமனம் மற்றும் பதவியில் தொடர்ந்து இருந்துவருதல், காலியிடங்களை நிரப்புதல் மற்றும் வகை செய்வதற்குத் தேவைப்படலாகும் அந்த அதிகாரஅமைப்புகள் தொடர்பான பிற பொருட்பாடுகள் அனைத்தும்;

(c) பல்கலைக்கழகத்தின் அலுவலர்களின் பணியமர்த்தம், அதிகாரங்கள் மற்றும் கடமைகள் மற்றும் அவர்களுக்குள்ள பணியூதியங்கள்;

(d) பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பிற கல்விசார் மற்றும் நிருவாகப் பணியாளர் தொகுதியினர் ஆகியோரைப் பணியமர்த்துதல் மற்றும் அவர்களுக்குள்ள பணியூதியங்கள்;

(e) கூட்டுசெயல்திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக குறிப்பிட்டக் கால அளவுக்கு, பல்கலைக்கழகத்திலோ அல்லது நிறுவனத்திலோ பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வி மற்றும் நிருவாகப் பணியாளர் தொகுதியினரைப் பணியமர்த்துதல்;

(f) ஓய்வு கால நலப்பயன்கள் காப்பீடு மற்றும் வருங்கால வைப்பு நிதியம், பணி நீக்கம் செய்யும் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றிய முறை உள்ளடங்கலான, பணியாளர்களின் பணி நிபந்தனைகள்;

(g) பணியாளர்களின் பணி மூப்பினை நெறிப்படுத்தும் நெறிகள்;

(h) பணியாளர்களுக்கும் அல்லது மாணவர்களுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் இடையேயான பூசல்களைத் தீர்த்து வைப்பதற்கான நடைமுறை;

(i) பல்கலைக்கழகத்தின் அலுவலர் எவரின் அல்லது பிற அதிகார அமைப்பின் நடவடிக்கைக்கு எதிராக பணியாளர் எவராலும் அல்லது மாணவர்களால் செயலாட்சி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்வதற்கான நடைமுறை;

(j) மதிப்புறு பட்டங்கள் அளித்தல்;

(k) பட்டம், பட்டயம், உறுதிச் சான்று மற்றும் பிற கல்வி சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றை திரும்பப் பெறுதல்;

(l) பட்டதாரி உதவித் தொகைகள், படிப்பு உதவித்தொகைகள், மாணவர் உதவித் தொகைகள் பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை நிறுவுதல்;

(m) மாணவர்களிடையே ஒழுங்குக் கட்டுப்பாட்டைப் பேணுதல்;

Verified by RealEstate™

(n) துறை, மையங்கள் மற்றும் பிற நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் நீக்குதல்;

(o) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்புகள் அல்லது அலுவலர்கள் ஆகியோரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரங்களை ஒப்படைவு செய்தல் ; மற்றும்

(p) இந்தச் சட்டத்தால் வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும், பிறபொருட்பாடுகள் அனைத்தும்.

(3) பல்கலைக்கழகத்தின் அதிகாரஅமைப்பு எதனின் அதிகாரங்களை அல்லது அமைப்பை பாதிக்கும் வகையில் நிலையமை விதி எதனையும் திருத்தமோ நீக்கறவோ செய்வதற்கு, உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் மீது எழுத்து வடிவில் கருத்து ஒன்றைத் தெரிவிக்கும் வாய்ப்பு ஒன்று அத்தகைய அதிகார அமைப்பிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வரையில், செயலாட்சி மன்றம் அத்திருத்தமோ நீக்கறவோ செய்தல் ஆகாது, மற்றும் அவ்வாறு தெரிவிக்கப்படும் கருத்து எதுவும் செயலாட்சி மன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

நிலையமை விதிகள், எவ்வாறு செய்யப்படுகிறது.

27. (1) செயலாட்சி மன்றம், அவ்வப்போது, இந்தப் பிரிவில் இதன் பின்பு வகை செய்யப்பட்டுள்ள முறையில், நிலையமை விதிகளைச் செய்யலாம் அல்லது நிலையமை விதிகளைத் திருத்தம் செய்யலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்.

(2) செயலாட்சி மன்றத்தினால் பிறப்பிக்கப்படும் ஒரு நிலையமை விதியோ அல்லது ஒரு நிலையமை விதிக்கான ஒரு திருத்தமோ, அல்லது நீக்கறவோ மேலாண்மைக்குழு முன் வைக்கப்படுதல் வேண்டும். அக்குழு அதற்கு ஏற்பிசைவளிக்கலாம் அல்லது அதனை ஏற்பிசைவளிக்க மறுக்கலாம். செயலாட்சிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் நிலையமை விதி ஒன்று அல்லது ஒரு நிலையமை விதிக்கான திருத்தம் ஒன்று, அல்லது அதன் நீக்கறவு ஒன்று, அது மேலாண்மைக்குழுவினால் ஏற்பிசைவளிக்கப்படும் வரையில் செல்லுந்தன்மையுடையதாகாது.

அவசர விதிகள் செய்வதற்கான அதிகாரம்

28. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் நிலையமை விதிகளுக்கும் உட்பட்டு, அவசர விதிகள் மேலாண்மைக்குழுவின் ஒப்பேற்பளிப்பிற்கு உட்பட்டு, செயலாட்சிமன்றத்தினால் செய்யப்படுதல் வேண்டும், அது, பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவை யாவன:—

(a) பல்கலைக்கழகத்தில் மாணவர்களைச் சேர்த்தல் மற்றும் அவர்களை அவ்வாறாகப் பதிவு செய்தல்;

(b) பல்கலைக்கழகத்தின் அனைத்து பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் உறுதிச்சான்றுகள் ஆகியவற்றிற்காக விதிக்கப்பட வேண்டிய கல்விப்பாடத்திட்டங்கள்;

(c) பயிற்றுவிக்கும் மொழி மற்றும் தேர்வுக்கான மொழி;

(d) பட்டம், பட்டயம், உறுதிச் சான்று மற்றும் பிற கல்வி சிறப்புப்பட்டங்கள் வழங்குதல், அதற்கான தகுதிப்பாடு மற்றும் அதனை வழங்குதல் மற்றும் பெறுதல் பொறுத்து எடுத்துக் கொள்ளப்படும் பொருட்பாடுகள்;

(e) பல்கலைக்கழகத்தின் கல்வி பாடத்திட்டங்களுக்காகவும் பல்கலைக்கழகத் தேர்வுகள், பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் உறுதிச் சான்றுகள் ஆகியவற்றிற்கு அனுமதித்தலுக்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்;

(f) பட்டதாரி உதவித்தொகைகள், படிப்பு உதவித்தொகைகள், மாணவர் உதவித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் வழங்குவதற்கான நிபந்தனைகள்;

(g) தேர்வு செய்யும் அமைப்புகள், தேர்வாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் ஆகியோரின் பதவிக்காலம் மற்றும் பதவியமர்த்தும் முறை மற்றும் அவர்களின் கடமைகள் உள்ளடங்கலாக, தேர்வுகள் நடத்துதல்;

(h) பல்கலைக்கழக மாணவர்களின் உறைவிடத்தின் நிபந்தனைகள்;

(i) மாணவிகளுக்கான உறைவிடம், ஒழுங்குக்கட்டுப்பாடு மற்றும் போதனைக்காக செய்யப்படும் சிறப்பு ஏற்பாடுகள், எவையேனுமிருப்பின், அவை மற்றும் அவர்களுக்காக பல்கலைக்கழகத்திற்குள் சிறப்பு பாடப்பிரிவுகளுக்கான படிப்புகளை வகுத்துரைத்தல்;

Verified @ RegiState™

(j) நிலையமை விதிகளில் வகைமுறை செய்யப்பட்டிராதவர்கள் அல்லாத பிற பணியாளர்களைப் பணியமர்த்தம் செய்தல் மற்றும் அவர்களுக்குள்ள பணியூதியங்கள்;

(k) கல்வி மையங்கள், கல்வி வாரியங்கள், பல்வகைப் பயிற்சிக் கல்விகள், சிறப்பு மையங்கள், தனித்துறை ஆய்வுக்கூடங்கள் மற்றும் பிற குழு ஆகியவற்றை நிறுவுதல்;

(l) கற்றறிந்த அமைப்புகள் அல்லது சங்கம் உள்ளடங்கலான பிற பல்கலைக்கழகங்களுடனும் அதிகார அமைப்புகளுடனும் ஒத்துழைப்பின் மற்றும் உடனுறைப்பின் முறை;

(m) பல்கலைக்கழகத்தின் கல்வியை மேம்படுத்துவதற்காகத் தேவையெனக் கருதப்படும் பிற அமைப்பு எதனையும் உருவாக்குதல், இணைப்பாக்கம் மற்றும் செயல்பாடுகள்;

(n) தேர்வாளர்கள், மதிப்பீட்டாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பட்டியல்படுத்துபவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட வேண்டிய பணியூதியம்;

(o) நிலையமை விதிகளினால் வகுத்துரைக்கப்படாதவையான ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வி பணியாளர் தொகுதியினருக்கான அத்தகைய பிற பணி நிபந்தனைகள்.

அவசர விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன.

29. (1) அவசர விதிகளைச் செய்கையில் செயலாட்சி மன்றம், மேலாண்மைக்குழுவை கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

(2) செயலாட்சிமன்றத்தினால் செய்யப்படும் அவசரவிதிகள் அனைத்தும் அது பணிக்கிறவாறு அத்தகைய தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

30. (1) பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையானது, செயலாட்சி மன்றத்தின் பணிப்புரையின்படி தயாரிக்கப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய தேதி அன்றோ அதற்குப் பின்போ நிர்வாக ஆட்சி மன்றம் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் நிர்வாக ஆட்சி மன்றம், அந்த அறிக்கையினை அதன் ஆண்டுக் கூட்டத்தில் ஆழ்ந்து ஆராய்தல் வேண்டும்.

(2) நிர்வாக ஆட்சி மன்றம், அந்த ஆண்டறிக்கையினை, அதன் கருத்துரை, ஏதேனுமிருப்பின், அதனுடன் சேர்த்து, வேந்தருக்கு பணிந்தனுப்புதல் வேண்டும்.

ஆண்டுக் கணக்குகள்.

மையச் சட்டம் XXXVIII / 1949.

31. (1) பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகளும், இருப்பு நிலையும் செயலாட்சி மன்றத்தின் பணிப்புரைகளின்படி தயாரிக்கப்படுதல் வேண்டும் மற்றும், ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது ஒரு முறையேனும் மற்றும் பதினைந்து மாதங்களுக்கு மேற்படாத இடைவெளிகளில், பெயர்பெற்ற பட்டயக் கணக்கர் பட்டறிவுள்ள மற்றும் 1949–ஆம் ஆண்டு பட்டயக் கணக்கர் சட்டத்தின் வகைமுறையின்படி தணிக்கை நடத்துவதற்கு தகுதிப்பாடுடைய நிறுவனத்தால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆண்டுக் கணக்குகளின்படியொன்று, அதன் மீதான தணிக்கை அறிக்கையுடன் செயலாட்சி மன்றத்தின் குறிப்புரைகளுடன் சேர்த்து, நிர்வாக ஆட்சி மன்றத்திற்கும் வேந்தருக்கும் அதனுடைய ஒப்புதல் பெறுவதற்காக பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

பணியாளர்களின் பணி நிபந்தனைகள்.

32. (1) பல்கலைக்கழகத்தின் பணியாளர் ஒவ்வொருவரும், நிலையமை விதிகளின் வகைமுறைகளின்படி பணியமர்த்தம் செய்யப்படுதலோ அல்லது ஈடுபடுத்திக் கொள்ளப்படுதலோ வேண்டும்.

(2) பல்கலைக்கழகத்துக்கும் நிலைபேறுடன் பணியமர்த்தம் செய்யப்பெற்றுள்ள பணியாளர்களில் எவருக்கும் இடையே எழும் பூசல் எதுவும், துணைவேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். அவர், அந்தப் பூசலை, அது குறித்தனுப்பப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், பணியாளருக்கு வாய்ப்பு ஒன்று வழங்கிய பின்பு, முடிவு செய்தல் வேண்டும்.

Verified RealEstate™

(3) குறையுற்றப் பணியாளர், துணை வேந்தரின் முடிவுக்கு எதிராக வேந்தரிடம் மேல்முறையீடு ஒன்றை முன்னிடலாம். அத்தகைய மேல்முறையீட்டில் வேந்தரின் முடிவே இறுதியானதாகும்.

(4) தற்காலிகமாகவோ அல்லது தனிநோக்கத்திற்காகவோ அல்லது பகுதி நேரத்திற்காகவோ அல்லது இடைவரவாகவோ ஈடுபடுத்தப்படும் பணியாளர் எவரையும் பொறுத்த பூசல் எதுவும் தொடர்புடைய துறைத் தலைவரால் கேட்கப்பட்டு இறுதியாக முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

பல்கலைக்கழக படிப்புப் பிரிவுகளுக்கும் தேர்வுகளுக்கும் அனுமதித்தல்.

33. (1) (a) பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், விருதுகள் அல்லது பட்டயங்கள் ஆகியவற்றிற்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்கான பல்கலைக்கழகத்தின் படிப்புகளுக்கு எவரும்,—

(i) அவர், அதற்காக வகுத்துரைக்கப்படும் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலன்றியும், மற்றும்

(ii) அவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற கல்விசார் நிபந்தனைகளை நிறைவு செய்தாலன்றியும், அப்படிப்புகளுக்கு அவர் அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(b) பல்கலைக்கழகத் தேர்வு ஒன்றுக்கான தேர்வு நாடுபவர் ஒவ்வொருவரும், கல்வி மன்றத்தின் பரிந்துரையின் பேரில் பிறப்பிக்கப்படும் செயலாட்சி மன்றத்தின் சிறப்பு ஆணை ஒன்றின் வழி இந்த உட்பிரிவின் வகைமுறைகளிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டாலன்றி, பல்கலைக்கழகம் ஒன்றின் ஓர் உறுப்பினராக பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விதிவிலக்கு எதுவும் செயலாட்சி மன்றம் பொருத்தமானதாகக் கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு கொடுக்கப்படலாம்.

(2) தேர்வு நாடுபவர் எவரும், அவர் பல்கலைக்கழகத்தின் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்யப்பெற்றிருந்தாலன்றியும், மற்றும் அதற்காகத் தேவைப்படும் வருகை பற்றிய வேண்டுதல்களை நிறைவு செய்திருந்தாலன்றியும் மற்றும் கல்விக்குழுவின் பரிந்துரையின் பேரில் பிறப்பிக்கப்பட்ட செயலாட்சி மன்றத்தின் ஆணை ஒன்றினால் பதிவு செய்வதற்கான அல்லது வருகைக்கான அல்லது அவை இரண்டுக்குமான அத்தகைய வேண்டுறுத்தங்களிலிருந்து அவர் விதிவிலக்களிக்கப்பட்டாலன்றியும் அவர், பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் அனுமதிக்கப்படுதல் ஆகாது. இந்தப் பிரிவின்படி வழங்கப்படும் விதிவிலக்குகள் செயலாட்சி மன்றம் பொருத்தமெனக் கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

(3) கல்விக்குழுவின் அல்லது நேர்வுக்கேற்ப , தேர்வுகள் கட்டுப்பாட்டாளரின் ஆணைகளினால் அல்லது பரிந்துரையினால் பல்கலைக்கழகத்தின் பெயர்ப்பட்டியலிலிருந்து பெயர் நீக்கப்பட்டிருப்பவரும், ஓர் ஆண்டுக்கு மேல் தேர்வுகள் எழுதுவதிலிருந்து தடுக்கப்பட்டிருப்பவருமான ஓர் தேர்வுக்கான மாணவர் அல்லது தேர்வு நாடுபவர் எவரும், அத்தகைய ஆணையைப் பெற்ற தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள், மேற்சொன்ன அதிகார அமைப்புகளின் முடிவை செல்லாநிலையதாக்குமாறு துணை–வேந்தருக்கு மேல்முறையீடு செய்யலாம்.

(4) இது குறித்து துணை–வேந்தரால் எடுக்கப்படும் முடிவு எதுவும் இறுதியானதாகும்.

தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதியம் மற்றும் ஓய்வூதியங்கள்.

34. பல்கலைக்கழகம் அதன் பணியாளர்களின் நலப்பயனுக்காக செயலாட்சி மன்றத்தினால் முடிவு செய்யப்படலாகும், அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு தாம் பொருத்தமெனக் கொள்ளும் அத்தகைய ஓய்வூதிய அல்லது நலத்திட்டங்களை அல்லது வருங்கால வைப்பு நிதியத்தை அமைக்கலாம் அல்லது அத்தகைய காப்பீட்டுத் திட்டங்களுக்கு வகை செய்யலாம்.

Verified RealEstate™

35. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பின் ஓர் உறுப்பினராக உரியவாறு நபர் எவரும் நியமனம் செய்யப்பெற்றிருக்கிறாரா அல்லது அமர்த்தப்பெற்றிருக்கிறாரா அல்லது உறுப்பினராக இருப்பதற்கு உரிமை கொண்டிருக்கிறாரா என்பதைக் குறித்து பிரச்சினை எதுவும் எழுமாயின், அந்தப் பொருட்பாடு வேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். அதன் மீது அவருடைய முடிவே இறுதியானதாகும்.

அதிகார அமைப்புகள் மற்றும் அமைப்புகளின் அமைப்பு பற்றிய பூசல்கள்.

36. இந்தச் சட்டத்தின்படியோ அல்லது நிலையமை விதிகளின்படியோ குழுக்களை அமைப்பதற்கு பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதுவும் அதிகாரம் கொடுக்கப்படுகிறவிடத்து, அத்தகைய குழுக்கள், பிறவாறாக வகைசெய்யப்பட்டவாறு, தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களையும் மற்றும் ஒவ்வொரு நேர்விலும் அதிகார அமைப்பு பொருத்தமெனக் கருகிறவாறு அத்தகைய பிற நபர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

குழுக்களை அமைத்தல்.

37. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினர்களிடையேயுள்ள காலியிடங்கள் அனைத்தும் இயலக் கூடிய விரைவில், அவர் எவருடைய இடம் காலியானதோ அவர் அமர்த்தப் பெற்றிருக்கும் அல்லது நியமனம் செய்யப்பெற்றிருக்கும் எஞ்சிய காலத்திற்கு உறுப்பினர்களை அமர்த்திய அல்லது நியமனம் செய்த நபராலோ அல்லது அமைப்பாலோ நிரப்பப்படுதல் வேண்டும்.

காலியிடங்களை நிரப்புதல்.

38. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதிலும் உள்ள ஒரு காலியிடம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்ததில் உள்ள குறைபாடு அல்லது முறைகேடு எதனின் அல்லது நேர்வின் தகுதிகளைப் பாதிக்காத அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையிலுள்ள குறைபாடு அல்லது முறைகேடு எதனின் காரணமாகவோ அல்லது பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு, இந்தச் சட்டத்தின்படி வேண்டுறுத்தப்பட்டுள்ள அத்தகைய இடைவெளிகளில் கூடவில்லை என்ற காரணமாகவோ மட்டுமே செல்லாநிலையதாக்கப்படுதல் ஆகாது.

பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் மற்றும் பிற அமைப்புகளின் நடவடிக்கைகள் அவற்றின் காலியிடங்கள் இருப்பதன் காரணமாக செல்லாதவையாக ஆக்கப்படுதல் ஆகாது.

39. (1) செயலாட்சி மன்றமானது இதன் பொருட்டு எழுத்து வடிவில் செய்யப்பட்ட ஓர் ஆணையினால் எந்த ஒரு நபரையும், அத்தகைய நபர் ஒழுக்க நெறி தீயொழுக்கம் உள்ளாகிறது என செயலாட்சி மன்றம் கருதும் குற்றச்செயல் ஒன்றுக்காக நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாராயின், செயலாட்சி மன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் ஒரு பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்றினாலும், செயலாட்சி மன்றத்தின் கூட்டத்தில் வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் குறையாத ஒரு பெரும்பான்மையினராலும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கலாம்.

பல்கலைக்கழக உறுப்பினர் நிலையிலிருந்து நீக்குதல்.

(2) செயலாட்சி மன்றம், இதன்பொருட்டு எழுத்துவடிவில் பிறப்பிக்கப்படும் ஓர் ஆணையினால் கூட நபர் எவரையும், அவர் பித்துபிடித்தவராக ஆகியிருப்பாராயின் அல்லது ஒரு நொடித்துப் போனவரென நீதிமுறையில் தீர்மானிக்கப் பட்டிருப்பாராயின் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கப்படலாம்.

(3) இந்தப் பிரிவின்படி நபர் எவருக்கும் எதிரான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு அவருக்குத் தகுவான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி அவருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

(4) உட்பிரிவு (1)–ன் படியோ அல்லது (2) ஆம் உட்பிரிவின்படியோ நேர்வுக்கேற்ப, பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையின்படி ஒன்று, அது, அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், வகுத்துரைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய நபருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

Verified by RegisNote™

பல்கலைக்கழகத்தின் பதிவணங்களை மெய்ப்பிக்கும் முறை.

40. பல்கலைக்கழகத்தின் வசம் இருக்கும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது குழு எதனின் பற்றுச்சீட்டு, விண்ணப்பம், அறிவிப்பு, நடவடிக்கை, தீர்மானம் எதனின் படி ஒன்று, பதிவாளரால் உறுதிச் சான்றளிக்கப்படுமானால், அத்தகைய பற்றுச்சீட்டு, விண்ணப்பங்கள், அறிவிப்பு, ஆணை, நடவடிக்கை அல்லது தீர்மானம் ஆவணங்களுக்கான அல்லது பதிவேட்டிலுள்ள பதிவு இருப்பதற்கான முதல் நோக்கிலான சான்றாகப் பெறப்படுதல் வேண்டும் மற்றும் மூல ஆவணங்கள் முன்னிடப்படுமானால் சான்றில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவிடத்து, அதிலுள்ள பொருட்பாடுகளுக்கும் நடவடிக்கைக்குச் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நிலையான அறக்கட்டளை நிதியம்.

41. (1) பொறுப்புக் கட்டளையானது குறைந்தது ஐம்பது கோடி ரூபாய்க்கு நிலையான அறக்கட்டளை ஒன்றை நிறுவுதல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் நிலையான அறக்கட்டளை நிதியத்தை முதலீடு செய்வதற்கு அதிகாரமுடையதாகும்.

(3) பல்கலைக்கழகம் பணத்தொகை எதனையும், பொது நிதியத்திலிருந்தோ அல்லது வளர்ச்சி நிதியத்திலிருந்தோ நிலையான அறக்கட்டளை நிதியத்திற்கு மாற்றலாம்.

(4) உட்பிரிவு (1)–இல் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சத் தொகைக்கு மேற்படும் தொகை எதுவும் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி நோக்கங்களுக்காக பல்கலைக்கழகத்தால் நிலையான அறக்கட்டளை நிதியத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படலாம்.

பொது நிதியம்.

42. (1) பல்கலைக்கழகம், பொது நிதியம் ஒன்றை நிறுவுதல் வேண்டும். அதில் பின்வரும் தொகை வரவு வைக்கப்படுதல் வேண்டும். அவையாவன:—

(a) பல்கலைக்கழகத்தால் விதிக்கப்படலாகும் கட்டணங்கள் அனைத்தும் ;

(b) பிற ஆதாரம் எதிலிருந்தும் பெறப்படும் பணத்தொகைகள் அனைத்தும்;

(c) பொறுப்புக் கட்டளையால் செய்யப்படும் பங்களிப்புகள் அனைத்தும் ; மற்றும்

(d) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலும் தடைசெய்யப்படாத பிற நபர் எவராலும் அல்லது அமைப்பு எதனாலும் இதன் பொருட்டு செய்யப்படும் பங்களிப்புகள் அனைத்தும்

(2) பொது நிதியத்தில் வரவு வைக்கப்படும் பணங்கள், பல்கலைக்கழகத்தின் தொடர் செலவினங்கள் அனைத்தையும் செய்வதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

வளர்ச்சி நிதியம்.

43. (1) பல்கலைக்கழகம், வளர்ச்சி நிதியம் ஒன்றையும் நிறுவுதல் வேண்டும். அதில் பின்வரும் பணங்கள் வரவு வைக்கப்படுதல் வேண்டும். அவையாவன:—

(a) மாணவர்களிடமிருந்து விதிக்கப்படலாகும் வளர்ச்சிக் கட்டணங்கள்;

(b) பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி நோக்கத்திற்காக பிற ஆதாரங்களிலிருந்து பெறப்படும் பணத் தொகைகள் அனைத்தும்;

(c) பொறுப்புக் கட்டளையால் செய்யப்படும் பங்களிப்புத் தொகைள் அனைத்தும்;

(d) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலும் தடை செய்யப்படாத பிற நபர் எவராலும் அல்லது அமைப்பு எதனாலும் இதன் பொருட்டு செய்யப்படும் பங்களிப்புத் தொகைகள் அனைத்தும்; மற்றும்

(e) நிலையான அறக்கொடை நிதியத்திலிருந்து பெறப்படும் வருமானங்கள் அனைத்தும்.

(2) அவ்வப்போது, வளர்ச்சி நிதியத்தில் வரவு வைக்கப்படும் பணங்கள் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

Verified RealEstate ™

நிதியத்தைப் பேணுதல்.

44. பிரிவு **41**, **42** மற்றும் **43** ஆகியவற்றின் படி நிறுவப்பட்ட நிதியங்கள் நிர்வாக ஆட்சி மன்றத்தின் பொதுவான கண்காணிப்பு மற்றும் கட்டளைக்கு உட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் முறைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுதல் வேண்டும்.

தகவலையும் பதிவணங்களையும் கோரிப்பெறுவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.

45. (1) அரசு கோரலாகிறவாறு, பல்கலைக்கழகத்தின் நிருவாகம் அல்லது நிதி மற்றும் பிற அலுவற்பாடுகள் தொடர்பான அத்தகைய தகவலை அல்லது பதிவணங்களை அளிப்பது, பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது அலுவலர் எவரின் கடமையாகும்.

(2) அரசு, இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட நிலையமை விதிகளின் அல்லது அவசர விதிகளின் மீறுகையொன்று இருக்கிறது என்று கருதுமாயின், **49** ஆம் பிரிவின்படி பல்கலைக்கழகத்திற்குத் தாம் தேவையென கொள்கிறவாறு அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்.

பல்கலைக்கழகத்தைக் கலைத்தல்.

46. (1) பல்கலைக்கழகம், எந்தக் காரணமாகவும் அதனைக் கலைப்பதற்கு கருதுமாயின், அது அரசுக்குக் குறைந்தது ஆறு மாதங்களேனும் எழுத்து வடிவில் அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு **(1)**–இல் குறிப்பிடப்பட்ட அறிவிப்பைப் பெற்றுக் கொள்வதன் பேரில், அரசு, பல்கலைக்கழகத்தைக் கலைக்கும் தேதியிலிருந்து பல்கலைக்கழகத்தின் வழக்கமான கல்விப் பயிற்சியில் கடைசி மாணவர்களின் தொகுதி வரையில் அவர்களின் பயிற்சியை அல்லது கல்விகளை முடிக்கும் வரையில் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில் பல்கலைக்கழகத்தை நிருவகிப்பதற்கான அத்தகைய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

கலைப்பின் போது பல்கலைக்கழகத்தின் செலவினம்.

47. (1) பிரிவு **46**–ன் படி பல்கலைக்கழகத்தைக் கலைக்கும் நடவடிக்கையின்போது பல்கலைக்கழகத்தின் நிருவாகச் செலவினமானது நிலையான அறக்கொடை நிதியம், பொது நிதியம் மற்றும் வளர்ச்சி நிதியம் ஆகியவற்றிலிருந்து ஏற்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு **(1)**–இல் சுட்டிக்காட்டப்பட்ட நிதியங்கள், பல்கலைக்கழகத்தின் செலவினத்தை எதிர்கொள்வதற்குப் போதுமானவையாக இல்லாதிருக்குமானால், அத்தகைய செலவினம், அரசால், பல்கலைக்கழகத்தின் சொத்துக்களை அல்லது சொத்திருப்புகளை அயலடைவு செய்து எதிர்கொள்ளப்படலாம்.

பல்கலைக்கழகத்தின் ஏற்பளிப்பு அரசால் நீக்கப்படுதல்.

48. (1) பல்கலைக்கழகம், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி செயல்படவில்லை என அரசு முக்கியமான மற்றும் போதிய அளவிலான சாட்டுரைகளுடனான முறையீடு ஒன்றைப் பெறுகிறவிடத்து, அது, அந்தக் முறையீட்டின்படி ஒன்றைச் சுட்டிக்காட்டி பல்கலைக்கழகத்தின் ஏற்பளிப்பு ஏன் நீக்கப்படுதல் ஆகாது என்பதற்கு இரண்டு மாதங்களுக்குக் குறைவாக இருக்கலாகாத, அத்தகைய காலத்திற்குள் காரணம் காட்டுமாறு பல்கலைக்கழகத்தை வேண்டுறுத்துதல் வேண்டும்.

(2) உட்பிரிவு **(1)**–ன் படி கொடுக்கப்பட்ட அறிவிப்புக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் பெறப்படுவதன் பேரில், பல்கலைக்கழகம் செயல்படுவதில் பல்கலைக்கழகம் தவறாக நடத்தப்படுகிற அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறை மீறுகிற முதல் நோக்கிலான நிகழ்வு ஒன்று கண்டறியப்பட்டிருக்கிறது என்று அரசு தெளிவுறக் காணுமாயின், அது, தாம் தேவையெனக் கொள்ளலாகும் அத்தகைய விசாரணைக்கு ஆணையிடுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு **(2)**–ன் படியான விசாரணை ஒன்றின் நோக்கங்களுக்காக, அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மீறியது பற்றிய சாட்டுரைகளை விசாரணை செய்வதற்கு விசாரணை அதிகாரஅமைப்பாக ஓர் அலுவலர் அல்லது அதிகார அமைப்பை அமர்த்துதல் வேண்டும்.

மையச்சட்டம் V / 1908.

(4) உட்பிரிவு **(3)**–ன் படி அமர்த்தப் பெற்ற விசாரணை அதிகார அமைப்பு ஒவ்வொன்றும், இந்தச் சட்டத்தின்படி தம் செயற்பணிகளைப் புரிகையில், உரிமை வழக்கு ஒன்றை மற்றும் குறிப்பாக பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்து விசாரணை செய்கையில், **1908** ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தும் உடையது ஆகும், அவையாவன:—

Verified by RealEstate

(a) சான்றளிப்பவர் எவருக்கும் அழைப்பாணை விடுத்து அவர் முன்னிலையாவதைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் அவரை ஆணைமொழியின் பேரில் விசாரணை செய்தல்;

(b) ஆவணம் எதனையும் வெளிக் கொணர்தல் மற்றும் முன்னிடுதல்;

(c) அலுவலகம் எதிலிருந்தும் பொது ஆவணம் எதனையும் அல்லது அதன்படி எதனையும் வேண்டிப் பெறுதல்;

(d) ஆணைமொழி ஆவணங்களின் மீது சான்றினைப் பெறுதல்;

(e) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(5) விசாரணை அறிக்கையினைப் பெறுவதன் பேரில், பல்கலைக்கழகம், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எவற்றையும் மீறியிருக்கிறது என்று அரசு தெளிவுறக் காணுமானால், அது, தேவையான செம்மையினைச் செய்யுமாறு பல்கலைக்கழகத்திற்குப் பணிப்புரை கொடுத்து இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை முறையாகச் செயல்படுத்துவதற்காக அறிவுறுத்துதல் வேண்டும்.

(6) பல்கலைக்கழகம், தொடர்ச்சியாக மூன்று தடவை இந்தச் சட்டத்தை மீறி வருகிறது என்று காணப்படுமானால், அரசு, அறிவிக்கை வாயிலாக, பல்கலைக்கழக மானியக் குழுவின் மற்றும் பிற சட்ட முறை அதிகார அமைப்புகளின் முன் ஒப்பேற்புடன் பல்கலைக்கழகத்தின் ஏற்பளிப்பினை நீக்கிக் கொள்ளலாம்.

(7) உட்பிரிவு **(6)**–ன் படி ஏற்பளிப்பை நீக்கும் நடைமுறையின்போது, அரசு நிலையான அறக்கொடை நிதியம், பொது நிதியம் அல்லது வளர்ச்சி நிதியம் ஆகியவற்றை பல்கலைக்கழகத்தின் அலுவற்பாடுகளை மேலாண்மை செய்யும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தலாம். பல்கலைக்கழகத்தின் நிதியங்கள் பல்கலைக்கழகத்தின் அவசியமான செலவினத்தை எதிர்கொள்வதற்குப் போதுமானவையாக இல்லையாயின், அரசு, மேற்சொன்ன செலவினங்களை எதிர் கொள்வதற்கு பல்கலைக்கழகத்தின் சொத்திருப்புகளை அல்லது சொத்துக்களை அயலடைவு செய்யலாம்.

கொள்கை பொருட்பாடுகள் மீது பணிப்புரைகள் வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.

49. அரசு, தாம் தேவையென கருதுகிறவாறு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இராத கொள்கை பொருட்பாடுகள் மீது பல்கலைக்கழகத்திற்கு, அவ்வப்போது, அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம். அத்தகைய பணிப்புரைகள், பல்கலைக்கழகத்தால் இணங்கி நடக்கப்படுதல் வேண்டும்.

கலைத்தல் அல்லது ஏற்பளிப்பை நீக்குவதன் பேரில் உடைமைகள், கடப்பாடுகளின் தகுநிலைகள்.

50. பல்கலைக்கழகத்தை கலைக்கும் அல்லது ஏற்பளிப்பை நீக்கும் நேர்வில், பல்கலைக்கழகத்தின் நிலையான அறக்கட்டளை நிதியம், பொதுநிதியம், வளர்ச்சி நிதியம் அல்லது பிற நிதியம் எதுவும் உள்ளடங்கலான உடைமைகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் மற்றும் கடப்பாடுகளும் கூட, பொறுப்புக் கட்டளைக்குச் சொந்தமானதாக இருக்கும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

51. (1) பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதையேனும் முதல் முதலில் அமைத்து உருவாக்குதல் குறித்தோ அல்லது மீண்டும் அமைத்துருவாக்குதல் குறித்தோ அல்லது பிறவாறு இந்தச் சட்டத்தின் வகைமுறை செயல்படுத்துதல் குறித்தும் இடர்ப்பாடு எதுவும் எழுமானால் அரசு, அறிவிக்கையின் மூலமாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக தேவையானது என்று அல்லது உகந்தது என்று தனக்கு தோன்றக் கூடிய இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாயிராத அத்தகைய வகைமுறையைச் செய்யலாம்:

வரம்புரை: ஆனால் அத்தகைய அறிவிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதியில் இருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்த பின்பு பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) உட்பிரிவு **(1)**–ன் படியோ அல்லது இந்தச் சட்டத்தின்படி பிறவகைமுறைகள் எவற்றின்படியோ பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் சட்ட மன்றப் பேரவை முன்பு வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடர் அல்லது அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு அத்தகைய அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையேனும் சட்ட மன்றப் பேரவையானது செய்யுமானால், அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படலாகாது என்று சட்ட மன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த அறிவிக்கையானது அதன்பின்பு அத்தகைய மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்லாற்றல் பெறுதல் வேண்டும், அல்லது நேர்விற்கேற்ப, செல்லாற்றல் பெறாதுபோதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும் அந்த அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

நோக்க – காரண விளக்கவுரை

சாய் கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி மற்றும் பொறுப்புக் கட்டளையின் நிறுவனர் மற்றும் மேலாண்மை பொறுப்பாட்சியரால் உயர்கல்வி வழங்குவதற்காக தமிழ்நாட்டில் சாய் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்காக கருத்துரு பணிந்தனுப்பட்டுள்ளது. 2003–ஆம் ஆண்டு, பல்கலைக்கழக மானியக்குழுவின் ஒழுங்குமுறை விதிகளின்படி, ஒவ்வொரு தனியார் பல்கலைக்கழகமும் ஒரு தனிப்பட்ட மாநிலச் சட்டத்தால் நிறுவப்படுதல் வேண்டும். எனவே, சட்டமியற்றுவதன் மூலமாக சாய் பல்கலைக்கழகம் என்ற பெயரில் புதிய தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்குறிப்பிட்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

கே. பி. அன்பழகன்,
உயர் கல்வித் துறை அமைச்சர்.

Verified RealEstate

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இந்தச் சட்டமுன் வடிவின் 5, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 20, 21, 22, 23, 24, 25, 26, 28, 30, 33, 39, 41, 44, 46, 48, 49 மற்றும் 51 ஆகிய கூறுகள், இயற்றப்படவுள்ள சட்டத்தின் சில பிரிவுகள் வகுத்துரைக்கப்பட்ட முறையிலும் மற்றும் வழியிலும் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கும் மற்றும் செயல்படுத்துவதற்கும், நேர்வுக்கேற்ப தகுந்த அறிவிக்கைகள், நிலையமை விதிகள் அல்லது அவசர விதிகள் வெளியிடுவதற்கு அரசுக்கும் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளுக்கும், அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

கே. பி. அன்பழகன்,
உயர் கல்வித் துறை அமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

Verified RealEstate

2018–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2018

தமிழ்நாடு மாநிலத்தில் விவசாயிகளிடமிருந்து சர்க்கரை ஆலைகளால் கொள்முதல் செய்யப்பட்ட கரும்பின் விலையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

ஒதுக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ஆலைகளுக்கு விவசாயிகளால் வழங்கப்பட்ட கரும்பிற்கான நியாயமான விலையை உரிய முறையில் பெற்றுத் தருவதற்கு மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்காக வகை செய்வதற்கும் தமிழ்நாடு மாநிலத்தில் விவசாயிகளிடமிருந்து கரும்பு ஆலைகளால் கொள்முதல் செய்யப்படும் கரும்பின் விலையை ஒழுங்குமுறைப்படுத்துவது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தின் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச்சட்டம் 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் என அழைக்கப்படும்.

(2) இச்சட்டம் மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகையத் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி

a) ''தணிக்கைக்குழு'' என்பது 13–ஆம் பிரிவின்படி வாரியத்தால் பணியமர்த்தம் செய்யப்பட்ட குழு என்று பொருள்படும்.

b) ''கரும்புச் சக்கை'' என்பது சர்க்கரை உற்பத்தியின் தண்ணீர் அகற்றப்பட்ட நாருடன் கூடிய இறுதியாக பெறப்படும் கழிவுப் பொருள் என்று பொருள்படும்.

c) ''வாரியம்'' என்பது 3–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட கரும்புக் கட்டுப்பாட்டு வாரியம் என்று பொருள்படும்.

d) ''ஆணையர்'' என்பது அரசால் பதவி பெயரிடப்பட்ட சர்க்கரை ஆணையர் மற்றும் கரும்பு ஆணையர் அல்லது அரசால் நியமிக்கப்படும் தகுதிவாய்ந்த அலுவலர் எவரும் என்று பொருள்படும்.

e) ''ஆலை'' என்பது கொள்முதல் செய்யப்படுகின்ற கரும்பிலிருந்து சுற்றடைப்பு உள்ளடங்கலாக வளாகங்களில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை மற்றும் கரும்புச் சாற்றிலிருந்து நேரிடையாகவோ அல்லது கரும்புக் கசண்டிலிருந்தோ அல்லது இரண்டிலுமிருந்தோ எத்தனால் உற்பத்தி செய்யப்படும் வளாகம் எதுவும் என்று பொருள்படும்.

f) ''நியாயமான மற்றும் ஆதாய விலை'' என்பது 1966 ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையின் 3–ஆம் கூறின்படி மைய அரசால் கரும்புக்காக ஒவ்வொரு கரும்பு ஆண்டிற்கும் நிர்ணயம் செய்யப்படும் குறைந்தபட்ச விலை என்று பொருள்படும்.

g) ''நிதி ஆண்டு'' என்பது ஏப்ரல் முதல் நாளன்று தொடங்கி அடுத்து வரும் ஆண்டில் மார்ச் முப்பத்து ஒன்றாம் நாளுடன் முடிவடையும் ஆண்டு என்று பொருள்படும்.

h) ''சுயவிருப்பப் பகுதி'' என்பது எந்த ஒரு ஆலைக்கும் ஒதுக்கப்படாத பகுதி என்று பொருள்படும்.

i) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்.

Verified RealEstate™

j) “கருப்பஞ்சாற்றுக்கசண்டு” என்பது வெற்றிட அழுத்த செய்முறையினால் தயாரிப்பின் இறுதி நிலையில் சர்க்கரையை எடுத்த பின்பு கிடைக்கும் முதல் திரவம் என்று பொருள்படும்.

k) “ஆலையின் கையுடமையாளர்” என்பது சர்க்கரை ஆலையொன்றின் அனைத்து அலுவலற் பணிகளை ஒட்டு மொத்தமாக தனது கட்டாளுகையில் வைத்திருக்கக் கூடியவர் மற்றும் இயக்குநர், பங்குதாரர் அல்லது நிர்வாகி ஒருவரிடம் மேற்சொன்ன அலுவற்பணிகள் ஒப்படைக்கப்படுகின்றவிடத்து நேர்வுக்கேற்ப அத்தகைய இயக்குநர் அல்லது பங்குதாரர் அல்லது நிர்வாகி ஒருவர் என்று பொருள்படும்.

l) “நபர்” என்பதில் சேர்ந்திருப்பதாக உள்ள அல்லது சேர்ந்திருக்காமல் இருக்கும் தனிநபர், ஒரு கூட்டுறவுச் சங்கம், ஒரு இந்து கூட்டுக் குடும்பம், ஒரு நிறுமம் அல்லது நிறுவனம் அல்லது ஒரு குழுமம் அல்லது தனிநபர்களின் அமைப்பு ஆகியவைகளை உள்ளடக்கியிருக்கும்.

m) “வகுத்துரைக்கப்பட்ட” என்பது விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்.

n) “ஒதுக்கப்பட்ட பரப்பு” என்பது **1966** ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையின் **6** ஆம் கூறின் **(1)** (a) உட்கூறின்படி ஆலை ஒன்றிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் கரும்பு வளருகின்ற பரப்பிடம் எதுவும் என்று பொருள்படும்.

o) “வருவாய் பங்கீட்டு அடிப்படையிலான கரும்பு விலை” என்பது இந்தச் சட்டத்தின் **9** ஆம் பிரிவிற்கு இணங்க தனித்தனியாக ஒவ்வொரு ஆலைக்காகவும் நிர்ணயிக்கப்பட்ட கரும்பின் விலை என்று பொருள்படும் மற்றும் முறையே பருவ காலத்திற்காக அது வழங்கப்படும் பொழுது கூடுதல் மற்றும் பயன்தரக்கூடியதாக சரி சமமானதாக இருத்தல் வேண்டும்.

p) “மாநிலம்” என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்.

q) “கரும்பு” என்பது ஆலை ஒன்றில் பயன்படுத்துவதற்காக கருதப்பட்ட கரும்பு என்று பொருள்படும்.

r) “கரும்பு சாகுபடியாளர்” என்பது நபர் ஒருவர் ஆலையொன்றிற்கு விற்பனைக்காக கருதப்பட்ட கரும்பினை அவரோ அல்லது அவருடைய வேலைக்காரர்களால் அல்லது இரவல் தொழிலாளர்களால் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினர்களால் அல்லது அவருடய குத்தகைதாரர்களால் விளைவிக்கிற நபர் ஒருவர் என்று பொருள்படும், மற்றும் **1983** ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவு சங்கத்தையும் உள்ளடக்கும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

(2) இந்தச்சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்படாத ஆனால் பயன்படுத்தப்பட்ட சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் **1966** ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையில் அவற்றிற்கு குறித்தளிக்கப்பட்டுள்ள பொருளினைக் கொண்டிருக்கும்.

கரும்பு கட்டுப்பாடு வாரியத்தின் அமைப்பு

3. (1) அரசு அறிவிக்கையினால் இந்தச்சட்டத்தின்படி அதனிடம் அளிக்கப்படும் அத்தகைய செயற்பணிகளைச் செய்வதற்கு மற்றும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவதற்கு கரும்பு கட்டுப்பாடு வாரியம் என்று அழைக்கப்படும் வாரியம் ஒன்றினை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) வாரியம் தொடர்ந்திருக்கும் மற்றும் பொதுவான முத்திரையைக் கொண்டிருக்கும் மற்றும் மேற்சொன்ன பெயரால் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

(3) வாரியம், பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் அதாவது:—

a) பதவிவழி தலைவராக இருக்கும் அரசு தலைமைச் செயலாளர்.

b) நிதித்துறையின் அரசுச் செயலாளர்—பதவி வழி

c) தொழில்துறையின் அரசுச் செயலாளர்—பதவி வழி

d) வேளாண்மைத் துறையின் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்—பதவிவழி

e) வேளாண்மை இயக்குநர்—பதவிவழி

Verified RealEstate™

f) கோயம்புத்தூரிலுள்ள கரும்பு இனவிருத்தி நிறுவனத்தின் இயக்குநர் –பதவிவழி

g) தமிழ்நாடு கரும்பு கழகத்தின் தலைமை கணக்கு அலுவலர்–பதவிவழி

h) அரசால் நியமனம் செய்யப்படும் மாநிலத்திலுள்ள ஆலைகளின் மூன்று பிரதிநிதிகள், அவற்றுள்,–

i. தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்திலிருந்து நியமனம் செய்யப்படும் உறுப்பினர் ஒருவர்; மற்றும்

ii. மாநிலத்திலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து நியமனம் செய்யப்படும் இரண்டு உறுப்பினர்கள் ;

i) அரசால் நியமனம் செய்யப்படும் மாநிலத்தில் தொடர்ந்து கரும்பை விளைவிக்கிற கரும்பு சாகுபடி செய்பவர்கள் மற்றும் ஆலைகளுக்கு கரும்பை வழங்குபவர்களாகிய நான்கு பிரதிநிதிகள், அவற்றுள்,–

i. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அல்லது பொது நிறுவன சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பினை வழங்கும் கரும்பு சாகுபடி செய்பவர்கள் இரண்டு நபர் நியமனம் செய்யப்படுதல் வேண்டும் மற்றும்

ii. மாநிலத்தில் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பினை வழங்கும் கரும்பு சாகுபடி செய்யும் நபர்களாகிய இரண்டு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

j) ஆணையர், செயல் உறுப்பினர்–பதவிவழி

(4) வாரியத்தின் தலைமையிடம் சென்னையில் இருத்தல் வேண்டும்.

வாரியத்திற்கு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பணியமர்த்தத்–திற்கான வரையரைகள் மற்றும் வரைக்கட்டுகள்.

4. (1) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், அவருடைய நியமனத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலமொன்றிற்காக பதவி வகிப்பார் மற்றும் அவர் திரும்பவும் நியமனம் செய்வதற்கு தகுதியுடையவராக இருப்பார்.

ஆனால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் மீண்டும் வாரியத்தால் மறு நியமனம் செய்யப்பட இரண்டு ஆண்டுகள் இடைவெளி காலம் முடிவடையாமல் மீண்டும் வாரியத்திற்கு நியமனம் செய்தல் ஆகாது.

(2) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அரசுக்கு முகவரியிட்டு அவருடைய கையினால் எழுதப்படும் எழுத்து மூலமாக பதவியிலிருந்து விலகலாம். ஆனால் அவர் அரசால் அவருடைய பதவி விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்படும் வரை தொடர்ந்து பதவியிலிருப்பார்.

(3) நியமனம் செய்யப்பட்ட ஒரு உறுப்பினர் பதவி விலகல், இறப்பு, பதவி நீக்கம், தகுதியிழப்பு அல்லது பிறவாறான வகையால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவி காலியாகும் பொழுது அரசு அத்தகைய காலியிடத்தை நிரப்புவதற்காக புதிய உறுப்பினர் ஒருவரை மூன்று மாதங்களுக்குள் நியமனம் செய்ய வேண்டும்.

(4) அரசு, கீழே குறித்துரைக்கப்பட்ட தகுதியிழப்புகள் ஏதாவதொன்றினை செய்திருக்கிறாரென்றால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரை அவருடைய பதவியிலிருந்து நீக்கலாம், அதாவது ,–

a) விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையராக ஆகியிருக்கிறாரென்றால்; அல்லது

b) குற்றம் ஒன்றிற்காக தண்டிக்கப்பட்டுள்ளார் மற்றும் சிறை தண்டனைக்காக தண்டனைத் தீர்ப்பினை பெற்றவராக இருக்கிறாரென்றால் அது அரசின் கருத்தில் ஒழுங்கின்மையாக நடந்து கொண்டிருக்கிறார் என்றிருந்தால்; அல்லது

c) மனநிலை பாதிக்கப்பட்டவராக இருக்கின்றார் மற்றும் தகுதியுடைய நீதிமன்றமொன்றினால் விளம்புகைச் செய்யப்பட்டு அவ்வாறான நிலையிலேயே இருக்கிறாறென்றால்

Verified RealEstate ™

(5) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய விகிதத்தில் அமர்வு கட்டணத்தை மற்றும் பயணப்படியைப் பெறுவதற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

வாரியத்தின் கூட்டங்கள்.

5. (1) வாரியம் தேவைப்படலாகிறவாறான அத்தகைய நேரத்தில் மற்றும் இடத்தில் அடிக்கடி கூட வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான நடைமுறையின் விதிகளை பின்பற்றுதல் வேண்டும்.

ஆனால் வாரியம் ஆண்டு ஒன்றில் குறைந்தபட்சம் இரண்டு முறையாவது கூடுதல் வேண்டும்.

(2) தலைவர் வாரியத்தின் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(3) விடுப்பு அல்லது உடல்நலமின்மை அல்லது பிற காரணங்கள் எதற்காகவுமான காரணங்களால் தலைவர் இயலாத பொழுது, தலைவராக செயல்படுவதற்கு வாரியத்தின் பிற உறுப்பினர்கள் எவருக்கும் தலைவர்அதிகாரமளிக்கலாம் மற்றும் அவர் கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும்.

(4) வாரியத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் வாரியத்தை அமைப்பதில் குறை எதுவும் அல்லது அவற்றிற்கிடையே காலியிடம் எதுவும் இருக்கின்றது என்ற காரணத்தினால் மட்டுமே செல்லுந்தன்மையுடையதாக இல்லாமல் போய் விடாது.

(5) வாரியத்தின் கூட்டங்களின் அறிவிப்பு, வாரியத்தின் அலுவலின் பரிமாற்றங்கள் தொடர்பான இடம், எண்ணிக்கை மற்றும் நடைமுறைகள் ஆகியவை அத்தகைய வகுத்துரைக்கப்படுகிறவாறு இருத்தல் வேண்டும்.

வாரியத்தின் செயற்பணிகள்.

6. வாரியம், பின்வரும் செயற்பணிகளை செய்து முடிக்க வேண்டும், அதாவது,—

a) தொடர்புடைய சர்க்கரை ஆலைகளால் கரும்பு சாகுபடியாளர்களுக்கு வருவாய் பகிர்மான அடிப்படையிலான வழங்கக்கூடிய கரும்பு விலையை முடிவு செய்ய வேண்டும்;

b) கரும்பு கொள்முதல் தொடர்பாக அரசுக்குத் தேவைப்படும் ஆலோசனைகள் அளிப்பதற்கு;

c) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதனையும் மீறுகின்ற நேர்வுகளில் ஆணையரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு மற்றும் அதனை தடுப்பதற்காக ஆலோசனைகளை வழங்குவதற்கு;

d) ஆலையின் வருவாய் மற்றும் செலவினம், கணக்குப் புத்தகங்கள் தொடர்பான பொருட்பாடுகள் உள்ளடங்கலாக அதனுடைய செயற்பணிகளை செய்து முடிப்பது பொருட்பாடு எதையும் விசாரணை செய்வதற்கு;

e) வருவாய் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலையினை முடிவு செய்வதற்காக பெறப்படும் வருவாய் குறித்து தணிக்கை குழு அளிக்கும் அறிக்கையினைக் கருத்தில் கொள்ளுதல்;

f) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை செயல்படுத்துவது தொடர்பான குறித்தவகை பிரச்சனைகளை கவனிப்பதற்கு அலுவலர் எவரையும் அல்லது குழு எதையும் நியமனம் செய்வதற்கு; மற்றும்

g) வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய பிற செயற்பணிகளை செய்து முடிப்பதற்கு.

வாரியத்தின் அதிகாரங்கள்.

7. (1) வாரியம், விசாரணை எதனின் நோக்கத்திற்காகவும் 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறை தொகுப்புச் சட்டத்தின்படி உரிமை வழக்கொன்றினை விசாரணை செய்யும் பொழுது உரிமையியல் நீதிமன்றம் பெற்றிருக்கும் அனைத்து அதிகாரங்களைப் போன்ற அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருக்கும் மற்றும் குறிப்பாக, பின்வரும் பொருட்பாடுகள் தொடர்பாக, அதாவது:— மையச் சட்டம் V/1908

a) நபர் எவரையும் அவரது வருகையை கட்டாயப்படுத்தி வருகை தருமாறு கூறுவதற்கு மற்றும் அழைப்பாணையை அனுப்புவதற்கு மற்றும் உறுதிமொழியின் பேரில் ஆய்வு செய்வதற்கு;

Verified RealEstate ™

b) ஆவணம் எதனையும் கண்டுபிடித்து தருவதற்கு மற்றும் முன்னிலைப்படுத்துமாறு கோருவதற்கு;

c) உறுதிமொழி ஆவணங்களின்பேரில் சான்றினை பெறுவதற்கு;

d) நீதிமன்றம் அல்லது அலுவலகம் அல்லது தொழிற்சாலை எதனிடமிருந்தும் அதனின் பொது பதிவுருவினை அல்லது நகல் எதனையும் கேட்டுப் பெறுவதற்கு;

e) சாட்சிகளை மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்கான அழைப்பாணைகளை அனுப்புவதற்கு;

f) வருவாய் பகிர்மான அடிப்படையில் கரும்பு விலையை நிர்ணயித்தல் தொடர்பாக புகாரினை விசாரிப்பதற்கு;

g) வகுத்துரைக்கப்படலாகிறவாறான பிற பொருட்பாடுகள் எதுவும்.

(2) வாரியம், விசாரணைக்குப்பின்பு புகார் எதிலும் அடங்கியுள்ள குற்றச்சாட்டில் உண்மை பொருள் எதுவும் இல்லை என்று கண்டு பிடிக்கிறவிடத்து அது ஆணையொன்றின் மூலம் பணித்ததன் வாயிலாக செலவினை ஆணையில் குறித்துரைக்கப்படும் தொகையொன்றினை எதிர் தரப்பினருக்கு செலுத்துமாறு புகார்தாரருக்கு அறிவுறுத்தலாம்.

(3) கரும்பு சாகுபடியாளருக்கு இழப்பு சம்பந்தமான புகார் எதிலும் அடங்கியுள்ள குற்றச்சாட்டாக இருக்கின்றவிடத்து வாரியம் விசாரணையின்போது சான்றினைப் பெறலாம், இழப்பினை நிச்சயிக்கலாம் மற்றும் அதனுடைய ஆணையில் தொகையைத் செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள நபரிடமிருந்து பெறலாம்.

(4) உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (3) –ன்படி செலுத்தத்தக்க தொகை, ஆணையில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்படாமல் இருக்கிறதென்றால் அது 1864 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாயை திரும்பப் பெறுதல் சட்டத்தின்படி நில வருவாய் பாக்கியை வசூலிப்பதில் இருந்தாற்போன்று திரும்பப் பெறவிடுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் II/1864

வருவாய் பகிர்வினை அடிப்படையாகக் கொண்டு கரும்பு விலையை விளம்புகை செய்வதற்கான அதிகாரங்கள்.

8. வாரியத்தின் பரிந்துரைகள் பெறப்பட்டதின் பேரில் அரசு, அறிவிக்கையினால் தொடர்புடைய சர்க்கரை ஆலைகளால் கரும்பு சாகுபடியாளருக்கு வழங்கவேண்டிய வருவாய் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலையை அறிவிக்கையினால் விளம்புகை செய்யலாம்.

வருவாய் பகிர்வினை அடிப்படையாகக் கொண்டு கரும்பிற்கு விலை மற்றும் பணச் செலுத்தத்தை கணக்கிடுதல்.

9. (1) வருவாய் பகிர்மான அடிப்படையிலான கரும்பின் விலை பின்வருவனவற்றிற்குள் உயர் மதிப்புடையதாக இருத்தல் வேண்டும், அதாவது,–

i. சர்க்கரை மற்றும் முதன்மை உப பொருட்களான கருப்பஞ்சாற்றுக்கசண்டு, கரும்புச் சக்கை மற்றும் ஆலை கழிவுமண் ஆகியவற்றின் ஆலை அடிப்படை மதிப்பின் எழுபது சதவீதத்திற்கு சமமான தொகையொன்றால் கரும்பின் விலை நிர்ணயிக்கப்பட்டது அல்லது

ii. சர்க்கரை மதிப்பு மட்டிலுமான அடிப்படையில் எழுபத்தைந்து சதவீதத்திற்கு சமமான தொகையொன்றால் கரும்பின் விலை நிர்ணயிக்கப்பட்டது.

(2) அரசால், வருவாய் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலையினை விளம்புகை செய்வதன் பேரில் கரும்பு சாகுபடியாளருக்கு நிதி ஆண்டிற்காக ஆலைக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் கரும்பு சாகுபடியாளரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கான முழு நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் கூடுதலான விலைக்கும் நியாயமான மற்றும் ஆதாய விலைக்கும் இடையேயான கரும்பு விலையின் வித்தியாசத்தைப் பெறுவதற்கு தகுதியுடையவராக இருப்பார்.

ஆலைகளில் பயன்படுத்துவதற்கு பொருந்தாத கரும்பின் வகை எதனையும் விளம்புகை செய்வதற்கு அதிகாரம்

10. அரசு, வாரியத்தின் பரிந்துரையின் பேரில் ஆலைக்குப் பொருந்தத்தக்கதாக இல்லாத கரும்பின் வகை எதனையும் விளம்புகை செய்யலாம். அத்தகைய விளம்புகை செய்யப்பட்ட கரும்பு வகையை ஆலை எதுவும் சாகுபடி அல்லது கொள்முதல் செய்யக் கூடாது என்று விளம்புகை செய்யலாம்.

11. பிரிவு 10 –ன்படி பொருந்தத்தக்கதாக இல்லாதவாறான கரும்பு விதை வகைகள் அரசால் விளம்புகை செய்யப்பட்டிருக்கிறது என்றால், ஆலையின் கையுடைமையாளர் அல்லது அவருக்குப் பதிலாக செயல்படும் பிறநபர் எவரும் அவ்வாறான கரும்பு விதைகளை எந்தப் பகுதியிலுமுள்ள கரும்பு சாகுபடி செய்பவருக்கு வினியோகித்தலாகாது அல்லது சொந்த ஆலை பரப்பிடத்தில் அவ்வாறான கரும்பு விதை வகை எதனையும் நடுதல் கூடாது.

விதைகளில் குறித்த சில வகைகளின் வினியோகத்திற்–கானத் தடை.

12. (1) கரும்பினை சாகுபடி செய்யும் ஒருவர் ஒதுக்கப்பட்ட பகுதியில் சாகுபடி செய்யப்பட்டிருக்கிற கரும்பினை ஆலைக்கு மட்டுமே விற்க வேண்டும். கரும்பு சாகுபடி செய்பவர் சுய விருப்பப் பகுதியில் சாகுபடி செய்யும் கரும்பினை அவருடைய விருப்பத் தேர்வில் சுதந்திரமாக ஆலையைத் தேர்ந்தெடுத்து கரும்பை விற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர் ஒரு உடன்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறாரென்றால் அந்த ஆலைக்கு மட்டுமே கரும்பினை விற்க வேண்டும்.

ஒதுக்கப்பட்ட பகுதியிலுள்ள கரும்பினை வாங்குதல்.

(2) ஆலை, மேற்சொன்ன ஆணையின் 6 ஆம் கூறின் (1) ஆம் உட்கூறுக்கிணங்க கேட்கப்படும் கரும்பினை வாங்கும் நோக்கத்திற்காக 1966 ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையின் 6 ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில் அத்தகைய தேதியினால் அத்தகைய படிவத்தில் கரும்பு சாகுபடியாளர்களுடன் உடன்பாடு ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

(3) முன்பு கூறப்பட்டுள்ள ஆலையைத் தவிர பிற நபர் எவரும் (1) ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட உடன்பாட்டிற்கிணங்க தவிர கரும்பு சாகுபடியாளரால் விளைவிக்கப்பட்ட கரும்பினை கொள்முதல் செய்வதற்கு உடன்பாடு ஒன்றினைச் செய்தல் கூடாது அல்லது கொள்முதல் செய்தல் கூடாது.

வருவாய் பெறுவதனை கணக்கிடு வதற்கான தணிக்கைக் குழு.

13. (1) கரும்பு ஆலை ஒன்றில் வருவாய் பெறுதலை நிச்சயிப்பதற்காக மற்றும் வருவாய் பகிர்மான அடிப்படையிலான கரும்பு விலையை நிச்சயிப்பதன் பேரில் வாரியத்திற்கு அறிவுரை வழங்குவதற்கு பின்வருமாறான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் தணிக்கைக்குழு ஒன்றினைப் பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

a)	ஆணையர்	–	தலைவர்
b)	தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் மேலாண்மை இயக்குநர்	–	ஒருங்கிணைப்பாளர்
c)	கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர்	–	உறுப்பினர்
d)	தமிழ்நாடு சர்க்கரை கழகத்தின் தலைமைக் கணக்கு அலுவலர்	–	உறுப்பினர்
e)	தமிழ்நாடு சர்க்கரை கழகத்தின் தலைமை சர்க்கரை வேதியர்	–	உறுப்பினர்
f)	தன்னுரிமை தணிக்கையாளரொருவர் (வாரியத்தின் தலைவரால் நியமனம் செய்யப்படக் கூடியவர்)	–	உறுப்பினர்

வாரியத்தின் அனுமதியுடன் வாரியம் அல்லது தணிக்கைக் குழுவின் தலைவர் தேவைப்படுவதாக மற்றும் தேவைப்படும் பொழுது தொழில்நுட்ப வல்லுநர்களை அமர்த்தலாம்.

(2) தணிக்கைக்குழு, நிதி ஆண்டு முடிவடைந்த பின்பு ஒவ்வொரு ஆலையின் வருடாந்திர அறிக்கையினை வெளியிட்ட பின்பு ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் வருவாய் பெறுவதை நிச்சயிக்கும் பொருட்டு சர்க்கரை ஆலை எதனையும் ஆய்வு செய்வதற்கு அதிகாரம் கொண்டிருக்கும்.

(3) தணிக்கைக்குழு சர்க்கரை ஆலையை ஆய்வு செய்த பின்பு வாரியத்திற்கு அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டும்.

Verified RealEstate™

வருவாய் பகிர்வு அடிப்படையில் கரும்பு விலை முடிவினை எடுப்பதற்காக வாரியத்தினால் கருத்தில் கொள்ளப்படும் பொருண்மைகள்.

14. வாரியம், வருவாய் பகிர்வினை அடிப்படையாகக் கொண்டு கரும்பு விலை முடிவினை எடுக்கும் பொழுது பின்வரும் பொருண்மைகளைக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும், அதாவது, –

a) கரும்பு சாகுபடி செய்பவர்களால் வழங்கப்பட்ட கரும்பின் பதிவு செய்யப்பட்ட எடை, சர்க்கரை தயாரிப்பு மற்றும் உப பொருட்கள் அதாவது சர்க்கரை உற்பத்திக் கழிவுப் பொருள்களான கருப்பஞ்சாற்றுக் கசண்டு, கரும்புச் சக்கை, ஆலைக் கழிவுமண் மற்றும் கணக்கெடுக்கப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு அல்லது சர்க்கரைக்கு ஈடாக அதில் எத்தனால் தயாரிப்பிற்காக நேரடியாகப் பயன்படுத்தப்படும் கனமான கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட உண்மையான வருவாய்.

விளக்கம்: இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக நிதி ஆண்டின் போது பிழியப்பட்ட கரும்பிலிருந்து பெறப்பட்ட வருவாய் உண்மையான சர்க்கரை தயாரிப்பு மற்றும் உப தயாரிப்புகள், அதாவது சர்க்கரை தயாரிப்பின் கழிவுப்பொருள் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, கரும்புச் சக்கை, ஆலைக் கழிவு மண் மற்றும் கரும்புச்சாறு அல்லது பிற தயாரிப்பு எதனின் தயாரிப்பிற்காகவும் நேரடியாக பயன்படுத்தப்படும் கனமான கருப்பஞ்சாற்றுக் கசண்டு எதுவுமிருக்கிறதென்றால் அது விற்பனைகளைக் கருத்தில் கொண்டு பொருந்தத்தக்க வகையில் மதிப்பிடப் பட்டிருக்கின்றன, அவை விற்கப்படாத போதிலும் தொடக்க மற்றும் முடிவுறும் இருப்பு வெளி ஆதாரங்களிலிருந்து மதிப்பிடப்பட்டு இருக்கின்றன. மேலும் முதல் சர்க்கரையிலிருந்து தயாரிக்கப்பட்ட வெள்ளைச் சர்க்கரை அல்லது சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை மற்றும் கருப்பஞ்சாறிலிருந்து முந்தைய நிதி ஆண்டின் போது கணக்கிடப்பட்ட கரும்பு விலையை அடிப்படையாகக் கொண்டு வருவாயைப் பகிர்ந்து கொள்வதற்காக கணக்கிடப்பட்டதை கருத்தில் கொள்வதன்படி நிதி ஆண்டிற்கான கரும்பு விலையை அடிப்படையாகக் கொண்டு வருவாயை பகிர்ந்து கொள்வதனை கணக்கிடப்படுவதானது உள்ளடங்காமல் இருத்தல் வேண்டும்.

b) தணிக்கைக் குழுவின் அறிக்கை வருவாய் பகிர்வினை அடிப்படையாகக் கொண்டு கரும்பு விலையை நிச்சயிப்பதற்காக கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

கரும்பினை சாகுபடி செய்பவர்–களுக்கான பணம் செலுத்தம்.

15. (1) கூடிய விரைவில் ஆலையின் கையுடமையாளருக்கு வழங்கப்பட்ட கரும்புக்காக அவர் கரும்பு பெறப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் 1966 ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட நியாயமான மற்றும் ஆதாய விலையை செலுத்துவதற்கு கட்டுப்பாடுடையவராக இருத்தல் வேண்டும்.

(2) ஆலையில் பதிவு செய்யப்பட்ட கரும்பின் எடையின் அடிப்படையில் பணச்செலுத்தம் செய்யப்படுதல் வேண்டும். செலுத்தத்தக்கதாக இருக்கக் கூடிய கரும்பின் விலை முழு ரூபாயாக கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) ஆலையின் கையுடமையாளர் ஒருவர் அவரால் கொள்முதல் செய்யப்பட்ட கரும்பிற்கான அனைத்து நிலுவைத் தொகை பணச்செலுத்தங்களையும் செலுத்துவதற்கு கட்டுப்பாடுடையவராக இருத்தல் வேண்டும். அவர் பணச் செலுத்தங்களைச் செய்வதற்கு தவறுகிறாரென்றால் அத்தகைய செலுத்தம் நிலுவையாக இருக்கின்ற பொழுது அந்த தேதியிலிருந்து 1966 ஆம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) ஆணையின் 3 ஆம் கூறின்படி வட்டியுடன் சேர்த்து அத்தகைய பணச்செலுத்தத்தைச் செய்வதற்கு பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(4) (a) நியாயமான மற்றும் ஆதாய விலை மற்றும் கூடுதலாக கரும்பினை வயலிலிருந்து ஆலைக்கு கொண்டு வருவதற்காக ஆகக்கூடிய போக்குவரத்துச்செலவு ஆகியவை ஆலையின் கையுடமையாளரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(b) இந்தச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து ஒவ்வொரு நான்கு ஆண்டு முடிவடைந்தபிறகு நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் வழங்கப்பட்ட போக்குவரத்துச் செலவு மறு ஆய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(5) (a) நியாயமான மற்றும் ஆதாய விலையை செலுத்திய பின்பு மேலும் வாரியத்தினால் நிச்சயிக்கப்படலாகிறவாறான வருவாயை பகிர்ந்து கொள்வதனால் பெறப்படும் விலை, கரும்பு விலைகள் மற்றும் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்ட முந்தைய ஆலை வருவாயைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆண்டு அறிக்கை வெளியீட்டுத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும். கரும்பினை வாங்குவதற்கான செலுத்தத்திற்கான அனைத்து பிற வரைக்கட்டுகள் 1966 ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாடு) ஆணையின் வகைமுறைகளின்படி இருத்தல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி கையுடமையாளரால் செய்யப்பட்ட பணச்செலுத்தம் ஒவ்வொன்றும் கரும்பின் சாகுபடியாளர்களின் வங்கிக் கணக்கு மூலமாக மட்டுமே செலுத்தப்படுதல் வேண்டும் மற்றும் ரொக்கமாகக் கொடுக்கப்படுதலாகாது.

(c) நியாயமான மற்றும் ஆதாய விலை தொடர்பான நிலுவைத் தொகைகளை திரும்பப் பெறுவதற்காக 1966 ஆம் ஆண்டின் வகைமுறைகளின் தேவையான மாறுதல்களோடு வருவாயை பகிர்ந்து கொள்வதால் பெறப்படும் விலை நிலுவைத் தொகைகளை திரும்பப்பெறுவதற்காக பொருந்தத்தக்கதாக இருக்க வேண்டும்.

குற்றங்கள் மற்றும் தண்டங்கள்.

16. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதற்கும் முரணாக இருக்கின்ற நபர் எவரும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டத்துடன் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

(2) ஆலையின் கையுடமையாளர் எவரும் அவரால் கொள்முதல் செய்யப்பட்ட கரும்பு எதற்காகவும் பணச்செலுத்தத்தை செலுத்த மறுக்கிறார் என்றால் இந்தச் சட்டத்திற்கிணங்க விலை செலுத்தத்தக்கதாகும் அல்லது இந்தச் சட்டத்திற்கு முரணாக இருக்கின்ற வகையில் அத்தகைய விலையிலிருந்து விலை குறைப்பு செய்வாரானால் ஆறு மாதகாலங்களுக்கு நீட்டிக்கப்படலாகும் சிறை தண்டனையுடன் அல்லது ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் பணத்தண்டத்துடன் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டிக்கத்தக்கவராவார்.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்.

17. (1) நிறுமம் ஒன்றினால் இந்தச் சட்டத்தின்படியான குற்றம் ஒன்று செய்யப்பட்டிருக்கின்றவிடத்து குற்றத்தை செய்த நேரத்தில் இருந்த நபர் ஒவ்வொருவரும் மற்றும் அதற்கு பொறுப்பாக இருந்துள்ள நபரும் மற்றும் நிறுமத்தின் அலுவலரால் பணிகளைச் செய்வதற்கான அலுவலர் ஒவ்வொரும் அதே மாதிரி நிறுமமும் அந்தக் குற்றத்தைச் செய்துள்ளதாக கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் அதன்படி தண்டிப்பதற்கும் கட்டுப்பாடுடையதாக இருத்தல் வேண்டும்.

ஆனால் இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அத்தகைய நபர் எவரும் அந்தக் குற்றம் அவருடைய அறிவுக்கு எட்டாத வகையில் நடைபெற்றிருக்கிறது அல்லது அத்தகைய குற்றம் நடைபெறாத வண்ணம் அனைத்து உரிய நடவடிக்கைகளையும் அவர் எடுத்திருக்கிறார் என்று நிரூபிக்கிறாறென்றால் அவரை தண்டனைக்கு உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1)–ல் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பின் இந்தச் சட்டத்தின் படியான குற்றம் ஒன்று நிறுமத்தினால் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து மற்றும் நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரும் பங்கு கொண்டிருப்பதன் பேரில் அவர் ஒத்திசைவுடன் அல்லது மறைமுக ஆதரவுடன் அல்லது கவனமின்மை இருக்கத்தக்கதாக அந்தக் குற்றம் செய்யப்பட்டிருக்கிறதென்று நிரூபிக்கப் பட்டிருக்கிறதென்றால் அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு மற்றும் அதன்படி தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

விளக்கம்.– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,–

a) “நிறுமம்” என்பது கூட்டுருமம் எதுவும் மற்றும் ஒரு நிறுவகம் அல்லது பிற தனிநபர்களின் கழகம் என்று பொருள்படும் ; மற்றும்

b) ஒரு நிறுவகம் தொடர்பாக இயக்குநர் என்பது நிறுவகத்திலுள்ள ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.

குற்றத்தினை விசாரணை செய்தல்.

18. ஆணையரால் அதிகாரமளிக்கப் பெற்ற அலுவலர் ஒருவரால் செய்யப்பட்ட புகார் ஒன்றின் பேரில் தவிர 16 ஆம் பிரிவின்படி தண்டிக்கத்தக்க குற்றம் எதனையும் நீதிமன்றம் எதுவும் விசாரணை செய்தல் கூடாது.

குற்றங்களை இணக்கமாய் தீர்த்துக் கொள்ளுதல்.

19. (1) பிரிவு 16–ன்படி தண்டிக்கத் தக்க குற்றம் எதுவும் வழக்கு தொடுப்பதற்கு முன்பு அல்லது பின்பு, ஆணையரால் அல்லது அத்தகைய பிற அலுவலரால் குறிப்பிடப்படலாகும் தொகையை மாநில அரசுக்கு செலுத்துவதன் பேரில் ஆணையரால் அல்லது ஆணையரால் இது தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய பிற அலுவலரால் குற்றங்களை இணக்கமாய் தீர்த்துக் கொள்ளலாம்.

ஆனால் அத்தகைய தொகை அவ்வாறு இணக்கமாய் தீர்த்துக் கொண்ட குற்றத்திற்காக இந்தச் சட்டத்தின்படி விதிக்கப்படலாகும் பணத்தண்டமானது எந்த நேர்விலும் பெருமளவுத் தொகைக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)–ன் கீழ் குற்றம் ஒன்று இணக்கமாய் தீர்க்கப்பட்டிருக்கிறவிடத்து குற்றம் தொடர்பாக நடவடிக்கை அல்லது நேர்வுக்கேற்ப மேலுமான நடவடிக்கை எடுக்கப்படுதலாகாது. குற்றம் செய்தவர் அக்குற்றத்தைச் செய்ததற்காக காவலில் வைக்கப்பட்டிருந்தால் அவரை உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.

ஆணையர் மற்றும் அலுவலர்கள் அரசுப் பணியாளர் களாவர்.

மையச்சட்டம் XLV/1980

20. ஆணையர், தணிக்கைக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் இந்தச்சட்டத்தின்படி பணியமர்த்தம் செய்யப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் விளைவாக செயல்படும் பொழுது அல்லது செயல்படுவதாகக் கருதும் பொழுது அவர்கள் இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளின்படி அரசுப் பணியாளர்களாகக் கருதப்படுவர்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்–கைக்குப் பாதுகாப்பு.

21. உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் இந்தச் சட்டத்தின்படி அல்லது விதி அல்லது அதன்படி செய்யப்பட்ட ஆணையின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் தணிக்கைக் குழுவிற்கு, வாரியத்திற்கு, அரசுக்கு அல்லது அதனுடைய அலுவலருக்கு எதிராக தொடரப்படுதல் ஆகாது.

பணிப்புரைகளை பிறப்பிப்பதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.

22. (1) அரசு, பொது நலன் கருதி ஆணையின் வாயிலாக ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சனை எதையும் விசாரணை ஒன்றைச் செய்வதற்கு வாரியத்திற்கு பணிப்புரைப் பிறப்பிக்கலாம் மற்றும் வாரியம் வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய காலத்திற்குள் அதனால் செய்யப்பட்ட விசாரணையின் முடிவினை அரசுக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(2) வாரியத்திடமிருந்து அறிக்கை பெறப்பட்டதன் பேரில், அரசு அவற்றிற்குப் பொருத்தமெனத் தோன்றலாகிற அத்தகைய பணிப்புரைகளை வழங்க வேண்டும் மற்றும் அத்தகைய அறிவுறுத்தல் இறுதியானதாக இருக்கும் மற்றும் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

23. (1) தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்திறம் அளிப்பதற்காக அத்தகை விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் முன்னர் உள்ள பொதுவான வகைமுறைகளுக்கு குந்தகமின்றியும் அத்தகைய விதிகளானது பின்வருமாறு வகை செய்யலாம்,–

a) வாரியத்தின் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு செலுத்தத்தக்க படிகள் மற்றும் அவர்களுக்குள்ளே உள்ள தற்செயலான காலியிடங்களை நிரப்பும்முறை மற்றும் இந்தச் சட்டத்தின்படி அதனுடைய செயற்பணிகளைச் செய்து முடிப்பதில் அதனுடைய அலுவலகப் பணியை நடத்துவதற்கான நடைமுறை;

b) கரும்பின் சரியான எடை, எடை பார்ப்பதற்கான வசதிகள் மற்றும் எடையை சோதனை செய்வதற்கான மற்றும் எடைகளைப் பார்ப்பதற்கான நேரங்கள்;

c) கரும்பிலிருந்து சர்க்கரையை பெறுதலின் விழுக்காட்டினை தீர்மானிக்கும் முறை.

d) வருவாயை அடிப்படையாகக் கொண்ட கரும்பின் விலை செலுத்துவதற்குக் கட்டுப்பாடுடைய நபர்களால் வைத்து வரப்படும் பதிவுருக்களின் படிவம் மற்றும் செய்யப்படும் விவர அறிக்கைகள் மற்றும் அனுப்பப்படும் தகவல்.

e) எந்தப் படிவத்தில் வேண்டப்பட்ட அறிவிப்பு எதுவும் அளித்தல் வேண்டுமோ அந்தப் படிவம்.

f) இந்தச் சட்டத்தின்படி வகுத்துரைக்கப்படலாகிற அல்லது வகுத்துரைக்கலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

Verified by RealEstate™

(3) விதிகள் முதன்முதலாக செய்யப்பட்டிருக்கின்ற பொழுது தவிர, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் முந்தைய வெளியீட்டின் வரைகட்டுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்ற பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

24. இந்தச் சட்டத்தின் வகை முறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால் அரசு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் இந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ, உகந்தவையென்றோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

ஆனால் அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதலாகாது.

Verified RealEstate ™

நோக்கக் காரண விளக்கவுரை

2018–2019– ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையின்போது, நடப்பு பருவம் முதல் வருவாய் பகிர்வு விலை நிர்ணய முறைக்கு மாற அரசு முடிவு செய்துள்ளது என்பது அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி விவசாயிகள் நியாயமான மற்றும் ஆதாய விலை பெறுவதை உறுதி செய்வதுடன் கூடுதலாக சர்க்கரை ஆலைகளின் இலாபத்தில் ஒரு பகிர்வும் விவசாயிகளுக்குக் கிடைக்கும். இந்த மாற்றத்தினை எளிதாக்கும் பொருட்டு, கரும்பிற்கான போக்குவரத்து செலவு போக மாநில அரசு, தற்போது விவசாயிகள் பெற்று வரும் மாநில அரசின் பரிந்துரை விலையை அனைத்து விவசாயிகளும் பெறுவதை உறுதி செய்ய, புதிய வருவாய் பகிர்வு முறையில் பெறப்படும் விலைக்கும் தற்போது பெற்று வரும் மாநில அரசின் பரிந்துரை விலைக்கும் இடையேயான வித்தியாசத்தை, கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக இந்த அரசு நேரடியாக விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் விவசாயிகளின் நலனை பாதுகாக்க முடியும். மேற்சொன்ன முடிவிற்கு செயல்திறன் அளிக்கும் வகையில் அரசு, அதன்படி சட்டம் ஒன்றை இயற்றுவதென முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

இரா. துரைக்கண்ணு,
வேளாண்மைத்துறை அமைச்சர்.

Verified RealEstate™

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 2(m) 3(1), 4(5), 5(1) மற்றும் (5), 6 (g), 8, 22(1), 23 மற்றும் 24 ஆகிய கூறுகள் அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக விதிகளைச் செய்வதற்கு அல்லது அறிவிக்கைகளைப் பிறப்பிப்பதற்கு நேர்விற்கேற்ப ஆணைகளை வழங்குவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

இரா. துரைக்கண்ணு,
வேளாண்மைத்துறை அமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

Verified RealEstate ™

2018–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2018

1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்திய குடியரசின் அறுபத்தொன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச்சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச்சட்டம் 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்ச வரம்பு நிர்ணயம்) திருத்தச்சட்டம் என வழங்கப்படும்.

1. (2) மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக குறித்திடும் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 58/61

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்

2. (இதனின் இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 1961–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டத்தின் 3–ஆம் பிரிவில் 21–ஆம் கூறுக்குப்பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்பட வேண்டும்:–

(21A) ''முதலீடு'' என்பது தமிழ்நாடு தொழில் கொள்கையில் அவ்வப்போது விளக்கப்படும் வரையரை முதலீடு என்று பொருள்படும்.

5–ஆம் பிரிவிற்கான திருத்தம்

3. முதன்மைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில்,–(1) (a) கூறில், ''உட்பிரிவுகள், (3–A), (3–B), (3–C), (4) மற்றும் (5)'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக ''கூறு (e), உட்பிரிவுகள் (3–A), (3–B), (3–C), (4) மற்றும் (5)'' என்ற சொற்றொடர் இடம்பெறுதல் வேண்டும்.

(2) (d) எனும் கூறுக்குப் பின்னர், பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

(e) ஒவ்வொரு தொழில் அல்லது வணிக நிறுவனம் இருபது கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்கிறதென்றால், நிலஉச்சவரம்பு பரப்பிடம் முப்பது தர ஏக்கர் ஆகும்.

வரம்புரை:– ஆனால், அத்தகைய நிலம் புன்செய் நிலமாக மற்றும் தொழில் அல்லது வணிக பயன்பாட்டிற்காக இருத்தல்வேண்டும்.

வகுத்துரைக்கப்படும் அத்தகைய காலத்திற்குள் தொழில் அல்லது வணிக நோக்கங்களுக்காக நிலத்தைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் மேற்சொன்ன நிலம் தொழில் அல்லது வணிக நோக்கத்திற்காக தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

Verified RealEstate ™

நோக்கங்களும் மற்றும் காரணங்களும்

தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் 1961 (தமிழ்நாடு சட்டம் 58/1961) பின்பு திருத்தப்பட்ட தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு குறைப்பு) சட்டம், 1970 (தமிழ்நாடு சட்டம் 17/1970) பிரிவு 5–இல் ஒரு நபரின் நில உச்சவரம்பு 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. சட்ட பிரிவு 3 (34)–இன்படி 'நபர்' என்பது கம்பெனி, குடும்பம், நிறுவனம், இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்படாத சங்கம் அல்லது நபர்கள் சேர்ந்த குழுமம் ஆகும். பிரிவு 37-A இன்படி, பிரிவு 73 (iv)–இன் கீழ் அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு தொழில் அல்லது வணிக நிறுவனம், தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயம்) இரண்டாவது திருத்தச் சட்டம் 1972 (தமிழ்நாடு சட்டம் 20/1972) தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து உச்சவரம்பிற்கு மிகையாக நிலங்கள் வைத்துக் கொள்ளவோ அல்லது வாங்கவோ இயலாது. ஆனால், இவ்வாறான தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் இப்பிரிவின் கீழ் அரசின் அனுமதியினைப் பெற்று உச்சவரம்பிற்கு மேல் நிலங்களை வைத்துக் கொள்ளலாம். மேலும், அவ்வாறு வழங்கப்படும் இவ்வனுமதி, அரசாணையில் குறிப்பிடப்படும் நிலங்களுக்கு மட்டுமே பொருந்தும். இதன் விளைவாக, ஒரு தொழில் அல்லது வணிக நிறுவனத்தின் நில உச்சவரம்பு 15 தர ஏக்கர் ஆகவும், இந்த உச்சவரம்பிற்கு மேல் நிலங்கள் வைத்துக்கொள்ள, தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் பிரிவு 37-A-இன்கீழ் அரசின் அனுமதி தேவைப்படுகிறது.

2) நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 (மத்திய சட்டம் 6/1974) காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981, (மத்திய சட்டம் 14/1981), சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 (மத்திய சட்டம் 29/1986) மற்றும் இவை சார்ந்த விதிகள், நிலம், நீர், காற்று மாசுபடுவதை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் உள்ளடக்கிய இயற்கை வளங்களை பாதுகாப்பதற்காக இயற்றப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் பாதுகாத்தல், பருவ நிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் முதலியவற்றின் முக்கியத்துவத்தினை கவனத்தில் கொண்டு, தொழில் நிறுவனங்கள் பசுமைவெளி உருவாக்குதல், கழிவு நீர் சுத்திகரிப்பு, முடிந்தவரை மறு உபயோகித்தல், மறு சுழற்சி முறை ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டி உள்ளது. தொழில் நிறுவனங்கள் அனுமதி பெற, சட்டம் மற்றும் விதிகளில் உள்ள வழிவகையின்படியும், அரசின் வழிகாட்டுதல்களின்படியும், இம்மாதிரியான வசதிகளை கட்டாயம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறான காரணங்களுக்காக தொழில் நிறுவனங்களுக்கு அதிகப்படியான நிலங்கள் தேவைப்படுகிறது.

3) தற்கால நிலவரப்படி இதனை ஆராயும்போது, ஒரு தொழில் நிறுவனத்திற்கு இப்பொழுது உள்ள நில உச்சவரம்பு கூடுதலாக தேவைப்படுகிறது. தொழில் நிறுவனங்கள் உச்சவரம்பிற்கு மேல் நிலங்கள் வைத்துக்கொள்ள பிரிவு 37–A–ல் வழிவகை இருப்பினும், மேற்படி நில உச்சவரம்பு அதிகரித்தால் மாநிலத்தில் தொழில்துறை முன்னேற்றமடையும். இவ்வாறான அதிகரிப்பு, வணிகம் செய்தலை எளிதாக்குவதோடு இந்த தொழில் நிறுவனங்கள் தாங்கள் வைத்துள்ள நிலங்களுக்கு அனுமதிபெற தேவை எழாது. விவசாய நோக்கத்திற்காக நன்செய் நிலங்களை பாதுகாக்கவும், மக்கள் அதிகமான வருமானம் ஈட்டுவதற்கும் புன்செய் நிலங்களை சிறப்பாக பயன்படுத்தவும் அரசு முனைகின்றது.

4) எனவே, தொழில் அல்லது வணிக நிறுவனங்களின் நிலஉச்சவரம்பினை 15 தர ஏக்கரிலிருந்து 30 தர ஏக்கராக உயர்த்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இந்த கூடுதல் 30 தர ஏக்கர், புன்செய் நிலங்களுக்கு மட்டுமே பொருந்தும். ரூ. 20 கோடிக்கு குறையாத முதலீடு கொண்ட தொழில் அல்லது வணிக நிறுவனங்கள் இதில் கவரப்படும். இவ்வாறாக அதிகரிக்கப்பட்ட உச்ச வரம்பு நிலங்கள் தொழில்துறைக்கு பயன்படுத்தப்பட வேண்டும். எனவே, தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் 1961, (தமிழ்நாடு சட்டம் 58/1961)–க்கு மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்காக தகுந்த திருத்தங்கள் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

5) இந்த சட்டவரைவு மேற்கூறிய நோக்கத்திற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

ஆர். பி. உதயகுமார்,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை அமைச்சர்.

Verified Rajasthan

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இந்தச் சட்டமுன்வடிவில் கூறு 1 (2) மற்றும் 3 கூறுகளால் புகுத்தப்படுவதாகக் கருதப்பட்ட 5–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கூறு (e) அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக நேர்விற்கேற்ப அறிவிக்கைகளைப் பிறப்பிப்பதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

ஆர். பி. உதயகுமார்,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை அமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

Verified RealEstate™

Verified RealEstate™

2018–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 5–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2018

தமிழ்நாடு மாநிலத்திலுள்ள வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தினைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு நிருவகிப்பப்படும் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகளையும் நிலைக்கொடைகளையும் பாதுகாப்பதற்கும் பேணிவருவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டமுன்வடிவு

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

அத்தியாயம்–I

முன்னுரை

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம், 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இஃது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

இந்தச் சட்டத்தின் பொருந்துகை

2. இந்தச் சட்டமானது, வன்னியகுல சத்தியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு நிருவகிக்கப்படும் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகளுக்கும் நிலைக்கொடைகளுக்கும் பொருந்துதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்

3. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(a) “நிருவாக அலுவலர்” என்றால் 34–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி நிருவாகக் குழுமத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்;

(b) “பயனாளர்” என்றால், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையொன்று எவருடைய நலனுக்காக உருவாக்கப்படுகிறதோ அந்த நபரொருவர் அல்லது நிலையமொன்று எனப் பொருள்படும்; மற்றும் அதில் அறநிலை தொடர்பான நோக்கங்களும் பொதுப் பயன்பாட்டிற்கான பிற நோக்கங்கள் எவையும் உள்ளடங்கும்;

Verified @ RealEstate ™

(c) "நிருவாகக்குழுமம்" என்றால், 8–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட நிருவாகக்குழுமம் எனப் பொருள்படும்;

(d) "முதன்மை நிருவாக அலுவலர்" என்றால், 19–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட அலுவலர் எனப் பொருள்படும்.

(e) "தலைமையாளர்" என்றால், 9–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் (a) எனும் கூறின்படி நியமிக்கப்பட்ட தலைமையாளர் எனப் பொருள்படும்.

(f) "அறநிலை நோக்கம்" என்பது, ஏழைகளுக்கு இடருதவி, பொது மக்களுக்கு அல்லது அவர்களின் ஒரு பகுதியினருக்கு, கல்வி, மருத்துவ உதவி, பயனுள்ள பிறநோக்கம் எதனையும் மேம்படுத்துவது, அல்லது நல்வாழ்வு அல்லது அது போன்ற நோக்கங்களை உள்ளடக்கும்

(g) "நீதிமன்றம்" என்றால், –

(i) சென்னை மாநகரத்தில் அமைந்துள்ள பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்து ஒன்று தொடர்பாக, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம்;

(ii) வேறெங்கும் அமைந்துள்ள பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்து ஒன்று தொடர்பாக, அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சொத்தானது அமைந்துள்ள பரப்பிடத்தின் மீது அதிகார வரம்பு கொண்டுள்ள (முதுநிலைக் கோட்டம்) உரிமையியல் நீதிபதியின் நீதிமன்றம், அல்லது அவ்வாறான நீதிமன்றம் எதுவுமில்லையானால், அத்தகைய அதிகார வரம்பு கொண்டிருக்கிற மாவட்ட நீதிமன்றம்;

(iii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிமன்றங்களின் வரம்பிற்குள்ளாக அமைந்த பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சொத்து ஒன்று தொடர்பாக, அத்தகைய சொத்துகள் அனைத்தும் அல்லது அவற்றுள் எதொன்றும் தொடர்பாக மேற்சொன்னவாறு அதிகாரவரம்பு பெற்றிருக்கக் கூடிய நீதிமன்றம் எதுவும் எனப் பொருள்படும்.

(h) நிலைக்கொடை என்றால், ஒய்வு இல்லங்கள், சத்திரங்கள், பாடசாலைகள், பள்ளிகள், கல்லூரிகள், ஏழைகளுக்கு உணவளிக்கும் இல்லங்கள், கல்வி மேம்பாட்டிற்கான நிறுவனங்கள், மருத்துவ உதவி, மக்கள் நல்வாழ்வு அல்லது அது போன்ற இயல்பினதான பிற நோக்கங்கள் போன்ற வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தின் அல்லது அதன் பிரிவு எதற்கும் பயன்படும் வகையிலான நோக்கங்களுக்கு ஆதரவு தருவதற்கு அல்லது அவற்றை பேணிவருவதற்கு வன்னியகுல சத்திரியர் சமுதாயம் அல்லது அதன் பிரிவு எதனின் நலனுக்காக அல்லது அதனால் உரிமை என்ற வகையில் பயன்படுத்தப்படுவதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிலைக் கொடையாக வழங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் எனப் பொருள்படும், மற்றும் அதில் தொடர்பான நிறுவனமும் உள்ளடங்கும்.

(i) "அரசு" என்றால், மாநில அரசு எனப் பொருள்படும்.

(j) "மரபு வழி பொறுப்பாட்சியர்" என்றால், மரபுரிமை வழியாக வருகிற அல்லது வழக்காறு வழியாக முறைப்படுத்தப்படுகிற அல்லது மரபுரிமை வழியானது வகை செய்யப்பட்ட திட்டமானது எவ்வளவு காலத்திற்கு நடைமுறையில் இருக்கிறதோ அது வரையில் என்பதற்கு உட்பட்டு, நிறுவனரால் திட்டவட்டமாக வகை செய்யப்படுகிற முறையில் எவருடைய பதவியின் வழியுரிமையானது வருகிறதோ அந்த அறநிலைப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் பொறுப்பாட்சியர் எனப் பொருள்படும்.

(k) "உறுப்பினர்" என்றால், நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர், பதவி வழி உறுப்பினர் உறுப்பினர் செயலர் மற்றும் தலைமையாளரை உள்ளடக்கும்.

(l) "அக்கறையுள்ள நபர்" என்றால், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையில் இருந்து நிதி சார்ந்த அல்லது பிற நலன்கள் எவற்றையும் பெறுவதற்கு உரிமைத் தகுதியுள்ள நபர் எவரும் எனப் பொருள்படும், மற்றும் நிறுவனத்துடன் தொடர்புடைய பணி அல்லது

Verified RealEstate TM

அறப்பணியை நிறைவேற்றுவது குறித்து கவனிப்பதற்கு உரிமைத் தகுதியுள்ள அல்லது அவ்வாறு கவனிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிற அல்லது அறச்செயல் எதிலுமோ அல்லது அங்குள்ள பரிசுகளை பகிர்ந்து வழங்குதல் குறித்ததான நலனில் பங்கெடுத்துக்கொள்ள உரிமைத் தகுதியுடைய அல்லது பங்கெடுத்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிற நபரொருவரையும் உள்ளடக்கும்;

(m) "வகுத்துரைக்கப்பட்டது" என்றால், விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(n) "நில அளவை அலுவலர்" என்றால், 4–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் எனப் பொருள்படும்;

(o) "பொறுப்பாட்சி" என்றால், வன்னியகுல சத்திரியரைச் சேர்ந்த நபரொருவரால், அல்லது நபர்கள் அடங்கிய குழுவால், அல்லது நிறுவனங்களால் பொறுப்பாட்சியை உருவாக்குகிறவர் கருதுகிறவறான அறச்செயல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உருவாக்கப்பட்ட பொறுப்பாட்சி எனப் பொருள்படும்;

(p) "பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி" என்றால், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனையும் மேலாண்மை செய்து நிருவகிப்பதற்கு நியமிக்கப்பட்ட நபரெவரும் எனப் பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 45/1994.

(q) "வன்னிய குல சத்திரியர்" என்றால், 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (கல்வி நிலையங்களில் இடங்களையும் அரசின் கீழ்வரும் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல் சட்டத்தின்படி அரசினால் அறிவிக்கை செய்யப்பட்டவாறான (வன்னியர், வன்னியா, வன்னிய கவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி, அக்னிகுல சத்திரியர் ஆகியோர் உள்ளடங்கலாக) வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தினர் எனப் பொருள்படும்.

அத்தியாயம் II

பொறுப்பாட்சிகளின் மற்றும் நிலைக்கொடைகளின் சொத்துக்கைப் பட்டியலிடுதல்

பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துக்களின் முதனிலை நில அளவை

4 (1) அரசானது, ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து அத்தகைய ஆணையில் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய பரப்பிடங்களுக்குள்ளாக இருந்து வருகின்ற பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடைக்குச் சொந்தமான சொத்துக்களை நில அளவை செய்வதற்காக வட்டாட்சியர் படிநிலைக்குக் கீழ் அல்லாத நில அளவை அலுவலரொருவரை நியமிக்கலாம்.

(2) நில அளவை அலுவலர், தேவையானதாக இருக்கக் கூடிய அத்தகைய விசாரணையைச் செய்த பின்னர், பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் சொத்துக்களைப் பொறுத்த அளவில் பின்வரும் தகவல்கள் அடங்கியதான தனது அறிக்கையைப் பணிந்தனுப்புதல் வேண்டும், அதாவது:-

(a) அப்பரப்பிடத்தில் உள்ள பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் எண்ணிக்கை;

(b) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடை ஒவ்வொன்றும் அமைக்கப்பட்டதன் இயல்பும், நோக்கமும்;

(c) ஒவ்வொரு பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையிலிருந்தும் வரும் மொத்த வருமானம்;

Verified RealEstate™

(d) ஒவ்வொரு பொறுப்பாட்சியையும் நிலைக்கொடையையும் பொறுத்த அளவில் செலுத்தப்பட வேண்டிய நிலவருவாய், கட்டணங்கள் மற்றும் வரிகள்;

(e) ஒவ்வொரு பொறுப்பாட்சியாலும் மற்றும் நிலைக்கொடையாலும் உள்ளாகும் செலவுகள்; மற்றும்

(f) ஒவ்வொரு பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடை தொடர்பாக வகுத்துரைக்கப்படக் கூடியவாறான, பிற தகவல்கள்;

(3) நில அளவை அலுவலர், விசாரணை எதனையும் செய்யும் போது, பின்வரும்ரும் பொருட்பாடுகளைப் பொறுத்த அளவில், **1908**–ஆம் ஆண்டு உரிமை வழக்குக்கு விசாரணைமுறை தொகுப்புச் சட்டத்தின்படி உரிமையியல் நீதிமன்றமொன்றில்றில் உற்றமைந்துள்ள அதே அதிகாரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும், அதாவது:- மைய ச் சட்டம் V/1908

(a) சாட்சி எவருக்கும் அழைப்பாணை அனுப்பி வரவழைத்து விசாரணை செய்தல்;

(b) ஆவணம் எதனையும் கண்டறியுமாறும் முன்னிடுமாறும் கோருதல்;

(c) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப்பதிவுரு எதனையும் கோரிப் பெறுதல்;

(d) சாட்சிகள் அல்லது கணக்குகளை ஆய்வு செய்வதற்காக ஆணையங்களை பிறப்பித்து ஆணையிடுதல்;

(e) உள்ளூர் ஆய்வுகளையும் அல்லது உள்ளூர் புலனாய்வுகளையும் செய்தல்;

(f) வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற பொருட்பாடுகள்.

(4) அத்தகைய விசாரணை எதனின் போதும் குறிப்பிடப்பட்ட பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை ஒன்று தனிப்பட்டதொரு பொறுப்பாட்சியா அல்லது நிலைக்கொடையா அல்லது பொது பொறுப்பாட்சியா அல்லது நிலைக் கொடையா என்பது குறித்து பூசல் எதுவும் எழுமானால் மற்றும் பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடை ஆவணத்தில் அதன் இயல்வு குறித்து தெளிவான குறிப்புகள் இருக்கின்றன என்ற நிலையில் அப்பூசலானது அத்தகைய ஆவணத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(5) அரசானது, ஆணையின் வாயிலாக, பரப்பிடம் எதிலும் உள்ள பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையைப் பொறுத்த அளவில் இரண்டாவது அல்லது அதற்கடுத்த நில அளவை செய்யுமாறு நில அளவை அலுவலரைப் பணிக்கலாம்; மற்றும் **(2)**, **(3)**, **(4)** ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகள், **(1)**–ஆம் உட்பிரிவின்படி பணிக்கப்பட்டவாறான நில அளவை ஒன்றுக்கு அவை பொருந்துவது போன்றே பொருந்துதல் வேண்டும்;

வரம்புரை: அடுத்து முன்நிகழ்ந்த நில அளவை தொடர்பாகக் கொடுக்கப்பட்ட அறிவிக்கையின் தேதியிலிருந்து இருபது ஆண்டுகள் என்பதான கால அளவு முடிவடைவது வரையிலும் அத்தகைய இரண்டாம் அல்லது அதற்கடுத்த நில அளவையானது செய்யப்படுதல் கூடாது.

5. நிருவாக் குழுமமானது, **4**–ம் பிரிவின் **(2)**–ஆம் உட்பிரிவின்படி அதற்குப் பணிந்தனுப்பப்பட்ட அறிக்கையை ஆய்வு செய்தல் வேண்டும்; மற்றும் இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் சொத்துக்களின் பட்டியலை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுதல் வேண்டும்: பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் சொத்துகளின் பட்டியலை வெளியிடுதல்

6. (1) சொத்துக்களின் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட குறிப்பிட்ட சொத்து எதுவும் பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடை ஒன்றுக்குச் சொந்தமானதா என்பது குறித்து வினா பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடைக்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பான பூசல்கள்

Verified RealEstate ™

அல்லது பூசல் எதுவும் எழுமானால், அதில் நபர் எவரும் அந்த வினா அல்லது பூசலின் முடிவிற்காக நீதிமன்றமொன்றில் உரிமை வழக்கொன்றைத் தொடுக்கலாம்:

வரம்புரை: ஆனால், அத்தகைய உரிமை வழக்கு எதுவும், பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடைக்குச் சொந்தமான சொத்துக்களின் பட்டியல் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு முடிவடைந்ததன் பின்னர், நீதிமன்றம் எதனாலும் எடுத்துக் கொள்ளப்படுதல் கூடாது.

(2) **(1)**–ஆம் உட்பிரிவின்படியான உரிமை வழக்கு எதற்கும் நில அளவை அலுவலரை தரப்பினரொருவராகச் செய்தல் கூடாது; மற்றும் இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதற்கும் இணங்கிய வகையில் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட செயல் எதனையும் பொறுத்த அளவில் அவருக்கெதிராக உரிமை வழக்கோ, குற்றவியல் வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவுமோ எழாது.

(3) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை ஒன்றுக்குச் சொந்தமான சொத்துக்களின் பட்டியலானது, **(1)**–ஆம் உட்பிரிவின்படி நீதிமன்றமொன்றின் முடிவுக்கு இணங்கிய வகையில் மாற்றி அமைக்கப்பட்டாலன்றி கடைசியும் இறுதியுமானதாக இருத்தல் வேண்டும்.

நில அளவைக்கான செலவினத்தை திரும்பப் பெறுதல்

7. (1) இந்த அத்தியாயத்தின்படி பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடைக்குச் சொந்தமான சொத்துக்களின் பட்டியலை வெளியிடுவதற்கான செலவு உள்ளடங்களான, நில அளவை ஒன்றைச் செய்வதற்கான மொத்த செலவினமானது, முதன்மை நிருவாக அலுவலரால் கணிக்கப்பட்டவாறான, பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் நிகர ஆண்டு வருமானத்திற்கான விகிதத்தில் அந்தந்த பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையால் ஏற்கப்படுதல் வேண்டும்.

(2) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையானது ஏற்படுத்தப்பட்ட ஆவணம் அல்லது முறையாவனத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், **(1)**–ஆம் உட்பிரிவின்படி, பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையிலிருந்து தரவேண்டிய தொகை எதனையும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்துக்களின் வருமானத்திலிருந்து செலுத்தலாம்.

அத்தியாயம் III

வன்னியகுல சத்திரியர் பொது அறிநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் நிருவாகக் குழுமத்தை அமைத்துருவாக்குதல் மற்றும் அதன் பணிகள்

நிறுவியமைத்தல்

8. (1) இது குறித்து, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்க கூடிய அத்தகைய தேதியிலிருந்து செயல்விளைவு கொள்ளும் வகையில், "வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் நிருவாகக்குழுமம்" என்ற பெயரில் அல்லது அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக் கூடிய அத்தகைய பிற பெயரில் அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும்.

(2) நிருவாகக்குழுவானது, கூட்டுரும அமைப்பாக இருத்தல் வேண்டும். அது நிலையான தொடர் வழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றையும் பெற்றிருக்கும். சொத்துக்களைப் பெறவும் வைத்திருப்பதற்கும் வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு அத்தகைய சொத்தினை மாற்றம் செய்வதற்கும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும், மற்றும் அது மேற்சொன்ன பெயரில் வழக்கிடுதலும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

நிருவாகக் குழுமத்தில் எவரொவர் அடங்கியிருப்பர் என்பது.

9. **(1)** நிருவாகக்குழுமமானது பின்வரும் நபர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(a) ஒரு தலைமையாளர், அவர் வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(b) பின்வரும் உறுப்பினர்கள், அவர்கள் வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(i) உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றம் அல்லது மாவட்ட நீதிமன்றத்தின் ஒய்வு பெற்ற நீதிபதிகளுக்கு இடையே இருந்து ஒது நபர்;

(ii) அகில இந்திய பணிகளில் இருந்து ஒரு நபர்;

(iii) சட்ட மன்றப் பேரவையின் உறுப்பினர்களுக்கு இடையே இருந்து இரண்டு நபர்கள்;

(iv) பொறுப்பாட்சிகளின் பொறுப்பாட்சியர்கள் மற்றும் நிலைக்கொடையின் நிருவாகிகள் ஆகியோருக்கிடையே இருந்து ஒரு நபர்;

(v) வன்னியகுல சத்திரியர் சமுதாய நிறுவனங்களைச் சார்பாற்றம் செய்கிற ஒருநபர்;

(vi) சட்டத் தொழில், தணிக்கை, வணிகம், கல்வி, பொறியியல் மற்றும் தொழிற்சாலை ஆகிய துறைகளில் நல்ல பெயர் பெற்றுள்ள புகழ்வாய்ந்த நபர்கள் இருவர்;

(vii) வன்னியகுல சத்திரியர் நலத்திற்காகப் பணியாற்றி உள்ள இரண்டு பெண்கள்;

(c) பின்வரும் பதவி வழி உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:-

(i) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் அரசுச் செயலாளர்; மற்றும்

(ii) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் நலத்துறையின் ஆணையர் அல்லது இயக்குநர்:

<u>வரம்புரை:</u> ஆனால், பதவிவழி– உறுப்பினர்கள், வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்பது தேவையில்லை.

(d) உறுப்பினர் – செயலாளர்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, அதில் குறித்துரைக்கப்படக் கூடிய அத்தகைய தேதியிலிருந்து தலைமையாளரையும், உறுப்பினர்களையும் நியமித்து நிருவாகக் குழுமத்தை அமைத்துருவாக்கலாம் அல்லது மீண்டும் அமைத்துருவாக்கலாம்.

பதவிக் கால அளவு

10. நிருவாகக் குழுமத்தின் தலைமையாளர்களும் இது குறித்து அரசினால் குறித்துரைக்கப்படக்கூடிய மூன்றாண்டுக் கால அளவுக்கு மேற்படாத அத்தகைய கால அளவிற்கு ஒவ்வொரு உறுப்பினரும் பதவி வகித்தல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப் படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்து இருப்பதற்கான தகுதிக்கேடுகள்

11. (9) ஆம் பிரிவின் **(1)**–ஆம் உட்பிரிவின் (c) எனும் கூறில் சுட்டப்பட்ட பதவி வழி உறுப்பினர்கள் அல்லாத பிறவாறான, நிருவாகக்குழுமத்தின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்து இருப்பதற்கு பின்வரும் நேர்வுகளில் நபரொருவர் தகுதிக்கேடுற்றவராதல் வேண்டும்.

(i) அவர் இருபத்தொன்று வயதுக்கு குறைவானவராக இருந்தால்;

(ii) அவர் மனச்சீர்கேடுற்றநபர் ஒருவராகக் கண்டறியப்பட்டால்;

(iii) அவர் விடுக்கப்படாத நொடிப்பு நிலையர் ஒருவராக இருத்தல்;

(iv) அவர் ஒழுக்கக்கேட்டினை உள்ளங்கிய குற்றச்செயல் ஒன்றுக்காக குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டு இருந்து, அத்தகைய தீர்ப்பானது எதிர்மாறாக்கப்படாமல் இருந்தால் அல்லது அத்தகைய குற்றச் செயலைப் பொறுத்தளவில் முழுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லையானால்;

(v) அவர் அதற்கு முன்னர் நிகழ்வுகளில்,-

(a) இரண்டு கால அளவுகளில் நிருவாகக் குழுமத்தின் தலைமையாளர் ஒருவராக அல்லது உறுப்பினராக பணியாற்றி இருந்தால்,

விளக்கம்:- இந்தக் கூறில் சுட்டப்பட்ட இரண்டு கால அளவுகளை கணக்கிடும் நோக்கத்திற்காக, நபரொருவர், தலைமையாளர் ஒருவராகவோ அல்லது உறுப்பினர் ஒருவராகவோ அல்லது இரண்டிலுமோ பதவி வகித்த கால அளவானது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) உறுப்பினர் ஒருவராக அல்லது நிருவாகக் குழுமத்தின் உள்ளீட்டெல்லையில் உள்ள பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனின் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி ஒருவராக இருக்கும் பதவியிலிருந்து அகற்றப்பட்டவராக இருந்தால்;

(c) தவறான மேலாண்மை அல்லது ஊழல் செய்ததற்காக பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடை எதிலும் உள்ள நிலை எதிலிருந்தும் தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றின் ஆணை ஒன்றினால் அகற்றப்பட்டிருந்தால்,

நிருவாகக் குழுமத்தின் கூட்டங்கள்

12. (1) நிருவாகக் குழுமமானது அலுவல் நடவடிக்கைக்காக ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும்.

(2) தலைமையாளர் அல்லது அவர் வராத போது, உறுப்பினர்களுக்கிடையேயிருந்து உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர் எவரும் நிருவாகக் குழுமத்தின் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, நிருவாகக்குழுமத்தின் கூட்டம் எதனின் முன்பாக வரும் பிரச்சினைகள் அனைத்தும், உறுப்பினர்களின் வாக்குகளின் பெரும்பான்மை ஒன்றினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் வாக்குகள் சமமாக இருக்கின்ற நேர்வில், தலைமையாளர் அல்லது தலைமை வகிக்கிற பிற நபர் எவரும் இரண்டாம் அல்லது அறுதி வாக்கு ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கோரெண் வரம்பு

13. நிருவாகக்குழுமத்தின் கோரெண் வரம்பானது, தலைமையாளர் உள்ளிட்ட, ஆனால் காலியிடங்களின் எண்ணிக்கை நீங்கலாக உறுப்பினர்களில் நூற்றுக்கு ஐம்பதுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்தின் குழுக்கள்

14 (1). நிருவாகக் குழுமமானது, அது தேவையானதெனக் கருதும் போதெல்லாம், பொதுவாக அல்லது குறிப்பிட்ட தொரு நோக்கமொன்றுக்காக, அல்லது குறித்துரைக்கப்பட்ட பரப்பிடம் எதற்காகவும், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்தினை மேற்பார்வை செய்வதற்கான குழுக்களை நிறுவியமைக்கலாம்.

(2). அத்தகைய குழுக்களை அமைத்துருவாக்குதல், அதன் பணிகள், கடமைகள், பணி பற்றிய வரையரைகள், நிபந்தனைகள் ஆகியன நிருவாகக் குழுமத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

வரம்புரை: ஆனால், அத்தகைய குழுக்களின் உறுப்பினர்கள் நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர்களாக இருக்க வேண்டிய தேவையில்லை.

தலைமையாளரும் உறுப்பினர்களும் பதவி விலகுதல்

15. தலைமையாளரோ அல்லது பதவி வழி உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினர் எவருமோ, எந்த நேரத்திலும் எழுத்துருவில் அரசுக்கு முகவரியிட்டு அனுப்புவதன் மூலம்

தலைமையாளர் அல்லது நேர்விற்கேற்ப உறுப்பினர் பதவியை விட்டு விலகலாம்; ஆனால் அவர்தம் பதவிவிலகலானது ஏற்கப்படுவது வரையிலும், அவர் பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

தலைமையாளரையும் உறுப்பினரையும் பதவியிலிருந்து அகற்றுதல்

16. அரசானது, அறிவிக்கையின் வாயிலாக நிருவாகக் குழுமத்தின் தலைமையாளர் அல்லது பதவி வழி உறுப்பினர் அல்லாத எவரையும் அவர்,

(i) **11**–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதிக்கேடு எதற்கும் உட்பட்டிருந்தால் அல்லது உட்பட்டவராகி இருந்தால்; அல்லது

(ii) செயல்படுவதற்கு மறுத்தால் அல்லது செயற்படுவதற்கத் தகுதியற்றவராக இருந்தால், அல்லது அரசு, அவர் கொடுக்கக்கூடிய விளக்கம் எதனையும் கேட்ட பின்னர், அவர் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நலனுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் செயல்படுவதாகக் கருதினால்

அல்லது

(iii) போதுமான காரணமின்றி நிருவாகக்குழுமத்தின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வரத் தவறியிருக்கிறார் என நிருவாகக் குழுமம் கருதினால்,

அவரைப் பதிவியிலிருந்து அகற்றலாம்.

காலியிடத்தை நிரப்புதல்

17. பதவியிலிருந்து அகற்றுதல், பதவி விலகல், மரணம் அல்லது பிறவாறு தலைமையாளர் அல்லது உறுப்பினர் ஒருவரின் பதவியிடம் காலியிடமாகிற போது, புதிய தலைமையாளர் ஒருவர் அல்லது புதிய உறுப்பினர் ஒருவர் அவர்தம் இடத்தில் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அந்தத் தலைமையாளர் அல்லது அந்த உறுப்பினர், எந்தத் தலைமையாளரின் அல்லது உறுப்பினரின் இடத்தை அவர் நிரப்புகிறாரோ அவர் அக்காலியிடம் ஏற்படாதிருந்தால், எவ்வளவு கால அளவிற்குப் பதவி வகித்திருக்கக் கூடுமோ அவ்வளவு கால அளவுக்கு மட்டுமே பதவி வகித்து வருதல் வேண்டும்.

காலியடங்கள் முதலானவை நிருவாகக் குழுமத்தின் நடவடிக்கைகளை செல்லத்தகாதது ஆக்குதல் கூடாது

18. நிருவாகக் குழுமத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களுக்கிடையே காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது அதன் அமைப்புருவாக்கத்தில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தால் மட்டுமே செல்லத்தகாததாக ஆக்குதல் கூடாது.

முதன்மை நிருவாக அலுவலரின் பணியமர்த்தம் மற்றும் அவருடைய பதவிக்காலம் மற்றும் பிற பணி நிபந்தனைகள்

19. (1) குழுமத்தின் முதன்மை நிருவாக அலுவலர் அரசு துணைச் செயலாளர் படிநிலைக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும்; அவர் வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபரொருவராக இருத்தல் வேண்டும்; மற்றும் அவர் குழுமத்தின் ஆலோசனையுடன் அரசினால் பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) முதன்மை நிருவாக அலுவலரின் பதவிக்காலமும், பிற பணி பற்றிய நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(3) முதன்மை நிருவாக அலுவலர், நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர்– செயலராக இருத்தல் வேண்டும்; அவர் நிருவாகக் குழுமத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்தின் அலுவலர்களும் பிற பணியார்களும்

20. (1) இந்தச் சட்டத்தின்படி நிருவாகக் குழுமமானது திறம்பட பணிகளை ஆற்றுவதற்காக, நிருவாகக்குழுமமானது, அரசின் அனுமதியுடன், தேவைப்படக் கூடியதாக இருக்கிற அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்களையும் பிற பணியாளர்களையும் நியமிக்கலாம்.

(2) அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களின் நியமனம், பதவிக்கால அளவு, பணிபற்றிய நிபந்தனைகள் ஆகியன, ஒழுங்குமுறை விதிகளில் வகை செய்யப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

முதன்மை நிருவாக அலுவலரின் கடமைகளும் அதிகாரங்களும்.

21 (1) இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் மற்றும் நிருவாகக்குழுமத்தின் பணிப்புரைகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, முதன்மை நிருவாக அலுவலரின் பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(i) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்துக்களின் இயல்பையும் அளவையும் கவனமாக ஆய்வு செய்தல், மற்றும் தேவைப்படும் போதெல்லாம் பொறுப்பாட்சியரிடமிருந்தும் நிருவாகிகளிடமிருந்தும் சொத்துக்களின் விவரப்பட்டியலைக் கோருதல்; மற்றும் கணக்குகளை, விவரவுரைகளை மற்றும் தகவல்களைக் கோருதல்

(ii) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடைகளின் சொத்து, கணக்குகள், பதிவுருக்கள், ஆவணங்கள் அல்லது அவை தொடர்பான ஆவணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தல் அல்லது ஆய்வு செய்ய ஆவன செய்தல்;

(iii) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையை கட்டுபாடு செய்வதற்கு, பேணிவருவதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு தேவைப்படக் கூடியவாறான அத்தனை செயல்களைப் பொதுவாகச் செய்தல்.

(2). (1)–ஆம் உட்பிரிவின்படியான பணிப்புரைக்களைக் கொடுக்கும் அதிகாரத்தைச் செயற்படுத்துகையில் நிருவாகக் குழுமமானது, பொறுப்பாட்சி ஆவணத்தில் அல்லது நிலைக் கொடையில் காணப்படும் பணிப்புரைகளுக்கு இணங்கிய வகையில் செயற்படுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தில் பிறவாறு வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தால் தவிர, முதன்மை நிருவாக அலுவலர், இந்தச் சட்டத்தின்படி அவருக்கு ஒதுக்கியளிக்கப்பட்டுள்ள அல்லது ஒப்படைவு செய்யப்பட்டுள்ள அத்தகைய அதிகாரங்களைச் செயற்படுத்துவதுடன் அத்தகைய கடமைகளை ஆற்றுதல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்தின் ஆணைகளையும், தீர்மானங்களையும் பொருத்த அளவில் முதன்மை நிருவாக அலுவலரின் அதிகாரம்

22. (1) முதன்மை நிருவாக அலுவலர், நிருவாகக் குழுமத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை, நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது,–

(i) சட்டத்திற்கு இணங்கிய வகையில் பிற்பிக்கப்பட்டிருக்கவில்லை அல்லது நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை என; அல்லது

(ii) இந்தச் சட்டத்தாலோ அல்லது அதன்படியோ அல்லது பிற சட்டம் எதனின் படியோ நிருவாகக் குழுமத்திடம் வழங்கப்பட்ட அதிகாரங்களை மிஞ்சிய வகையில் அல்லது அவற்றை தவறாகவும் பயன்படுத்திய வகையில் இருக்கிறதென; அல்லது

(iii) நடைமுறை படுத்தப்பட்டால்,

(a) நிருவாகக்குழுமத்திற்கு அல்லது தொடர்புள்ள பொறுப்பாட்சிக்கு அல்லது நிலைக் கொடைக்கு பெரும்பாலும் நிதி இழப்பினை ஏற்படக்கூடும் என;

(b) கலகத்தை அல்லது அமைதிக் குலைவை ஏற்படுத்தக் கூடும் என; அல்லது

(c) மனித வாழ்க்கை, நல்வாழ்வு அல்லது பாதுகாப்பிற்கு அபாயம் உண்டாக்கக்கூடும் என

Verified @ RealEstate TM

(d) பொதுவாக நிருவாகக்குழுமத்திற்கோ அல்லது பொறுப்பாட்சிக்கோ அல்லது நிலைக் கொடைக்கோ நலன் தருவதாக இல்லை எனக் கருதினால், அவர் அத்தகைய ஆணையை அல்லது தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாக, இந்தப் பொருட்பாட்டினை நிருவாகக் குழுமத்தின் முன்பு அதன் மறுபரிசீலனைக்காக வைக்கலாம்.

(2) நிருவாகக்குழுமமானது, முதன்மை நிருவாக அலுவலரால் குறிப்பிடப்பட்ட பொருட்பாடுகளைப் பரிசீலனை செய்வதற்கு **14**–ஆம் பிரிவின்படி, குழு ஒன்றை அமைத்துருவாக்கலாம்; மற்றும் அந்தக் குழுவின் ஆலோசனைகளின் பேரில் , நிருவாகக்குழுமமானது இந்தப் பொருட்பாட்டினை மறுபரிசீலனை செய்யலாம் அல்லது, இந்தப் பெருட்பாட்டினை, குழுவின் அறிக்கை, முதன்மை நிருவாக அலுவலரின் குறிப்புரைகள், நிருவாகக் குழுமத்தின் ஆணை அல்லது தீர்மானம் ஆகியவற்றுடன் அரசுக்கு சுட்டியனுப்பலாம், மற்றும் அதன்மீதான அரசின் முடிவானது இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்தின் அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்

23. நிருவாகக்குழுமமானது, எழுத்துருவிலான, பொது அல்லது தனி ஆணையொன்றினால், மேற்சொன்ன ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டு, தலைமையாளருக்கோ பிற உறுப்பினர் எவருக்குமோ அல்லது நிருவாகக் குழுமத்தின் பிற அலுவலர் அல்லது பணியாளர் எவருக்குமோ, அல்லது குழு எதற்குமோ, அது தக்கதெனக் கருதுகிறவாறு, இந்தச் சட்டத்தின்படியான அத்தகைய அதிகாரங்களையோ கடமைகளையோ ஒப்படைவு செய்யலாம்.

முதன்மை நிருவாக அலுவலர் ஆட்சியர் முதலானவர்கள் மூலமாக அதிகாரங்களைச் செலுத்துதல்.

24. **(1)** இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, முதன்மை நிருவவக அலுவலர்;

(a) இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படி தம்மிடம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் ஏதொன்றையுமோ, நிருவாகக்குழுமத்தின் முன் ஏற்பளிப்புடன் தொடர்பான பொறுப்பாட்சியானது அல்லது நிலைக்கொடையானது அமைந்துள்ள மாவட்டத்தின் ஆட்சியர் மூலமாகவோ அல்லது அந்த நோக்கத்திற்காக, ஆட்சியர் நியமிக்கக்கூடிய பிற பொறுப்பான அலுவலர் மூலமாகவோ செலுத்தலாம்;

(b) அவ்வப்போது ஆட்சியர் எவருக்குமோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அத்தகைய நபர் எவருக்குமோ தமது அதிகாரங்களில் எவற்றையும் ஒப்படைவு செய்யலாம்; மற்றும்

(c) அவரால் அவ்வாறு செய்யப்பட்ட ஒப்படைவினை எந்த நேரத்திலும் திரும்பப் பெறலாம்.

(2) **(1)**–ஆம் உட்பிரிவின்படி முதன்மை நிருவாக அலுவலரால், அதிகார ஒப்படைவானது செய்யப்பட்ட நபர், அத்தகைய ஒப்படைவானது செய்யப்பட்ட நபர், அத்தகைய அதிகாரங்களை, ஒப்படைவு என்பதாக இல்லாமல் தம்மிடமே இந்தச் சட்டத்தினால் அவை நேரடியாக வழங்கப்பட்டிருந்தாற்போன்றே அதே முறையிலும் அதே அளவிலும் செலுத்தலாம்.

பதிவுருக்கள் பதிவேடுகள் முதலானவற்றை ஆய்வு செய்வதற்கு முதன்மை நிருவாக அலுவலரின் அதிகாரம்

25. முதன்மை நிருவாக அலுவலரோ அல்லது அவரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட நிருவாகக்குழுமத்தின் அலுவலர் எவருமோ, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டும் மற்றும் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதனின்படி அத்தைகைய கட்டணங்கள் எவையேனும் இருப்பின், அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதற்கு உட்பட்டும், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை தொடர்பான அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்துக்களாக இருக்கிற அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்துக்களாகக் கோரப்படும் அசையும் அல்லது அசையாச் சொத்து தொடர்பான

Verified ✓. RealEstate™

பதிவுருக்கள், பதிவேடுகள் அல்லது பிற ஆவணங்கள் எவற்றையும் பொது அலுவலகம் எதிலும் நியாயமான எல்லாக் காலங்களிலும் ஆய்வு செய்வதற்கு உரிமைத் தகுதியுடையவராதல் வேண்டும்.

பதிவுருக்கான ஆய்வு செய்தல்

26. (1) நிருவாகக் குழுமமானது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவன் பேரிலும், அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டும், அதன் நடவடிக்கைகளை அல்லது பதிவுருக்களை ஆய்வு செய்ய அனுமதிக்கலாம் மற்றும் அவற்றின் நகல்களை வழங்கலாம்.

மையச் சட்டம் 1/1872

(2) இந்தப் பிரிவின்படி வழங்கப்படும் அனைத்து நகல்களும், 1872–ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 76–ஆம் பிரிவில் வகை செய்யப்பட்ட முறையில் நிருவாகக் குழுமத்தன் முதன்மை நிருவாக அலுவலரால் சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

(3) (2)–ஆம் உட்பிரிவின்படி முதன்மை நிருவாக அலுவலரிடம் வழங்கப்பட்ட அதிகாரங்கள்.

இது குறித்து நிருவாகக் குழுமத்தால் பொதுவாக அல்லது தனிப்பட்ட முறையில் அதிகாரமளிக்கப்பட்ட நிருவாக குழுமத்தின் அத்தகைய பிற அலுவலர்களால் செலுத்தப்படலாம்.

நிருவாகக் குழுமத்தின் அதிகாரங்களும் அலுவற்பணிகளும்

27. (1) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படக்கூடிய விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு, அனைத்துப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் பொதுவான கண்காணிப்பானது, நிருவாகக் குழுமத்திடம் உற்றடைதல் வேண்டும்; மற்றும் தனது கண்காணிப்பின் கீழ் உள்ள பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையானது, தக்க முறையில் பேணிவரப்படுவதையும் கட்டுப்பாடு செய்யப்படுவதையும் நிருவகிக்கப்படுவதையும் மற்றும் அதிலிருந்து வரும் வருமானமானது அதன் நோக்கத்தை நிறைவேற்றுதற்கு உரிய முறையிலும், அத்தகைய பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடை உருவாக்கப்பட்ட அல்லது கருதப்பட்ட நோக்கங்களுக்காகச் செலவிடப்படுகிறதா என்பதையும் உறுதி செய்யும் வகையில் இந்தச் சட்டத்தின்படியான அதன் அதிகாரங்களைச் செலுத்துவது நிருவாகக் குழுமத்தின் கடமையாக இருத்தல் வேண்டும்.

<u>வரம்புரை:</u> ஆனால், நிருவாகக் குழுமமானது, பொறுப்பாசி அல்லது நிலைக் கொடை எதனையும் பொறுத்த அளவில் இந்தச் சட்டத்தின்படியான அதிகாரங்களைச் செயற்படுத்துகையில், பொறுப்பாட்சி ஆவணத்தின் அல்லது எந்த ஆவணங்களின் மூலமாக, இந்தச் சொத்தானது அறச் செயல் நோக்கங்களுக்காக காணிக்கையாக ஒப்படைக்கப்பட்டதோ அந்த ஆவணங்களின் பணிப்புரைகளுக்கு இணங்கிய வகையில், செயற்படுதல் வேண்டும்.

<u>விளக்கம்:</u> ஐயங்களை அகற்றுவதற்காக, இந்த உட்பிரிவில், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை என்பது, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னதாக அல்லது அதற்குப் பினனர், சட்டமுறையிலான நீதிமன்றம் எதனாலும் செய்யப்பட்டுள்ள திட்டம் ஏதொன்றின் தொடர்பாகவும் உள்ள பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையொன்றை உள்ளடக்கும்.

(2) முன் சொன்ன அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு ஊறின்றி, நிருவாகக் குழுமத்தின் பணிகள் பின்வருவன ஆகும்:-

(i) ஒவ்வொரு பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் தோற்றம், வருமானம், நோக்கம், நலன் பெறுபவர்கள் தொடர்பான தகவல் அடங்கிய பதிவுரு ஒன்றினைப் பேணி வருதல்;

Verified RealEstate TM

(ii) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் வருமானமானது, பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையானது எந்தக் குறிக்கோள்களுக்காவும் நோக்கங்களுக்காவும் கருதப்பட்டதோ அல்லது உருவாக்கப்பட்டதோ அவற்றுக்காச் செலவிடப்படுவதை உறுதி செய்தல்;

(iii) பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் நிருவாகத்திற்குப் பணிப்புரைகளை வழங்குதல்;

(iv) பொறுப்பாட்சியின் மற்றும் நிலைக்கொடையின் மேலாண்மைக்கான திட்டங்களைத் தீர்வு செய்தல்:

வரம்பரை: ஆனால், அத்தகைய திட்டம் எதுவும், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு, அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு வாய்ப்பு ஒன்றினை வழங்காமல், அத்தகைய திட்டம் எதுவும் தீர்வு செய்யப்படுதல் கூடாது.

(v) பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியால் பணிந்தனுப்பப்பட்ட வரவு செலவு திட்டங்களை கூர்ந்தாய்வு செய்தல் மற்றும் ஏற்பளித்தல்; மற்றும் பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல்;

(vi) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் பொறுப்பாட்சியர்களையும் நிருவாகிகளையும் நியமித்தலும் அவர்களை அகற்றுதலும்;

(vii) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனின் தொலைந்துபோன சொத்துக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்;

(viii) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனின் சொத்து தொடர்பாக வழக்குகள் மற்றும் நடவடிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் எதிர் வழக்காடுதல்;

(ix) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில், விற்பனை, பரிசில், அடமானம் பரிமாற்றம் அல்லது குத்தகை மூலமாக பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனின் அசையாச் சொத்தின் உரிமை மாற்றம் எதற்கும் ஒப்பளிப்பு வழங்குதல்:

வரம்பரை: ஆனால் அத்தகைய ஒப்பளிப்பு எதுவும், அத்தகைய நடவடிக்கைக்கு ஆதரவாக, நிருவாகக் குழுமத்தின் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு மொத்த உறுப்பினர்கள் வாக்களித்தாலன்றி வழங்கப்படுதல் கூடாது;

(x) வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணி வருதல்) நிதியத்தை நிருவாகம் செய்தல்;

(xi) நிருவாக் குழுமமானது அவ்வப்போது கோரக் கூடியவாறு பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்து தொடர்பாக பொறுப்பாட்சியாளர்கள் அல்லது நிருவாகிகளிடம் இருந்து அத்தகைய விவரவுரைகள், புள்ளி விவரங்கள், கணக்குகள் மற்றும் பிற தகவல்கள் ஆகியவற்றைக் கோரிப் பெறுதல்;

(xii) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்துக்களையும் அது தொடர்பான கணக்குகள் பதிவுருக்கள் அல்லது ஒப்பாவணங்கள் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்தல் அல்லது ஆய்வு செய்வதற்கு ஆவண செய்தல்;

Verified RealEstate ™

(xiii) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் மற்றும் அதன் சொத்துக்களின் இயல்பினையும் அளவையும் புலனாய்வு செய்து தீர்மானித்தல்; மற்றும் அத்தகைய பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்தின் நில அளவை ஒன்றை, தேவையானபோதெல்லாம் செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

(xiv) (a) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் மிகையான வருமானத்தை, பொறுப்பாட்சியின் மற்றும் நிலைக்கொடையின் நோக்கத்திற்கு இணங்கிய வகையில் பயன்படுத்துவதற்குப் பணித்தல்;

(b) எழுதப்பட்ட ஆவணத்தில் தெளிவான நோக்கங்கள் இல்லாத பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் வருமானம் ஏழ்மை நிலையிலுள்ள வன்னியகுல சத்திரிய மக்களை பொருளாதார சமூக, கல்வி ஆகியவற்றில் முன்னேற்றம் அடையச் செய்யவும், வாழ்வதாரங்களைப் பெருக்கவும், எந்த முறையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் எனப்பணித்தல்;

(c) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நோக்கம் எதுவும் இருப்பது அற்றுப்போயிருக்கிற அல்லது அதனை எய்துவது இயலாத நிலைக்குப் போயிருக்கிற நேர்வில், பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் வருமானமானது அந்த நோக்கத்திற்காக முன்னர் எந்த அளவிற்கு பயன்படுத்தப்பட்டதோ, அந்த அளவிற்கு அதுபோன்ற பிற நோக்கம் எதற்குமே அல்லது கிட்டத்தட்ட அதுபோன்று நோக்கம் எதற்குமோ அல்லது முதலில் இருந்த நோக்கம் எதற்குமோ அல்லது ஏழ்மை நிலையிலுள்ள வன்னியகுல சத்திரிய மக்களை பொருளாதார சமூக, கல்வி ஆகியவற்றில் முன்னேற்றம் அடையச் செய்யவும், வாழ்வதாரங்களைப் பெருக்கவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும் எனப்பணித்தல்;

<u>வரம்பரை</u>: ஆனால், இந்தக் கூறின்படி பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு அவர் தம் தரப்பினைக் கேட்பதற்கு வாய்ப்பினைக் கொடுக்காமல் பணிப்புரை எதுவும் வழங்கப்படுதல் கூடாது.

(xv) பொதுவாக பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் கட்டுப்பாடு, பேணிவருதல் மற்றும் நிருவாகத்திற்கு தேவைப்படக்கூடிய அத்தகைய அனைத்துச் செயற்பாடுகளையும் செய்தல்;

(3) (iv)–எனும் கூறின்படி நிருவாகக் குழுமமானது மேலாண்மை திட்டம் எதனையும் தீர்வு செய்துள்ளவிடத்து அல்லது (2)–ஆம் உட்பிரிவின் (xiv) எனும் கூறின்படி பணிப்புரை எதனையும் கொடுத்துள்ளவிடத்து, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையில் அக்கறை கொண்டுள்ள அல்லது அத்தகைய தீர்வினால் அல்லது பணிப்புரையினால் பாதிக்கப்பட்ட நபர் எவரும் அத்தகைய தீர்வு அல்லது பணிப்புரைகளைத் தள்ளுபடி செய்வதற்கு நீதிமன்றம் ஒன்றில் வழக்கொன்றைத் தொடுக்கலாம்; மற்றும் அதன் பேரிலான மேற்சொன்ன நீதிமன்றத்தின் முடிவானது அறுதியானதாக இருத்தல் வேண்டும்.

(4) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதற்கும் சொந்தமான நிலம் எதுவும் விற்பனை மையமாக, அங்காடியாக, வீட்டுக்குடியிருப்புகளாக மற்றும் அது போன்றவையாக மேம்படுத்துவதற்கு இயலும் வகையில் வாய்ப்பு வளம் பொருந்தியதாக இருக்கிறது என நிருவாகக்குழுமமானது நிறைவுறுமாயின், தொடர்புள்ள பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்கு, அறிவிப்பு ஒன்றினைச் சார்வு செய்யலாம்; மேற்சொன்ன அறிவிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, அறுபது நாட்களுக்குக் குறையாத காலஅளவுக்குள்ளாக, அந்த அறிவிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, அத்தகைய மேம்பாட்டினை நிறைவேற்றுவதற்கு அவர்கள் விருப்பமுடையவர்களாக இருக்கிறார்களா என்பதான அரசு முடிவினைத் தெரிவிக்குமாறு அதில் கோரலாம்.

Verified RealEstate™

(5) 4–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பிற்கான பதிலுரை ஏதேனும் பெறப்பட்டிருப்பின் அதனைப் பரிசீலனை செய்ததன் பேரில், பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கோரப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு விருப்பப்படவில்லை அல்லது அதற்குத் தகுதியுடையவராக இல்லை என நிருவாகக் குழுமமானது, நிறைவுறுமாயின் நிருவாகக் குழுமமானது, அரசின் முன் ஏற்பளிப்புடன், சொத்தினை எடுத்துக் கொண்டு, அதன் மீது உள்ள கட்டிடங்களை அல்லது கட்டமைப்புகளை அகற்றி, பொறுப்பாட்சிகள் அல்லது நிலைக்கொடைகளின் நிதியங்களிலிருந்து அல்லது தொடர்புள்ள பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்துக்களைப் பிணையமாக வைத்து நிதி பெற்று அத்தகைய பணிகளை நிலைவேற்றலாம் மற்றும் நிருவாக் குழுமத்தினால் உள்ளாகி ஏற்கப்பட்ட செலவினங்கள் அனைத்தையும் அத்தகைய பணிகளைப் பேணி வருவதன் பேரிலான செலவினத்தையும் சொத்துக்களின் மீது உள்ளான சட்டமுறையான பிற கட்டணங்களையும் சொத்துக்களிலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து வசூலிக்கப்படுவது வரையிலும், சொத்துக்களைக் கட்டுப்படுத்தி மேலாண்மை செய்யலாம்:

வரம்புரை: ஆனால், நிருவாக்குழுமமானது தொடர்புள்ள பொறுப்பாட்சியரையும், நிருவாகக் குழுமத்தினால் சொத்தானது எடுத்துக் கொள்ளப்படுவதற்கு உடனடி முன்பாக மூன்று ஆண்டுக்கால அளவின்போது அச்சொத்திலிருந்து பெறப்பட்ட சராசரி ஆண்டு நிகர வருமானம் என்ற அளவுக்கு ஆண்டுதோறும் இழப்பீடு வழங்குதல் வேண்டும்.

(6) (5)–ஆம் உட்பிரிவில் விவரிக்கப்பட்டவாறு செலவினங்கள் அனைத்தையும் மேம்படுத்தப்படட சொத்தின் வருமானத்திலிருந்து மீளப் பெற்றதன் பேரில், மேம்படுத்தப்படட சொத்தானது, தொடர்புள்ள பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியிடம் ஒப்புவித்தல் வேண்டும்.

முதன்மை நிருவாக அலுவலரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபர்களால் ஆய்வு செய்வதற்கான அதிகாரம்

28. (1) நிருவாகக் குழுமத்தின் முன் ஏற்பளிப்புடன் முதன்மை நிருவாக அலுவலர் தாமே அல்லது அவரால் இது குறித்து எழுத்துருவில் அதிகாரமளிக்கப்பட்ட பிற நபர் எவரும், பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி தமது நிருவாகம் அல்லது நிருவாகக் கடமைகளை ஆற்றி வருகையில் அவர் தம் பேரிலான தவறுகை அல்லது கவனக்குறைவின் காரணத்தால், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடைக்கு இழப்பு அல்லது சேதம் எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்தான அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும் அவை தொடர்பான அனைத்துப் பதிவுருக்கள், தகவல் தொடர்புகள், திட்டங்கள், கணக்குகள் பிற ஆவணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்யலாம்.

(2) (1)–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அத்தகைய ஆய்வானது செய்யப்படும்போதெல்லாம் தொடர்பான பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி மற்றும் அவர் கீழ் பணியாற்றும் அனைத்து அலுவலர்களும் பிற பணியாளர்களும் மற்றும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நிருவாகத்துடன் தொடர்புடைய ஒவ்வொரு நபரும், ஆய்வினைச் செய்யும் நபர் தமது பணியை நிறைவேற்றுவற்கு நியாயமான முறையில் கோருகிறவாறான, அவருக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய உதவிகளையும் வசதிகளையும் வழங்குதல் வேண்டும்.; மற்றும் ஆய்வினைச் செய்கிற நபரால் கோரப்படக்கூடியவாறான, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் தொடர்பான அசையும் சொத்து அல்லது ஆவணங்களையும் முன்னிடுதல் வேண்டும்; மற்றும் அவரால் கோரப்படக்கூடியவறான பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை தொடர்பான அத்தகைய தகவலைக் கொடுத்தல் வேண்டும்.

(3) அத்தகைய ஆய்வு எதற்கும் பின்னர், பொறுப்பாட்சி அல்லது நிருவாகி அல்லது அவரின் கீழ் பணியாற்றி வந்த அலுவலர் அல்லது பிற பணியாளர் எவரும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் பணம் அல்லது சொத்து எதையும் உரிமையின்றி கையாடல் செய்திருந்தார், தவறாக் பயன்படுத்தியிருந்தார் அல்லது மோசடியாக வைத்திருந்தார் என்றோ அல்லது பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் நிதியங்களிலிருந்து சட்டத்திற்கு எதிரான அதிகாரமளிக்கப்படாத தவறான செலவினத்தைச் செய்திருந்தார் என்றோ தோன்றுமானால் முதன்மை நிருவாக அலுவலர் அந்தப் பொறுப்பாட்சியருக்கு அல்லது

நிருவாகிக்கு எதிராக அந்தத் தொகையை அல்லது சொத்தினை மீளப் பெறுவதற்கான ஆணை ஒன்றை ஏன் பிறப்பிக்கப்படக்கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு அவருக்கு நியாயமான வாய்ப்பினை கொடுத்தற்கு பின்னரும் அவரால் கொடுக்கப்பட்ட அத்தகைய விளக்கம் ஏதேனும் இருப்பின், அதனை பரிசீலனை செய்த பின்னரும் அத்தகைய நபரால் உரிமையின்றி கையாடல் செய்யப்பட்டுள்ள தவறாக பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது மோசடியாக வைக்கப்பட்டுள்ள தொகையை அல்லது சொத்தினை அல்லது அவரால் செய்யப்பட்டுள்ள சட்டத்திற்கெதிரான அதிகாரமளிக்கப்படாத தவறான செலவினத் தொகையை தீர்மானிக்கலாம்; மற்றும் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட தொகையைச் செலுத்துமாறும் அந்த ஆணையில் குறித்துரைக்கடக்கூடிய அத்தகைய கால அளவிற்குள்ளாக பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் மேற்சொன்ன சொத்தினை மீள அளிக்குமாறும் அத்தகைய நபரை பணிக்கிற ஆணை ஒன்றினைச் செய்யலாம்.

(4) அத்தகைய ஆணையினால் பாதிக்கப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது பிற நபர் அவரால் ஆணைப் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.

<u>வரம்புரை</u>: ஆனால், அந்த மேலமுறையீட்டால் அவரால் செலுத்தப்பட வேண்டிய 3–ஆம் உட்பிரிவின்படி தீர்மானிக்கப்பட்டுள்ள தொகையை முதலில் முதன்மை நிருவாக அலுவலரிடம் வைப்பீடு செய்தாலன்றி நீதிமன்றத்தால் அத்தகைய மேல்முறையீடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுதல் கூடாது; மற்றும் மேல்முறையீடானது முடிவு செய்யப்படுவது நிலுவையில் இருக்கும்போது (3)–ஆம் உட்பிரிவின்படி முதன்மை நிருவாக அலுவலரால் செய்யப்பட்ட ஆணையை செயற்படுத்துவதை நிறுத்தி வைப்பதற்கான ஆணை எதனையும் செய்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை.

(5) நீதிமன்றமானது, அது கருதுகிறவறான சாட்சியத்தை எடுத்த பின்பு, (3)–ஆம் உட்பிரிவின்படி முதன்மை நிருவாக அலுவலரால் செய்யப்பட்ட ஆணையை உறுதி செய்யலாம், எதிர்மாறாக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம்; அல்லது அத்தகைய ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தொகையை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ குறைக்கலாம்; மற்றும் அது தக்கதெனக் கருதக்கூடியவாறு செலவுக்கான அத்தகைய ஆணைகளை பிறப்பிக்கலாம்.

(6). (5)–ஆம் உட்பிரிவின்படி நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையானது இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

28–ஆம் பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட தொகையை வசூலித்தல்

29. 28–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் அல்லது (5)–ஆம் உட்பிரிவின்படி பணத்தைச் செலுத்துமாறு அல்லது சொத்து எதனின் உடைமையை மீள அளிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ள பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது பிற நபர் எவரும் அத்தகைய ஆணையில் குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்குள்ளாக அவ்வாறு செய்யாமல் இருக்கிறவிடத்து அல்லது செய்ய தவறுகிறவிடத்து, நிருவாகக் குழுமத்தின் முன் ஏற்பளிப்புடன், முன் சொல்லப்பட்ட சொத்தின் உடைமையை மீளப் பெறுவதற்குத் தாம் தக்கதெனக் கருதுகிற அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்; மற்றும் பொறுப்பாட்சியரின் அல்லது நிருவாகியின் அல்லது பிற நபரின் சொத்தானது அமைந்துள்ள மாவட்டத்தின் ஆட்சியருக்கு சான்றிதழ் ஒன்றையும் அனுப்புதல் வேண்டும். அதில் அந்தப் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது பிற நபரால் செலுத்ததக்கவாறான, 28–ஆம் பிரிவின்படி முதன்மை நிருவாக அலுவலரால் அல்லது நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறான தொகையை அதில் குறிப்பிடுதல் வேண்டும்; மற்றும் அதன்பேரில் ஆட்சியர், அத்தகைய சான்றிதழை குறித்துரைக்கப்பட்ட தொகையை நில வருவாய் நிலுவை ஒன்றைப் போல அதனைக்கருதி வசூலித்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய தொகையை வசூலித்ததன் பேரில், அதனை முதன்மை நிருவாக அலுவலருக்குச் செலுத்தல் வேண்டும்; அவர் தொடர்புள்ள பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நிதியத்திற்கு அந்தத் தொகையை வரவு வைத்தல் வேண்டும்.

அத்தியாயம் IV

பொறுப்பாட்சியையும் நிலைக்கொடையையும் பதிவு செய்தல்

பொறுப்பாட்சியையும் நிலைக்கொடையையும் பதிவு செய்தல்

30. (1) பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடை ஒவ்வொன்றும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னதாகவே அல்லது அதன் பின்னரோ உருவாக்கப்பட்டிருந்தாலும், நிருவாகக் குழுமத்தின் அலுவலகத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) பதிவுக்கான விண்ணப்பமானது, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியால் செய்யப்படுதல் வேண்டும்.

வரம்புரை: ஆனால், அத்தகைய விண்ணப்பமானது, பெறுப்பாட்சியால் அல்லது நிலைக்கொடையால் அல்லது அதன் பயனாளரால் அல்லது மரண சாசனம் எழுதியவரின் வழியுரிமையாளரால் அல்லது வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர் எவராலும் செய்யப்படலாம்.

(3) பதிவு செய்வதற்கான விண்ணப்பமொன்று, நிருவாகக் குழுமமானது, அவ்வப்போது ஒழுங்குமுறை விதிகளால் வகைசெய்யக்கூடிய அத்தகைய வடிவத்திலும் அத்தகைய முறையிலும் அத்தகைய இடத்திலும் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய விண்ணப்பமானது, பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

a) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் அடையாளத்திற்கும் போதுமான விவரிப்பு;

b) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்திலிருந்து வரும் ஆண்டு மொத்த வருமானம்;

c) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்துக்காக ஆண்டுதோறும் செலுத்தத்தக்க நிலவருவாய், தீர்வைகள், வீதங்கள், வரிகள் தொடர்பான தொகை;

d) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்திலிருந்து வருமானத்தை பெறுவதற்கு ஆண்டுதோறும் செலவாகும் செலவுகளின் மதிப்பீடு ஒன்று;

e) பின்வருவனவற்றுக்கு ஒதுக்கப்படும் தொகை:-

(i) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் அலுவலர்களுக்கும் பிற பணியாளர்களுக்குமான சம்பளம் மற்றும் பிற படித்தொகைகள்;

(ii) அறச்செயல் நோக்கங்களுக்காக;

(iii) பயனாளர்களுக்காக; மற்றும்

(iv) அத்தகைய பிற நோக்கங்களுக்காக;

f) நிருவாகக் குழுமத்தால் ஒழுங்குமுறை விதிகளின்படி வகுத்துரைக்கப்படக்கூடிய பிற தகவல்கள் எவையும்

(4) அத்தகைய விண்ணப்பமானது, பொறுப்பாட்சி ஆவணத்தின் அல்லது உயிலின் படியுடன் அல்லது அவ்வாறான ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கப்படவில்லையென்றால் அல்லது அதன்படியொன்றைப் பெற இயலாத நிலையில், விண்ணப்பத்தாரருக்குத் தெரிந்த அளவிலான, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் தோற்றம், இயல்பு மற்றும் நோக்கம் குறித்ததான தகவல்களையும் அதன் பயனாளர்கள் குறித்த தகவல்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

மையச் சட்டம் v/1908

(5) **(2)**–ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட அத்தகைய விண்ணப்பம் ஆனது

Verified by RealEstate™

கையொப்பமிருத்தல் மற்றும் சரிபார்த்தல் குறித்து 1908–ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணைமுறை தொகுப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள முறையில் விண்ணப்பத்தாரரால் கையொப்பமிடப்பட்டு சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

(6) நிருவாகக்குழுமமானது, விண்ணப்பத்தாரரை நிருவாகக் குழுமம் தேவையானதெனக் கருதுகிற மேலுமான விவரங்களையும் அல்லது தகவல்களையும் வழங்குமாறு கோரலாம்.

(7) நிருவாகக்குழுமமானது, பதிவு செய்வதற்கான விண்ணப்பமானது வரப்பெற்றதன் பேரில், விண்ணப்பத்தின் நம்பகத்தன்மையையும், செலுத்தும் தன்மையையும் பொறுத்த அளவிலும் அதில் அடங்கியுள்ள விவரங்களின் சரியான தன்மையைப் பொறுத்த அளவிலும், அதுதக்கதெனக் கருதுகிறவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்யலாம்; மற்றும் அந்த விண்ணப்பமானது, பொறுப்பாட்சியை அல்லது நிலைக் கொடையை நிருவாகம் செய்கின்ற நபர் அல்லாத பிற நபரால் செய்யப்படகிறபோது, அவர்தம் தரப்பைக் கேட்பதற்கு அவர் விரும்பினால் அவ்வாறு அவர்தம் தரப்பினைக் கேட்டல் வேண்டும்.

(8) இந்தச் சட்டமானது, தொடங்கியதற்கு முன்னரே உருவாக்கப்பட்ட பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நேர்வில், பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அவ்வாறான தொடக்கத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறான தொடக்கத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நேர்வில், அந்தப்பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையானது உருவாக்கப்பட்டட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்.

பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் பதிவேடு

31. நிருவாகக் குழுமமானது, ஒழுங்குமுறை விதிகளால் வகை செய்யப்படகூடியவாறான, அத்தகைய விவரங்களுடன், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் பதிவேட்டினைப் பேணிவருதல் வேண்டும்.

சொத்தென்ற பொறுப்பாட்சியை அல்லது நிலைக் கொடையா என்பது குறித்த முடிவு

32. (1) சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், நிருவாகக் குழுமமானது, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனின் சொத்தானது, வன்னியக் குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை என நம்புவதற்குக் காரணம் இருந்தால், நிருவாகக் குழுமமானது, அத்தகையை சொத்து குறித்து விசாரணை ஒன்றை நடத்தலாம்; மற்றும் அத்தகைய விசாரணைக்குப் பின்னர், நிருவாகக் குழுவானது, அத்தகைய சொத்தானது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்து என நிறைவுறுமானால், அந்தப் பொறுப்பாட்சியை அல்லது நேர்விற்கேற்ப நிலைக்கொடையை, இந்தச் சட்டத்தின்படி வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையாக பதிவு செய்யுமாறோ அல்லது அத்தகைய சொத்தானது அவ்வாறு ஏன் பதிவு செய்யப்படுதல் கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு கோரலாம்:

<u>வரம்புரை</u>: ஆனால், அத்தகைய நேர்வுகள் அனைத்திலும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையானது பதிவு செய்யப்பட்ட அதிகாரிக்கு இந்த உட்பிரிவின்படி எடுக்கக் கருதப்படும் நடவடிக்கை குறித்து அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்.

(2) நிருவாகக் குழுமமாது, (1) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பிற்கு இணங்கிய வகையில் காட்டப்படக்கூடிய அத்தகைய காரணத்தை உரிய முறையில் பரிசீலனை செய்ததற்குப் பின்னர், அது தக்கதெனக் கருதுகிறவாறான அத்தகைய ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும்; அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட ஆணையானது அது, இந்தச் சட்டத்தின்படி தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் தள்ளுபடி செய்யபட்டாலன்றி அல்லது மாற்றியமைக்கப்பட்டாலன்றி அறுதியானதாக இருத்தல் வேண்டும்.

பொறுப்பாட்சிமற்றும் நிலைக்கொடையை பதிவு செய்வதற்கு ஆவன செய்வதற்கும் பதிவேட்டினைத் திருத்துவதற்குமான அதிகாரம்

33. நிருவாகக் குழுமமானது, பொறுப்பாட்சி அல்லது நிருவாகியை பொறுப்பாட்சியை அல்லது நிலைக்கொடை அல்லது பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்குமாறும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை தொடர்பாக தகவல் எதனையும் வழங்குமாறும் பணிக்கலாம்; அல்லது தானே பொறுப்பாட்சியை அல்லது நிலைக்கொடையை பதிவு செய்வதற்கு ஆவணச்

செய்யலாம்; அல்லது எந்த நேரத்திலும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை பதிவேட்டினைத் திருத்தலாம்.

அத்தியாயம் V

பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் நிருவாகம்

நிருவாகக் குழுமமானது பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடைக்கு நிருவாக அலுவலரை நியமித்தல்

34. **(1)** இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், நிருவாகக் குழுமமானது, பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் நலனின், அவ்வாறு செய்வது தேவையானதெனக் கருதினால், சம்பளத்துடனோ அல்லது கௌரவ நிலையிலோ அதற்கென குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வரையரைகளுடனும், நிபந்தனைகளுடனும் முழு நேர அல்லது பகுதிநேர அடிப்படையில், நிருவாக அலுவலரொருவரை நியமிக்கலாம்.

(2) **(1)**–ஆம் உட்பிரிவின்படி அவ்வாறு நியமிக்கப்பட்ட நிருவாக அலுவலர், அவர் நியமிக்கப்பட்ட பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நிருவாகம் தொடர்பாக, அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய கடமைகளை ஆற்றுதலும் வேண்டும்; மற்றும் அவர், நிருவாகக் குழுமத்தின் பணிப்புரை, கட்டுப்பாடு, கண்காணிப்பின் கீழ் அந்த அதிகாரங்களைச் செலுத்துதல் வேண்டும்; மற்றும் கடமைகளை ஆற்றுதல் வேண்டும்.

(3) பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் வருமானத்தையும், நிருவாக அலுவலரின் மற்றும் அவர்தம் பணியாளர்களின் கடமைகள் குறித்த இயல்பையும் உரிய முறையில் கவனத்தில் கொண்டு, நிருவாக அலுவலரின் மற்றும் அவர்தம் பணியாள் சம்பளங்கள் மற்றும் படித்தொகைகள் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(4) நிருவாக அலுவலரின் மற்றும் அவர்தம் பணியாளர்களின் சம்பளங்களும், படித்தொகைகளும் நிருவாகக் குழுமத்தினால் அதன் நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்; மற்றும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையானது நிருவாக அலுவலரின் நியமனத்தின் காரணமாக, கூடுதல் வருமானம் எதனையும் உருவாக்கினால் நிருவாக் குழுமமானது, தொடர்புள்ள பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நிதியத்திலிருந்து சம்பளங்களுக்கும் படித்தொகைகளுக்கும் செலவிடப்பட்ட தொகையை ஈடுசெய்யுமாறு கோரலாம்.

(5) நிருவாகக் குழுமமானது, போதுமான காரணங்களுக்காக, நிருவாக அலுவலருக்கு அல்லது அவர்தம் பணியாளர் குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு அவர்தம் தரப்பினரை கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினை வழங்கியதற்குப் பின்னர், நிருவாக அலுவலரை அல்லது அவர்தம் பணியாளர் குழுவின் உறுப்பினர் ஒருவரை அவர்தம் பதவியிலிருந்து அகற்றலாம் அல்லது நீக்கம் செய்யலாம்.

(6) **(5)**–ஆம் உட்பிரிவின்படி, பதவியிலிருந்து அகற்றுவதற்கான அல்லது நீக்குவதற்கான ஆணை எதனாலும் பாதிக்கப்பட்ட நிருவாக அலுவலர் அல்லது அவர்தம் பணியாளர் குழுவின் உறுப்பினர் எவரும், அந்த ஆணையானது தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக அந்த ஆணைக்கு எதிராக நீதிமன்றத்தில் மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்யலாம்; மற்றும் நீதிமன்றமானது, அத்தகைய இந்தப் பொறுப்பாட்டில், நிருவாக் குழுமமானது செய்யக்கூடிய முறையீட்டினைப் பரிசீலனை செய்ததற்குப் பின்னரும் நிருவாக அலுவலர் அல்லது அவர்தம் பணியாளர் குழுவின் உறுப்பினரொருவருக்கு அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கான நியானமானதொரு வாய்ப்பினைக் கொடுத்ததற்குப் பின்னரும், அந்த ஆணையை உறுதி செய்யலாம்; மாற்றியமைக்கலாம் அல்லது எதிர்மாறாக்கலாம்.

Verified by Realestate™

பெறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை தொடர்பாக விசாரணைச் செய்வதற்கு ஆவண செய்தல்.

35. (1) நிருவாக்குழுமமானது, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நோக்கங்கள் அல்லது அவற்றின் பகுதி எதுவும் தற்போது அற்றுப்போயிருக்கிறது என நிறைவுறுமாயின் அவ்வாறு அற்றுப் போவதானது, இந்தச் சட்டம் தொடங்கியதற்கு முன்னரோ அல்லது பின்னரோ நடத்திருந்தாலும், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை தொடர்பான சொத்தினையும் நிதியங்களையும் உறுதியாக அறிவதற்கு வகுத்துரைக்கப்பட்ட முறையில் முதன்மை நிருவாக அலுவலரால் நடத்தப்படவேண்டிய விசாரணையொன்று நடத்தப்படுவதற்கு ஆவண செய்தல் வேண்டும்.

(2) முதன்மை நிருவாக அலுவலரின் விசாரணை அறிக்கையானது வரப்பெற்றதன் பேரில், நிருவாகக் குழுமமானது,

(a) அத்தகைய பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்து மற்றும் நிதியங்களைக் குறித்துரைக்கின்ற;

(b) அத்தகைய பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் மீளப்பெறப்பட்ட சொத்து மற்றும் நிதியங்கள், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையைப் புதுப்பிப்பதற்குச் செலவிடப்படுதல் வேண்டும் அல்லது பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்றோ அல்லது அவ்வாறு புதுப்பித்தல் எதையும் செய்வதற்கு தேவை எதுவும் இல்லாதபோது அல்லது அத்தகைய புதுப்பித்தலுக்கு, நிதியத்தைப் பயன்படுத்துவது என்பது இயலாதவிடத்து, **27–**ஆம் பிரிவின் **(2)–**ஆம் உட்பிரிவின் (v) –எனும் கூறில் (c) எனும் உட்கூறில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் எவற்றுக்காகவும் ஒதுக்கப்படுதல் வேண்டும் என்றோ பணிக்கிற ஆணையொன்றைப் பிறப்பிக்கலாம்.

(3) நிறுவாகக்குழுமமானது அறச்செயலுக்காகப் பயன்படுத்தப்பட்டுவந்த கட்டிடம் அல்லது பிற இடம் எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்னதாகவோ அல்லது பின்னரோ அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவது அற்றுப்போய் இருக்கிறது என நம்புவதற்கு அதற்குக் காரணம் இருக்குமானால் நிருவாகக் குழுமமானது அத்தகைய கட்டிடம் அல்லது பிற இடத்தின் உடைமையினை மீள அளிக்குமாறு பணிக்கின்ற ஆணையொன்றுக்காக நீதிமன்றத்திடம் விண்ணப்பம் ஒன்றை செய்யலாம்.

(4) நீதிமன்றமானது, அது தக்கதெனக் கருதுகிறவாறான அத்தகையை விசாரணையைச் செய்ததற்கு பின்னர் அத்தகைய கட்டிடம் அல்லது பிற இடமானது:–

(a) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்து என்பதாக;

(b) நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக அப்போதைக்கு நடைமுறையால் உள்ள சட்டம் எதனிம்படியேனும் கையகப்படுத்தப்படவில்லை என்பதாகவோ அல்லது அத்தகைய சட்டம் எதனின் படியும் கையகப்படுத்துதல் வழிமுறை எதனின் கீழும் இல்லை என்பதாகவோ அல்லது நிலச்சீர்திருத்தங்கள் தொடர்பாக அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதன்படியேனும் அரசிடம் உற்றமையச் செய்யப்படவில்லை என்பதாகவோ; மற்றும்

(c) அத்தகைய கட்டிடம் அல்லது பிற இடத்தை கையுடமையில் வைத்திருப்பதற்கு அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டம் எதனாலுமோ அல்லது அதன் படியோ அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர் எவரின் கையுடமையில் இல்லை என்பதாகவே நிறைவுறுமானால்:-

(i) அதிகாரமாற்ற உடைமையில் அதில் இருக்கக்கூடிய நபர் எவரிடமிருந்தும் அத்தகைய கட்டிடம் அல்லது இடத்தை மீளப்பெறுமாறு பணிக்கின்ற ; மற்றும்

Verified RealEstate™

(ii) அத்தகைய சொத்து, கட்டிடம் அல்லது இடத்தை அறச்செயல் நோக்கத்திற்காக அல்லது முன்னர் சொல்லப்பட்ட அறிவுறுத்தத்தின்படி செய்யுமாறு பணிக்கின்ற அல்லது அத்தகைய பயன்பாடானது இயலாததாக இருப்பின் 27–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின் (V) எனும் கூறின் (C) எனும் உட்கூறில் கொடுக்கப்பட்ட நோக்கம் எதற்கும் பயன்படுத்தலாம் என பணிக்கின்ற ஆணை ஒன்றைச் செய்யலாம்.

பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் மேலாண்மையில் நிகழும் மாற்றமானது தெரிவிக்கப்படுதல்

36. (1) பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியின் மரணம் அல்லது பணி ஓய்வு அல்லது பணி அகற்றுதல் காரணமாக, பதிவு செய்யப்பட்ட பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை ஒன்றின் மேலாண்மையில் மாற்றம் எதுவும் நிகழும்நேர்வில், புதிதாக வருகின்ற பொறுப்பாட்சி அல்லது நிருவாகி அல்லது பிற நபர் எவரும் நிருவாகக் குழுவில் ஏற்பட்ட மாற்றம் குறித்து அறிவிப்பினை செய்ய ஆவன செய்யலாம்.

(2) 30–ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட விவிரங்கள் எதிலும் பிற மாற்றம் எதுவும் இருக்கிற நேர்வில், பொறுப்பாட்சியர் மற்றும் நிருவாகி அந்த மாற்றம் ஏற்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக நிருவாகக் குழுமத்திற்கு அத்தகைய மாற்றம் குறித்து அறிவிப்பு கொடுக்க ஆவன செய்தல் வேண்டும்.

அத்தியாயம் VI

பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் வரவு செலவு திட்டம்

நிருவாகக் குழுமத்தின் நேரடி மேலாண்மையில் இல்லாத பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் வரவு செலவுத் திட்டம்

37. (1) பொறுப்பாட்சியர் அல்லது நிலைக்கொடையின் ஒவ்வொரு பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி, குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வடிவிலான மதிப்பிடப்பட்ட வரவு மற்றும் செலவுகளைக் காட்டுகின்ற அடுத்த நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் ஒன்றை தயாரித்தல் வேண்டும்.

(2) பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் ஒவ்வொரு பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி, நிதி ஆண்டு தொடங்குவதற்கு குறைந்தது தொண்ணூறு நாட்களுக்கு முன்னதாக அத்தகைய வரவு செலவு திட்டத்தை நிருவாகக் குழுவிற்குப் பணிந்தனுப்புதல் வேண்டும் மற்றும் பின்வருவனவற்றுக்கு போதுமான வகைப்பாடு செய்தல் வேண்டும்:-

(i) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு;

(ii) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்துக்களைப் பாதுகாத்துப் பேணி வருவதற்கு;

(iii) இந்தச் சட்டத்தின்படியும் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதனிப்படியும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையைக் கட்டுப்படுத்துகின்ற அனைத்துக் கட்டுப்பாடுகளையும், இருந்துவருகின்ற பொறுப்புகளையும் தீர்ப்பதற்கு;

(3) நிருவாகக் குழுமமானது தான் தக்கதென கருதுகிறவாறு, வரவு–செலவு திட்டத்தில் மாற்றங்கள், விடுகைகள் அல்லது சேர்த்தலைச் செய்வதற்கு, பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் நோக்கத்திற்கும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் இணங்கிய வகையிலான அத்தகைய பணிப்புரையைக் கொடுக்கலாம்.

(4) அந்த நிதியாண்டில் பல்வேறு தலைப்புகளின்கீழ் வரவு அல்லது செலவு செய்யப்படவேண்டிய தொகையை பகிர்ந்தளித்தல் தொடர்பாக வரவு செலவு திட்டத்தில் செய்யப்பட்ட வகைமுறையை மாற்றி அமைப்பது தேவையானதென பொறுப்பாட்சியின் பொறுப்பாட்சியர் அல்லது நிலைக்கொடையின் நிருவாகி காண்பாராயின் அவர் துணை அல்லது திருத்திய வரவு செலவுத் திட்டமொன்றை நிருவாகக் குழுமத்திற்குப்

Verified @ RealEstate™

பணிந்தனுப்பலாம்; மற்றும் (3) ஆம் உட்பிரிவின் வகைமுறையானது அத்தகைய துணை அல்லது திருத்திய வரவு செலவுத் திட்டத்திற்கு இயன்ற அளவில் பொருந்துதல் வேண்டும்.

38. (1) நிருவாகக் குழுமத்தின் நேரடி நிருவாகத்தின் கீழ் வரும் ஒவ்வொரு பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடைக்காகவும் அடுத்த நிதி ஆண்டிற்கான, மதிப்பிடப்பட்ட வரவையும் செலவினைக் காட்டுகின்ற வரவுசெலவுத் திட்டமானது முதன்மை நிருவாக அதிகாரியால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வடிவத்திலும் அத்தகைய நேரத்திலும் தயாரிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது, நிருவாகக் குழுமத்திடம் அதன் ஏற்பளிப்பிற்காகப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி வரவு செலவுத் திட்டத்தை பணிந்தனுப்புகையில், முதன்மை நிருவாக அலுவலர், நிருவாகக் குழுமத்தின் நேரடி மேலாண்மையின் கீழ் வரும் ஒவ்வொரு பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடைக்காகவும் வருமான அதிகரிப்பு ஏதேனுமிருப்பின் அந்த விவரங்களுடனும் அந்த ஆண்டின்போது மேம்பட்ட மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் விவரவுரையைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(3) முதன்மை நிருவாக அலுவலர், ஒழுங்கான கணக்குகளை வைத்திருத்தல் வேண்டும், மற்றும் நிருவாகக் குழுமத்தின் நேரடி மேலாண்மையின் கீழ் வரும் ஒவ்வொரு பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையை தக்க முறையில் மேலாண்மை செய்வதற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

(4) (1)–ஆம் உட்பிரிவின்படி முதன்மை நிருவாக அலுவலரால் பணிந்தனுப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒவ்வொன்றும், 37–ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்; மற்றும் இந்நோக்கத்திற்காக, பொறுப்பாட்சியின் பொறுப்பாட்சியர் அல்லது நிலைக்கொடையின் நிருவாகி குறித்து அதில் உள்ள சுட்டுகைகள், முதன்மை நிருவாக அலுவலருக்கான சுட்டுகைகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) நிருவாகக்குழுமத்தின் நேரடி மேலாண்மையின் கீழ் வரும் பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் கணக்குகளின் தணிக்கையானது, பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் வருமானம் என்னவாக இருந்தபோதிலும் உள்ளாட்சி நிதியங்களுக்கான மாநில ஆய்வாளரால் அல்லது இந்த நோக்கத்திற்காக அரசினால் நியமிக்கப்பட்ட பிற அலுவலர் எவராலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) 40–ஆம் பிரிவின் (2)–ஆம் மற்றும் (3)–ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளும் 41,42– ஆகிய பிரிவுகளின் வகைமுறைகளும் இந்தப் பிரிவின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அளவிற்கு இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்ட கணக்குகளின் தணிக்கைக்குப் பொருந்துதல் வேண்டும்.

(7) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதுவும் நிருவாகக்குழுமத்தின் நேரடி மேலாண்மையில் இருக்குமிடத்து, முதன்மை நிருவாக அலுவலரால் குறித்துரைக்கப்படக் கூடியவறான அத்தகைய நிருவாகக் கட்டணங்கள், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையால் நிருவாகக்குழுமத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:

வரம்புரை: ஆனால், நிருவாகக் குழுமத்தின் நேரடி மேலாண்மையின் கீழ் வரும் பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் மொத்த ஆண்டு வருமானத்தில் நூற்றுக்கு பத்து விழுக்காட்டிற்கு மேல் நிருவாகக் கட்டணமாக முதன்மை நிருவாக அலுவலர் வசூலித்தல் கூடாது.

VerifiedRealEstate™

அத்தியாயம்ரயர் VII

பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் கணக்குகள்

பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் கணக்குகளைப் பணிந்தனுப்புதல்

39. (1) ஒவ்வொரு பொறுப்பாட்சியரும் நிருவாகியும் பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடை தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் குறித்த ஒழுங்கான கணக்குகளை வைத்திருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வோர் ஆண்டிலும், மார்ச் மாதம் முப்பத்து ஒன்றாம் நாளில் முடிவடையும் பன்னிரண்டு மாத கால அளவின்போது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சார்பாக, பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியால் பெறப்பட்ட அல்லது செலவிடப்பட்ட அனைத்தும் பணத் தொகைகளுக்குமான கணக்குகளின் முழுமையான மற்றும் உண்மையான விவரவுரையை நிருவாகக்குழுமத்தின் ஒழுங்குமுறை விதிகளில் வகைசெய்யப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய விவரங்களுடனும் நிருவாகக்குழுமத்திற்குக் கொடுத்தல் வேண்டும்; அதன் பின்பு அது ஏப்ரல் மாதம் முப்பதாம் நாளன்றோ அல்லது அதற்கு முன்பாகவே நிருவாகக் குழுமத்திற்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்:

வரம்புரை: ஆனால் , ஆண்டுக் கணக்குகள் முடிக்கப்படவேண்டிய தேதியானது, நிருவாகக் குழுமத்தின் உளத் தேர்வின்படி மாற்றியமைக்கப்படலாம்.

பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடைகளின் தணிக்கை

40. (1) 39–ஆம் உட்பிரிவின் படி நிருவாகக் குழுமத்திற்கு பணிந்தனுப்பப்பட்ட பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் கணக்குகள் பின்வரும் முறையில் தணிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(a) வருமானம் எதுவும் இல்லாத அல்லது நிகர ஆண்டு வருமானம் ரூபாய் பத்தாயிரத்திற்கு மேற்படாத நேர்வில் கணக்குகளுக்கான விவரஉரையினைப் பணிந்தனுப்புவது 39–ஆம் பிரிவின் வகைமுறையின்படி இணங்கிய நடப்பதற்குப் போதுமானதாகும் மற்றும் நூற்றுக்கு பத்து விழுக்காடு அளவிலான அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடைகளின் கணக்குகள் நிருவாக குழுமத்தால் அமர்த்தப்படும் தணிக்கையர் ஒருவரால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(b) நிகர ஆண்டு வருமானம் பத்தாயிரத்திற்கு மேற்படாத பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடைகளின் கணக்குகள் ஆண்டு தோறும் அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால இடைவெளியில் அரசினால் தயாரிக்கப்படும் தணிக்கையாளர் பெயர் பட்டியலிலிருந்து நிருவாக குழுமத்தால் அமர்த்தப்படும் தணிக்கையர் ஒருவரால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும். தணிக்கையர்களின் பெயர் பட்டியலை தயாரிக்கும்போது அரசானது தணிக்கையரின் ஊதிய ஏற்ற முறைகளை குறித்துரைக்கலாம்.

(2) அரசானது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனின் கணக்குகள் உள்ளாட்சி நிதியங்களின் மாநிலத் தணிக்கையரால் அல்லது அரசு அந்த நோக்கத்திற்காக குறித்துரைக்கிற பிற அலுவலர் எவராலும் தணிக்கை செய்யப்படுவதற்கு ஆவன செய்யலாம்.

(3) தணிக்கையர் நிருவாகக்குழுமத்திற்கு தனது அறிக்கையைப் பணிந்தனுப்புதல் வேண்டும். அந்த தணிக்கையாளரின் அறிக்கையானது மற்றவற்றிக்கிடையே, ஒழுங்கற்ற, சட்ட முரணான அல்லது முறையற்ற செலவினங்களையோ அல்லது அசட்டையினால் அல்லது தவறான நடத்தையால் பணம் அல்லது பிற சொத்தினை மீட்கத் தவறியதையும் அறிக்கை செய்வதற்கு தேவையானது எனத் தணிக்கையர் கருதுகிற பிற பொருட்பாடு எதனையோ குறித்துரைத்தல் வேண்டும் மற்றும் அந்த அறிக்கையானது தணிக்கையரின் கருத்துப்படி அத்தகைய செலவினத்திற்கு அல்லது தவறுகைக்கு பொறுப்பானவராக இருப்பவரின் பெயரைக் கொண்டிருக்க வேண்டும்; மற்றும் அந்தத் தணிக்கையர் அத்தகைய ஒவ்வொரு நேர்விலும் அத்தகைய நபரிடமிருந்து கொடுபட வேண்டிய செலவினத்தின் தொகை குறித்து உறுதிச் சான்று வெளியிடல் வேண்டும்.

Verified by RealEstate

(4) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடைகளின் கணக்குகளின் தணிக்கைக்கான செலவானது அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை நிதியங்களிலிருந்து செய்யப்படுதல் வேண்டும்:

<u>முதலாம் வரம்புரை:-</u>

ஆனால், பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட ஆனால் பதினைந்தாயிரத்திற்குக் குறைவான நிகர ஆண்டு வருமானம் கொண்டிருக்கிற பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை தொடர்பாக அரசு தயாரித்த பெயர் பட்டியலிலிருந்து அமர்த்தப்பட்ட தணிக்கையரின் ஊதியமானது, (1)–ஆம் உட்பிரிவின் (b)–எனினும் கூறில் அரசினால் குறித்துரைக்கப்பட்ட ஊதிய ஏற்ற முறைக்கு இணங்க செலுத்தப்படுதல் வேண்டும்:

<u>இரண்டாம் வரம்புரை:-</u>

பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் கணக்குகள் உள்ளாட்சி நிதியங்களின் மாநிலத் தணிக்கையரால் அல்லது அரசால் குறித்துரைக்கப்படும் பிற அலுவலரால் செய்யப்படுகிறவிடத்து அத்தகைய தணிக்கையின் செலவானது அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நிகர ஆண்டு வருமானத்தில் நூற்றுக்கு ஒன்றரை விழுக்காடு என்ற அளவிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய செலவுகள் தொடர்புடைய பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் நிதியங்களிலிருந்து செய்யப்படுதல் வேண்டும்.

தணிக்கையர்களின் அறிக்கையின் பேரில் நிருவாகக் குழுமம் ஆணைகளை பிறப்பித்தல்

41. (1) நிருவாகக்குழுமமானது தணிக்கையர்களின் அறிக்கையை ஆய்வு செய்தல் வேண்டும் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்பாடு எதுவும் தொடர்பாக நபர் எவரிடமும் விளக்கம் கோரலாம் மற்றும் 40–ஆம் பிரிவின் (3)–உட்பிரிவின்படி தணிக்கையரால் உறுதிச்சான்று இடப்பட்ட தொகையை மீள பெறுவது உள்ளடங்கலான அது பொருத்தமானதெனக் கருதுகிறவறான அத்தகைய ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும் .

(2) நிருவாகக் குழுமத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் பாதிக்கப்பட்ட பொறுப்பாட்சி நிருவாகி அல்லது நபர் எவராலும் அந்த ஆணை பெறப்பட்ட முப்பது நாட்களுக்குள்ளாக, அந்த ஆணையை மாற்றியமைப்பதற்காக அல்லது நீக்குவதற்காக நீதிமன்றத்தை அணுகலாம் மற்றும் அந்த நீதிமன்றமானது தேவை என கருதும் சாட்சியத்தை எடுத்து அது ஆணையை உறுதி செய்யலாம் அல்லது மாற்றி அமைக்கலாம் அல்லது முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அவ்வாறு உறுதி செய்யப்பட்ட தொகையைக் குறைக்கலாம் மற்றும் அந்த வழக்கின் சூழ்நிலைகளுக்கு பொருத்தமானது எனக் கருதலாகிற செலவுகள் குறித்து அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(3) (2)–ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட விண்ணப்பமானது 40–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி தணிக்கையரால் உறுதி செய்யப்பட்ட தொகையானது முதலில் வைப்பீடு செய்யப்பட்டாலன்றி, நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுதல் கூடாது மற்றும் அந்த நீதிமன்றமானது (1)–ஆம் உட்பிரிவின்படி நிருவாகக் குழுமத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் செயல்பாட்டை நிறுத்திவைப்பதற்கு அதிகாரம் எதுவும் கொண்டிருத்தல் கூடாது.

(4) (2)–ஆம் உட்பிரிவின்படி நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையானது அறுதியானதாகும்.

(5) (1)–ஆம் உட்பிரிவின்படி அல்லது (2)–உட்பிரிவின்படி தொகையை மீளப் பெறுவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு தொகையும், அந்தத் தொகை செலுத்தப்படாது இருக்கும்போது, 42–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட தொகை எதையும் மீளப் பெறுவதற்காக பிறப்பிக்கப்பட்டதொரு ஆணையாக மேற்சொன்ன ஆணை இருந்தாற்போன்றே 28–ஆம் பிரிவில் அல்லது 29–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவறான முறையில் மீளப்பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

கொடுபட வேண்டிய தொகைக்கு நிலவரி போன்று மீளத்தக்கது.

42 (1) 40–ஆம் பிரிவின்படி நபர் எவரிடமிருந்தும் கொடுபட வேண்டியதாக தணிக்கையர் ஒருவர் தமது அறிக்கையில் உறுதி சான்றிடப்பட்ட தொகை ஒவ்வொன்றும், அந்தச் சான்றிதழானது சான்றானது 41–ஆம் பிரிவின்படி நிருவாகக்குழுமத்தின் அல்லது

Verified by RealEstate™

நீதிமன்றத்தின் ஓர் ஆணையினால் மாற்றியமைக்கப்பட்டாலன்றி அல்லது நீக்கப்பட்டாலன்றி அந்தத் தொகை ஒவ்வொன்றும் மற்றும் மாற்றி அமைக்கப்பட்ட சான்றிதழின்படி கொடுபட வேண்டிய தொகை ஒவ்வொன்றும் நிருவாகக் குழுமத்தால் அந்தத் தொகையைக் கொடுக்குமாறு கேட்ட அறிவிப்பானது சார்வு செய்யப்பட்ட, பின்னர் அறுபது நாட்களுக்குள் அந்த நபரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின் வகை முறைகளுக்கு இணங்கிய வகையில் அத்தகைய தொகை செலுத்தப் பெறாவிட்டால் தொடர்புடைய நபருக்கு அவர் தரப்பானது விசாரிக்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்ட பின்னர், நிருவாகக் குழுமத்தால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றின் பேரில் செலுத்தப்படவேண்டிய அத்தொகையை நில வருவாய் நிலுவையை வசூலிப்பது போன்று அதே முறையில் வசூலிக்கப்படலாம்.

அத்தியாயம் VIII

பொறுப்பாட்சியர் மற்றும் நிலக்கொடையின் மேலாண்மை

பொறுப்பாட்சியர் மற்றும் நிர்வாகியின் கடமைகள்

43. (i) இந்தச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணைகளின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் நிருவாகக் குழுமத்தின் பணிப்புரைகளை நிறைவேற்றுவதும்;

(ii) இந்த சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனின் வகைமுறைக்கு இணங்கிய வகையில், அவ்வப்போது, நிருவாகக் குழுமத்தால் கோரப்படக்கூடிய விவரவுரைகளை, தகவலை அல்லது விவரங்களை அளிப்பதும்,

(iii) நிருவாகக் குழுமத்தால் பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்துக்கள், அவை தொடர்பான கணக்குகள் அல்லது பதிவுருக்கள் அல்லது ஒப்பாவாணங்கள் மற்றும் ஆவணங்கள் ஆய்வு செய்யப்படுவதை அனுமதிப்பதும்;

(iv) பொது கடன்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதும்;

(v) இந்தக் சட்டத்தினால் அல்லது இதன்படியாக செய்யுமாறு அவர் சட்டப்படி கோரப்படுகிற பிற செயல் எதனையும் செய்வதும்

பொறுப்பாட்சியர் மற்றும் நிர்வாகி ஒவ்வொருவரின் கடமையாகும்.

பொறுப்பாட்சியரும் நிருவாகியம் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் வருமானத்திலிருந்து குறித்த சில செலவுகளைச் செய்வதற்கு உரிமைத் தகுதியுடையவர்,

44. பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் ஒப்பாவணத்தில் என்ன அடங்கியுள்ள போதிலும், பொறுப்பாட்சி அல்லது நிருவாகி ஒவ்வொருவரும், 30–ஆம் பிரிவின்படி விவரங்கள், ஆவணங்கள் அல்லது படிகளை அல்லது 39–ஆம் பிரிவின்படி கணக்குகள் எவற்றையும் அல்லது நிருவாகக் குழுவினால் கோரப்படுகிற பிற தகவல் எதனையும் அல்லது ஆவணங்கள் எவற்றையும் அளிப்பதற்கு அவரை இயல்விக்கும் நோக்கத்திற்காக அல்லது நிருவாக குழுவின் பணிப்புரைகளை நிறைவேற்றுவதற்கு அவரை இயல்விக்கும் நோக்கத்திற்காக, அவரால் முறையாகச் செய்யப்பட்ட செலவுகள் எவற்றுக்கும் பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்திலிருந்ததான வருமானத்திலிருந்து செலுத்தலாம்.

நிருவாகக் குழுமம் ஒப்பளிப்பு இன்றி பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்தினால் பிறருக்கு உரிம. மாற்றம் செய்வது விழலானதாகும்.

45. (1) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் ஒப்பாவணத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் அசையாச் சொத்து எதனின் பரிசில், கொடை விற்பனை மாற்றம் அல்லது அடமானம் எதுவும், அத்தகைய பரிசில்,

Verified @ RealEstate™

விற்பனை, மாற்றம் அல்லது அடமானம் நிருவாக குழுவின் முன் ஒப்பளிப்புடன் செய்யப்பட்டாலன்றி விழலானதாகும்.

விளக்கம்: பொறுப்பாட்சிக்கு இனாம் சொத்து எதுவும் அளிக்கப்பட்டிருந்து, அது பொறுப்பாட்சியின் சொத்தில் சேர்க்கப்பட்டிருந்தால், (1)–ஆம் உட்பிரிவின் வகைமுறையானது அந்த சொத்தினைப் பிறருக்கு உரிமை மாற்றம் செய்வது எதற்கும் பொருத்துதல் வேண்டும்.

2. நிருவாகக்குழுமமானது, (1)–ஆம் உட்பிரிவில் சொல்லப்பட்ட நடவடிக்கை தொடர்பானதான விவரங்களை தமிழ்நாடு அரசின் அரசிதழில் வெளியிட்டதற்கு பிறகும் அது குறித்த மறுப்புகள் மற்றும் ஆலோசனைகள் எவற்றையும் கோரிய பின்னரும் தொடர்புடைய பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியிடமிருந்து அல்லது அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையில் அக்கறையுடைய பிற நபர் எவரிடமிருந்தும் அதனால் பெறப்படலாகும் மறுப்புகளையும் ஆலோசனைகளையும் பரிசீலனை செய்த பிறகு, அந்த நடவடிக்கையானது:-

(i) பொறுப்பாட்சிக்கு அல்லது நிலைக்கொடைக்கு தேவையானது அல்லது பயன் அளிப்பது;

(ii) அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நோக்கங்களுக்கு இணங்கியது;

(iii) அதனை பரிசீலனை செய்து நியாயமானது மற்றும் போதுமானது என்று கருதுமாயின் அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஒப்பளிப்பு அளிக்கலாம்;

வரம்புரை: ஆனால், நிருவாகக் குழுமத்தால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட சொத்தின் விற்பனையானது பொது ஏலத்தினால் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவிற்குள்ளாக அது நிருவாகக் குழுமம் உறுதி செய்யவதற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்;

இரண்டாம் வரம்புரை:

நீதிமன்றமானது அதனால் எழுதி பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக பாதிக்கப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிர்வாகி அல்லது பிற நபரின் விண்ணபத்தின் பேரில் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நலனுக்காக அவ்வாறு செய்வது தேவை என அது கருதுமாயின் பொது ஏலம் வாயிலாக அல்லாது மற்றபடி அந்த விற்பனையைச் செய்வதற்கு அனுமதி அளிக்கலாம்.

(3) சொத்து எதனையும் விற்பனை செய்வது அல்லது மாற்றுவது அல்லது அடமானம் வைப்பது வாயிலாக பெறப்பட்ட தொகையைப் பயன்படுத்துவது அல்லது முதலீடு செய்வது நிருவாகக் குழுமத்தின் ஒப்பளிப்பிற்கு உட்பட்டு, பொறுப்பாட்சியரால் அல்லது நிருவாகியால் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய சொத்து எதனையும் அடமானம் வைப்பதன் வாயிலாக தொகை எதுவும் பெறப்படுமிடத்து பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது பிற நபர் அடமானக் கடனை திருப்பி செலுத்தி நிருவாக குழுமம் குறித்துரைக்கூடிய நியாயமான காலத்திற்குள் அடமானம் பெறுவோரிடமிருந்து அடமான கடனுக்கான விடுவிப்பு ஒன்றினைப் பெறுதல் வேண்டும்.

(4), (3)–ஆம் உட்பிரிவின்படி நிருவாகக் குழுமத்தால் அளிக்கப்பட்ட ஒப்பளிப்பு ஒவ்வொன்றும் பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்பட்ட முறையில் ஒப்பளிப்பு ஒவ்வொன்றும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) பொறுப்பாட்சியர் மற்றும் நிலைக்கொடையில் அக்கறையுள்ளவராக இருந்த, (3)–ஆம் உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட முடிவினால் பாதிக்கப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது பிற நபர் எவரும் அந்த முடிவு அவருக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து

Verified RealEstate™

அல்லது நேர்விற்கேற்ப அந்த முடிவு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், அந்த முடிவிற்கு எதிராக நீதிமன்றத்தில் மேல் முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்யலாம் மற்றும் அதன் பேரில் நீதிமன்றமானது மேல் முறையீட்டாளருக்கும் நிருவாகக் குழுமத்திற்கும் அவர்தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பினைக் கொடுத்ததற்கு பின்பு அந்த முடிவினை உறுதி செய்யலாம், மாற்றி அமைக்கலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்.

(6) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பாக, பொறுப்பாட்சியர் அல்லது நிலைக்கொடை எதற்கும் சொந்தமான அசையாச் சொத்து எதனின் விற்பனை, மாற்றம், அல்லது அடமானம் எதுவும், அந்தப் பொறுப்பாட்சியர் அல்லது நிலைக்கொடையின் நலனுக்குப் பாதகமான வகையில் உரிய அதிகார அமைப்பு அல்லது நீதிமன்றத்திடமிருந்து முன் ஒப்பளிப்பின்றி செய்யப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய நடவடிக்கையானது, வெறிதாகி விழலாதல் வேண்டும் மற்றும் எப்போதும் செய்யப்பட்டிராததாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அந்த நடவடிக்கையின் மூலம் சொத்து எதனையும் பெறுகிற நபர் எவருக்கும் அதற்கிணங்கிய வகையில் அந்தச் சொத்தில் உரிமை அல்லது உரிமை மூலம் எதுவும் உற்றமைதல் ஆகாது மற்றும் அத்தகைய சொத்து எதுவும் தொடர்புடைய பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்தாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய சொத்தினை உடைமையில் கொண்டிருக்கிற நபர் எவரும், அத்துமீறி கைகொண்டிருப்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அதன்பின்பு **51, 52** ஆகிய பிரிவுகளின் வகைமுறைகள் பொருந்துதல் வேண்டும்.

45–ஆம் பிரிவிற்கு மீறியவகையில் மாற்றம் செய்யப்பட்ட பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடைகளின் சொத்தினை மீளப்பெறுதல்

46. (1) வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் விசாரணை எதுவும் செய்யப்பட்ட பின்னர், **31–**ஆம் பிரிவின் படி பேணி வரப்படுகிற பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டவறான பொறுப்பாட்சியர் அல்லது நிலைக்கொடையின் அசையாச் சொத்து எதுவும் **45–**ஆம் பிரிவின் வகைமுறையை மீறிய வகையில், நிர்வாகக் குழுமத்தின் முன் ஒப்பளிப்பின்றி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று நிர்வாகக் குழுமம் தெளிவுற காணுமாயின் அது, எந்த ஆட்சியரின் வரம்பிற்குள்ளாக அந்தச் சொத்து அமைந்து இருக்கிறதோ அந்த ஆட்சியருக்கு அந்த சொத்தினைப் பெற்று அதனுடைய உடமையை ஒப்படைக்கும்படி கோரிக்கை மனு ஒன்றை அனுப்பலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் படி கோரிக்கை மனு ஒன்று பெற்றதின் பேரில், ஆணை சார்வு செய்யப்பட்டத் தேதியிலிருந்து முப்பது நாட்கள் என்பதான கால அளவுக்குள் அந்தச் சொத்தினை நிருவாகக் குழுமத்திடம் ஒப்படைக்கும்படி அந்த சொத்தின் உடமையைக் கொண்டிருக்கிற நபரைப் பணிக்கிற ஆணை ஒன்றினைப் பிறப்பித்தல் வேண்டும்.

(3) (2)–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும்;-

(i) அது எவருக்கென கருதப்பட்டதோ அந்த நபரிடம் கொடுப்பதன் வாயிலாக அல்லது வழங்குவதன் முற்படுவதன் வாயிலாக அல்லது அஞ்சலின் மூலமாக அனுப்புவதன் வாயிலாக;

அல்லது

(ii) அத்தகைய நபர் காணப்படாவிட்டால், அந்த ஆணையை அவர் கடைசியாக வசித்த அல்லது தொழில் செய்த இடத்தில் வெளிப்படையான பகுதியில் ஒட்டுவதன் வாயிலாக அல்லது அவரது குடும்பத்தின் வயது வந்த ஆண் உறுப்பினர் அல்லது வேலையாள் எவரிடமோ அந்த ஆணையை அளிப்பதன் வாயிலாக அல்லது அந்த சொத்து தொடர்புடையதாயிருக்கிற அந்தச் சொத்தின் எடுப்பான பகுதியில் அது ஒட்டப்படுமாறு செய்வதன் வாயிலாக சார்வு செய்யப்படலாம்.

வரம்புரை: ஆனால், எவருக்கு அந்த ஆணை சார்வு செய்யப்பட வேண்டுமோ அவர் வயது வராதவராக இருக்கிறவிடத்து, அவருடைய காப்பாளரிடமோ அல்லது அவருடைய

Verified by RealEstate™

குடும்பத்தின் வயது வந்த ஆண் உறுப்பினர் அல்லது வேலையாள் எவரிடமோ சார்வு செய்வது, வயது வராத அந்த நபரிடம் சார்வு செய்யப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) (2)–ஆம் உட்பிரிவின்படி ஆட்சியரின் ஆணையினால் பாதிக்கப்பட்ட நபர் எவரேனும் அந்த ஆணை சார்வு செய்யப்பட்ட முப்பது நாட்கள் என்பதான கால அளவுக்குள் எந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் அந்தச் சொத்து அமைத்துள்ளதோ அந்த நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு ஒன்றை முறையிடலாம் மற்றும் அத்தகைய மேல்முறையீட்டின் பேரிலான நீதிமன்றத்தின் முடிவு அறுதியானது ஆகும்.

(5) (2)–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு இணங்கி நடக்காமலிருந்தால், மற்றும் அந்த ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கான காலமானது அந்த மேல்முறையீடு செய்யப்படாமலேயே கழிந்து இருக்கிறவிடத்து, அல்லது அந்தக் காலத்திற்குள் செய்யப்பட்ட மேல்முறையீடு எதுவும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறவிடத்து, ஆட்சியர் எந்தச் சொத்தினைப் பொறுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டதோ அந்தச் சொத்தின் உடமையை அந்த நோக்கத்திற்காக தேவைப்படக் கூடிய அந்தகைய காவல் துறையின் உதவியைப் பெற்று அதனை நிருவாகக் குழுமத்திடம் ஒப்படைவு செய்தல் வேண்டும்.

(6) ஆட்சியர், அந்த பிரிவின்படி தன்னுடைய பணிகளை ஆற்றுகையில் வகுத்துரைப்படலாகும் விதிகளால் வழி நடத்தப்பட வேண்டும்.

பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சார்பாக சொத்தினை வாங்குவதற்கான வரம்புகள்

47. பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் ஒப்பாவணத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், நிருவாகக் குழுமத்தின் முன் ஒப்பளிப்பின்றி பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடை எதனின் நிதியங்களிலிருந்து பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதற்கும் அல்லது அதன் சார்பாக அசையாச் சொத்து எதுவும் வாங்கப்படுவதால் ஆகாது மற்றும் நிருவாகக் குழுமமானது அந்தச் சொத்தினை ஈட்டுவது அந்தப் பொறுப்பாட்சி அல்லது அந்த நிலைக்கொடைக்கு தேவையானது அல்லது நலன் பயப்பது என்றும் அதற்காக செலுத்தப்பட கருதியிருக்கிற விலையானது போதியதாகவும் நியாயமானதாகவும் இருக்கிறதென்றும் கருதினாலன்றி அந்த ஒப்பளிப்பினை வழங்குதலாகாது.

வரம்புரை: ஆனால், அந்த ஒப்பளிப்பினை அளிப்பதற்கு முன்பு, கருதப்பட்ட நடவடிக்கை தொடர்பான விவரங்கள், அதுகுறித்த மறுப்புரைகளையும், ஆலோசனைகளையும் கோரி *தமிழ்நாடு அரசின் அரசிதழில்* வெளியிடப்படல் வேண்டும் மற்றும் நிருவாகக் குழுமமானது பொறுப்பாட்சியரிடமிருந்து அல்லது நிருவாகத்திடமிருந்து அல்லதுஅந்த பொறுப்பாட்சியிலும், நிலைக்கொடையிலும் அக்கறையுள்ள பிற நபர் எவரிடமிருந்தும் அதனால் பெறப்படலாகும் மறுப்புரைகளையும் ஆலோசனைகளையும் பரிசீலனை செய்த பின்னர்தான் பொருத்தமெனக் கருதக் கூடிய அத்தகைய ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும்.

பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சொத்துக்களைக் குத்தகைக்கு விடுவதற்கான அதிகாரத்திற் கான வரம்பு

48. (1) பொறுப்பாட்சியர் அல்லது நிலைக்கொடையின் சொத்தாக இருக்கிற அசையாச் சொத்து எதனின் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவு எதற்குமான குத்தகைக்கு விடுவது எதுவும், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் ஒப்பாவணத்தில் அல்லது முறையாவனத்தில் அல்லது அப்போதைக்கு செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியுள்ள போதிலும் விழலானது ஆகும் மற்றும் செல்லுந்தன்மையற்றதாகும்.

(2) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்தாக இருக்கிற அசையாச் சொத்து எதனையும் ஓராண்டுக்கு மேற்படுகிற ஆனால் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு குத்தகைக்கு விடுவதானது, பொறுப்பாட்சி அல்லது நிலக்கொடையின் ஒப்பாவணத்தில் அல்லது முறையாவணத்தில் அல்லது அப்போதைக்கு செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும் அது நிருவாக குழுமத்தின் முன் ஒப்பளிப்புடன் செய்யப்பட்டாலன்றி விழலாகும் மற்றும் செல்லுந்தன்மையற்றதாகும்.

(3) நிருவாகக் குழுமமானது இந்த உட்பிரிவுகளின்படி குத்தகைக்கு அல்லது அதனைப் புதுப்பித்தலுக்கு ஒப்பளிப்பு அளிக்கையில் அந்த குத்தகை அல்லது எந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் குழுமத்தின் பேரில் வழங்க அல்லது புதுப்பிக்க கருதப்பட்டுள்ளதோ அந்த வரையறைகளையும் நிபந்தனைகளையும், மறு ஆய்வு செய்தல் வேண்டும் மற்றும் அது பணிக்கலாகும் முறையிலும் பணிக்கலாகும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை நிருவாகக் குழுமம் மறு ஆய்வு செய்வதற்கு உட்பட்டு தன் ஏற்பளிப்பினை வழங்குதல் வேண்டும்.

(4) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடை ஒவ்வொன்றும், அந்த சொத்தின் குத்தகை குறித்து நிருவாகக் குழுமத்திற்கு தெரிவித்து அந்த குத்தகையைத் தொடர்வதற்கான அனுமதியையும் குத்தகை அல்லது அதை புதுப்பித்தலுக்கான ஒப்பளிப்பினை வழங்குவதற்கான அனுமதியையும் இந்தப் பிரிவின் வகை முறைகளுக்கு உட்பட்டு பெறுதல் வேண்டும்.

பொறுப்பாட்சி அல்லது நிர்வாகி பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை ஒன்றுக்குச் சொந்தமான பணம் எதனையும் தற்காப்பிற்காகச் செலவு செய்தல் ஆகாது.

49. பொறுப்பாட்சி அல்லது நிருவாகி எவரும் அவர் எந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் பொறுப்பாட்சியராக அல்லது நிருவாகியாக இருக்கிறாரோ அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நிதியங்களிலிருந்து பணம் எதனையும், அவரை பதவியிலிருந்து அகற்றியதற்கான அல்லது அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்ததற்கான அல்லது அதற்கு இடை விளைவான உரிமை வழக்கு, மேல்முறையீடு அல்லது பிற நடவடிக்கை எதுவும் தொடர்பாக அவருக்கு ஏற்பட்ட அல்லது ஏற்படலாகும் செலவுகள், கட்டணங்கள் அல்லது செலவு தொகை எவற்றையும் ஏற்பதற்காக செலவு செய்தல் ஆகாது.

பதிவுருக்கள் முதலானவற்றின் உடைமையை ஒப்படைப்பதற்கு பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது குழுவிற்குள்ள கடமைகள்

50. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில், அல்லது நிருவாகக் குழுமத்தால், செய்யப்பட்ட திட்டம் எதற்கும் இணங்கிய வகையில் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி எவரும் அல்லது மேலாண்மைக் குழு எதுவும் அகற்றப்படுகிறவிடத்து, அவ்வாறு பதவியிலிருந்து அகற்றப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது குழு (இந்தப் பிரிவில் இதற்கு பின்பு அகற்றப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது குழு ஒன்று எனச் சுட்டப்படுவது) அந்தப் பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் (ரொக்கம் உள்ளடங்களான) பதிவுருக்கள், கணக்குகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தின் பொறுப்பையும், உடைமையையும் அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தேதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் பின்வரும் பொறுப்பாட்சியருக்கு அல்லது பின்வரும் நிருவாகிக்கு அல்லது பின்வரும் குழுவிற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(2) அகற்றப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி எவரும் அல்லது குழு எதுவும் (1)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பின்வரும் பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்கு அல்லது குழுவிற்கு (ரொக்கம் உள்ளடங்களான) பதிவுருக்கள், கணக்குகள் மற்றும் சொத்துக்களின் பொறுப்பையும், உடைமையையும் ஒப்படைக்கத் தவறுகிறவிடத்து அல்லது மேற்சொன்ன கால அளவு முடிவடைந்த பிறகு அதன் உடைமையைப் பெற்றுக் கொள்வதில் இருந்து அந்த பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியை அல்லது குழுவினைத் தடை செய்கிற அல்லது அவர்களுக்கு இடையூறு விளைவிக்கிறவிடத்து, பின்வரும் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது பின்வரும் குழுவின் உறுப்பினர் எவரும் அத்தகைய பின்வரும் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது குழுவினை அமர்த்துகின்ற உறுதிச் சான்றிடப்பட்ட ஆணையின்படி ஒன்றுடன் சேர்த்து விண்ணப்பம் படியொன்றினை, அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்தின் பகுதி எதுவும் எந்த நீதித் துறை ஒருவரின் அதிகார வரம்பின் வட்டார எல்லையில் அமைந்திருக்கிறதோ அந்த நீதித்துறையின் நடுவர் எவருக்கோ செய்யலாம் மற்றும் அதன் பேரின், அந்த நீதித்துறையின் நடுவர், அகற்றப்பட்ட பொறுப்பாட்சியருக்கு அல்லது நிர்வாகிக்கு அல்லது அகற்றப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுத்ததன் பின்பு, ஆணையில் குறித்துரைக்கப்படலாகும், கால அளவிற்குள், நேர்வுக்கேற்ப, பின்வரும் பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்கு

அல்லது குழுவிற்கு பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் (ரொக்கம் உள்ளடங்களான) பதிவுருக்களின், கணக்குகளின் மற்றும் சொத்துக்களின் பொறுப்பையும் உடைமைகளையும் ஒப்படைக்குமாறு பணிக்கிற ஆணையொன்றினைப் பிறப்பிக்கலாம்.

(3) அகற்றப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது அகற்றப்பட்ட குழுவின் உறுப்பினர் எவரும் (2)ஆம் உட்பிரிவின்படி நீதித்துறைக் குற்றவியல் நடுவரால் குறித்துரைக்கப்படும் காலத்திற்குள் (ரொக்கம் உள்ளடங்கலான) பதிவுருக்களின், கணக்குகளின் மற்றும் சொத்துக்களின் பொறுப்பினையும் உடைமையினையும் ஒப்படைக்காது விடுகிறவிடத்து அல்லது ஒப்படைக்க தவறுகிறவிடத்து, நேர்வுக்கேற்ப, அகற்றப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது அகற்றப்பட்ட குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அல்லது ஆறு மாதம் காலங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்கு ஒரு சிறை தண்டனையையோ அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(4) அகற்றப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது அகற்றப்பட்ட குழுவின் எவரும், (2)ஆம் உட்பிரிவின்படி நீதித்துறைக் குற்றவியல் நடுவரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு இணங்காதிருக்கிற போதெல்லாம் அல்லது இணங்க தவறுகிறபோதெல்லாம், அந்த நீதித்துறைக் குற்றவியல் நடுவர் (ரொக்கம் உள்ளடங்கலான) அந்தப் பதிவுருக்களின், கணக்குகளின் மற்றும் சொத்துக்களின் பொறுப்பையும் உடைமையினையும் எடுத்துக் கொள்வதற்கு பின்வரும் பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்கு அல்லது குழுவிற்கு அதிகாரம் அளிக்கலாம் மற்றும் அந்த நோக்கத்திற்காக தேவைப்படலாகும் காவல் துறையின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் அந்த நபருக்கு அதிகாரம் அளிக்கலாம்.

(5) பின்வரும் பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியை அல்லது குழுவினை அமர்த்துகை செய்கின்ற ஆணை எதுவும், இந்தப் பிரிவின்படி நீதித்துறை குற்றவியல் நீதித்துறை நடுவரின் முன்பான நடவடிக்கைகளின் எதிர்க்கப்படுதல் ஆகாது.

(6) இந்தப் பிரிவில் அடங்கி உள்ள எதுவும், இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் பிறப்பிக்கப்பட்ட நபர் எவரும், (2)ஆம் உட்பிரிவின்படி நீதித்துறைக் குற்றவியல் நடுவரால் பாதிக்கப்பட்ட ஆணையில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களில் தனக்கு உரிமை, உரிமை மூலம் மற்றும் அக்கறை உள்ளது என்பதை நிலைநாட்டுவதற்காக நீதிமன்றம் ஒன்றில் உரிமை வழக்கு எதனையும் தொடுப்பதை தடை செய்தல் ஆகாது

அத்தியாயம்-IX

ஆக்கிரமிப்பை அகற்றுதல்

51. (1) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்தாக இருந்து இந்தச் சட்டத்தின்படி அத்தகையதாக பதிவு செய்யப்பட்டிருக்கிற நிலம், கட்டடம், திறந்த இடம் அல்லது பிற சொத்து எதிலும் ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று முறையீடு எதுவும் பெறப்பட்டதன் பேரிலோ அல்லது தானாக முற்பட்டோ, முதன்மை நிருவாக அலுவலர், கருதுகிறபோதெல்லாம், அவர் ஆக்கிரமிப்பின் விவரங்களை குறித்துரைக்கிறதும், அந்த அறிவிப்பில் இருந்து நீக்குமாறு அவரை கோருகிற ஆணையொன்று ஏன் பிறப்பிக்கப்படுதல் ஆகாது என்பதற்கு இந்த அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்பு காரணம் காட்டுமாறு கோருகின்ற அறிவிப்பு ஒன்று சார்வு செய்யப்படும்படி செய்தல் வேண்டும் மற்றும் தொடர்புடைய பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்கு அந்த அறிவிப்பின்படி ஒன்றினை அனுப்புதலும் வேண்டும்.

பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடை சொத்துக்களிலிருந்து ஆக்கிரமிப்பை அகற்றுதல்

(2) (1)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அறிவிப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் முறையில் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

Verified by RealEstate™

(3) அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட கால அளவின்போது பெறப்பட்ட மறுப்புரைகளை பரிசீலனை செய்த பின்பும், வகுத்துரைக்கப்படலாகும் முறையில் விசாரணை ஒன்றினை நடத்தியதற்குப் பின்பும், முதன்மை நிருவாக அலுவலர், வினாவில் உள்ள சொத்தானது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்தாகும் என்றும் அத்தகைய பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்து எதுவும் ஆக்கிரமிப்பில் உள்ளது என்றும், தெளிவுற காணுமிடத்து, ஆணை வாயிலாக அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தின், கட்டடத்தின், திறந்தவெளியின் அல்லது பிற சொத்தின் உடைமையினை பொறுப்பாட்சியின் பொறுப்பாட்சியருக்கு அல்லது நிலைக்கொடையின் நிருவாகிக்கு அந்த ஆணையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய கால அளவிற்குள்ளாக ஒப்படைக்குமாறு கோரலாம்.

(4) (3)ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அந்த உட்பிரிவின்படி முதன்மை நிருவாக அலுவலரின் ஆணையினால் பாதிக்கப்பட்ட நபர் எவரும், அந்த நிலத்தில், கட்டிடத்தில், திறந்த இடத்தில் அல்லது பிற சொத்தில் உரிமை, உரிமை மூலம் அல்லது அக்கறை எதுவும் தனக்குள்ளது என்பதை நிலைநாட்டுவதற்காக நீதிமன்றத்தில் உரிமை வழக்கொன்றை தொடுப்பதிலிருந்து அவரைத் தடை செய்யாது.

<u>வரம்புரை :</u>

அத்தகைய உரிமை வழக்கு எதுவும், பொறுப்பாட்சியின் பொறுப்பாட்சியரால் அல்லது நிலைக்கொடையின் நிருவாகியால் அல்லது இதன் பொருட்டு அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிற நபர் எவராலும், இந்த நிலத்தை, கட்டிடத்தை, திறந்த இடத்தை அல்லது பிற சொத்தினை குத்தகைக்கு எடுத்தவராக உரிமம் பெற்றவர் அல்லது அடைமானம் பெற்றவர் என்ற நிலையில் அதில் உடைமையில் விடப்பட்டுள்ள நபர் ஒருவரால் தொடுக்கப்படுதல் ஆகாது.

51–ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையை செயலுறுத்தல்

52. (1) 51–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி ஆக்கிரமிப்பு எதனையும் அகற்றுமாறு ஆணையிடப்பட்ட நபர், அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள், அந்த ஆக்கிரமிப்பை அகற்றாது விட்டுவிடுகிறவிடத்து அல்லது அகற்ற தவறுகிறவிடத்து அல்லது நேர்வுக்கேற்ப அந்த ஆணை தொடர்புடையதாயிருக்கிற நிலம், கட்டிடம், திறந்த இடம் அல்லது பிற சொத்தினை மேற்சொன்ன கால அளவிற்குள் காலி செய்ய தவறுகிறவிடத்து முதன்மை நிருவாக அலுவலர், எந்த நீதித்துறைக் குற்றவியல் நடுவரின் அதிகார வரம்பின் வட்டார எல்லைக்குள் அந்த நிலம், கட்டிடம், திறந்த இடம் அல்லது பிற சொத்து அமைந்துள்ளதோ, அந்த நீதித் துறைக் குற்றவியல் நடுவருக்கு அந்த ஆக்கிரமிப்பாளரை வெளியேற்றுமாறு விண்ணப்பிக்கலாம் மற்றும் அதன்பேரில், அந்த நீதித்துறைக் குற்றவியல் நடுவர், அந்த ஆக்கிரமிப்பை அகற்றி அல்லது நேர்வுக்கேற்ப அந்த நிலம், கட்டிடம், திறந்த இடம் அல்லது பிற சொத்தினை காலி செய்து அதனுடைய உடைமையை தொடர்புடைய பொறுப்பாட்சியரிடம் அல்லது நிருவாகியிடம் ஒப்படைக்குமாறு பணிக்கிற ஆணை ஒன்றினை பிறப்பித்தல் வேண்டும், மற்றும் அந்த ஆணைக்கு இணங்கி நடக்கத் தவறுகிறபோது அந்த ஆக்கிரமிப்பினை அகற்றி அல்லது நேர்வுக்கேற்ப அந்த நிலம், கட்டிடம், திறந்த இடம் அல்லது பிற சொத்திலிருந்து அந்த ஆக்கிரமிப்பாளரை வெளியேற்றலாம் மற்றும் அந்த நோக்கத்திற்காக, தேவைப்படலாகும் காவல்துறை உதவியை பெற்றுக் கொள்ளலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின் தொடக்க நாளன்று அல்லது அதற்கு பின்னர் அறநிலைப் பொறுப்பாட்சிக்கு அல்லது நிலைக்கொடைக்கு சொந்தமான ஒரு நிலத்தினை சட்டப்படி உடைமையில் கொள்ளாமல் வேறு வகையில் தொடர்ந்து கையுடைமையில் கொண்டிருக்கிற நபர் எவரும், இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றச் செயலைச் செய்தவர் ஆவார்.

(b)(a)கூறின் வகைமுறைகளை மீறுகிற எவரொருவரும், குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில், ஆறு மாதங்களுக்கு குறையாத ஆனால் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்கு சிறை தண்டனையும் ஐநூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்தும் தண்டிக்கப்படுவார்.

Verified RealEstate™

(c).(b) கூறின்படி தண்டிக்கப்படத் தக்க குற்றச் செயல் ஒன்றை, முதன்மை நிருவாக அலுவலரின் எழுத்துவடிவிலான முறையீட்டின் பேரில் எதுவும், நீதிமன்றம் தவிர விசாரணைக்குழு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

(d). (b) எனும் கூறின் தண்டிக்கப்படத் தக்க குற்றச்செயல் எதுவும், முதல் வகுப்பு நீதித்துறை நடுவரின் நீதிமன்றத்திற்கு கீழ்நிலையில் உள்ள நீதிமன்றம் எதனாலும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுதலோ அல்லது விசாரணை செய்யப்படுதலோ ஆகாது.

அத்தியாயம்-X

பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை நிருவாகத்தின் நிருவாக குழுமத்திற்கு உள்ள அதிகாரம்

பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி கொடுபட வேண்டியவைகளை செலுத்த தவறுகிற நேர்வில் அதனைச் செலுத்துவதற்கு நிருவாக குழுமத்திற்குள்ள அதிகாரம்

53. (1) பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அரசிற்கு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதற்கும் அல்லது சட்டமுறையிலான நிருவாகக் குழுமம் அல்லது அரசு நிறுமம் எதற்கும் கொடுபட வேண்டிய வருவாய், கட்டணங்கள் அல்லது வரிகள் எவற்றையும் செலுத்துவதற்கு மறுக்கிறவிடத்து அல்லது செலுத்த தவறுகிறவிடத்து, நிருவாகக் குழுமமானது நிருவாகக் குழுமத்தின் நிதியத்திலிருந்து கொடுபட வேண்டியவைகளைச் செலுத்தித் தீர்க்கலாம் மற்றும் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையினை பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை சொத்திலிருந்து மீளப் பெறலாம் மற்றும் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையில் நூற்றுக்குப் பனிரெண்டரை விழுக்காட்டளவிற்கு மேற்படாததை இழப்பீடுகளாகவும் மீளப் பெறலாம்.

(2) (1)ஆம் உட்பிரிவின்படி கொடுபட வேண்டிய பணத் தொகை எதுவும், தொடர்புடைய பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகிக்கு அவர் தம் தரப்பினை விசாரிக்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பினை கொடுத்த பிறகு நிருவாக குழுமத்தால், பிறப்பிக்கப்பட்ட ஓர் சான்றிதழின் பேரில், நிலவரி நிலுவையைப் போன்ற அதேமுறையில் வசூலிக்கப்படலாம்.

ஒதுக்கு நிதியத்தை உருவாக்குதல்

54. அரசுக்கு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது சட்டமுறையிலான குழுமம் அல்லது அரசு நிறுமம் எதற்கும் கொடுபட வேண்டிய வாடகையையும், நிலவரி, கட்டணங்கள், வரிகள் ஆகியவற்றை செலுத்துவதற்காகவும், பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்தினைப் பழுதுபார்ப்பதற்கான செலவுகளைச் செலுத்தி தீர்ப்பதற்காகவும், பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் சொத்தினை பாதுகாப்பதற்காகவும் வகைமுறை செய்யும் நோக்கத்திற்காக, நிருவாகக் குழுமமானது, பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் வருமானத்திலிருந்து ஒதுக்கு நிதியம் ஒன்றை, தான் பொருத்தமென நினைக்கலாகிற முறையில் உருவாக்கிப் பேணி வருமாறு பணிக்கலாம்.

காலநீட்டிப்பு

55. நிருவாகக் குழுமமானது, அவ்வாறு செய்வது தேவையானது எனத் தெளிவுறக் காரணுமாயின், இந்தச் சட்டத்தின்படி பொறுப்பாட்சியரால் மற்றும் நிருவாகியால் செயல் எதுவும், எந்தக் காலத்திற்குள் செய்யப்பட வேண்டுமென்று கோரப்படுகிறதோ அந்தக் காலத்தை நீட்டிக்கலாம்.

தண்டனைகள்

56. (1) பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி ஒருவர் –

i. பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையினைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு

ii. இந்த சட்டத்தின்படி கோரப்பட்டவறான விவரங்கள் அல்லது கணக்குகள் அல்லது விவர உரைகளை அளிப்பதற்கு ;

iii. நிருவாகக் குழுமத்தால் கோரப்பட்ட தகவலை அல்லது விவரங்களை வழங்குவதற்கு;

iv. பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடைகளின் சொத்துக்களை, அவை தொடர்பான கணக்குகளை பதிவிருக்களை அல்லது ஒப்பாணங்களை மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்கு அனுமதிப்பதற்கு;

v. நிருவாகக் குழுமத்தால் அல்லது நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டால், பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடை எதனின் உடைமையை ஒப்படைப்பதற்கு;

vi. நிருவாகக் குழுமத்தின் பணிப்புரைகளை நிறைவேற்றுவதற்கு;

vii. பொதுக் கடன்கள் எவற்றையும் தீர்ப்பதற்கு; அல்லது

viii. இந்தச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ செய்ய வேண்டுமென்று சட்டப்படி கோரப்பட்ட பிற செயல் எதனையும் செய்வதற்கு தவறுவாரேயானால், அவர், தன்னுடைய தவறுகைக்கு நியாயமான காரணமிருந்தது என நிருவாகக் குழுமம் அல்லது நீதிமன்றம் தெளிவுறக் காணுமாறு செய்வாராயின், ஐயாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(2) (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், –

(a) (i) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு உருவாக்கப்பட்ட ஒரு பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையைப் பொறுத்த நேர்வில், 30–ஆம் பிரிவின் (8)ஆம் உட்பிரிவில் அதற்காக குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்குள்;

(ii) அத்தகைய தொடக்கத்திற்கு பின்பு உருவாக்கப்பட்ட பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனையும் பொறுத்த நேர்வில், அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை உருவாக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்

ஒரு பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை இருப்பதை மறைக்கும் கருத்துடன், இந்தச் சட்டத்தின்படி அதனைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்காது பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி விட்டுவிட்டால் அல்லது விண்ணப்பிக்கத் தவறினால்; அல்லது

(b) முக்கியமான விவரம் எதிலும் பொய்யானது, தவறாக வழிகாட்டக் கூடியது, உண்மையற்றது அல்லது சரியற்றது என்று அவர் அறிந்திருக்கிற அல்லது நம்புவதற்கு காரணம் பெற்றிருக்கிற விவர உரை, விவர அறிக்கை அல்லது தகவல் எதனையும் நிருவாகக் குழுமத்திற்கு, பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அளிப்பாரானால்

அவர், ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கார அளவிற்குச் சிறைத் தண்டனையும், பதினைந்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(3) நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத் தக்க குற்றச் செயல் ஒன்றை நிருவாகக் குழுமத்தால் அல்லது இதன்பொருட்டு நிருவாகக் குழுமத்தால் உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் செய்யப்பட்ட முறையீட்டின் பேரில் தவிர, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

(4) பெருநகர் குற்றவியல் நடுவரின் அல்லது முதல் வகுப்பு நீதித்துறைக் குற்றவியல் நடுவரின் நீதிமன்றத்திற்கு கீழ் நிலையிலுள்ள நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றச் செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

Verified RealEstate™

மையச் சட்டம், 2/1974

(5) 1973ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தில் (மையச் சட்டம் 2/1974) என்ன அடங்கியிருந்த போதிலும்,

(1)ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்பட்ட அபராதமானது, வசூலிக்கப்படும் போது, 70–ஆம் பிரிவின்படி குறித்துரைக்கப்படும் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(6) (1) ஆம் உட்பிரிவின்படி தண்டிக்கப்படத் தக்கதும், அபராதம் விதிக்கப்பட்டதுமான ஒரு குற்றச் செயலுக்காக ஒரு குற்றவாளிக்குத் தண்டனை தீர்ப்பு வழங்கப்படுகிற ஒவ்வொரு நேர்விலும், நீதிமன்றமானது, அபராதம் செலுத்தத் தவறுகையில், அந்த தவறுகைக்காக, சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட கால அளவு சிறைத் தண்டனையைச் சுமத்தலாம்.

குறிப்பிட்ட நேர்வுகளில் நிருவாக அலுவலரையும் அமர்த்துவதற்கு அதிகாரம்

57. பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின், பொறுப்பாட்சியர் மற்றும் நிருவாகியின் பதவியில் காலியிடம் ஒன்று ஏற்பட்டிருக்கிற போது, மற்றும் பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் ஒப்பாவண வரையறைகளின்படி அமர்த்தப்படுவதற்கு எவரும் இல்லாத போது அல்லது பொறுப்பாட்சியராக செயல்படுவதற்கு நபர் எவருக்கும் உள்ள உரிமை குறித்து பூசல் இருக்கிறவிடத்து, நிருவாக குழுமமானது, வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தைச் சார்ந்த நபர் எவரையும், வகுத்துரைக்கப்படும் கால அளவிற்கு மற்றும் வகுத்துரைக்கப்படும் நிபந்தனைகளின் பேரில், நிருவாகியாகச் செயற்படுவதற்கு அமர்த்தலாம்.

பொறுப்பாட்சியர் மற்றும் நிருவாகியை அகற்றுதல்

58. (1) பிற சட்டம் எதிலும் அல்லது பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் ஒப்பாவணத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், நிருவாகக் குழுமமானது, அந்தப் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி, –

(a) 56–ஆம் பிரிவின்படி தண்டிக்கப்படத் தக்க ஒரு குற்றச் செயலுக்காகத் தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பாராயின்; அல்லது

(b) குற்றமுறு நம்பிக்கை மோசடியாகிய குற்றச் செயல் எதற்காகவும் அல்லது ஒழுக்க நடத்தை உள்ளடக்கிய பிற குற்றச் செயல் எதற்காகவும் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டிருந்து, அந்தத் தண்டனை தீர்ப்பு எதிர் மாறாக்கப்படாமல் மற்றும் அந்தக் குற்றச் செயல் தொடர்பாக முழுமையான மன்னிப்பு அளிக்கப்படாமல் இருந்தால்; அல்லது

(c) அவர் மனச் சீர்கேடு உடையவராக இருந்தால் அல்லது ஒரு பொறுப்பாட்சியாளரின் பதவிப் பணிகளைப் புரிவதற்கும் கடமைகளை ஆற்றுவதற்கும் அவரைத் தகுதியற்றவராகக் கூடிய பிற மன அல்லது உடல்நலக் குறைபாடு அல்லது ஊனத்தினால் அவதியுறுவாரானால், அல்லது

(d) அவர் விடுவிப்புப் பெறாத நொடிப்பு நிலையராக இருப்பாரேயானால்; அல்லது

(e) மதுபானத்தையோ அல்லது பிற ஆல்கஹால் தயாரிப்புகளையோ அருந்தும் பழக்கமுடையவராக இருக்கிறார் அல்லது மயக்க மருந்து சரக்குகள் எவற்றையும் உட்கொள்ளும் பழக்கமுடையவராக இருக்கிறார் என்று மெய்ப்பிக்கப்பட்டால்; அல்லது

(f) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சார்பாக அல்லது அதற்கு எதிராக, ஊதியம் பெறும் சட்டத் தொழிலாற்றுநராகப் பணியமர்த்தப்பட்டிருந்தால்; அல்லது

(g) நியாயமான காரணமின்றி, தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு வழக்கமாக கணக்குகளை வைத்துவரத் தவறினால் அல்லது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில், 39ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்படி கோரப்பட்டவாறு கணக்குகளின் ஆண்டு விவர உரையைப் பணிந்தனுப்பத் தவறினால்; அல்லது

Verified Real Estate ™

(h) பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் சொத்தினைப் பொறுத்து தற்போதிருந்து வரும் குத்தகையில் அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் எதிலும் அல்லது அதற்காக செய்யப்பட்ட பணி எதிலும், அல்லது அத்தகைய பொறுப்பாட்சிக்கு அல்லது நிலைக் கொடைக்கு அவரால் கொடுபட வேண்டிய தொகை எதனையும் பொறுத்து நிலுவைத் தொகைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபாடு உடையவராகயிருப்பாரானால்; அல்லது

(i) தன்னுடைய கடமைகளைத் தொடர்ந்து புறக்கணித்தால் செய்தால் அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடை தொடர்பாக அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் பணம் அல்லது சொத்தினை பொறுத்த அளவில் நிதியங்களை தவறாக கையாண்டால், முரணாகக் கையாண்டால், முறைகேடாக பயன்படுத்தினால் அல்லது நம்பிக்கை மோசடி செய்தால்;

(j) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனின் வகைமுறை எதன்படியும் அரசால், நிருவாகக் குழுமத்தால் பிறப்பிக்கப்பட்ட சட்டப்படியான ஆணைகளுக்கு வேண்டுமென்ற மற்றும் தொடர்ந்து கீழ்ப்படியாதிருப்பாரானால் ; அல்லது

(k) பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் சொத்தினைத் தவறாகப் பயன்படுத்துவாரானால் அல்லது மோசடியாகக் கையாளுவாரானால் நிருவாகக் குழுமமானது, அந்தப் பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியை அவரை அந்தப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(2) பொறுப்பாட்சியர் பதவியிலிருந்து ஒரு நபரை அகற்றுவதானது பயனாளி என்ற நிலையிலோ அல்லது பிறதிறன்முறை எதிலுமோ, பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் சொத்து எதனையும் பொறுத்து, அவருக்குள்ள தனிப்பட்ட உரிமைகள், எவையேனுமிருப்பின், அவற்றைப் பாதிக்காது.

(3) நிருவாகக் குழுமமானது, வகுத்துரைக்கப்பட்ட முறையில் பொருட்பாடு குறித்து விசாரணை நடத்தி, நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத பெரும்பான்மையரால் அந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தாலன்றி, **(1)** ஆம் உட்பிரிவின்படி அதனால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

(4) **(1)**ஆம் உட்பிரிவின் (c) முதல் (i) வரையுள்ள கூறுகளில் எதன்படியும் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையால் பாதிக்கப்பட்ட பொறுப்பாட்சியர் ஒருவர் அந்த ஆணை அவரால் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், அந்த ஆணைக்கு எதிராக நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம் மற்றும் அந்த மேல்முறையீட்டின் பேரில், நீதிமன்றத்தின் முடிவே அறுதியானதாகும்.

(5) **(3)**ஆம் உட்பிரிவின்படி நிருவாகி அல்லது பொறுப்பாட்சியர் எவருக்கும் எதிராக, விசாரணை எதுவும் நடத்தக் கருதப்பட்டிருக்கிறவிடத்து, அல்லது தொடங்கப்பட்டிருக்கிறவிடத்து, நிருவாகக் குழுமமானது, பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் நலன் கருதி, அவ்வாறு செய்வது தேவையானது என அது கருதுமானால், அந்த விசாரணை முடிவடையும் வரையில், அந்தப் பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியை ஓர் ஆணை வாயிலாக தற்காலிகப் பதவி நீக்கம் செய்யலாம்:

வரம்புரை: ஆனால், பத்து நாட்களுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்குத் தற்காலிகப் பதவி நீக்கம் எதுவும், எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைக்கு எதிராக, விசாரிக்கப்படுவதற்கு ஒரு நியாயமான வாய்ப்பு பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்குக் கொடுக்கப்பட்ட பின்பு தவிர, செய்யப்படுதல் ஆகாது.

(6) **(4)**–ஆம் உட்பிரிவின் படி நீதிமன்றத்திற்குப் பொறுப்பாட்சியரால் மேல்முறையீடு எதுவும் முன்னிடப்படுகிறவிடத்து, நிருவாகக் குழுமமானது, மேல் முறையீட்டின் முடிவு மையச் சட்டம், V/1908

நிலுவையில் இருக்கும்போது, பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையினை நிருவகிப்பதற்கு ஒரு பாதுகாவலரை அமர்த்துவதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் மற்றும் அந்த விண்ணப்பம் செய்யப்படுகிறவிடத்து, நீதிமன்றமானது, 1908–ஆம் ஆண்டு உரிமையில் விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், பொறுப்பாட்சியை அல்லது நிலைக் கொடையை நிருவகிப்பதற்குப் பாதுகாவலராக தகுந்த நபர் ஒருவரை அமர்த்துதல் வேண்டும், மற்றும் அவ்வாறு அமர்த்தப்பட்ட பாதுகாவலரை, பொறுப்பாட்சியரின் மற்றும் பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் வழக்காற்று உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு பணித்தல் வேண்டும்.

(7) (1) ஆம் உட்பிரிவின்படி பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி ஒருவர் அவரது பதவியிலிருந்து நீக்கப்படுகிறவிடத்து நிருவாகக் குழுமமானது. பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்து உடைமையினை, நிரவாகக் குழுமத்திடம் அல்லது இதன் பொருட்டு உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரிடமும் அல்லது அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் பொறுப்பாட்சியர் அல்லது அதிகாரியாகச் செயற்படுவதற்காக அமர்த்தப்பட்ட நபர் எவரிடமும் அல்லது குழுவிடம் ஒப்படைக்குமாறு. பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியை ஆணைவாயிலாகப் பணிக்கலாம்.

(8) இந்தப் பிரிவின் படி அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஒரு பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் பொறுப்பாட்சியர் அல்லது நிநிவாகி ஒருவர், அவ்வாறு நீக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு கால அளவுக்கு, அந்தப் பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் பொறுப்பாட்சியராக அல்லது நிருவாகியாக மீண்டும் அமர்த்தப்படுவதற்குத் தகுமையுடையவர் ஆக மாட்டார்.

குறிப்பிட்ட கால பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் நேரடி மேலாண்மையை நிருவாகக் குழுமம் ஏற்றுக் கொள்ளுதல்

59. (1) ஒரு பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் பொறுப்பாட்சியராக அல்லது நிருவாகியாக அமர்த்தப்படுவதற்குப் பொருத்தமான நபர் எவரும் கிடைக்கத்தக்கவராக இல்லாத விடத்து, அல்லது நிருவாகக் குழுமமானது, எழுதிப் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் பதவியில் காலியிடம் எதனையும் நிரப்புவதானது. பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் நலன்களுக்கு ஊறு செய்வதாக இருக்கும் என்று தெளிவுறக் காணுமிடத்து, நிருவாகக் குழுமமானது, அறிவிக்கை வாயிலாக, மொத்தத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாமல், அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகக்கூடிய கால அளவுக்கு அல்லது கால அளவுகளுக்கு பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் நேரடி மேலாண்மையை ஏற்றுக் கொள்ளலாம்.

(2) அரசானது, தானாக முற்பட்டோ அல்லது பொறுப்பாட்சியில் அல்லது நிலைக் கொடையில் அக்கறையுடைய நபர் எவரின் விண்ணப்பத்தின் பேரிலோ, (1)–ஆம் உட்பிரிவின்படி நிருவாகக் குழுமத்தால் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையின் சீர்மை, சட்டப்படியான தன்மை, முறைமை குறித்துதான் மனநிறைவடையும் நோக்கத்திற்காக நேர்வு எதனின் பதிவுருக்களையும் கோரிப் பெறலாம் மற்றும் தான் பொருத்தமெனக் கருதுகிற ஆணைகளைப் பிறப்பிக்கலாம் மற்றும் அரசால்அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் எவையும், அறுதியானதாகும் மற்றும் அவை (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்பு, கூடிய விரைவில், நிருவாகக் குழுமமானது. தன் நேரடி மேலாண்மையில் உள்ள ஒவ்வொரு பொறுப்பாட்சியையும் நிலைக் கொடையையும் குறித்து விரிவான அறிக்கை யொன்றை, அதில்:-

(i) அறிக்கையின் படியான ஆண்டிற்கு அடுத்து முந்திய ஆண்டிற்கான பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் வருமான விவரங்கள்.

(ii) பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் மேலாண்மை மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

(iii) பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையானது நிருவாகக் குழுமத்தின் நேரடி மேலாண்மையின் கீழ் இருந்த கால அளவு மற்றும் அந்த ஆண்டின் போது பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் மேலாண்மையை, மேலாண்மை பொறுப்பாட்சியரிடம் அல்லது நிருவாகியிடம் அல்லது குழு எதனிடமும் ஒப்படைப்பது இயலக் கூடியதாக ஏன் இல்லை என்பதற்கான காரணங்களை விளக்குதல், மற்றும்

(iv) வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கி, அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) அரசானது (3)–ஆம் உட்பிரிவின்படி அதற்கு பணிந்தனுப்பப்பட்ட அறிக்கையை ஆய்வு செய்தல் வேண்டும் மற்றும் அவ்வாறு ஆய்வு செய்வதற்குப் பிறகு, தான் பொருத்தமென நினைக்கலாகிற பணிப்புரைகளை அல்லது அறிவுறுத்தல்களை நிருவாகக் குழுமத்திற்குப் பிறப்பித்தல் வேண்டும், மற்றும் அந்த நிருவாகக் குழுமமானது, அதனைப் பெற்றதன் பேரில், அந்தப் பணிப்புரைகளுக்கு அல்லது அறிவுறுத்தங்களுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

மேலாண்மைக் குழுவைக் கண்காணித்தலும் கலைத்துக் கைக்கொள்ளுதலும்

60 (1) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் கண்காணிப்பு அல்லது மேலாண்மை, பொறுப்பாட்சியின் ஒப்பாவணத்தின் மூலம் அமர்த்தப்பட்ட குழு எதனிடமும் உற்றமைந்திருக்கும் போதெல்லாம், இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அந்தக்குழு, நிருவாகக் குழுமத்தால் கலைத்துக் கைக்கொள்ளப்படும் வரையில் அல்லது பொறுப்பாட்சி ஒப்பாவணத்தில் குறித்துரைக்கப்படலாகும் அதனுடைய கால அளவு முடிவடைதல், இவற்றில் எது முந்தியதோ, அதுவரை, தொடர்ந்து செயற்படுதல் வேண்டும்.

<u>முதலாம் வரம்புரை:</u> அந்தக்குழுவானது, நிருவாகக் குழுமத்தின், பணிப்புரை, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பின் கீழ் செயற்படுதல் வேண்டும் மற்றும் அவ்வப்போது நிருவாகக் குழுமம் பிறப்பிக்கலாகும் பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

<u>இரண்டாம் வரம்புரை</u>: ஒரு குழுவால், பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையை மேலாண்மை செய்வதற்கான திட்டம் எதுவும் இந்தச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி எதனின் வகைமுறைகள் எவற்றிற்கும் அல்லது பொறுப்பாட்சி ஒப்பாவணத்தின் பணிப்புரைகளுக்கு முரணாக உள்ளது என நிருவாகக் குழுமம் தெளிவுறக் காணுமாயின், அது, எந்த நேரத்திலும், பொறுப்பாட்சியின் ஒப்பாவணத்திற்கு அல்லது இந்தச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி எதனின் வகைமுறைகளுக்கு இணங்கியதாகச் செய்வதற்காகத் தேவையான முறையில் அந்தத் திட்டத்தை மாற்றமைவு செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்திலும், பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் ஒப்பாவணத்திலும் என்ன அடங்கியிருந்த போதிலும், நிருவாகக் குழுமானது எழுதிப் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக:-

(1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட குழுவானது, உரியவாறும் மனநிறைவு அளிக்கும் வகையிலும் செயற்படவில்லை என்று அல்லது அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடை தவறாக மேலாண்மை செய்யப்படுகிறது என்று அல்லது முறையான மேலாண்மையைக் கருத்திற்கொண்டு அவ்வாறு செய்வது தேவையாகிறது என்று தெளிவுறுக் காணுமாயின், ஆணை வாயிலாக அந்தக் குழுவைக் கலைத்துக் கைக்கொள்ளலாம் மற்றும் அவ்வாறு கலைத்துக் கைக்கொண்டதன் பேரில், பொறுப்பாட்சி ஒப்பாவண பணிப்புரை எதுவும், அந்தக் குழுவை அமைப்பதற்கு எந்த அளவு அது தொடர்புடையதாயிருக்கிறதோ அந்த அளவு, செயற்பாடு எதுவும் கொண்டிருப்பது அற்றுப்போகும்.

<u>வரம்புரை:</u> ஆனால், நிருவாகக் குழுமமானது, குழு எதனையும் கலைத்துக் கைக்கொள்கிற செய்கிற ஆணை எதனையும் பிறப்பிப்பதற்கு முன்பு, அதில் எடுக்கப்படவிருக்கிற நடவடிக்கைக்கான காரணங்களை விவரித்தும், நடவடிக்கை எதுவும் ஏன் எடுக்கப்படுதல் ஆகாது என்பதற்கு அறிவிப்பில் குறித்துரைக்கப்படலாகும். ஒரு மாதத்திற்கு குறையாத

காலத்திற்குள் காரணம் காட்டுமாறு குழுவைக் கோரியும் அறிவுப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் படி நிருவாகக் குழுமத்தால் பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியை மற்றும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையில் அக்கறை எதுவுமுடைய அனைத்து நபர்களையும் கட்டுப்படுத்தும்.

(4) (2)—ஆம் உட்பரிவின்படி நிருவாகக் குழுமத்தால் பிறப்பிக்கப்படும் ஆணை எதுவும் அறுதியானதாகும்.

வரம்புரை: (2)—ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் பாதிக்கப்பட்ட நபர் எவரும், அந்த ஆணையின் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(5) நிருவாகக் குழுமமானது, (2)—ஆம் உட்பிரிவின்படி குழு எதையும் கலைத்துக் கைக்கொள்கிற போதெல்லாம், (2)—ஆம் உட்பிரிவின் படி அதனால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் அதே சமயத்தில், புதிய மேலாண்மைக் குழு ஒன்றை அமைத்தல் வேண்டும்.

(6) முன்சென்ற உட்பிரிவுகளில் என்ன அடங்கியிருந்த நிருவாகக் குழுமமானது, (2) ஆம் உட்பிரிவின்படி குழு எதனையும் கலைத்துக் கைக்கொள்வதற்குப் பதிலாக, ஓர் உறுப்பினர் அத்தகைய உறுப்பினர் என்றமுறையில் தனது பதவியைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார் அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையில் நலன்களுக்குப் பாதகமான முறையில் தெரிந்தே செயற்பட்டிருக்கிறார் என அது தெளிவுறக் காணுமாயின், அதன் உறுப்பினர் எவரையும் அகற்றலாம் மற்றும் உறுப்பினர் எவரையும் அகற்றுவதற்கான அத்தகைய ஆணை ஒவ்வொன்றும், பதிவஞ்சல் வாயிலாக அவருக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

வரம்புரை: ஆனால், உறுப்பினர் எவரையும் அகற்றுவதற்கான ஆணையானது, எடுக்கவிருக்கும் நடவடிக்கைக்கு எதிராகக் காரணங் காட்டுவதற்கு அவருக்கு ஒரு நியாயமான வாய்ப்பு கொடுக்கப்பட்டாலன்றி, பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

இரண்டாம் வரம்புரை: குழு உறுப்பினர் பதவியிலிருந்து தம்மை அகற்றுகிற ஆணை எதனாலும் பாதிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அந்த ஆணை அவருக்குச் சார்வு செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாள் கால அளவுக்குள் நீதிமன்றத்தில் அந்த ஆணைக்கு எதிராக மேலுமுறையீடொன்றை முன்னிடலாம் மற்றும் அந்த நீதிமன்றமானது மேல்முறையீட்டாளருக்கும் நிருவாகக் குழுமத்திற்கும் அவர்தம் தரப்பினரை விசாரிக்கப்படுவதற்கு நியாயமானதொரு வாய்ப்பினை அளித்த பின்பு நிருவாகக் குழுமத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை உறுதி செய்யலாம், மாற்றியமைக்கலாம் அல்லது எதிர்மாறாக்கலாம் மற்றும் அந்த மேல்முறையீட்டால் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஆணை எதுவும் அறுதியானதாகும்.

பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் நிருவாகத்திற்கான திட்டத்தை உருவாக்குவதற்கு நிருவாகக் குழுமத்திற்குள்ள அதிகாரம்

61. (1) நிருவாகக் குழுமமானது, தானே முற்பட்டோ அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையில் அக்கறையுடைய ஐந்துக்குக் குறையாத நபர்கள் செய்த விண்ணப்பத்தின் பேரிலோ, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையினை முறைப்படி செயலாட்சி செய்வதற்காக ஒரு திட்டத்தை உருவாக்குவது தேவையானது அல்லது உகந்தது என தெளிவுறக் காணும் போதெல்லாம், நிருவாகி அல்லது விண்ணப்பதாரருடன் கலந்தாய்வு செய்தபிறகு வகுத்துரைக்கப்பட்ட முறையில் பொறுப்பாட்சி, அல்லது நிலைக்கொடையின் நிருவாகத்திற்காக அத்தகைய திட்டத்தை ஆணை வாயிலாக, உருவாக்கலாம்.

(2). (1)—ஆம் உட்பரிவின்படி உருவாக்கப்பட்ட திட்டம் ஒன்று, அந்தத் திட்டம் செயற்பாட்டிற்கு வரும் தேதிக்கு அடுத்து முன்பு, அத்தகையவராக அந்தப் பதவியை வகித்து

வநத பொறுபபாடசி மறறும நிலைகமகாடையின பொறுபபாடசியா மறறும நிருவாகியை அகற்றுவதற்கு வகை செய்யலாம்.

<u>வரம்புரை:</u> அந்தத் திட்டம் எதுவும், பரம்பரை பொறுப்பாட்சியர் எவரையும் அகற்றுவதற்கு வகை செய்கிறவிடத்து, அந்தத் திட்டமானது, அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையை முறையாக செயலாட்சி செய்வதற்காக, குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை அகற்றப்பட்ட பொறுப்பாட்சியருக்கு பரம்பரையில் அடுத்துள்ளவரை அமர்த்துவதற்கும் வகை செய்தல் வேண்டும்.

(3) (2)—ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடப்படுதல் வேண்டும். அந்த வெளியீடே அறுதியானதாகவும் பொறுப்பாட்சியரையும், நிருவாகியியையும் அந்தப் பொறுப்பாட்சியில் அல்லது நிலைக்கொடையில் அக்கறையுடைய நபர்கள் அனைவரையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

<u>வரம்புரை:</u> ஆனால் இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபர் எவரும், ஆணையின் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், நீதிமன்றத்திற்கு மேல்முறையீடொன்றைச் செய்யலாம் மற்றும் அந்த மேல்முறையீட்டை விசாரணை செய்த பின்பு, நீதிமன்றம், அந்த ஆணையை உறுதி செய்யலாம், எதிர்மாறாக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

<u>முதலாம் வரம்புரை:</u> நீதிமன்றமானது, இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையின் செயற்பாட்டை நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம் எதுவும் கொண்டிராது.

4. நிருவாகக் குழுமமானது, இந்தத் திட்டச் செயற்பாட்டுக்கு வருவதற்கு முன்பு அல்லது பின்பு பிறப்பிக்கப்பட்ட ஆணை வாயிலாக, எந்த நேரத்திலும், அந்தத் திட்டத்தை அறவு செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(5) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் முறையான செயலாட்சிக்காக திட்டத்தை உருவாக்குவது நிலுவையில் இருக்கும்போது, நிருவாகக் குழுமமானது, அதன் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியின் பதவிப்பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் ஆற்றுவதற்கும் அந்தப் பொறுப்பாட்சியர் மற்றும் நிருவாகியர் அதிகாரங்களை செலுத்துவதற்கு, கடமைகளைப் புரிவதற்கும் நிருவாக அலுவலர் ஒருவரை அமர்த்தலாம்.

பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் செயலாட்சி தொடர்பான விசாரணை

62. பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் அக்கறையுள்ள நபர் எவரும், பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் நிருவாகம் தொடர்பான விசாரணை ஒன்றைத் தொடங்குவதற்காக உறுதிமொழி ஆவணம் ஒன்றுடன் சேர்ந்த விண்ணப்பம் ஒன்றை நிருவாகக் குழுமத்திற்குச் செய்யலாம் மற்றும் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் விவகாரங்கள், தவறாக மேலாண்மை செய்யப்படுகின்றன என்று நம்புவதற்கு நிருவாகக் குழுமத்திற்கு நியாயமான காரணங்கள் இருக்குமாயின், அது பொருத்தமென நினைக்கிற நடவடிக்கையை அதன்பேரில் எடுத்தல் வேண்டும்.

விசாரணை நடத்தும் முறை

63 (1) நிருவாகக் குழுமமானது, 62-ஆம் பிரிவின் படி பெறப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரிலோ அல்லது தானாக முற்பட்டோ-

(a) வகுத்துரைக்கப்படலாகும் முறையில் விசாரணை ஒன்றை நடத்தலாம்; அல்லது

(b) ஒரு பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை தொடர்பான பொருட்பாடு எதனையும் குறித்து விசாரணை நடத்துவதற்காக, இதன் பொருட்டு நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர் எவருக்கும் அதிகாரமளித்து, தான் பொருத்தமென நினைக்கிற நடவடிக்கையை எடுக்கலாம்.

Verified RealEstate™

(2) இந்தப் பிரிவின் படியான விசாரணை ஒன்றின் நோக்கங்களுக்காக, நிருவாகக் குழுமம் அல்லது இதன்பொருட்டு அதனால் அதிகாரமளிக்கப்பட்ட நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர், சாட்சிகளின் வருகையை முயன்று பெறுவதற்கும் ஆவணங்களை முன்னிடுவதற்கும், 1908-ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டத்தின்படி உரிமையியல் நீதிமன்றத்திடம் உற்றமைந்திருக்கிற அதே அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மையச் சட்டம் V/1908

அத்தியாயம் XI

நிருவாகக்குழுமத்துடன் கலந்தாய்வு செய்து ஒரு பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியை அமர்த்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.

பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியை அமர்த்துவதற்கான அதிகாரம், அரசால் எப்போது செலுத்தப்படுதல் வேண்டும்

64. பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் ஓர் ஒப்பாவணம் அல்லது ஆவணம் அல்லது நீதிமன்றத்தின் தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும் அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனின் மேலாண்மைக்கான திட்டம் எதுவும், நிருவாகக் குழுமம் அல்லாத பிற அதிகார அமைப்பு அல்லது நீதிமன்றம், ஒரு பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியை அமர்த்தலாம் அல்லது அகற்றலாம் அல்லது மேலாண்மை திட்டத்தை நிலைப்படுத்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம் அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் மீது கண்காணிப்பைப் பிறவாறு செலுத்தலாம் என்பதாக வகை செய்கிறவிடத்து, அந்தப் பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் ஒப்பாவணத்தில், தீர்ப்பாணையில், ஆணையில் அல்லது திட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மேற்சொன்ன அத்தகைய அதிகாரங்கள், அரசால் செலுத்தத்தக்கதாக இருக்கும்;

வரம்புரை: ஆனால், ஒரு நிருவாகக்குழுமம் அமைக்கப்படுகிறவிடத்து, அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவதற்கு முன்பு, நிருவாகக் குழுமத்தைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

அத்தியாயம் XII

நிருவாகக் குழுமத்தின் நிதி

அரசினால் மானியம் வழங்கப்படுதல்

65. அரசானது, நிருவாகக் குழுமத்திற்கு, அரசு தக்கதெனக் கருதக்கூடிய அத்தகைய பணத்தொகைகளை மானியம் என்ற அளவில் வழங்கலாம்.

நிருவாகக் குழுமத்திற்குச் செலுத்தத்தக்க ஆண்டுப் பங்களிப்பு

66. (1) நிகர ஆண்டு வருமானம் பத்தாயிரம் ரூபாய்க்கு குறையாத பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை ஒவ்வொன்றின் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அந்தப் பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையினால் பெறப்படும் நிகர ஆண்டு வருமானத்திலிருந்து வகுத்துரைக்கப்படலாகும் ஆண்டு வருமானத்தில் நூற்றுக்கு பத்து விழுக்காட்டிற்கு மேற்படாத பங்களிப்பினை, அந்தப் பொறுப்பாட்சிக்கு அல்லது நிலைக் கொடைக்கு நிருவாகக் குழுமம் செய்த சேவைகளுக்காக, நிருவாகக் குழுமத்திற்கு ஆண்டுதோறும் செலுத்துதல் வேண்டும்.

விளக்கம் I: இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, "நிகர ஆண்டு வருமானம்" என்பது, பின்வருவனவற்றைக் கழித்தபின்பு, ஓராண்டில் பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் தொகுப்பு நிதியின் பங்களிப்பாக ஆகாத நன்கொடைகள் உள்ளடங்கலாக, அனைத்து வழிவகையிலிருந்துமான, பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் மொத்த வருமானம் என்று பொருள்படும்:-

(i) அதனால் அரசுக்குச் செலுத்தப்பட்ட நிலவரி;

(ii) அமைப்புக்கு அதனால் செலுத்தப்பட்ட கட்டணங்கள், வரிகள், உரிமக் கட்டணங்கள்;

(iii) பின்வரும் நோக்கங்களுக்காக, அதாவது

(a) பாசனத்தின் மூலதனச் செலவுத் தொகையை உள்ளடக்காத பாசனப்பணிகளைப் பேணி வருதல் அல்லது பழுது பார்த்தல்;

(b) விதைகள் அல்லது நாற்றுக்கள்

(c) உரம்;

(d) வேளாண் கருவிகளை வாங்குதல் மற்றும் பேணி வருதல்,

(e) பயிரிடுதல் தொடர்பாக கால்நடையை வாங்கிப் பேணி வருதல்:

(f) உழுதல், நீர்ப்பாய்ச்சுதல், விதைத்தல், நாற்றுநடுதல், அறுவடை செய்தல், கதிரடித்தல் மற்றும் பிற வேளாண் செயற்பாடுகளுக்கான கூலிகள் ஆகிய அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் செய்ய நேர்ந்த செலவுகள்.

வரம்புரை: ஆனால் இந்தக் கூறின்படி செய்ய நேர்ந்த செலவுத் தொகை அனைத்தையும் பொறுத்து, மொத்தக் கழிவானது, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடைக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து விழுக்காட்டிற்கு மேற்படுதலாகாது.

(iv) வாடகைக்கு விடப்பட்ட கட்டடங்களிலிருந்து பெறப்படும் ஆண்டு வாடகை அல்லது பழுது பார்த்தலுக்கான உள்ளபடியான செலவு, இவற்றில் எது குறைவானதோ அதில் நூற்றுக்கு பத்து விழுக்காட்டிற்கு மேற்படாமல் வாடகைக் கட்டடங்களின் சிறு பழுதுகளுக்கான செலவுத் தொகை:

(v) அசையாச் சொத்துக்களின் விற்றுமுதல்கள், அல்லது அசையாச் சொத்துக்கள் தொடர்பான அல்லது அதிலிருந்து எழலாகிற உரிமைகள், அந்த விற்றுமுதல்கள், அந்தப் பொறுப்பாட்சிக்காக அல்லது நிலைக்கொடைக்காக வருமானத்தை ஈட்டும் பொருட்டும் மீண்டும் முதலீடு செய்யப்படுமானால்:

வரம்புரை: ஆனால், பின்வரும் வரவுகளின் இனங்கள் இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக வருமானமாகக் கொள்ளப்படுதல் ஆகாது:-

(a) திரும்பப் பெறப்பட்ட முன்பணங்களும் வைப்பீடுகளும், பெறப்பட்ட அல்லது, திரும்பப் பெறப்பட்ட கடன்கள்.

(b) வேலை பெறுநர்கள், குத்தகைக்கு எடுத்தவர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள், பிற வைப்பீட்டாளர்கள் ஆகியோர் எவரேனுமிருப்பின் அவர்களால் பிணையமாக செய்யப்பட்ட வைப்பீடுகள்:

(c) வங்கிகளிடமிருந்து எடுக்கப்பட்டவைகள் அல்லது திரும்பப் பெறப்பட்ட முதலீடு;

(d) நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட செலவுகளுக்காக பெறப்பட்ட தொகைகள்;

(e) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் மொத்த தொகுப்பு நிதிக்கு பங்களிப்புகளாக நன்கொடையாளர்களால் பணமாகவே, பொருளாகவோ அளிக்கப்பட்ட நன்கொடைகள்.

வரம்புரை: ஆனால், அத்தகைய நன்கொடைகளிலிருந்து வந்தடைகிற வருமானத்தின் பேரிலான வட்டி இருப்பின், அது மொத்த ஆண்டு வருமானத்தைக் கணக்கிடுகையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(f) பொறுப்பாட்சியால் அல்லது நிலைக்கொடையால் புரியப்பட வேண்டிய குறித்துரைக்கப்பட்ட சேவைக்காகவும் அத்தகைய சேவையின் பொருட்டு செலவு செய்த தொகைக்காகவும், பணமாகவோ, பொருளாகவோ, பெறப்பட்ட தம் விருப்பமான பங்களிப்புகள்;

(g) தணிக்கையின் மூலம் மீளப் பெறுதல்கள்;

விளக்கம் II– இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக :-

நிகர ஆண்டு வருமானத்தைத் தீர்மானிக்கையில், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனாலும் அதனுடைய ஊதியம் நல்கும் நிறுவனம் எதிலிருந்தும் பெறப்பட்ட நிகர இலாபம், ஏதேனும் இருப்பின், அது மட்டுமே வருமானமாக கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், ஏழையர் இல்லங்கள் ஆதவற்றோர் விடுதிகள் அல்லது இவைப்போன்ற பிற ஊதியமளிக்காத நிறுவனங்களைப் பொறுத்தவரை, அரசாலோ அல்லது பிற உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனாலுமோ அளிக்கப்பட்ட மானியங்கள், அல்லது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் அல்லது கல்வி நிறுவனங்களின் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணங்கள், வருமானமாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(2) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை ஒன்றின் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி (1) ஆம் உட்பிரிவின்படி தன்னால் செலுத்தத்தக்க பங்களிப்புகளை, பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையிடமிருந்து பணப்பயன் சார்ந்த அல்லது பிற முக்கிய நலன் எதனையும் பெறுவதற்கு உரிமையுடைய பல்வேறுபட்ட நபர்களிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம். ஆனால் அத்தகைய நபர்களில் எவர் ஒருவரிடமிருந்து வசூலிக்கத்தக்க தொகையானது. அத்தகைய நபரால் பெறப்படத்தக்க நலன்களின் மதிப்பு பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் மொத்த நிகர ஆண்டு வருமானத்திற்கு என்ன விகிதத்தில் அமைந்திருந்ததோ அதே விகிதத்தில் செலுத்தத்தக்க மொத்தப் பங்களிப்புத் தொகைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்:

வரம்புரை: ஆனால், பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் (1)–ஆம் உட்பிரிவின் படியான பங்களிப்பு அல்லாத பிற வருமானம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி கொடுபட வேண்டியவைகளாகச் செலுத்தத்தக்க தொகைக்குக் கூடுதலாக இருக்குமாயின், மற்றும் அத்தகைய பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் ஒப்பாவணத்தின்படி அல்லது ஆவணத்தின்படி செலுத்தத்தக்க தொகைக்குப் கூடுதலாக இருக்குமாயின், பங்களிப்பானது அந்த வருமானத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடை ஒன்றினைப் பொறுத்து, (1)–ஆம் உட்பிரிவின்படி செலுத்தத்தக்க பங்களிப்பானது அரசுக்கு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதற்கும் கொடுபட வேண்டியவை எவையும் அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் சொத்தின் மீது பிற சட்டப்படியான முதல் சட்டபிணைப் பொறுப்பு எதுவும் அல்லது அதன் வருமானம் எதுவும் முன்னதாகச் செலுத்தப்படுவதற்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் தொடர்புடைய பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகிக்கு விசாரிக்கப்படுவதற்கு ஒரு வாய்ப்பளித்த பின்பு நிருவாகக் குழுமத்தால் வழங்கப்பட்ட சான்றிதழின் பேரில், நிலவரி நிலுவையைப் போன்றே மீளப் பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(4) பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் வருமானத்தினை பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி பெறுவாரானால், மற்றும் அத்தகைய பங்களிப்பைச் செலுத்த மறுப்பாரானால் அல்லது செலுத்தாது இருப்பாரானால், மேற்சொன்ன முறையில் அவரிடமிருந்து அல்லது

சொத்திலிருந்து மீளப்பெறப்படலாகும் அத்தகைய பங்களிப்பிற்கு, அவரும் தனிப்பட்ட முறையில் கடப்பாடு உரியவர் ஆவார்.

(5) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு பொறுப்பாட்சியின் பொறுப்பாட்சியர் அல்லது நிலைக் கொடையின் நிருவாகி, பணிந்தனுப்புவதற்காகக் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள், நிகர ஆண்டு வருமானத்திற்கான விவரவுரையைப் பணிந்தனுப்பத் தவறுகிறவிடத்து, அல்லது முக்கியமான விவரம் எதிலும் சரியற்றதாக அல்லது பொய்யானதாக இருக்கிறது அல்லது இந்தச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனின் வகைமுறைகளுடன் இணங்காதிருக்கிறது என முதன்மை நிருவாக அலுவலர், கருதுகிற விவரவுரை ஒன்றைப் பணிந்தனுப்புகிறவிடத்து, முதன்மை நிருவாக அலுவலர், அந்தப் பொறுப்பாட்சி மற்றும் நிலைக் கொடையின் நிகர ஆண்டு வருமானத்தை, தன்னுடைய நன் தீர்ப்பின் அடிப்படையில் கணக்கிடலாம் அல்லது பொறுப்பாட்சியர் மற்றும் நிருவாகியால் பணிந்தனுப்பப்பட்ட விவரவுரையில் காட்டப்பட்ட நிகர ஆண்டு வருமானத்தை திருத்தி அமைக்கலாம் மற்றும் அவ்வாறு கணிக்கப்பட்ட அல்லது திருத்தி அமைக்கப்பட்ட நிகர ஆண்டு வருமானம், இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் நிகர ஆண்டு வருமானமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

<u>வரம்புரை</u>: பொறுப்பாட்சியரால் அல்லது நிருவாகியால் பணிந்தனுப்பப்பட்ட நிகர ஆண்டு வருமானக் கணிப்பு அல்லது விவர உரை திருத்தியமைக்கப்படுதல் ஏதுவும், அத்தகைய கணிப்பு அல்லது விவர உரை திருத்தியமைக்கப்படுதல் ஏன் செய்யப்படுதலாகாது என்பதற்கு அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் காரணங்காட்டுமாறு, பொறுப்பாட்சியரை அல்லது நிருவாகியைக் கோருகிற அறிவிப்பொன்றைக் கொடுத்த பின்பு தவிர, செய்யப்படுதல் ஆகாது மற்றும் அத்தகைய கணிப்பு அல்லது திருத்தியமைவு **ஒவ்வொன்றும் பொறுப்பாட்சியரால் அல்லது நிருவாகியால்** கொடுக்கப்பட்ட மறுமொழி ஏதேனும் இருப்பின் அதனைப் பரிசீலனை செய்த பின்பு, செய்யப்படுதல் வேண்டும்.

(6) (5) ஆம் உட்பிரிவின்படி முதன்மை நிருவாக அலுவலரால் செய்யப்பட்ட கணிப்பு அல்லது திருத்தியமைப்பினால் பாதிக்கப்பட்ட பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி எவரும், அந்தக் கணிப்பினை அல்லது விவர உரை திருத்தியமைக்கப்பட்டதைப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், நிருவாகக் குழுவிற்கு மேல் முறையீடொன்றை முன்னிடலாம் மற்றும் அந்த நிருவாகக் குழுமமானது, மேல்முறையீட்டாளருக்கு அவர்தம் தரப்பை விசாரிப்பதற்கு ஒரு நியாயமான வாய்ப்பினைக் கொடுத்த பின்பு, கணிப்பினை அல்லது விவர உரை திருத்தியமைக்கப்பட்டதை உறுதி செய்யலாம், எதிர்மாறாக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம் மற்றும் அதன் பேரில் நிருவாக்குழுமத்தின் முடிவே அறுதியானதாகும்.

(7) எந்தக் காரணத்திற்காகவேணும், இந்தப் பிரிவின்படி விதிக்கத்தக்க பங்களிப்பு அல்லது அதன் பகுதி எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கோ முன்போ அல்லது தொடங்கியதற்குப் பின்போ, எந்த ஆண்டிலும் வரிக் கணிப்பிலிருந்து தப்பியிருக்குமானால், முதன்மை நிருவாக அலுவலர், தப்பிய வரிகணிப்பு எந்த ஆண்டுடன் தொடர்புடையதாக இருக்கிறதோ அந்த ஆண்டின் கடைசித் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்குள் பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்கு கணிப்பிற்குத் தப்பிய பங்களிப்பு அல்லது அதன் பகுதி எதனையும் கணிக்கிற அறிவிப்பு சார்வு செய்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பணச் செலுத்தத்தைக் கோருகிற அறிவிப்பொன்றைச் சார்வு செய்யலாம் மற்றும் இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகள், கூடுமான வரையில், முதல் நேர்வில் இந்தச் சட்டத்தின் படி அந்தக் கணிப்பு செய்யப்பட்டிருந்தாற் போன்றே பொருந்துதல் வேண்டும்.

பணச் செலுத்தும் செய்யுமாறு வங்கியை அல்லது பிற நபரைப் பணிப்பதற்கு முதன்மை நிருவாக அலுவலருக்குள்ள அதிகாரம்

67. (1) அப்போதை நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், நிருவாக முதன்மை அலுவலர் அவ்வாறு செய்வது தேவையானது அல்லது உகந்தது என்று தெளிவுறக் காணுவாரானால், பொறுப்பாட்சிக்கு அல்லது நிலைக் கொடைக்குச் சொந்தமான பணம் எதுவும் எந்த நபரிடம் வைப்பீடாக உள்ளதோ அந்த நபர் எவரையும் வைப்பீடு என்ற வகையில் அல்லது பிற முறையில் எதிலும் பொறுப்பாட்சியின் மற்றும்

நிலைக் கொடையின் கணக்கில் இருக்கலாகும் பணத்திலிருந்து 66–ஆம் பிரிவின்படி விதிக்கத்தக்க பங்களிப்பினைச் செலுத்துமாறு பணிக்கிற, ஆணையொன்றைப் பிறப்பிக்கலாம் மற்றும் அந்த ஆணையை பெற்றதன் பேரில் அத்தகைய நபர் (3)–ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீடு எதுவும் முன்னிடப்படாதவிடத்து அந்த ஆணைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும் அல்லது (3)–ஆம் உட்பிரிவின்படி மேல்முறையீடொன்று முன்னிடப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய மேல் முறையீட்டின்பேரில் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனையும் ஒட்டி நபரால் செய்யப்பட்ட செலுத்தும் ஒவ்வொன்றும் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையைப் பொறுத்தவரை அந்த நபரின் கடப்பாட்டிற்கு ஒரு முழு விடுவிப்பாகச் செயற்படுதல் வேண்டும்.

(3) செலுத்தும் எதனையும் செய்யுமாறு (1) ஆம் உட்பிரிவின்படி ஆணையிடப்பட்ட நபர் எவரும், ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அந்த ஆணைக்கு எதிரான மேல்முறையீடொன்றை நீதிமன்றத்தில் முன்னிடலாம் மற்றும் அத்தகைய மேல்முறையீட்டின் பேரில் அந்த நீதிமன்றத்தின் முடிவே அறுதியானதாகும்.

(4) (1)–ஆம் உட்பிரிவின்படி அல்லது நேர்வுக்கேற்ப (3) ஆம் உட்பிரிவின் படி பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு நியாயமான காரணம் எதுவுமின்றி இணங்கி நடக்கத் தவறுகிற நபர் ஒவ்வொருவரும், ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையோ அல்லது எட்டாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

கடன் வாங்குவற்கு நிருவாகக் குழுமத்திற்குள்ளாக அதிகாரம்

68. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் நோக்கத்திற்காக, நிருவாகக் குழுவானது, அரசின் முன் ஒப்பளிப்புடன், அரசு தீர்மானிக்கலாகும் பணத் தொகையை தீர்மானிக்கலாகும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் கடன் வாங்கலாம்.

(2) நிருவாகக் குழுமமானது, கடன் வாங்கிய பணத்தை, கடனின் வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க அதனைப் பொறுத்துக் கொடுபட வேண்டிய வட்டி எதனையும் அல்லது செலவுத் தொகைகள் எவற்றையும் அதனுடன் சேர்த்து, திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

பொறுப்பாட்சியரோ நிர்வாகியோ ஒப்பளிப்பின்றி பணத்தை கடன் கொடுத்தாலோ வாங்குதலோ ஆகாது

69. (1) ஒரு பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் நிருவாகப் பொறுப்பிலிருக்கிற நிருவாகக் குழுமத்தின் முன் ஒப்பளிப்புடன் தவிர பொறுப்பாட்சியர், நிருவாகி அல்லது பிற நபர் எவரும் பொறுப்பாட்சிக்கு அல்லது நிலைக் கொடைக்குச் சொந்தமான பணம் எதனையும் அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சொத்து எதனையும் கடனாகக் கொடுத்தலோ அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடை நோக்கங்களுக்காக, பணம் எதனையும் கடன் வாங்குதலோ ஆகாது.

(2) நிருவாகக் குழுமமானது, ஒப்பளிப்பு வழங்குகையில், (1)–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட நபருக்கு, எந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் பணம் எதனையும் கடனாகக் கொடுப்பதற்கு அல்லது கடன் வாங்குவதற்கு அல்லது பிற சொத்து எதனையும் குத்தகைக்கு விடுவதற்கு தன்னால் அதிகாரமளிக்க பட்டதோ அந்த வரையறைகளையும் நிபந்தனைகளையும் குறித்துரைக்கலாம்.

(3) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மீறுகையாக பணம் எதுவும் கடனாகக் கொடுக்கப்படுகிற விடத்து அல்லது பணம் எதுவும் கடன் வாங்கப்படுகிறது விடத்து அல்லது பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் பிற சொத்து எதுவும் வாடகைக்கு விடப்படுகிறவிடத்து:-

(i) எந்த நபரால் அந்தத் தொகை கடனாகக் கொடுக்கப்பட்டதோ அல்லது பெறப்பட்டதோ அந்த நபரின் சொந்த நிதியத்திலிருந்து, அதன் பேரில் கொடுபட வேண்டிய

வட்டியுடன் சேர்த்து, அவ்வாறு கடனாகக் கொடுக்கப்பட்ட அல்லது கடனாக வாங்கப்பட்ட தொகைக்குச் சமமானதொரு தொகையை மீளப் பெறுவது.

இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மீறுகையாக கடனாகக் கொடுக்கப்பட்ட பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் சொத்தின் உடைமையானது, எந்த நபருக்கு வாடகைக்கு விடப்பட்டதோ, அந்த நபரிடமிருந்து அல்லது எந்த நபருக்கு வாடகைக்கு விடப்பட்டதோ, அந்த நபரின் மூலம் அந்தச் சொத்திற்கு உரிமை மூலத்தைக் கோருகிற நபரிடமிருந்து மீளப் பொறுவது, முதன்மை நிருவாக அலுவலருக்குச் சட்டப்படியானதாகும்.

வன்னியர் குல சத்திரியர்களின் பொது அறநிலையப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் பாதுகாப்பு பேணுகை நிதியம்

70. (1) இந்தச் சட்டத்தின் படி நிருவாகக் குழுமத்தால் பெறப்பட்ட அல்லது மீளப் பெறப்பட்ட பணங்கள் அனைத்தும், மற்றும் நிருவாகச் குழுமத்தால் நன்கொடைகளாக, அறக்கொடைகளாக அல்லது மானியங்களாகப் பெறப்பட்ட பிறபணங்கள் அனைத்தும், வன்னிய குலசத்திரியர்களின் பொது அறநிலையப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகளின் (பாதுகாப்பு மற்றும் பேணுகை) நிதியம் என்று அழைக்கப்படும் நிதியமொன்றை அமைத்து, நிருவாக குழுமத்திடம், உற்றமைந்திருத்தல் வேண்டும்.

(2) நிருவாகக் குழுமத்தின் நோக்கங்களுக்காக, நன்கொடைகளாக, அறக்கொடைகளாக அல்லது மானியங்களாக நிருவாகக் குழுமத்தால் பெறப்பட்ட பணங்கள் அனைத்தும், வைப்பீடு செய்யப்பட்டு கணக்கு காட்டப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிதியமானது:-

(a) நிருவாகக் குழுமத்தால், கடன் வாங்கப்பட்ட கடன் எதனையும் திருப்பிச் செலுத்துவதற்கும், அதன் பேரிலான வட்டியைச் செலுத்துவதற்கும்,

(b) நிதியத்தின் மற்றும் பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் தணிக்கைச் செலவுகளை செலுத்துவதற்கும்,

(c) நிருவாகக்குழுமத்தின் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் சம்பளத்தினையும் படித் தொகைகளையும் செலுத்துவதற்கும்,

(d) நிருவாகக்குழுமத்தின் தலைமையர், உறுப்பினர்கள் மற்றும் நிருவாகக் குழுமத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருக்குப் பயணப்படித் தொகைகளைச் செலுத்துவதற்கும்.

(e) இந்தச் சட்டத்தினாலோ அல்லது அதன் வழியாலோ சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கும், அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் நிருவாகக் குழுவினால் செய்ய நேர்ந்த செலவுத் தொகைகள் அனைத்தையும் செலுத்துவதற்கும்.

(f) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலுமோ அல்லது அதன்படியோ அதன் மீது சுமத்தப்பட்ட கடப்பாடு எதனையும் தீர்ப்பதற்காக, நிருவாகக் குழுமத்தால் செய்ய நேர்ந்த செலவுத் தொகைகள் அனைத்தையும் செலுத்துவதற்கும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) **(3)**–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட செலவுத் தொகைகளைச் செலவு செய்த பிறகு மீதித் தொகை ஏதேனும் இருக்குமாயின், நிருவாகக் குழுமமானது, பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்துக்களைப் பேணுவதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் அல்லது அது பொருத்தமெனக் கொள்ளலாகும் பிற நோக்கத்திற்காக, அந்த மீதித்தொகையின் பகுதி எதனையும் பயன்படுத்தலாம்.

Verified RealEstate ™

அத்தியாயம் XIII

நிருவாகக் குழுமத்தின் வரவு–செலவுத் திட்டம், கணக்குகள் மற்றும் தணிக்கை

நிருவாகக் குழுமத்தின் வரவு– செலவுத் திட்டம்

71. (1) நிருவாகக் குழுமமானது, ஒவ்வொரு ஆண்டிலும், வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும், நேரத்திலும், அந்த நிதியாண்டின்போது மதிப்பிடப்படும் வரவுகளையும், செலவினங்களையும் காட்டுகிற அடுத்த நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதன்படி ஒன்றை அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி அதற்கு அனுப்பப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைப் பெற்றதன் பேரில், அரசானது, அதனைப் பரிசீலனை செய்து, தான் பொருத்தமெனக் கருதுகிற, அதில் செய்யப்பட வேண்டிய மாறுதல்கள், திருத்தங்கள் அல்லது மாற்றமைவைகளை ஆலோசனையாக முன் வைத்தல் வேண்டும் மற்றும் அந்த ஆலோசனையை, நிருவாகக் குழுமத்திற்கு அதன் பரிசீலினைக்காக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) அரசிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றதன் பேரில் அரசால், ஆலோசனையாக கூறப்பட்ட மாறுதல்கள், திருத்தங்கள் அல்லது மாற்றமைவுகள் குறித்து அரசுக்கு எழுத்து வடிவிலான முறையீடுகளை நிருவாகக் குழுமம் செய்யலாம் மற்றும் அரசானது, அந்த முறையீடுகளை பரிசீலனை செய்த பின்னர், அதனைப் பெற்ற தேதியிலிருந்து மூன்று வார கால அளவுக்குள், அந்த பொருட்பாடு தொடர்பான தன் இறுதி முடிவை நிருவாகக்குழுமத்திற்குத் தெரியப்படுத்துதல் வேண்டும் மற்றும் அரசின் முடிவே அறுதியானதாகும்.

(4). (3)–ன் உட்பிரிவின்படி அரசின் முடிவைப் பெற்றதன் பேரில், நிருவாகக் குழுமமானது, அரசால் முடிவாக ஆலோசனை கூறப்பட்ட மாறுதல்கள், திருத்தங்கள், மாற்றமைவுகள் அனைத்தையும் அந்த வரவு–செலவுத் திட்டத்தில் சேர்த்தல் வேண்டும் மற்றும் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட, திருத்தப்பட்ட அல்லது மாற்றமைவு செய்யப்பட்ட அந்த வரவு–செலவுத் திட்டம் நிருவாகக் குழுமத்தால் நிறைவேற்றப்படும் வரவு–செலவுத் திட்டமாக இருக்கும்.

நிருவாகக் குழுமத்தின் கணக்குகள்

72. நிருவாகக் குழுமமானது வகுத்துரைக்கப்படலாகும் படிவத்திலும், முறையிலும், தன கணக்குகள் தொடர்பான கணக்குப் புத்தங்களும், பிற புத்தங்களும் வைத்து வரப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்தின் கணக்குகளின் தணிக்கை

73. (1) நிருவாகக் குழுமத்தின் கணக்குகள், அரசால் அமர்த்தப்படலாகும் தணிக்கையரால், ஆண்டுதோறும், தணிக்கை செய்யப்பட்டு ஆய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) தணிக்கையர், தனது அறிக்கையை அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும் மற்றும் தணிக்கையரின் அறிக்கையானது, மற்றவற்றிற்கிடையே, நிருவாகக் குழுமத்தின் நேரடி மேலாண்மையின் கீழுள்ள பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை ஒவ்வொன்றின் கணக்குகள், தனியாக வைத்து வரப்படுகிறதா என்பதையும், அந்தக் கணக்குகள் ஆண்டுதோறும், உள்ளாட்சி நிதியங்களின் நிலையங்களின் மாநில ஆய்வாளரால் தணிக்கை செய்யப்படுகிறதா என்பதையும் குறித்துரைத்தல் வேண்டும் மற்றும் முறைதவறிய, சட்டமுரணான அல்லது முறையற்ற செலவினம் குறித்த அனைத்து நேர்வுகளையும் அல்லது அசட்டையினாலோ அல்லது தவறான நடத்தையினாலோ ஏற்பட்ட பணம் அல்லது பிற சொத்தினை மீளப்பெறத் தவறுதல் குறித்த அனைத்து நிகழ்வுகளையும் மற்றும் அறிக்கை செய்வது தேவையென தணிக்கையர் கருதுகிற பிற பொருட்பாடு எதனையும் கூட குறித்துரைத்தல் வேண்டும்; மற்றும் அந்த அறிக்கையானது, அந்தச் செலவினத்திற்கு அல்லது தவறுகைக்குப் பொறுப்பானவர் எனத் தணிக்கையர் கருதுகிற நபர் எவரின் பெயரையும் கூட கொண்டிருத்தல் வேண்டும்: மற்றும் அந்தத் தணிக்கையர், அத்தகைய ஒவ்வொரு நேர்விலும், அந்தச் செலவு அல்லது இழப்புத் தொகையை, அந்த நபரிடமிருந்து கொடுபட வேண்டியதாக உறுதிச்சான்றளித்தல் வேண்டும்.

(3) தணிக்கைக்கான செலவுகள், 70 – ஆம் பிரிவின் படி குறித்துரைக்கப்பட்ட நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

Verified RealEstate

தணிக்கையரின் அறிக்கையின் பேரில் அரசு ஆணைகள் பிறப்பித்தல்

74. அரசானது, தணிக்கையரின் அறிக்கையை ஆய்வு செய்தல் வேண்டும் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்பாடு எதுவும் குறித்து, நபர் எவரிடமும் விளக்கம் கோரலாம் மற்றும் அந்த அறிக்கையின் பேரில், தான் பொருத்தமென நினைக்கிற ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்திற்குக் கொடுபட வேண்டியவை நில வரி நிலுவை போன்று வசூலிக்கப்படுதல்

75 (1) 73 – ஆம் பிரிவின் படியான தனது அறிக்கையில், தணிக்கையர் ஒருவரால் நபர் எவரிடமிருந்தும் கொடுபட வேண்டியது என உறுதிச் சான்றிடப்பட்ட தொகை ஒவ்வொன்றும், நிருவாகக் குழுமத்தால் கேட்பு அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட பிறகு, முப்பது நாட்களுக்குள் அந்த நபரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) அந்தச் செலுத்தம், (1)–ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க செய்யப்படவில்லையானால், செலுத்தத்தக்க தொகையானது, நிருவாகக் குழுமத்தால் வழங்கப்பட்ட சான்றிதழின் பேரில், தொடர்புடைய நபருக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றைக் கொடுத்ததற்குப் பிறகு, நிலவரி நிலுவை போன்று மீளப்பெறப்படலாம்.

குறித்த சில நேர்வுகளில் பாதுகாவலரை அமர்த்துதல்

76. 1908 – ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தில் அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், மையச் சட்டம் V/1908

(1) நிருவாகக் குழுமத்தால் அல்லது அதன் சார்பாக –

(a) நீதிமன்றத் தீர்ப்பாணையை அல்லது ஆணையை நிறைவேற்றுகையில், பொறுப்பாட்சியின் அல்லது நிலைக் கொடையின் சொத்தாக இருக்கிற அசையாச் சொத்து எதனின் விற்பனையையும் தள்ளுபடி செய்வதற்காக;

(b) பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் சொத்தாக இருந்து, அதன் பொறுப்பாட்சியரால் அல்லது நிருவாகியால், நிருவாகக் குழுமத்தின் ஒப்பளிப்பின்றி அல்லது ஒப்பளிப்பிற்கு இணங்கியவாறு அல்லாமல் மற்றப்படி, மதிப்புறு மறுபயனுக்காகவாயினும் சரி அல்லது இல்லாவிடினும் சரி, செய்யப்பட்ட அசையாச் சொத்து எதனின் உரிமை மாற்றத்தைத் தள்ளுபடி செய்வதற்காக:

(c) (a) கூறில் அல்லது (b) கூறில் சுட்டப்பட்ட சொத்தின் உடைமையை மீளப்பெறுவதற்காகஅல்லது தொடர்புடைய பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் பொறுப்பாட்சியருக்கு அல்லது நிருவாகிக்கு அந்தச் சொத்தின் உடைமையைத் திரும்ப அளிப்பதற்கு; அல்லது

(ii) பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சொத்தாக இருந்து, முந்தைய பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகியால், நிருவாகக் குழுமத்தின் ஒப்பளிப்பிற்கு இணங்கியவாறு அல்லாமல் பிறவாறு, மதிப்புறு மறுபயனுக்காகவாயினும் அல்லது இல்லாவிடினும், எதிர்வாதியின் உடைமையில் இருக்கிற அசையாச் சொத்தினை மீளப் பெறுவதற்காக பொறுப்பாட்சியரால் அல்லது நிருவாகியால் உரிமை வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுகிறவிடத்து, அல்லது தொடங்கப்படுகிறவிடத்து, நீதிமன்றமானது, வாதியின் விண்ணப்பத்தின் பேரில், அந்தச் சொத்திற்குப் பாதுகாவலர் ஒருவரை அமர்த்தலாம் மற்றும் சொத்தின் வருமானத்திலிருந்து, அவ்வப்போது, அந்த உரிமை வழக்கை மேலும் தொடருவதற்காகத் தேவையென நீதிமன்றம் கருதுகிற தொகையை வாதிக்குச் செலுத்துமாறு பணிக்கலாம்.

பதிவு செய்யப்படாத பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சார்பாக உரிமையைச் செயலுறுத்து வதற்குத் தடை

77. (1) அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க, பதிவு செய்யப்பட்டிராத பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதுவும், அது தொடங்கப்பட்டதற்குப்பிறகு, அதன் சார்பாக உரிமை எதனையும் செயலுறுத்துவதற்காக, உரிமை வழக்கு, மேல்முறையீடு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் அல்லது அத்தகைய அதன் தொடக்கத்திற்கு முன்பு, உரிமை வழக்கு, மேல்முறையீடு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்பட்டிருக்கிற அல்லது தொடங்கப் பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய உரிமை

Verified @ RealEstate™

வழக்கு, மேல்முறையீடு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் அந்த பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி, அந்தத் தொடக்கத்திற்குப்பிறகு நீதிமன்றம் எதனாலும் தொடரப்படுதலோ, கேட்கப்படுதலோ, விசாரணை செய்யப்படுதலோ அல்லது தீர்மானிக்கப்படுதலோ ஆகாது.

(2) (1)–ஆம் உட்பிரிவின் வகைமுறைகள், சரியீட்டுக்கான உரிமைக்கோரிக்கைக்கு அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க, பதிவு செய்யப்பட்டிராத பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதனின் சார்பாகச் செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கை எதற்கும் கூடுமான வரையில், பொருந்துதல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்திற்கு எதிராக தரப்பினர்களால் உரிமை வழக்கு குறித்த அறிவிப்பு

78. நிருவாகக் குழுமத்தால் செய்யப்படவிருப்பதாகப் புலப்படுகிற செயல் எதனையும் பொறுத்து, இந்தச் சட்டத்தினை அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் எவற்றையும் ஒட்டி, வழக்கு மூலம், வாதியின் பெயர், விவரிப்பு, குடியிருப்பிடம் மற்றும் அவர் கோருகிற தீர்வழி ஆகியவற்றைக் குறிக்க எழுத்துவடிவிலான அறிவிப்பொன்று நிருவாகக் குழுமத்திலும் சார்வு செய்யப்பட்ட அல்லது அதன் அலுவலகத்தில் விட்டுச்செல்லப்பட்ட பிறகு, இரண்டு மாதங்கள் முடிவடையும் வரை, நிருவாகக் குழுமத்திற்கு எதிராக உரிமை வழக்கு எதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது; மற்றும் அந்த வாதுரை, அந்த அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது அல்லது விட்டுச் செல்லப்பட்டது என்பதான விவரவுரையைக் கொண்டிருத்தல் ஆகாது.

நீதிமன்றங்களால் உரிமை வழக்குகளுக்கான அறிவிப்பு முதலியவை

79 (1) பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சொத்திற்கான உரிமை மூலம் அல்லது உடைமை தொடர்பான அல்லது ஒரு பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி அல்லது பயனாளரின் உரிமை தொடர்பான உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை ஒவ்வொன்றிலும், அந்த உரிமை வழக்கை அல்லது நடவடிக்கையைத் தொடுக்கிற தரப்பினரின் செலவில், நிருவாகக் குழுமத்திற்கு அறிவிப்பினை வழங்குதல் வேண்டும்.

(2) பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சொத்து எதுவும், நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பாணையை, நிறைவேற்றுகையில் விற்பனைக்காக அல்லது அரசு அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு, சட்டமுறையிலான அதிகார அமைப்பு அல்லது அரசு நிறுமம் எதற்கும் கொடுபட வேண்டிய வருவாய், கட்டணங்கள், அல்லது வரிகளை வசூலிப்பதற்காக அறிவிக்கை செய்யப்பட்டிருக்கிற போதெல்லாம், நீதிமன்றத்தால், ஆட்சியரால் அல்லது எவரது ஆணையின் பேரில் விற்பனைக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டதோ அந்த நபரால் நிருவாகக் குழுமத்திற்கு அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (1) –ஆம் உட்பிரிவின்படியான அறிவிப்பு ஒன்று இல்லாதிருக்கையில், உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதிலும் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும், நிருவாகக் குழுமமானது, அந்த உரிமை வழக்கு அல்லது நடவடிக்கைக் குறித்து அது அறிந்ததிலிருந்து ஒரு மாதத்திற்குள், இதன் பொருட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்திருந்தால், விழலானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) (2)–ஆம் உட்பிரிவின்படியான அறிவிப்பு ஒன்று இல்லாதிருக்கையில், அந்த விற்பனையானது, நிருவாகக்குழுமம், அந்த விற்பனை குறித்து அது அறிந்ததிலிருந்து ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்திற்கு அல்லது எந்த பிற அதிகார அமைப்பின் ஆணையின் கீழ் விற்பனை நடைபெறுகிறதோ அந்த அதிகார அமைப்பிற்கு இதன் பொருட்டு விண்ணப்பத்திருந்தால், விழலானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நிருவாகக் குழுமம் உரிமை வழக்கிற்கு அல்லது நடவடிக்கைக்குத் தரப்பினரா யிருத்தல்

80. பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையைப் பொறுத்த அல்லது பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் சொத்து எதனையும் பொறுத்த உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதிலும், நிருவாகக் குழுமம், முன்னிலையாகி, அந்த உரிமை வழக்கின் அல்லது நடவடிக்கைகளின் தரப்பினராக வாதிடலாம்.

பொறுப்பாட்சியரால் அல்லது நிருவாகியால் அல்லது அவருக்கெதிராக உரிமை வழக்கை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்குத் தடை

81. பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை சொத்தின் உரிமை மூலம் சொத்து, அல்லது பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகிக்கு உள்ள உரிமை தொடர்பாக, ஓர் பொறுப்பாட்சியின் அல்லது நிலைகொடையின், பொறுப்பாட்சியரால் அல்லது நிருவாகியால் அல்லது அவருக்கு எதிராக நீதிமன்றம் எதிலும் உள்ள உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதுவும், நிருவாகக் குழுமத்தின் ஒப்பளிப்பின்றி, இணக்கமாகத் தீர்த்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

அத்தியாயம் XIV

பல்வகைப்பட்டவை

நிர்வாகக் குழுமத்தை கலைத்து கைக்கொள்வதற்கான அதிகாரம்

82. **(1)** நிருவாகக் குழுமமானது தனது கடமைகளை செய்ய இயலாதிருக்கிறது அல்லது, தனது கடமைகளைப் புரிவதில் தொடர்ந்து தவறுகை செய்கிறது அல்லது தன் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகிறது அல்லது வேண்டுமென்றேயும், போதிய காரணமின்றியும் அரசால் பிறப்பிக்கப்படும் பணிப்புரை எதற்கும் இணங்கி நடக்கத் தவறுகிறது என்று அரசு கருதுமானால், அல்லது ஆண்டு ஆய்வுக்குப் பிறகு பணிந்தனுப்பப்பட்ட அறிக்கை எதனையும் ஓர்வு செய்ததன் பேரில், அந்த நிருவாகக் குழுமம் தொடர்ந்திருப்பது, பொறுப்பாட்சியின் அல்லது நிலைக்கொடையின் நலன்களுக்குப் பெரும்பாலும் ஊறு செய்வதாக இருக்கக்கூடும் என்று அரசு தெளிவுறக் காணுமானால், அரசு, அறிவிக்கை வாயிலாக, ஆறுமாதங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்கு அந்த நிருவாகக் குழுமத்தைக் கலைத்துக் கைக்கொள்ளலாம்.

<u>வரம்புரை:</u>

ஆனால், இந்த உட்பிரிவின்படி அறிவிக்கையொன்றைப் பிறப்பிப்பதற்கு முன்பு, அது ஏன் கலைத்துக் கைக்கொள்ளப்படுதல் ஆகாது என்பதற்குக் காரணம் காட்டுவதற்கு நிருவாகக் குழுமத்திற்கு நியாயமான காலம் ஒன்றை அளித்தல் வேண்டும் மற்றும் நிருவாகக் குழுமத்தின் விளக்கங்கள் மற்றும் மறுப்புரைகள் எவையேனுமிருப்பின், அவற்றைப் பரிசீலனை செய்தலும் வேண்டும்.

(2) நிருவாகக் குழுமத்தைக் கலைத்துக் கைக்கொள்ளுகிற, **(1)–**ஆம் உட்பிரிவின்படியான அறிவிக்கை ஒன்று வெளியிடப்படுவதன் பேரில் –

(a) நிருவாகக் குழுமத்தின் உறுப்பினர்கள் அனைவரும், கலைத்து கைக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து, அத்தகைய உறுப்பினர்கள் என்ற தம் பதவிகளைக் காலி செய்தல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளினாலோ அல்லது அதன்படியோ நிருவாகக் குழுமத்தினால் அல்லது அதன் சார்பாகச் செலுத்தப்படலாகும் அதிகாரங்கள் அல்லது புரியப்படலாகும் கடமைகள் அனைத்தும், கலைத்துக் கைக்கொள்ளப்பட்ட கால அளவின்போது, அரசு பணிக்கலாகிற நபர் அல்லது நபர்களால் செலுத்தப்படுதலும் புரியப்படுதலும் வேண்டும்; மற்றும்

(c) நிருவாகக் குழுமத்திடம் உற்றமைந்துள்ள சொத்து எதுவும், கலைத்துக் கைக்கொள்ளப்படும் கால அளவின்போது, அரசிடம் உற்றமைதல் வேண்டும்.

Verified @ realEstate™

(3) (1)–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட கலைத்துக் கைக்கொள்ளும் கால அளவு முடிவடைவதன் பேரில், அரசானது,

(a) அது தேவையென கருதலாகும் மேலுமான ஒரு கால அளவிற்கு கலைத்துக் கைக்கொள்ளும் காலத்தை நீட்டிக்கலாம், அல்லது

(b) 9–ஆம் பிரிவில் வகை செய்யப்பட்ட முறையில் நிருவாகக் குழுமத்தை மறு அமைப்பு செய்யலாம்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பாதுகாப்பு

83. உரிமை வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக்கருதப்பட்ட எதனையும் பொறுத்து நிருவாகக் குழுமத்திற்கு அல்லது முதன்மை நிருவாக அலுவலருக்கு அல்லது இந்தச் சட்டத்தின்படி உரியவாறு அமர்த்தப்பட்ட பிற நபர் எவருக்கும் எதிராகத் தொடுக்கப்படுதல் ஆகாது.

நிருவாகக் குழுமத்தின் தலைமையாளர், உறுப்பினர்கள், ஆய்வு அலுவலர், நிருவாக முதன்மை அலுவலர் மற்றும் அலுவலர்கள் பொது ஊழியர்களாக இருப்பர்

மையச் சட்டம் XLV/1860

84. (1) நிருவாகக் குழுமத்தின் தலைமையாளர் மற்றும் உறுப்பினர்கள், ஆய்வு அலுவலர் நிருவாக முதன்மை அலுவலர், தணிக்கையர் உள்ளடங்கலான அலுவலர்கள் ஒவ்வொருவரும் மற்றும் இந்தச் சட்டத்தினால் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஒழுங்குமுறை விதி அல்லது ஆணை எதனாலும் அமர்த்தப்பட்ட கடமைகள் எவற்றையும் ஆற்றுவதற்கு உரியவாறு அமர்த்தப்பட்ட பிற ஒவ்வொரு நபரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின், 21–ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

\

மையச் சட்டம் XLV/1860

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் படியோ அல்லது பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையின் ஒப்பாவணம் எதன்படியோ அமர்த்தப்பட்டிருப்பினும் இல்லாவிடினும், பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் பொறுப்பாட்சியர் அல்லது நிருவாகி ஒவ்வொருவரும், நிருவாக அலுவலர் ஒவ்வொருவரும் மற்றும் ஒரு பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடையில் பதவி எதனையும் வகிக்கிற ஒவ்வொரு நபரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21–ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியராகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஆவணங்கள் முதலனவற்றின் படிகள் அளிக்கப்பட வேண்டுமென்று கோருவதற்கு நிருவாகக்குழுமம் மற்றும் முதன்மை அலுவலருக்கு அதிகாரம்

85. அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை தொடர்பான பதிவுரு, பதிவுரு அறிவிக்கை அல்லது பிற ஆவணம் எதனின் அல்லது பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடையின் சொத்தாக இருக்கிற அசையாச் சொத்து எதனின் பாதுகாப்பையும் கொண்டிருக்கிற நபர் எவரையும், தேவையான செலவுத் தொகை செலுத்தப்படுவதற்குட்பட்டு, அத்தகைய பதிவுரு, பதிவேடு, அறிக்கை அல்லது ஆவணம் எதனின் படிகளை அல்லது அதிலிருந்து எடுகுறிப்புகளை அளிக்குமாறு கோருவது நிருவாகக் குழுமத்திற்கு அல்லது முதன்மை நிருவாக அலுவலருக்குச் சட்டப்படியானதாகும் மற்றும் அத்தகைய கோரிக்கை செய்யப்படுகிற ஒவ்வொரு நபரும், இயன்ற அளவு விரைவில், நிருவாகக் குழுமத்திற்கு அல்லது முதன்மை நிருவாக அலுவலருக்கு, கோரப்பட்ட பதிவுரு, பதிவேடு, அறிக்கை அல்லது பிற ஆவணத்தின் படிகளை அல்லது எடுகுறிப்பினை அளித்தல் வேண்டும்.

பொறுப்பாட்சி அல்லது நிலைக் கொடையின் சொத்துக்களை மீளப் பெறுவதற்கு மையச் சட்டம் 36/1963 பொருந்தாது.

86. 1963–ஆம் ஆண்டு கால வரம்புச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், பொறுப்பாட்சி அல்லது நிலைக்கொடை எதிலும் அடங்கியுள்ள அசையாச் சொத்தின் உடைமைக்கான அல்லது அத்தகைய சொத்தில் உள்ள அக்கறை பெற்றிருத்தல் எதற்குமான உரிமை வழக்கு எதற்கும் பொருந்துதல் ஆகாது.

Verified @ RealEstate™

விதிகளைச் செய்ய அதிகாரம்

87. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அனைத்தும், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் செயற்பாட்டுக்கு வருவதாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் செயற்பாட்டுக்கு வருவதாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் , அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் பேரவை மாறுதல் எதினையும் செய்யுமாயின், அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை செய்யப்படுத்தலோ பிறப்பிக்கப்படுத்தலோ ஆகாது என பேரவை முடிவு செய்யுமாயின், அதன் பின்பு அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை, மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்வுக்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந் தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

நிருவாகக் குழுமத்தால் ஒழுங்குமுறை விதிகள் செய்யப்படுவதற்கான அதிகாரங்கள்.

88. (1) நிருவாகக்குழுமமானது, அரசின் முன் ஒப்பளிப்புடன், இந்தச் சட்டத்தின்படி அதன் அலுவற்பணிகளை நிறைவேற்றுவதற்காக, இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்கியதாக ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம்.

(2) ஒழுங்குமுறை விதி அல்லது அதன் நீக்கம் அல்லது மாறுதல் எதுவும், அவை அரசினால் ஏற்பளிக்கப்படுகிற வரை, செயல் வடிவம் கொள்ளுதல் ஆகாது.

(3) அரசானது, அறிவிக்கை வாயிலாக, இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதி எதனையும் தள்ளறவு செய்யலாம் மற்றும் அதன் பேரில் அந்த ஒழுங்குமுறை விதி, செயல் வடிவம் கொள்ளுவது அற்றுப்போகும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும், ***தமிழ்நாடு அரசு இதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை, குறிப்பிட்டதொரு நாளில் செயற்பாட்டுக்கு வருவதாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்று செயற்பாட்டுக்கு வரும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்

89. (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால், அரசு, ஆணை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாததும், இடர்ப்பாட்டினை அகற்றும் நோக்கத்திற்குத் தேவையானது அல்லது உகந்தது எனத் தோன்றுகின்ற எதனையும் செய்யலாம்.

<u>வரம்புரை</u>

அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

Verified by Decentrate™

(2) இந்த உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணையானது, அது பிறப்பிக்கப்பட்ட உடனேயே, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும்.

பணிப்புரைகளை வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்

90. அரசு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செல்திறம் அளிப்பதற்காக அதற்கு பொருத்தமெனத் தோன்றலாகிறவாறு நேரத்திற்கேற்ப, வாரியத்திற்கு அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்க நடப்பது வாரியத்தின் கடமையாக இருத்தல் வேண்டும்.

இந்தச் சட்டத்தின் மேலோங்கி நிற்கும் திறன்.

91. இந்தச் சட்டத்தின் வெளிப்படையாக வகை செய்யப்பட்டவாறு தவிர, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு செயற்பாட்டிலிருந்த பிற சட்டம் எதுவும்,—

(I) எந்தப் பொருட்பாடு குறித்து இந்தச் சட்டத்தில் வகைமுறை எதுவும் செய்யப்பட்டிருக்கிறதோ அந்தப் பொருட்பாடு எதனையும் பொறுத்து; மற்றும்

(ii) அத்தகைய பிற சட்டத்தின் வகைமுறைகள், இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள வகைமுறைகள் எவற்றுக்கும் முரணாக இருக்கிற அளவுக்கு வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் உருவாக்கப்பட்ட பொது அறநிலைப் பொறுப்பாட்சிகளுக்கு அல்லது நிலைக் கொடைகளுக்குப் பொருந்துவது அற்றுப்போகும்.

Verified RealEstate TM

நோக்க – காரண விளக்க உரை

வன்னியகுல சத்தியர் சமுதாயத்தைச் சேர்ந்த தாராள குணம் கொண்ட கொடையாளிகள், பல்வேறு அறச்செயல் நோக்கங்களுக்காக, தமது சொத்துக்களைக் காணிக்கையாக வழங்கினர். பல நேர்வுகளில் பல்வேறு அறச்செயல் நோக்கங்களுக்காக, நிலைக்கொடையாக வழங்கப்பட்ட சொத்துக்கள், மேற்சொன்ன நோக்கங்களுக்காக பயன்படாமலும், நல்ல நிலையில் பேணிவரப்படாமலும் இருக்கின்றன. அவ்வாறான பல நிலைக்கொடைச் சொத்துக்கள் விற்கப்பட்டு விட்ட நிலையிலும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும் இருக்கின்றன. இதானல் உயில் எழுதிய கொடையாளிகளின் விருப்பங்கள் நிறைவேறாமல் போய்விட்டன.

2. அத்தகைய பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும், நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும், உயில் எழுதிய கொடையாளிகளின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கும், இயலும் வகையில் அத்தகைய பொறுப்பாட்சிகளுக்கும், நிலைக்கொடைகளுக்கும், நல்ல நிர்வாகத்தை வழங்குவதற்காக தனி நிருவாகக் குழுமம் ஒன்றை அமைத்துவருவாக்குமாறும் அதன் மூலம் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கத்தை எய்துவதை அந்தப் பொறுப்பாட்சிகளுக்கும், நிலைக்கொடைகளுக்கும் இடர்ப்பாடு எதுவுமின்றி எளிதாக்குமாறும் கோரி, பல முறையீடுகள் அரசுக்கு வரப்பெற்றுள்ளன. அரசானது ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அத்தகைய பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும், நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு நிருவாகக்குழுமம் ஒன்றை அமைத்துருவாக்குவதெனவும், இந்த நோக்கத்திற்காக தனிச்சட்டம் ஒன்றை இயற்றுவதெனவும் முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

சீ. வளர்மதி,
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்,
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்.

Verified RealEstate™

சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு

இச்சட்ட முன்வடிவின் 1 (3), 4(2), 4(3), 12(1), 19(2), 20(2), 30(3) (f), 31, 35(1), 38(1), 39(2), 45(2), 45(4), 46(6), 51(2), 51(3), 57,59(1), 59(3), 63(1) (a), 71(1), 72, 87(1), 88(1), 88(3) மற்றும் 89(1) ஆகிய கூறுகள் அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக, அறிவிக்கைகளை அல்லது ஆணைகளைப் பிறப்பிக்கவோ, அல்லது நேர்விற்கேற்ப விதிகளை அல்லது ஒழுங்குமுறை விதிகளைச் செய்யவோ அரசுக்கு அல்லது வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிருவாகக் குழுமத்திற்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

சீ. வளர்மதி,
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்,
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்.

Verified RealEstate™

<u>நிதிபற்றிய குறிப்பு</u>

இச்சட்ட முன்வடிவில் **65**–ஆம் கூறானது, இந்தச் சட்டம் இயற்றக் கருதப்படும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு வன்னியகுழு சத்திரியர் பொது அறநிலைய பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் நிருவாகக் குழுமத்திற்கு அரசு பொருத்தமெனக் கருதக்கூடிய மானியம் என்ற வகையில் பணத்தொகை செலுத்துவதற்கு வகை செய்கிறது. எனவே, இச்சட்டமுன்வடிவு சட்டமாக இயற்றப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும் போது, மாநிலத் தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும்.

2. கருதப்படும் இச்சட்டத்தின் விளைவாக மாநிலத் தொகு நிதியத்திலிருந்து செலவாகும் தொகையை இந்த நிலையில் எந்தக் கோணத்திலும் துல்லியாக மதிப்பிட இயலாது.

சீ. வளர்மதி,
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்,
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்.

கி. சீனிவாசன்,
செயலாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Verified RealEstate™